சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்

தமிழ்த் தாய் 67 - வெளியீடு

ஸ்ரீ. இராமசுவாமிகள் அவர்கள் இயற்றிய

# தேவாந்தப் பிரதீபம்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies



"அறிவுச் செல்வங்கள் அனைத்தையும்
தமிழுக்குக் கொண்டுவர வேண்டும்.
இனிவரும் நூற்றாண்டுகளுக்கும்
அருந்தமிழை ஆற்றல் படுத்த வேண்டும்"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி
அம்மா அவர்கள்

ஸ்ரீ. இராமசுவாமிகள் அவர்கள்

இயற்றிய

# தேவாந்தப் பிரதீபம்

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

பதிப்பாசிரியர்

முனைவர் **கோ.விசயராகவன்**

எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்.,பிஎச்.டி

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

# நூல் விவரக் குறிப்பு


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : தேவாந்தப் பிரதீபம் |
| நூல் ஆசிரியர் | : ஸ்ரீ. இராமசுவாமிகள் அவர்கள் |
| வெளியீட்டாளரும் பதிப்புரிமையும் | : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை - 600 113. |
| தொலைபேசி எண் | : 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : 856 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : 2015 : முதற்பதிப்பு : |
| பயன்படுத்திய தாள் | : 16 கிகி டி.என்.பி.எல்.வெள்ளை |
| நூலின் அளவு | : 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : 11 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : 296 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : 1200 |
| விலை | : ரூ.250 (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) |
| ISBN | : 978-93-85165-11-5 |
| அச்சகம் | : ராஜ் எண்டர்பிரைஸஸ்<br>திருவல்லிக்கேணி<br>சென்னை - 600 005. |

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்., பிஎச்.டி.
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை 600 113**

# அணிந்துரை

பழங்கால அரிய நூல்களையும் சுவடிகளையும் பாதுகாக்கும் வகையில் 2014ஆம் ஆண்டு நிறுவனத்தில் 34 **இலட்சம் மதிப்பீட்டில் சுவடிகள் பாதுகாப்பு மய்யம் மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது.** அவ்வகையில் நாடெங்கினும் உள்ள அரிய நூல்களை, சுவடிகளைத் திரட்டும் பணி தொடங்கப்பட்டு, கண்டறியப்பட்டுள்ள நூல்களைத் தமிழ்த்தாய் 67 - பெருவிழா, பிப்ரவரி 2015இல் வெளியிடும் திட்டத்தின் கீழ், 1871 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள இந்நூல் இப்பொழுது மீட்டுருவாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்படுகிறது.

ஞானக் களஞ்சியமாக மக்களால் போற்றப்படும் பெருமைக்குரியவை உபநிடதங்கள். வேதங்களுக்குப் பின் எழுந்தாலும் அவற்றின் முடி பொருளாக அவை இருப்பதால் அவற்றை வேதாந்தம் என்றனர். நன்மை, தீமை, நல்லது, அல்லது, இன்பம், துன்பம், சுக, துக்கம் என அனைத்து நிலையிலும் மனிதர்கள் அடையும் நிலைகளை விளக்கி அவற்றுக் காண காரணங்களைக் காட்டி நல்வழிப்படுத்த முனைபவை உபநிடதங்கள். வடமொழியில் பல நூல்கள் இருந்தாலும் தமிழில் அத்தகைய நூல்கள் அருமையே, அவற்றை விளக்கியே பகவத்கீதை, பிரம்ம சூத்திரம், போன்றவை விளக்கி உரைக்கின்றன. தமிழ்மொழியினக்கு உணர்த்தும் வகையில் அவற்றைத் தொகுத்தளிக்கும் நூலே **'வேதாந்தப் பிரதீபம்'** என்னும் இந்நூல்.

திருவிதாங்கூர் பகுதியைச் சார்ந்த மகான் நாராயண குருவின் சீடருள் ஒருவரான ஸ்ரீ இராமசுவாமி அவர்கள் இந்நூலை

இயற்றியுள்ளார். குருவிடமிருந்து கேட்ட அனுபூதி கருத்துளை வினா விடை அமைப்பில் எளிதாக உணர்த்த முயற்சி செய்துள்ளார். கடின நடையெனினும் கருத்துகளின் செறிவாகவும், ஞானத்தொகுப்பாகவும் விளங்கும்படி இந்நூலை வடிவமைத்துத் தந்துள்ளார். அரிய நூல்கள் வரிசையில் இந்நூலும் இடம் பெற்றுள்ளது.

தமிழறிஞர்களின் தமிழ்த் தொண்டினை எப்போதும் பாராட்டுவதில் முதன்மையானவர் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆவார். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி** அவர்களுக்கு நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம்** இ.ஆ.ப. அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் என் நன்றி.

**இயக்குநர்**

ஓம்

தத்ஸத்

பரப்பிரஹ்மணேநம:

திருவிதாங்கூர் சம்ஸ்தானம், வற்கலை,

சிவகிரிமடாலயம்

## ஸ்ரீ நாராயண குருசுவாமிகள்

பாதசேகாருளொருவரான

## ஸ்ரீ இராமசுவாமிகளவர்கள்

இயற்றியருளிய

# வேதாந்தப்பிரதீபம்.

இது

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-கோ-வடிவேலு செட்டியார்

அவர்களால் பார்வையிடப்பட்டு

திருநெல்வேலி--கற்கண்டு வியாபாரம்

ம-ா-ா-ஸ்ரீ. சே--பிச்சாண்டிபிள்ளையவர்கள்

பொருளுதவியால் ஷை இராமசுவாமிகளவர்களால்

சென்னை, கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

Copy-right Registered.

[விலை 1909. அணா 12]

# முகவுரை

திருசியமாயுள்ள வொவ்வொன்றும் அஸ்திபாதிப் பிரிய நாமரூபமாயுள்ள தென்பது பிரசித்தம். அவற்றுள், அஸ்திபாதிப் பிரியம் (சச்சிதானந்தம்) மூன்றும் உற்று நோக்குபவருக்குத் துக்கநிவிர்த்திக் கேதுவாயும் நாமரூபமிரண்டும் விசாரமில்லாத புருடர்கட்குத் துக்கப் பிரவிர்த்திக்கேதுவாயு மிருத்தலின், மக்களாய்ப் பிறந்த வொவ்வொருவரும் துக்கநிவிர்த்தியையும் ஆனந்தப் பிராப்தியையும் விரும்புவது இயல்பா யிருக்கின்றது; ஆகவே, துக்கத் தொகுதி நரக மென்பதும் அவற்றினின்றும் நீங்கி அஸ்தி பாதிப் பிரிய வடிவா யிருத்தல் மோட்சமென்பதும் பரம சித்தாந்தமாம். துக்க நிவிர்த்தியும் ஆனந்தப் பிராப்தியு மொருங்கடைதல் நிவிர்த்தி மார்க்கத்தாலன்றிப் பிரவிர்த்தி மார்க்கத்தாலும் கூடாதென்பது நம்மனோரியாவரு மறிந்த தொன்றாம். இந் நிலையைமக்களடைதற்பொருட்டு ஒவ்வொரு சிருஷ்டியினாரம்பத்திலும் எல்லாம்வல்ல விறைவன் விதிவாக்கிய, நிஷேதவாக்கிய, சித்தார்த்த போதகவாக்கிய வடிவாயுள்ள வேதத்தை யருளிச்செய்து அவ்வேதங் கூறியவாறு மக்களொழுகும்படி இராமகிருஷ்ணாதி யவதாரமெடுத்ததைப் பிரகடனஞ்செய் தருளினனென்பது பகவத்கீதை முதலியவற்றால் நன்கு விளங்கும்.

காணப்பட்டும் (ஶாஸ்திர வாயிலாகக்) கேட்கப்பட்டுமுள்ள இவ்வுலகத்து மவ்வுலகத்துமுள்ள உத்தம மத்திம அதம வடிவ பிரமாதி ஸ்தம்ப பரியந்தமான ஜீவகோடிகள் ஸதா துக்கமுற்றுச் சுகேச்சையோடிருத்தலின் துக்கநிவிர்த்தி சுகப்பிராப்தியின் பொருட்டுப் பலவுபாயங்களைத் தேடினும் அவைஸித்திப்பதில்லை. ஆத்மா சுயம்பிரகாச நித்திய வியாபக ஆனந்த வடிவமா யிருத்தலின் அதற்கன்னியமான சகல விஷயங்களும் அப்பிரகாச, அனித்திய, அவ்வியாபக, துக்க வடிவமாம். அவ்வாறிருக்க, மூடர்கள் விஷயத்திற் சுகமுண்டெனப் பாவித் தளவிறந்த முயற்சி செய்து வருந்துகின்றனர்.

விஷயம் ஜடமா யிருத்தலின், அதிற் சுகம் கிஞ்சித்து மில்லை யென் றவர்க ளுணர்வதில்லை. விஷய வாயிலாக வரும் சுகமும் தனது சுகமேயாம்; அஃதுபாதியற்றதன்றாதலின் அஃதுள்ளகாலத்தில் யாதேனுமோர் துக்கமிராம லிருப்பதில்லை. புண்ணிய க்ஷயத்தால் நாசமடைவதாகிய சுகம் துக்கத்திற்கே ஹேதுவாம். வர்த்தமானகாலத்தி லநுபவிக்கும் சுகம் இனி யிதுவொழிந்து போமென்னும் பீதியினால் துக்கத்திற்குப் பரமசாதனமா யிருக்கின்றது. இங்ஙனம் விஷயசுகம் துக்கத்தினால் விழுங்கப்பட்டிருத்தலின் விஷயமியாவும் துக்க சாதனமா மென்பதொருதலையாம். இத்துக்கம் யாதானுமோ ரிலௌகிகவுபாயத்தினனிவிர்த்தியாயினும் மீண்டு

முண்டாகின்றது. சரீரமெல்லாம் புண்ணிய பாவகர்மங்களா லாக்கப்பட் டிருத்தலின் சரீரமுள்ளவரையில் அக்க நிவிர்த்தி சம்பவிப்பதின்றும். கர்மம்:—புண்ணியம், பாபம், மிச்ரமென மூவகைத்தாம். அவற்றுள், தேவசரீரம் புண்ணிய கர்மத்தினாலும், திரியக்பசுபட்சிகளின் சரீரம் பாப கர்மத்தினாலும், மனிதசரீரம் மிஸ்ர கர்மத்தினா லுண்டானவையாம். நுட்பமாக வாராயுமிடத்துச் சகலசரீரங்களும் மிசிர கர்மத்தினா லுண்டானவையேயாம். சரீரமெல்லாம் தர்மா தர்ம (புண்ணிய பாப) ங்களின் பயனா யிருத்தலின் அவற்றின் நிவிர்த்தியன்றிச் சரீரநிவிர்த்தி பொருந்தாது.

தர்மாதர்மங்களும் இராகத் துவேஷங்களா லுண்டாகின்றன. இவற்றி னிவிர்த்தியின்றித் தர்மாதர்மங்கள் நிவிர்த்தியாவதில்லை. இராகத் துவேஷங்களும் அநுகூலப் பிரதிகூல ஞானங்களா லுண்டாகின்றன. அநுகூலப் பிரதிகூல ஞானங்களி னிவிர்த்தியின்றி இராகத் துவேஷங்கள் நிவிர்த்தியாவதில்லை. அநுகூலப் பிரதிகூல ஞானங்கள் பேத ஞானத்தா லுண்டாகின்றன. அந்தப் பேதஞானத்தின் நிவிர்த்தியின்றி அநுகூலப் பிரதிகூல ஞானங்கள் நிவிர்த்தியாகா. பேதஞானமும் அவித்தையா லுண்டாகின்றது. அவித்தையினிவிர்த்தியின்றிப் பேதஞானம் நிவிர்த்தியாவ தில்லை. அவித்தையும் ஆத்மாவினிடத்து வானத்தில் வானவிலைவுபோல் (அநாதி) கற்பிதமா யிருத்தலின் ஆத்மாவை யறிந்தா

லன்றி அது நிவிர்த்தி யாவதில்லை. ஆத்மஞானத்தால் அஞ்ஞானம் நிவிர்த்தியாக, சர்வதுக்கநிவிர்த்தி பரமானந்தப் ப்ராப்தி வடிவ பிரத்தியகாத்மரூப பிரஹ்மமே மிஞ்சுகின்றது. இதுவே யதார்த்த நிலையாம். இந்த யதார்த்த நிலையை யறிந்து பிறழா திருப்பவருக்குஜனன மரணாதிவடிவ சம்சாரம் சித்திப்பதில்லை.

இங்ஙனமாக, துக்கத்தின் அத்தியந்த நிவிர்த்தி பரமானந்தப்பிராப்தி வடிவமோட்சத்திற்குச் சாதனம் ஆத்ம ஞானமாம். இவ்வாத்ம ஞானம் கல்வி கேள்வி யறிவொழுக்கமுடைய பிரஹ்ம நிஷ்ட குருவினிடத்து ஷட்விதலிங்க தாற்பரியத்தோடு மகா வாக்கியார்த்த நிச்சயஞ் செய்வதனா லுண்டாகின்றது. அம் மகாவாக்கியம் பரமேசுவர னருளிய வேதத்தி னந்தத்திற் பிரதிபாதிக்கப்பட் டிருக்கின்றது. வேதத்தி னந்தம் வேதாந்தம் அல்லது உபநிஷத்தென்று சொல்லப்படும். அவ் வேதாந்தத்தி னர்த்தத்தைப் பிரதிபாதிக்கும் நூல்களு முபசாரமாக வேதாந்தமென்று சொல்லப்படுகின்றன. அவ்வேதாந்தத்தி னர்த்தத்தை நன்கு விளக்கிய நூல் பகவத்கீதையும் பிரஹ்ம சூத்திரமுமாம். உபநிஷத்து, கீதை, பிரஹ்மசூத்திர மென்னு மூன்றும் பிரஸ்தானத்திரய மென்று சொல்லப்படும். இவற்றி னர்த்தங்களை விரித்தும் சுருக்கியும் சம்ஸ்கிருதபாஷையிலும் ஏனையபாஷையிலும் நம்மனோ ருய்தற்பொருட்டு

மகான்கள் அனேகநூ லியற்றி யிருக்கின்றனர். அவற்றை யெல்லா மொருவன் குருமுகமாக வோதி ஐயந்திரிபற் றுத் தத்துவ ஞானமடைதல் மிகவுந் துர்லபமாம். அதி னும் தமிழொன்றே யுணர்ந்த மக்கள் அவ்வா றுணர் தல்மிகவுந் துர்லபமாம். அது நிவிர்த்தியாதற்பொருட் டும் அதிகாரிகட் கெளிதில் தத்துவஞ்ஞான முண்டாதற் பொருட்டும் யான் குருமுகமாக வோதி யுணர்ந்த வேதாந்தார்தங்களை யெல்லாஞ் சுருக்கி வேதாந்தப்பிர தீபமெனப் பெயரிட்டு வினாவிடை வடிவமாக வெழுதித் தெய்வ விசுவாசமுள்ள சில வுத்தம புருஷர்களது அபேக்ஷையை யாஸ்பதமாக்கிப் பரோபகாரமாக இந் நூல் வெளி யிடப்பட்டது. இதன்கண் பிரமப் பிரமா தங்களால் தவறுளதாயின் அதனை யறிவுடையோர் தெரிவித்தால்மறுபதிப்பில் திருத்தி யச்சிடுவதுடனவர் கட்கு வந்தனமு மளிக்கக் கடமைப்பட் டிருக்கின் றேன்.

1—7—09. நா-இரா.

## பிரகரண அட்டவணை.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | அநுபந்தசதுஷ்டயப் பிரகரணம். | 3 |
| 2. | சாதனசதுஷ்டயப் பிரகரணம். | 14 |
| 3. | உபதேசப் பிரகரணம். | 36 |
| 4. | சமாதிப் பிரகரணம். | 154 |
| 5. | ஜீவன்முத்திப் பிரகரணம். | 186 |

இப்புத்தகம் கீழ்க்குறிக்கு மிடத்திற் கிடைக்கும்.

(1) சே. பிச்சாண்டிபிள்ளை, கற்கண்டு வியாபாரம், திருநெல்வேலி.

(2) எம். பத்மநாபன், தர்மகர்த்தா, ஸ்வாமிமடம், திருவிதாங்கூர், அஞ்சிங்கல் போஸ்ட்.

(3) சச்சிதாநந்தம் பிரஸ், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

உ

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

சமிவனக்ஷேத்திரமென்னும்

ஸ்ரீகோவிலூர்மடாலயம்

ஸ்ரீமது

மூத்திராமலிங்கதேசிகராதீனத்திற்குரிய

ஸ்ரீவீரசேகரஞான தேசிகர் பாதசேகரரான

ஸ்ரீசுப்பையசுவாமிகள்

அருளிச்செய்த

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

முன்னுளி லாசிரியர் பாடியா திகளின்முதற்
பொருளைக் காட்டப்
பின்னுளி லவர்சீடர் பிரகரணம் பலவாகப்
பிரித்து வைத்தா
ரின்நாள்வே தாந்தப்பிர தீபமெனத் தமிழிலவை
திரட்டி யீந்தா
னெந்நாளுந் தவமுயலு மிராமஸ்வா மித்தவத்தி
னிறைவன் மாதோ.

ஸ்வகீயாநந்த யோகிகளெனும்
பொதிகைமலைச்சித்தர்மரபு
ஞானாநந்த நாதமுனிசுவாமிகளின்
மாணாக்கரு ளொருவராகிய
வேதாந்தப் பிரசங்கியார்
சென்னை
ஸ்ரீமத். ல. நாராயணசாமி நாயகரவர்கள்
இயற்றிய
நேரிசை வெண்பா.

தேசிகநா ராயணரின் சீரோ ரருளுருக்கொண்
டாசறுமி ராமசாமி யாய்த்தோன்றிக்—காசினியோர்க்
கைந்தாம் பிரகரண மார்வேதாந் தப்பிரதீ
பந்தந்தான் கண்டிலங்கப் பார்த்து.

---

அம்பாசமுத்திரம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
அரிஹரபாரதியவர்களின்
மாணாக்கருளொருவரும்,
ஊர்க்காடு, ஹிந்து எலிமெண்டிரி ஸ்கூல்
மாஸ்டருமாகிய ஷை யூர்
ஸ்ரீமத். பி. அங்கப்பபிள்ளையவர்கள்
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆரணமன் னெகினேனைக் கண்ணரிதா யகிலமெலா
மறிவாய் ஞான்றும்
பூரணமா யடியருளப் பூங்கோயிற் றெருட்கதிராப்ப்
பொலிந்து தோன்றி

நாரணனென் றருணாரணாய்ப் படியெடுத்த சற்குரவ
னளின பாதஞ்
சிரணியென் றகஞ்செனியுஞ் சூட்டியிருட் டொடக்க
தேசி கேசன். [றுத்த 1

எட்டெழுத்தி னைந்தெழுத்தி னிரண்டாவ தக்கரத்தை
யினிமை யாகச்
சுட்டியபின் ஸ்வாமியென்போன் சொருபநிலை நன்கு
தூய்மை யென்ன [ணர்ந்த
மட்டெடுத்திங் கறைவதெவன் வழக்காமோ மாசகன்
மனத்திற் சூடு [றோர்
மிட்டமரைக் கழலிதயத் திருத்தியொளி செயச்செனி
மிரங்கிச் சூட்டி. [யு 2

தன்னடிமை யெனக்கடைக்கண் சாற்றியநங் குருநாதன்
றகைமை யோர்கண்
முன்னவனின் கருத்தறைதி யெனமறையின் சிரப்பொ
முற்று மாய்ந்து [ருளை
துன்னுபெயர் வேதாந்தப் பிரதீப மென்னவே
தொகுத்த நூலை
முன்னிலைநின் றச்சியற்றி யருளினன்பன் னாளின்ப
மூழ்கி வாழ்க. 3

ஸ்ரீ சாது இரத்தினவேதாந்த விசாரணைச் சபையி னங்கத்

தவர்களு ளொருவராகிய

சென்னைமாநகரம்

ஸ்ரீமத்-வி. முருகேசமுதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

தூய்மையுங் கேண்மையுந் தோலாக் கருணையும்
வாய்மையும் வாஞ்சையும் வற்றாக் கல்வியு
நிறைந்த கேள்வியு நிட்டானு பூதியு
மறைந்த பொருளையு மனதிடைக் கொண்டு
சுரோத்திய பிர்ம சுவானு பவமுடை
விரோத மில்லா விபுவை யளிக்கு
ஞானசற் குருவா நாரா யணன்பதத்
தியான பரனுந் திடஞானச் செல்வ
னிராம சாமியெ னினமிற் றீரன்
றரா தியி னுள்ள சகலரும் புகழ
வேதாந் தப்பிர தீபமெய்ந் நூலால்
வேதாந்தத் துண்மை விரிவுற விதித்தனன்
சிறப்புறு தருக்கஞ் செப்பு
மறுப்பறு மிலக்கணம் வரையப் பெற்றே.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 22 | அநுபாந்த | அநுபந்த |
| 10 | 1 | 01 | 10 |
| 11 | 23 | ஸ்லொஹம் | ஸ்லோஹம் |
| 27 | 22 | துக்கமாமென்னு | துக்கமென்னு |
| 52 | 21 | நிலகிரி | நீலகிரி |
| 58 | 7 | யத்தின | யத்தன |
| ஷை | 11 | உஷண | உஷ்ண |
| 61 | 1 | ஹாணி | ஹானி |
| ஷை | 10 | கொண்ற | கொன்ற |
| ஷை | 12 | ஹாணி | ஹானி |
| 64 | 16 | துர்வாச | தூர்வாச |
| 70 | 7 | (பிருதிவியில்) | (கந்தகுணத்தில்) |
| 79 | 7 | ஜீவேஸ்வர | ஜீவேஶ்வர |
| 92 | 23 | மிரணடும் | மிரண்டும் |
| 94 | 21 | வைராக்கியக்களுள் | வைராக்கியங்களுள் |
| 95 | 6 | சங்யஸ்தயய | சங்யஸ்தமயா |
| 100 | 16 | ஸ்திரீகளுககு | ஸ்திரீகளுக்கு |
| 115 | 20 | சப்பந்த | சம்பந்த |
| 121 | 10 | யாவதுபாவது | யாவதுயாது |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 135 | 19 | பேதத்தை | அபேதத்தை |
| 136 | 6 | சாப்தமென்னு | சப்தமென்னு |
| 143 | 8 | அபேசதாதக | அபேதசாதக |
| 189 | 2 | விதேமுத்தி | விதேகமுத்தி |
| 190 | 11 | பரோபக்ஷ | பரோக்ஷ |
| 191 | 11 | னுணடாகும் | னுண்டாகும் |
| ஷை | 13 | னுண்டம் | னுண்டாம் |
| ஷை | 18 | ண்டோகும் | டுண்டாகும் |
| 193 | 7 | சுகர் | பாதர் |
| 201 | 1 | 102 | 201 |
| 212 | 1 | 122 | 212 |
| 219 | 9 | அசுரவாசனையை | அசுபவாசனையை |
| 229 | 22 | ஸத்திப | ஸத்திய |
| 238 | 5 | மனொபந்த | மனோபந்த |
| 253 | 1 | 235 | 253 |
| 254 | 6 | ஞானியும் | ஞானியாயினும் |

உ

# விவேகஷட்கம்.

அனித்தியபூதத் தேகநானன்று
விந்தியத்தரங்கநா னன்று
நனித்தவாங்கார பிராணவர்க்கங்க
ளன்றுநற் புந்தியுமன்று
தொனித்திடுந்தார மனைசெல்வங்களுக்குத்
4 தூரமாஞ்சாட்சிநா னென்றுந்
தனித்துநித்தியமாய்ப் பிரத்தியகான்மாவாந்
தற்பதப்பொருளதாஞ் சிவோகம். 1

உற்பவன்விருத்த னன்றுநானோர்கா
லத்திலுநசிப்பவ னன்று
வற்பமாந்தேக காரியமான
வவையெலா மகங்கரத்தல்லாற்
றற்பதவடிவாஞ் சின்மயமான
வெனக்கிலை சகளநிஷ்களமா
5 யெப்புறத்தேனு மெல்லையற்றிருக்கு
மின்பசிற்சொருபமாஞ் சிவோகம். 2

சத்தியஞானா னந்தமாம்பிரமத்
துதித்திடு மாயையிற்சனித்த
மெத்துமிவ்வுலகஞ் சேதனத்திடையே
நசிக்குமதேதென விளம்பிற்
றத்துசொப்பனமுஞ் சுழுத்தியிலசத்தாந்
தன்மைபோற் சத்திலாதிருக்குஞ்
6 சுத்தபூரணமாய் நித்தியமாகித்
துலங்கியசொருபமாஞ் சிவோகம். 3

பழுதைதன்னிடத்திற் பாம்புதோன்றுதல்போற்
பரப்பிர மத்திடையதனிற்
கழிதருமஞ்ஞா னத்தினாற்சீவ
னுதித்திடக் கண்டவனொருவன்
பழுதையென்றதனாற் சர்ப்பமோகமும்போய்ப்
பழுதையாய்க் கண்டதுபோல
வழுவிறேசிகனார் சீவனீயன்றென்
றறைந்திடவாகினேன் சிவோகம்.

எமக்குமன்னியமா முலகமொன்றில்லை
யெவ்வுல கங்களெம்மிடத்திற்
சமித்துவுற்பவமா மாதலான்மாயை
வடிவம தேதெனிற்சாற்ற
வமைத்தகண்ணாடி பிம்பமாநிழல்போ
லடங்கியெம் மிடத்தினில்விளங்குந்
தமத்துவமில்லாச் சச்சிதானந்த
தற்பதவிமலமாஞ் சிவோகம்.

சாக்கிரமதனி லிந்திரியங்க
டமக்குமேற்சாட்சியாஞ் சிவோகம்
தேக்குசொப்பனத்தி லுலகரூபமதாய்ச்
செய்மனச்சாட்சியாஞ் சிவோகந்
தாக்கியசித்த நாசமாஞ்சுழுத்தி
யவத்தையிற் சாட்சியாஞ்சிவோக
நீக்கமிறுரியா னந்தமாஞ்சர்வ
நிர்மலசாட்சியாஞ் சிவோகம்.

ஓம்

ஸத்சத்

பரப்பிரஹ்மணேநம:

# வேதாந்தப் பிரதீபம்.

## கடவுள்வணக்கம்.

"ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையு ணாடு."

## குருஸ்துதி.

தொடக்கறு முத்த வியாசத் தூயவன் மரபிற் றோன்றிக், கடக்கறு மிருளொடொலைக்குங் கதிரவ னாகி நின்று, விடக்கறு நிலையார் நாரா யணகுரு வியன்றாள் பற்றி, நடக்கறு சின்மயன்ற னல்லடி வணங்கி வாழ்வாம்.

## அவதாரிகை.

பிரவிருத்தி நிவிருத்தி யென்னு மிரண்டு மார்க்கங்களில், பிரவிருத்தி மார்க்கம் பிறவிக்கேது வென்றும், நிவிருத்திமார்க்கம் அத னிவிருத்திக்கேது வென்றும் மந்த சிஞ்ஞாசுக ளெளிதி லுணர்ந் துய்தற்பொருட்டு வினவிடை வடிவமாக வெழுதப்படு மிந்நூலின்கண் மங்களாசரண முதலியன வெழுதாவிடுத்து இத

னிடத்து அவர்கட்குப் பிரவிர்த்தியுண்டாகாதாதலின், ஈண்டவை யெழுதுத லாவசியகமாம்.

### மங்களாசரணத் திரய லக்ஷணம்.

வஸ்துநிர்த்தேசம், நமஸ்காரம், ஆசீர்வாத மென்பன சாஸ்திராரம்பத்திற் செய்யப்படு மங்களாசரணத் திரயமாம். அவற்றுள், (1) வஸ்துநிர்த்தேசரூப மங்கலமாவது சகுணம் அல்லது நிர்க்குணமாக வுள்ள பரமாத்ம வஸ்துவின் கீர்த்தனமாம் (பொருளியல் புரைத்தலாம்); அஃதாவது திரிநேத்திர சதுர்ப்புஜமான் மழு சங்கு சக்ராதி வடிவன் அல்லது சத்தியஞானநந்தானந்தம் பிரஹ்மமென்பதாம். (2) நமஸ்காரரூபமங்கலமாவது அவ்வஸ்துவிற்கு வணக்கங் கூறுவது. (3) ஆசீர்வாதரூப மங்கலமாவது தனது அல்லது மாணாக்கரது வாஞ்சித (இஷ்ட) வஸ்துவைப் பிரார்த்திப்ப (வாழ்த்துவ) து; அஃதாவது பந்தத்தை நீக்கிச் சுகத்தைக் கொடுத்து இரட்சிக்குந் தினதயாளுவான யாதொரு ஈஸ்வர (குருநாத)னுண்டோ அந்தக் கருணாநிதி இந்தக் கிரந்தத்தைப் படிப்பவர் கேட்பவர்களது ஜன்மாதி துக்கத்தை நிவிர்த்திப்பாராக வென்பதாம்.

### வியாக்கியான பஞ்சலக்ஷணம்.

பதம், பதார்த்தம், பதசாரம் (வாக்கிய யோஜனை), பரீக்ஷை (வினா), பரிகாரம் (விடை) என்பன வியாக்கியான பஞ்சகமாம். அவற்றுள், (1) பதமாவது அக்ஷர

சமுதாயம்(எழுத்தின்கூட்டம்); அஃதாவது வழுவின்றி இலக்கணங்களமையப் பெற்ற வெழுத்துக்களின் றொடர்பாம். (2) பதார்த்தமாவது அப்பதத்தின் பொருளை நன்றாக விளக்கியுரைத்தல். (3) பத சாரமாவது அப்பதத்தின் சாரத்தை (வாக்கியார்த்தத்தை) விளக்கியுரைத்தல். (4) பரீக்ஷையாவது அறிந்துகொள்வான்வேண்டி ஆசங்கித்த(கேட்ட)ல் (5) பரிகாரமாவது அதற்குத்தக்க வெதிர்மொழி (உத்தரம்) அளித்தல்.

## அந்வயபஞ்சலக்ஷணம்.

விசேடணம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியையென்பன அந்வய பஞ்சகமாம். அவற்றுள், ஈண்டு விவேகமுடைய புருஷன் சோகத்தைக் கடக்கிறான் என்னும் வாக்கியத்தில் விவேகமுடைமை விசேடணமும், அதனால் விசேடிக்கப்பட்ட புருஷன் விசேடியமும் கருத்தாவும், சோகத்தை என்பது கருமமும், கடக்கிறானென்பது கிரியையுமாம். விசேடணம் கருமத்திலும் கிரியையிலும் வரும்.

# 1. அநுபந்த சதுஷ்டயப் பிரகரணம்.

வினா:—அநுபந்தமென்பது யாது?

விடை:—எது தன்னை யறிந்தபின்னர் முமுட்சுவைக் கிரந்தத்தோடு ஸம்பந்தப் படுத்துகிறதோ அது அநுபந்தமாம்.

வினா:—இந்த அநுபந்த மெத்தனை வகைத்து?

விடை:—விஷயம், சம்பந்தம், பிரயோசனம், அதிகார மென நான்கு வகைத்தாம்.

வினா:—விஷயமென்பது யாது?

விடை:—ஈண்டு ஜீவப் பிரஹ்ம (அபேதமாகிய) ஐக்கியமாம்.

வினா:—ஸம்பந்த மென்பது யாது?

விடை:—ஸம்பந்திகளின் வேறு பவ்விரண்டினு முள்ள விணக்கமாம்.

வினா:—இந்தச் சம்பந்த மெத்தனை விதம்?

விடை:—பிரதிபாதகப் பிரதிபாத்திய பாவம், ஜனக ஜன்னிய பாவம், கர்த்திரு கர்த்தவ்ய பாவம், பிராபக பிராப்பிய பாவம் எனப் பலவாம்.

வினா:—பிரதிபாதகப் பிரதிபாத்திய பாவ சம்பந்தமாவது யாது?

விடை:—கிரந்தத்திற்கும் விஷயத்திற்கு முள்ள சம்பந்தம் பிரதிபாதகப் பிரதிபாத்திய பாவசம்பந்தம்; சொல்லுவது பிரதிபாதகம், சொல்லப்படுவது பிரதிபாத்தியம்; விஷயத்தை விளங்கச் சொல்லுகிற கிரந்தம் பிரதிபாதகம், சொல்லப்படுகிற விஷயம் பிரதிபாத்தியமாம்.

வினா:—ஜனகஜன்னிய பாவசம்பந்தமாவது யாது?

## அநுபந்த சதுஷ்டயப் பிரகரணம்.

விடை:—கிரந்தத்திற்கும் ஞானத்திற்கு முள்ள சம்பந்தம் ஜனகஜன்னிய பாவசம்பந்தம். உற்பத்தி செய்வது ஜனகம், உற்பத்தியாவது ஜன்னியம்; கிரந் தம் விசாரமூலமாக ஞானத்தை யுற்பத்திசெய்கின் றமையால் ஜனகமாம், ஞானம் விசார மூலமாக உற் பத்தியாகின் றமையால் ஜன்னியமாம்.

வினா:—கர்த்திரு கர்த்தவ்யபாவ சம்பந்தமாவது யாது?

விடை:—அதிகாரிக்கும் விஷயத்திற்கு முள்ள சம்பந்தம் கர்த்திரு கர்த்தவ்யபாவ சம்பந்தம். செய்ப வன் கர்த்திரு, செய்யத்தக்கது கர்த்தவ்யம்; விசாரஞ் செய்யு மதிகாரி கர்த்திரு, செய்யத்தக்க விசாரம் கர்த் தவ்யமாம்.

வினா:—பிராபக பிராப்பியபாவ சம்பந்தமாவது யாது?

விடை:—அதிகாரிக்கும பலத்திற்கு முள்ள சம் பந்தம் பிராபக பிராப்பியபாவ சம்பந்தம். அடைகிற வன் பிராபகன், அடையப்படுவது பிராப்பியம்; பலத் தையடைகிற வதிகாரி பிராபகன், அடையப்படுகிற பலம் பிராப்பியமாம்.(ஈண் டின்றியமையா தறியத்தக்க சம்பந்தங்களின் தன்மை யறிவிக்கப் பட்டதென்க).

வினா:—இங்கே சம்பந்தத்தைக் கற்பித்ததற்குப் பிரயோசனம் யாது?

விடை:—எந்தவஸ்துவிற்கு எதனோடு சம்பந்தமிருக்கிறதோ அந்தவஸ்துவிற்கு அதி லுபயோகமிருக்கின்றது. குலாலாதி (குயவர்முதலியோர்) களுக்குக் குடத்துடன் சம்பந்த மிருக்கின்றது. அதனா லவர்கள் குடத்தி லுபயோக மாகின்றார்கள். எந்தவஸ்துவிற்கு எதனோடு சம்பந்தமில்லையோ அந்தவஸ்துவிற்கு அதனிடத்து உபயோக முண்டாகிறதில்லை. நேத்திரத்திற்கு வாயுவினோடும் ஆகாயத்தினோடும் சம்பந்தமில்லை. ஆதலால் நேத்திரத்திற்கு வாயுவினிடத்தும் ஆகாயத்தி னிடத்தும் உபயோகமுண்டாகிற தில்லை; அதுபோலக் கிரந்தத்திற்கும் விஷயத்திற்கும், பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) ஸம்பந்த மில்லாவிடின் கிரந்தத்திற்கு விஷயத்திலும் விஷயத்திற்குக் கிரந்தத்திலும் யாதோ ருபயோகமுஞ் சித்தியாது. ஆகையால் பரஸ்பரத்தி னுபயோகம் பரஸ்பரத்தில் நிச்சயிக்கும் பொருட்டு அவற்றின் சம்பந்தங் கற்பிக்கப்படுகின்றது. இப்பிரதிபாத்திய பிரதிபாதக சம்பந்தம்போல வேனைய சம்பந்தங்களையு மூகித்துணர்க.

வினா:—பிரயோசனமாவது யாது? அஃதெத்தனை விதம்?

விடை:—வாஞ்சித (விரும்பிய) வஸ்துவின்லாபம் (அடைவு) பிரயோசனம். அது பரமப் பிரயோசனம், அவாந்தர (மத்திய)ப் பிரயோசனமென விருவகைத்தாம்.

வினா:—பரமப் பிரயோசனமாவது யாது?

விடை:—எந்தப் பலத்தினது பிராப்தியி னிச்சை புருஷனுக் குண்டாகின்றதோ அது பரமப் பிரயோசனம். ஈண்டுப் பலம் துக்கநிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி ரூபமானமோக்ஷம். (அவித்தையு மதன் காரியமான ஸ்தூலசூக்ஷ்மப் பிரபஞ்சமும் அவற்றின் காரியமான சரீரங்களும் அவற்றின் தர்மமான ஜனனமரணாதி ஸம்சாரமுமாகிய அனர்த்தந் துக்கத்திற் கேதுவாயிருத்தலால் அவை அனர்த்தமெனப் படும். அவற்றி னத்தியந்த நிவிர்த்தியும் பரமானந்தப் பிராப்தியும் பரமப் பிரயோஜனமாம்).

வினா:—அவாந்தரப் பிரயோஜனமாவது யாது?

விடை:—அந்தப் பரமப் பிரயோஜனத்தின் சாக்ஷாத் ஸாதனமாம். ஈண்டுத் திட (பிரஹ்மாத்ம ஐக்கிய) ஞானமே அவாந்தரப் பிரயோஜனமாம்.

வினா:—அதிகாரி யார்?

விடை:—தனது அந்தக்கரணத்திலுள்ள மலம், விட்சேபம், ஆவரணமென்னு மூன்று தோஷங்களுள் நிஷ்காமகர்ம உபாசனைகளால் முறையே மலவிட்சேப தோஷங்க ணீங்கிச் சித்தசுத்தியு (ஏகாக்ர சித்தமு)டையவனும் அதனாலே ஆவரணதோஷ மாத்திரமுள்ளவனும் ஸாதன சதுஷ்டய சகிதனும் யுக்தி சாமர்த்திய புத்திமானு மிருப்பவன் இந்நூலிற்கு

பிந்நூலின் விசாரத்திற்கும் விசாரஜன்னிய வாத்ம ஞான வாயிலாக மோக்ஷத்திற்கும் * அதிகாரியாவன்.

வினா:—மலமாவது யாது?

விடை:—ஜன்மாந்தர (பூர்வஜன்ம)ங்களிற் செய்த நிஷித்த கர்ம பலமாகச் சித்தத்திற் பொருந்தியுள்ள பாவ சம்ஸ்காரமாகிய அசுப வாசனைகளாம்.

வினா:—மலதோஷ முள்ளதை யெதனா லறியலாம்?

---

* அதிகாரிகள் கிருதோபாசகர் அகிருதோபாசக ரெனச் சாமான்யமாக விருவகையினரா யிருப்பர். அவர்களுள், எந்தப்புருஷனால் ஸகுணப்பிரஹ்மத்தின் ஸம்பூர்ண (சித்தத்தினேகாக்கிரத் தன்மை பரியந்தமான) உபாசனை செய்யப்பட்டிருக்கிறதோ அவன் கிருதோ பாசகன். அவனிடத்திற் சாஸ்திரத்திற் கூறப்பட்ட ஸாதனங்களியாவும் பிரசித்தமாய்க் காணப்படும்.

எவனுக்கு ஞானத்திற்கு முன் சகுணப்ரஹ்மத்தி னுபாசனை அபூர்ணமா யிருக்கிறதோ அவன் அகிருதோபாசகன்; அவனிடத்திற் சகல ஸாதனங்களும் பிரசித்தமாய்க் காணப்படுவதில்லை; ஆனால் சிற்சிலசாதனங்கள் பிரசித்தமாய்க் காணப்படுகின்றன; கௌணமாயு மிருக்கின்றன. ஆதலால் அவனுக்குச் சித்தத்தினேகாக்கிரத் தன்மையின்மையினால் ஞானமுண்டான பின்னரும் விபரீதபாவனை யிருக்கின்றது; அதனை நிவிர்த்திக்கும் பொருட் டவனுக்கு நிதித்தியாசனங் கர்த்தவ்யமா (செய்யத்தக்கதா)ம்.

விடை:—வாசனைக ளெல்லாஞ் சித்தத்தில் சூக்ஷமமாக அடங்கி யிருத்தலால் அவை பிரத்தி யக்ஷமா யறியப்படாவாம்; ஆனால் பரோக்ஷமாம். ஆயினு மவற்றைத் தூமத்தா லக்கினி யுண்டென் றறிவது போல வனுமானத்தா லறியலாம். அஃதாவது:-தூமம் (புகை) தோன்றியவிடத்து அது காரணமாக ஈண்டு அக்கினி யுண்டென் றறிதல் போல எப்போது தனக்கு நிஷித்த கர்மங்களிலாவது விஷயங்களிலாவது இச்சை யுண்டாகின்றதோ அப்போது தன்னுடைய சித்தத் தில் அசுபவாசனை யிருக்கிறது; அதனாலே தனக்கு மலதோஷ முண்டென் றறிதல் வேண்டும்.

வினா:—மலதோஷ மெதனானீங்கும்?

விடை:—(வேத யுக்தமான) கர்ம காண்டத்திற் கூறிய நிஷ்காம (பலத்தை விரும்பாமற் செய்யும்) கர் மம், பூததயை (சர்வ ஜீவர்களிடத்து மிரக்கம்), ஈஸ்வர நாமோச்சாரணாதி ஸாதனங்களால் நீங்கும்.

வினா:—விக்ஷேபமாவது யாது?

விடை:—சித்த சஞ்சலமாம்.

வினா:—விட்சேப தோஷ முள்ளதை யெதனா லறியலாம்?

விடை:—எப்போது தன்னுடைய சித்தம் வே தாந்த சிரவணாதிகளிலாவது மகாவாக்கியத்தி னர்த்தமாகிய ஸ்வ ஸ்வரூபத்திலாவது ஸ்திரமாக நிலை

பெறுமல் அன்னிய (பாஹிய) விஷயங்களிற் சுழன்று கொண் டிருக்கிறதோ அப்போது தன்னுடைய சித்தத்தில் சஞ்சலமிருக்கிறது. அதனாலே தனக்கு விட்சேப தோஷமுண்டென் றறிதல்வேண்டும்.

வினா:—விட்சேபதோஷ மெதனா னீங்கும்?

விடை:—உபாசனா காண்டத்திற் கூறிய ஈஸ்வர (குரு) த்தியானம், பிரணவமந்திரஜபம், அஜபா மந்திர ஜபம், அபராதராஹித ஈஸ்வரநாமக் கிரமோச்சாரணம், மகாவாக்கியார்த்த (நிர்க்குணப் பிரஹ்ம) சிந்தனையாதி ஸாதனங்களா லீங்கும்.

வினா:—பிரணவ மந்திரமாவது யாது? அதை ஜபிக்குங் கிரமமெப்படி?

விடை:—அகாரம், உகாரம், மகாரம், அமாத்திரை யென்னு மூன்றரை மாத்திரையோடு கூடிய ஓங்காராக்ஷரம் பிரணவ மந்திரமென்று சொல்லப்படும். இந்த ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகளான அகார உகார மகாரங்கள் பிரஹ்மா விஷ்ணு ருத்திர னென்னுந் திரிமூர்த்தி ரூபமான ஈஸ்வரனென்றும், வாச்சிய மென்றும், ஓங்காரத்தின் அமாத்திரை யென்னும் அர்த்த (அரை) மாத்திரை சுத்தப் பிரஹ்ம மென்றும் லக்ஷ்யமென்றுஞ் சொல்லப்படும். மூன்று மாத்திரையோடு கூடிய மூர்த்தசொரூபத்தைத் தியானிப்பது ஸோபாதிகத் தியானமென்றும், சகுணப்

பிரஹ்ம உபாசனையென்றும், அர்த்த மாத்திரையோடு கூடிய சுத்தப்பிரஹ்மத்தைத் தியானிப்பது நிருபாதிகத் தியானமென்னும் நிர்க்குணப் பிரஹ்ம உபாசனை யென்றும் சொல்லப்படும். இது மந்திர யோக மெனப்படும்.

வினு:—அஜபா மந்திரமாவது யாது? அதைத் தியானிக்குங் கிரமமெப்படி?

விடை:—வாக்கினல் ஜபிக்கப்படாது சுவாசம் வெளிப்படும் போது ஸோ என்னு மொலியோடும் உட்செல்லும் போது ஹம் என்னு மொலியோடுந் தானே யுதயமாகிக்கொண் டிருப்பது அஜபா மந்திரமாம்; மகாவாக்கியப் பொருளை யுடையதாம் ஸ ஹ என்னு மிரண்டு எழுத்துக்களோடு கூடிய ஓங்காரத்தினை அஜபாமந்திர மென்றும் அஜபாகாயத்திரி யென்றுஞ் சொல்வர். இதை வெகுகாலம் வரையில் ஜபித்துக்கொண் டிருக்க வெப்போது விருத்தியந்தர்முகமாகின்றதோ அப்போது சுவாசம் வெளிப்படும் போது ஸகாரத்தை * (ஸோஎன்பதை) யும் சுவாசமுட் செல்லும்போது ஹகாரத்தை (ஹம்என்பதை) யும் தியானிக்கவேண்டும். இவ்வாறு ஜபிப்பது அஜபா ஜப மெனப்படும். இதினின்றும் ஸகார ஹகாரமென்னு மிரண் டெழுத்துக்களையும் நீக்க, மிஞ்சி யிருக்கும்

* ஹம்ஸஸ் ஸோஹ மென்று அப்பியசிப்பது முண்டு.

ஓம் என்னு மெழுத்தெதுவோ அதன் பரமார்த்த உபாசனை நிருபாதிக மென்றும் மற்றது லோபாதிக மென்றும் சொல்லப்படும். இவற்றிற்கு முக்கியமாக நிவிர்த்தி பராகிய சன்னியாசியே யதிகாரியாவன். இவற்றைக் குருமுகமாகவே யறிந் தப்யசிக்க வேண்டும்.

வினா:—நாமாபராத மாவது யாது?

விடை:—ஸாதுக்கள் நிந்தை, அசத் புருஷர்களிடத்து ஈசுவரநாமத்தின் வைபவத்தைச் சொல்லுதல், சிவ விஷ்ணுவாதிகளிடத்தில் பேதபுத்தி, வேத வாக்கியங்களில் அசிரத்தை (விசுவாசமில்லாமை), சாஸ்திரவசனங்களில் அசிரத்தை, குருவாக்கியங்களி லசிரத்தை, ஈசுவரநாம மகாத்மியத்தில் அர்த்தவாதப் பிரமம் († யூபம் ஆதித்ய னென்பதுபோல ஸ்துதியை யறிவிப்பதாமென்னு மயக்கம்), நாமம் சர்வபாவத்தையுங் கெடுப்பதாமென்னும் புத்தியால் நிஷித்தகர்மங்களை யாசரித்தல், மகத்தான புண்ணியத்தையுண்டாக்குவது நாமமாமென்னும் புத்தியால் விகித கர்மங்களை விடுதல், அன்னியதர்மங்களோடு நாமஞ் சமமாமெனலாகிய பத்தும் நாமத்தி னபராதங்களாம்.

வினா:—ஈசுவரநாமத்தை ஜபிக்கும் கிரமம் யாது?

விடை:—மேற் சொன்ன பத் தபராதங்களையுமொழித்துப் பிராதக்காலம், மத்தியானகாலம், சாயங்

---

† யாகபசுவைக் கட்டுந் தூண்.

காலம், மத்தியராத்திரிகால மென்னு மிந்நான்கு காலங்களிலும் பிரித்து லக்ஷமளவேனும் அல்லது அதிகமேனும் ஈசுவரநாமத்தை யுச்சரித்து அதனிடத்து சித்த விருத்தியை நிறுத்தவேண்டும். இஃது ஈசுவரநாமத்தை ஜபிக்கும் சாமான்யக்கிரமம்;இதன் விசேஷக் கிரமம் சற்குருமுகமா யறியத்தக்கதாம்.

வினு:—ஆவரண மாவது யாது?

விடை:—ரூபவிஷயங்களை யந்தகாரமும், சூரியனை மேகமும், ஜலத்தைப் பாசியு மறைத் திருப்பதுபோல (ஸ்வயம்) பிரகாசமாகிய ஆத்மாவை (அறியக் கூடாதவண்ண) மறைத்திருப்பதாம்.

வினு:—ஆவரணதோஷமுள்ளதை யெதனு லறியலாம்?

விடை:—எப்போது தன்னுடைய சித்தத்தில் பிரஹ்மமாகிய ஆத்மாவை யானறியவில்லை யென்னும் வியவகார (தோற்ற) முண்டாகின்றதோ அப்போது தன்னுடைய சித்தத்தி லாவரண மிருக்கிறதென் றறிதல் வேண்டும்.

வினு:—ஆவரண மெதனு னீங்கும்?

விடை:—அந்தகாரஞ் சூரியோதயத்தால் நீங்குவதுபோல (ஜீவப்பிரஹ்ம ஐக்கிய) ஞானோதயத்தால் நீங்கும்.

## 2. சாதன சதுஷ்டயப் பிரகரணம்.

அனுபந்தத்தை யறிந்து கிரந்தத்திற் பிரவிருத்திக்கு மதிகாரிகளுக்குச் சாதனசதுஷ்டய மவசியம் வேண்டியிருப்பதால் அதன் பின்ன ரிதுவைக்கப்பட்டது.

வினு:—சாதன சதுஷ்டய மெவை?

விடை:—நித்தியா நித்திய வஸ்துவிவேகம், இகமுத்திரார்த்த பலபோக விரா (வைரா) கம், சமாதி ஷட்க சம்பத்தி, முமுட்சுத்துவமென்னு நான்குமாம்.

வினு:—நித்தியா நித்ய வஸ்து விவேகமாவது யாது?

விடை:—சச்சிதானந்தப் பிரஹ்மமே நித்தியம்; அதற் கன்னியமான நாமரூபங்களெல்லாம் அநித்தியமெனப் பிரித்தறிவதாம். அஃதாவது ஸாரமாகிய ஆத்மாவையும் அஸாரமாகிய வநாத்மாவையும், ஹம்ஸ (அன்ன) மானது க்ஷீராம்புவை (பாலையும் நீரையும்) பிரிப்பதுபோலப் பிரித்தறிவதாம்.

வினு:—ஸாதனங்களின் பஞ்சலக்ஷண (அங்க) ங்களெவை?

விடை:—ஹேது, சொரூபம், காரியம், அவதி, பலமென்னு மைந்துமாம்.

வினு:—நித்தியா நித்திய வஸ்து விவேகத்தின் பஞ்சலக்ஷணங்க ளெவை?

விடை:—(1) அந்தக்கரணசுத்தி யில்லாதவர்களுக்கு நித்தியா நித்திய வஸ்துவிவேக முண்டாகாமையினு லந்தக்கரண சுத்தி நித்தியா நித்திய வஸ்துவிவேகத்திற்கு ஏது (காரணம்); (2) பிரஹ்மமே நித்தியமாயுள்ளது ஏனைய வனித்தியமாயுள்ளவென்று சாஸ்திர வாயிலாக நிச்சயித்தல் சொரூபம்; (3) சாஸ்திரவாயிலாக நித்தியமின்னது அனித்திய மின்னதென்று நிச்சயித்தலைச் சதா சிந்தித்துக்கொண் டிருத்தல் காரியம்; (4) நாமரூப வடிவங்க ளியாவு மனித்தியம் அவையின்றியது நித்தியமென்று நிச்சயித்தது எவ்வாற்றானு நீங்காது நன்றாய்த்திடப்பட்டிருப்பதே அவதி (எல்லை); (5) பிரஹ்ம (புண்ய) லோக சாலோகப் பிராப்தியே பலம்.

வினா:—இக முத்திரார்த்த பலபோக விராகமாவது யாது?

விடை:—இகத்திலுள்ள சிர்க்கு (மாலை) சந்தன வனிதாதி போகங்களும், பரத்தி லுள்ள ரம்பா தராமிர்தாதி போகங்களுமாகிய சகல போகங்களினு முள்ள வைராகமாம். அஃதாவது இந்த லோகமுதல் பிரஹ்மலோக பரியந்தமாகிய சகலலோகங்களும் புனராவர்த்தி யுடையன வென்னும் சுருதி (பிரமாண) யுக்திகளாற் சகலலோகபோகங்களின் இச்சையை விடுதல் அல்லது அவற்றினிச்சை யில்லாமையாம்.

வினா:—இந்த வைராக்கியம் எத்தனை வகை?

விடை:—அபரம் பரம் என இருவகைப்படும்.

வினு:—அபர மென்ருல் என்ன? அஃது எத்தனை வகை?

விடை:—அபர மென்ருல் மத்திமம்; அது யதமானம், வியதிரேகம், ஏகேந்திரியம், வசிகாரமென நான்கு வகைத்தாம்.

வினு:—யதமான வைராக்கியமென்பது யாது?

விடை:—இந்த லோகத்திற் சாரம் யாது அசாரம் யாது என்று குரு சாஸ்திரங்களினுலே அறிவோமென்னு முயற்சியாம்.

வினு:—வியதிரேக வைராக்கியம் என்பது யாது?

விடை:—தன்னுடைய சித்தத்தில் முன்னிருந்த ராகாதி தோஷங்களுக்குள்ளே தன்னுற் பழகப்பட்ட விவேகத்தினுலே இவ்வளவு தோஷங்கள் சாந்தமாய் விட்டன, இவ்வளவு தோஷங்கள் சாந்த மாகாமல் மிஞ்சி யிருக்கின்றனவென்று பிரித்தறிவதாம்.

வினு:—ஏகேந்திரிய வைராக்கியமென்பது யாது?

விடை:—புஷ்ப, சந்தன, ஸ்திரீ, புத்திர, மித்திர, கிரகக் கிராம க்ஷேத்திர, தனதான்யாதி பிரத்தியக்ஷ விஷயத்திலும், அப்ஸரஸ்திரீ, அமிர்த சகித சுவர்க்காதி பரோக்ஷ விஷயத்திலு முண்டாகும் சகலஆசை (பிரவிர்த்தி) களுந் துக்கத்திற்கு ஏதுவென்றறிந் தவற்றைக் கைவிட்டு மனதின் மாத்திரம் அவற்றின் ஸ்தூல ரூபமான ஆசை இருப்பதாம்.

வினா:—வசீகார வைராக்கியமென்பது யாது?

விடை:—விஷயத்தின் மித்தியாரூப திருஷ்டியால் அந்த ஸ்தூலரூபமான ஆசை நீங்கிச் சூட்சும ரூபமான ஆசைமாத்திரம் இருப்பதாம்.

வினா:—இந்த வசீகார வைராக்கியம் எத்தனை வகை?

விடை:—மந்தம், தீவிரம், தீவிரதரம் என மூவகைத்தாம்.

வினா:—மந்த வைராக்கியமாவது யாது?

விடை:—புராணாதி வைராக்கியங்கள்போலப் பாப பலத்தாற் புத்திர தாரதனாதிகளுக்கு நாசம்வந்தபோது துக்கம் சகிக்கமாட்டாமல் இந்தச் சம்சாரம் மகாபொல்லாதது, இதனைச் சுடவேண்டுமென்று அந்தக்காலத்தில் மாத்திரம் புத்தியிற் றோன்றும் வைராக்கியமாம்.

வினா:—தீவிரவைராக்கியமாவது யாது?

விடை:—சொற்ப புண்ணிய பலத்தாற் புத்திர தார தனாதிகள் துக்க காரணமெனவறிந்து அவற்றின்கண் வெறுப்புற்று அவற்றாலுண்டாகு மற்பசுகத்தையுஞ் சரீரபரியந்தம் இச்சியா திருப்பதாம்.

வினா:—தீவிரதரவைராக்கிய மாவது யாது?

விடை:—மகா புண்ணிய பலத்தாற் பிரமலோகாதி சகலலோக போகங்களு மித்தையெனக் கண்டு

அவற்றின்கண் இச்சைவையாது உபேக்ஷையா யிருப்பதாம். இதுகாறுங் கூறிய இந்த வபரவைராக்கியம் சவிகற்ப சமாதியி லந்தரங்க சாதனமாம்.

வினா:—பரவைராக்கிய மென்பது யாது?

விடை:—பர மென்றால் உத்தமம். அது குணத்திரயாத்மகமான சகல விஷயங்களையுங் கானற்சலம் போல அத்தியந்தம் மித்தையாகக் காண்டலால் அந்தச் சூட்சுமரூபமான ஆசையு மில்லாதிருப்பதாம். இந்தப் பரவைராக்கியம் நிருவிக்ற்ப சமாதியில் அந்தரங்க சாதனமாம்.

வினா:—பரவைராக்கியம் எத்தனை வகை?

விடை:—மிருது, மத்தியம், தீவிரமென மூவகைத்தாம். அவற்றுள், மிருது வைராக்கியமுள்ளவனைவிட மத்திய வைராக்கிய முள்ளவனுக்குச் சீக்கிரத்தில் நிருவிகற்பசமாதி வாய்க்கும்; அவனைக் காட்டிலும் தீவிரவைராக்கிய முள்ளவனுக்குச் சீக்கிரத்தில் அது சித்திக்கும்.

வினா:—தீவிரவைராக்கியம் எத்தனை வகை?

விடை:—மிருது தீவிரம், மத்திய தீவிரம், அதிதீவிர மென மூன்று விதமாம்.

வினா:—இவற்றுள், எவ்வெவ் வைராக்கிய முள்ளவன் எவ்வெவ் யோகியாம்?

விடை:—யதமானம், வியதிரேகம், ஏகேந்திரியம், வசீகாரமென நால்வகைத்தாய அபரவைராக்கியமுள்ள வன் ஞானசப்த பூமிகளுள் சுபேச்சை, விசாரணை, தனுமானசியென்னு முதல் மூன்றுபூமியையு மடைந்த பிரஹ்மாப்பியாசியும், மிருதுமத்திய தீவிர மென்னு மூவித பரவைராக்கிய முள்ளவன் சத்துவாபத்தி யென்னும் நான்காவது பூமியை யடைந்த பிரஹ்மவித்தும், அவற்றுள் மிருதுதீவிர வைராக்கிய முள்ளவன் அசம்சத்தி யென்னும் ஐந்தாவதுபூமியையடைந்த பிரஹ்மவித் வரனும், மத்திய தீவிர வைராக்கியமுள்ளவன் பதார்த்தா பாவனை யென்னும் ஆறுவது பூமியை யடைந்த பிரஹ்மவித்வரியானும், அதிதீவிர வைராக்கிய முள்ளவன் துரியமென்னும் ஏழாவது பூமியை யடைந்த பிரஹ்மவித் வரிஷ்டனு மாவர்.

வினா:--இகமுத்திரார்த்த பலபோக விராகத்திற்கு ஏது முதலியன வெவை?

விடை:—விராகத்திற்கு வனிதாதி விஷயங்களில் அநித்தியத்துவாதி தோஷதிருஷ்டி ஹேது; ஸமஸ்த விஷய போகங்களையும் விட்டுவிடுதல் சொரூபம்; அவற்றிற் பின்செல்லாமை காரியம்; பிரஹ்மலோகாதி சகலவிஷயங்களையும் துரும்பெனக் காண்டல் அவதி; பிரஹ்மலோக சாமீப்யப் பிராப்தி பலமாம்.

வினா:—ஸமாதிஷட்க ஸம்பத்தியாவது யாது?

விடை:—ஶமம், தமம், உபரதி (விடல்), திதீக்ஷை (சகித்தல்), ஸமாதானம், சிரத்தை (விசுவாசம்) என்னுமிவ் வாறுமாம்.

வினா:—சமமாவது யாது?

விடை:—அந்தக்கரண நிக்கிரஹம்; அஃதாவது விஷயவாசனை அல்லது மும்மலத்தால் விஷயசமூகங்களாகிய வனத்திற் சஞ்சரிக்க வெழாநின்ற மனமென்னு மதயானையை விசாரஞானம் விஷயதோஷ திருஷ்டியென்னு மங்குசத்தால் சுவாதீனப்படுத்திச் சிரவணமென்னுங் கட்டுத்தறியில் நிலைபெறச் செய்வதாம்.

வினா:—மும்மல மென்பன யாவை?

விடை:—ஆணவம், மாயை, காமிய மென்னு மூன்றுமாம்.

வினா:—ஆணவமலமாவது யாது?

விடை:—உடம்பை நானென்று பாவித் திருப்பதாம்.

வினா:—மாயாமலமாவது யாது?

விடை:—தனக்கு வருவதை அறியாமற் கோபித் திருப்பதாம்.

வினா:—காமியமலமாவது யாது?

விடை:—கண்டவற்றிற் கெல்லாம் (எனதெனு தென்னும் பாவனையால்) ஆசைப்படுவதாம்.

வினு:—தமமாவது யாது?

விடை:—பாஹ்யேந்திரிய நிக்கிரகம்; அஃதாவது சிரவணுதிகளுக்கு விரோதிகளாய ஸப்தாதி விஷயங்களென்னும் பாலைவனத்திற் செல்லாநின்ற பஞ்சேந்திரியங்களென்னும் அசுவங்களை (குதிரைகளை) விஷயதோஷ திருஷ்டியாகிய சவுக்கினுலும் அகமுகமாகிய கடிவாளத்தினுலும் (ஆமை தன் னவயவங்களை யடக்குவதுபோல) அடக்கிச் சிரவணுதிகளை யுத்தேசித்துத் தத்தங்கோளகங்களாகிய லாயங்களில் நிறுத்துவதாம்.

வினு:—உபரதியாவது யாது?

விடை:—நீக்கப்பட்ட வனிதாதி விஷயங்களும் அவற்றைப் பற்றிய ஸகல கர்மங்களும் ஜன்மாதியனர்த்த (துக்க) ஹேதுவெனக் கண்டு அவற்றினை வாந்தாசன (கக்கியசோறு) மலமூத்திரங்களைப் போலப் பற்றறவிடுதல்வைராக்கியத்தின் பலனுகிய உபரதியாம்.

வினு:—திதீக்ஷையாவது யாது?

விடை:—சிரவணுதிகளுக்கு விரோதிகளான காமக்குரோதா (ராகத் துவேஷா)தி துர்க்குணங்களையடக்குதலும் பிராரப்த கர்மத்தால் வரும் சீதோஷ்ணபசிதாக சுகதுக்காதி துவந்துவங்களைச் சமபுத்தியாக வனுபவிப்பதுமாம்.

வினு:—ஸமாதானமாவது யாது?

விடை:—சிரவணார்த்தங்களையே சித்த முறுதியாகச் சிந்திக்கும்படி வைத்தல்; அஃதாவது பிரஹ்மமாகிய லக்ஷியத்தில் சித்த மேகாக்கிர (தற்பர) மாயிருப்பதாம்.

வினா:—சிரத்தையாவது யாது?

விடை:—சுருதிகுருவாக்கியங்களில் உண்மையாயுள்ள விசுவாசமா (நம்பிக்கையா) ம்.

வினா:—சமாதி ஷட்க ஸம்பத்தியின் ஏது முதலியன வெவை?

விடை:—சமாதி ஷட்க ஸம்பத்திக்கு இயமாதி அஷ்டாங்கயோகம் ஹேது; சித்தநிரோத (மனோநிச்சல)சித்தி சொரூபம்; வியவகார க்ஷயம் காரியம்; சுழுத்தியிற்போல சகலவிஷயங்களையு மறந்திருத்தல் அவதி; பிரஹ்மலோக சாரூபம் பலமாம்.

வினா:—முமுட்சுத்துவமாவது யாது?

விடை:—தீவிரமான மோக்ஷாபேக்ஷை; அஃதாவது பசியா லுதராக்கினி மேலிட்டவன் ஸ்திரீ நடனகீதாதிகளை விரும்பாமல் அன்னத்தையும், சிரசில் பூதாக்கினிபற்றித் தபிக்கிறவன் சேறு பனித் துளிகளை விரும்பாமல் தடாக ஜலத்தையும் அதி விரைவாகத்தேடுவதுபோலத், தாபத்ர யாக்கினியி(துக்கத்தி)ற்பட்டுத் தபிக்கிறவன் அதை நிவிர்த்திக்கும் பொருட்டு அநித்திய மாய சாலோகாதி பதமுத்திகளைத் தாத்தக்க

கருமோபாசனாதிகளை விரும்பாமல் நித்தியமாகிய ஐக்கிய மோக்ஷத்தை மாத்திரம் அதிவிரைவாக விச்சிப்பதாம். இந்த முமுட்சுத்துவம் மற்ற விவேகாதி ஸகல சாதனங்களு முண்டாதற்குமுன் மந்த ரூபமாக விருக்கும்.

வினா:—முமுட்சுத்துவம் சகல ஸாதனங்களு முண்டாதற்குமுன்னு முள்ளதென்பது தெதனால்?

விடை:—மந்தராயிருப்பவர்களுக்கும் பிரயோஜன உத்தேசமின்றி யெந்தப் பிரவிருத்தியு முண்டாகவே மாட்டாமையின், மோக்ஷரூபபல விச்சையின்றி நிஷ்காம கர்ம முதலிய ஸாதனங்களி லெவர்களுக்கும் பிரவிருத்தி யுண்டாகாது. ஆதலால் மந்தமுமுட்சுத்துவம் ஸர்வஸாதனங்களுக்கு முன்னரே உண்டா யிருக்கிறது; ஆயினுமது தீவிரமாக விருப்பதில்லை; நிஷ்காமகர்ம முதலிய ஸாதனங்கள் சித்தியான பின்னர்த் தீவிர முமுட்சுத்துவமாக வாகின்றது. அதுவே குருசரண சேவை சிரவணமுதலிய மேற்சாதனங்களிற் பிரவிருத்தித்தற்கு ஹேதுவாயுள்ளதாம்.

வினா:—முமுட்சுத் துவத்தின் ஏது முதலியன வெவை?

விடை:— முமுட்சுத்துவத்திற்கு ஸாது ஸங்கப் பழக்கமே ஹேது; தீவிரமான மோக்ஷாபேக்ஷை சொரூபம்; சற்குருவை யாராய்ந் தடைவது காரியம்; சர்வ

சாஸ்திரபாட கர்மபரித்தியாகம் அவதி; பிரஹ்மலோக ஸாயுஜ்யம் பலமாம்.

வினா:—ஸாலோக முத்தியாவது யாது?

விடை:—இராஜாவின் பிரஜைகளைப்போல ஈப்வர (சகுணப் பிரஹ்மத்தி)னது லோகத்தில் வசிப்பதாம்.

வினா:—ஸாமீப்ய முத்தியாவது யாது?

விடை:—அதனினுஞ் சிரேஷ்டமாய் இராஜாவின் சேவகனைப்போல ஈப்வரனது ஸமீபத்தில் வசிப்பதாம்.

வினா:—ஸாரூப்ய முத்தியாவது யாது?

விடை:—அதனினு மேலானதாய் இராஜாவின் சகோதரன்போல ஈப்வரனது சமான ரூபத்தினை அடைவா (பிராப்தியா)ம்.

வினா:—ஸாயுஜ்ய முத்தியாவது யாது?

விடை:—அதனினுஞ் சிறந்ததாய் இராஜாவின் ஜேஷ்ட (மூத்த) குமாரனைப்போல ஈஸ்வரனது ஸமான (சத்ய ஸங்கல்பாதி) ஐப்வரியத்தை யடைவதாம்.

வினா:—இந்தப் பத முத்திகளுக்குச் சாக்ஷாத் ஸாதனங்க ளெவை?

விடை:—(வேத யுக்தமான) கருமோபாசனா காண்டங்களிற் கூறிய சரியை, கிரியை, யோகம், ஞான

(அதிட அபரோக்ஷஞான) மாகிய நான்கும் முறையே அந் நான்கிற்குஞ் சாதனங்களாம்.

வினா:—சரியையென்பது யாது?

விடை:—பகவத் கைங்கரியரூப தாசபாவமாம்.

வினா:—கிரியை யென்பது யாது?

விடை:—சிவ விஷ்ணுவாதி பூஜை செய்வதாம்.

வினா:—யோகமென்பது யாது?

விடை:—இயமாதி யஷ்டாங்க யோகாநுஷ்டானஞ் செய்வதாம்.

வினா:—ஞான மென்பது யாது?

விடை:—ஜீவப்பிரஹ்மங்களின்ஐக்கிய (அதிடா) பரோக்ஷஞானம். இதற்குமேலுள்ளது திடாபரோக்ஷ ஞானமாம். இதற்குப் பலன் கைவல்விய மோக்ஷமா (சத்தியோ முத்தியாம்)ம்; இதற்குப் பிரமாணம் வருமாறு:—ஒழிவிலொடுக்கம்

"சரியாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல்—குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ணல்வார்க் குபதேச
மானத் தையுநிகழ்த்தி னான்".

வினா:—முமுட்சுக்களுள் பேதமுண்டோ?

விடை:—தீவிரன், மத்திமன், மந்தன், அதிமந்த னென நால்வகைப்பேத முண்டு.

வினா:—தீவிர முமுட்சு வென்பவ னியாவன்?

விடை:—தாபத்திரய துக்கங்களைச் சகிக்கமுடியாது துக்ககாரணமாகிய ஈஷணாத்திரயங்களைச் சுட்ட சட்டியைக் கைவிடுவதுபோ லதிவிரைவாக விட்டுத் துறந்து வியாதியாற் றுன்புறுபவன் றகுதியுடைய வைத்தியனைத் தேடி யடைவது போலச் சற்குருவைத் தேடி யடைபவனும்.

வினா:—இவனெத்தனை ஜன்மத்தில் ஜீவன் முத்தனாவன்?

விடை:—இவன் இச் சன்மத்திற்றானே முக்தனாவன்.

வினா:—மத்திம முமுட்சுவென்பவ னியாவன்?

விடை:—ஈஷணாத்திரயாபிமானமே சர்வதுக்க காரணம், பிரஹ்மான்மா ஐக்கிய ஞானமே அதனை நிவிர்த்தித்து அதீதானந்த (மோக்ஷ) த்தைத் தரத் தக்கது எனச் சாஸ்திரத்தாலும் ஸத்ஸங்க வசனத்தாலும் ஊகத்தாலு மறிந்த பின்னும் ஸ்திரீ புத்திர தனாதி குடும்பத்தை விட்டொழியாது பாசமனத்துடன் கூடியிருப்பவனும்.

வினா:—இவனெத்தனை ஜன்மத்தில் முத்தனாவன்?

விடை:—இவன் மூன்றுஜன்மத்தில் முத்தனாவன்.

வினா:—மந்த முமுட்சுவென்பவ னியாவன்?

விடை:—மோக்ஷமடைதற்குக் காலம் பின்னிருக்கிறது, இப்போதே னவசரப் படவேண்டும், செய்யத் தக்க காரிய (வியவகார) ங்களனைத்தையும் செய்து புசிக்கத்தக்க போகங்களனைத்தையும் புசித்துமுடித்து விட்டு, அதற்குமேல் மோக்ஷயத்தனஞ் செய்வோமென் றெண்ணி யிருப்பவனும்.

வினா:—இவனெத்தனை ஜன்மத்தில் முத்தனாவன்?

விடை:—இவன் யுகாந்தத்தில் முத்தனாவன்.

வினா:—அதிமந்த முமுட்சுவென்பவ னியாவன்?

விடை:--வருவது சும்மாவிருக்கினும் வரும்; வாராதது எக்கருமஞ்செயினும் வாராது; மார்க்கத்திற் செல்பவனுக்கு யாதொரு பிரயத்தனமு மின்றி எதிரே மாணிக்கமிருந்து கிடைத்தாற்போல நமக்கு மோக்ஷங் கிடைக்குமானாற் கிடைக்குக; பிரயத்தினமேன் பண்ணவேண்டுமென்று மூட புத்தியோ டிருப்பவனும்.

வினா:—இவனெத்தனை ஜன்மத்தில் முத்தனாவன்?

விடை:—இவன் பலயுகங்கள் செல்லினு முத்தியடையான், ஆனால், பலவிதத் துக்கானுபவி யாகவே யிருப்பன்.

வினா:—தாபத்திரய துக்கமென்பது யாது?

விடை:—அத்தியாத்ம துக்கம், அதிபூத துக்கம், அதிதைவ துக்கமா மென்னு மூன்றுமாம்.

வினா:—அத்தியாத்ம துக்கமாவது யாது?

விடை:—ஆத்மாவை ஆசிரயித் திருக்கும் ஸ்தூல சூட்சும சரீரம் அத்தியாத்ம மெனப்படும். அவற்றா லுண்டாகுந் துக்கங்கள் அத்தியாத்ம துக்கமாம்

வினா:—இந்த அத்தியாத்ம துக்க மெத்தனை வகை?

விடை:—க்ஷய, குஷ்ட, குன்ம, சுர, மேக, காச வலிப்பாதிய ரோகங்களாலும், பசிதாக மென்பவற்றா லும் வரும் காயிகதுக்கமும், காமாதிகளால் வரும் மானசிகதுக்கமு மென விருவகைத்தாம்.

வினா:—அதி பூத துக்கமாவது யாது?

விடை:—தனது சரீராதி சங்காதங் (சேர்க்கை) களுக்கு வேறாயும் இந்திரியங்களுக்கு விஷயமாயு முள்ள சத்துரு சோர கஜ வியாக்கிர சர்ப்ப சுவான முதலிய பிராணிகளே அதிபூதங்கள். அவற்றால் வரும் துக்கம் அதிபூத துக்கமாம்.

வினா:—அதிதைவ துக்க மாவது யாது?

விடை:—தனது சங்காதங்கட்கு வேறாயும் சட்சு விந்திரியத்திற்கு விஷயமல்லாதனவாயு முள்ள தெய் வங்கள் அதிதைவங்களாம். அவற்றால் நடத்தப்படும் யக்ஷ ராக்ஷஸ பிசாச கிரகாதிகளாலும், சீத வாத ஆத பா (குளிர், காற்று, வெயிலா)திகளாலும், மதிலிடிந்து

விழுதல் மரமொடிந்து விழுதல் முதலானவைகளாலும வாராநின்ற துக்கங்கள் அதிதைவ துக்கமாம்.

வினு:—ஈஷணாத்திரயங்க ளெவை?

விடை:—புத்திரேஷணை, தாரேஷணை, வித்தேஷணை யென்னு மூன்றுமாம். இவைமுறையே புத்திரனைப் பற்றியும் மனைவியைப் பற்றியும் பொருளைப் பற்றியும் வாராநின்ற ஆசைகளாம்,

வினு:—நான்கு சாதனங்களுக்கு முள்ள பலன் யாது?

விடை:—நான்கு சாதனங்களு மவதி பரியந்தமொத்திராது ஒன்றற்கொன்று தாரதம்மியமாக விருந்தாற் புண்ணியலோக ப்ராப்தியும், அவதி பரியந்தமொத்திருக்கி லிவ்வுலகிற்றானே சீக்கிரத்திற்சிரவணாதி ஞானத்துவாரா (வாயிலாக) மோக்ஷசித்தியும் பலனாம்.

வினு—இந்தச் சாதன சதுஷ்டயமுள்ள வதிகாரிகள் எத்தனை விதமாயிருப்பர்?

விடை:—வாழை மரம், ஈரவிறகு, கரி, பஞ்சுவென்னு மிவைமுறையே ஒன்றற்கொன்று சீக்கிரத்தில் நெருப்புப் பற்றக்கூடியஈர தோஷக் குறைவையுடையனவா யிருப்பதுபோல பூர்வகன்ம சம்ஸ்காரத்தால் ஒருவரைவிட ஒருவர் சீக்கிரத்தில் மோக்ஷமடையக் கூடிய சித்த தோஷக் குறைவை யுடையவர்களாய் மந்த, மத்திம, உத்தம, உத்தமோத்தமரென

நால்வகையா யிருப்பர். அவர்களுள், சாதனசதுஷ்டயங்களின் ஹேது பரியந்த முள்ளவன் மந்தன், இவன் எருமைக்கொத்தவன்; சொரூப பரியந்த முள்ளவன் மத்திமன், இவன் பறவைக்குஞ்சுக் கொத்தவன்; காரிய பரியந்த முள்ளவன் உத்தமன், இவன் நீர்ப்பாம்பு போல்வான். அவதி பரியந்த முள்ளவன் உத்தமோத்தமன், இவன் புழுப்போல்வான். அதிகாரிகள் நால்வகையினரா வரென்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

ஒழிவிலொடுக்கம்.

"கல்லையுரு வாக்குங் கழற்றியிலே யில்வாழ்க்கைச்
சில்லநீர் போலத் தெளிந்துவருந்—தொல்லுலகங்
கான்றமேசா ருருங் கதலித்தண் டைக்கனலில்
ஊன்றல்போன் ஞானமுதிக் கும்".

"இரும்பைவடி வாக்கு மியல்பினர்க்குப் பச்சை
மரஞ்சுடுமா போன்ஞானம் வாய்க்கும்-இருந்தவிடம்
நீர்த்தா மரையிலைபோ னீங்கு முலகமெலாம்
பேய்த்தேர்போற் றோன்றும் பிரிந்து".

"மரப்பாவை போலுடம்பின் வாதனையை மாற்றிக்
கரித்தீக் கவர்வதுவாங் காமித் - திருந்த
மனைபொதுவின் மண்டபமாம் வானோர்கள் வாழ்வுங்
கனவெனவே தோன்றிடுங் காண்".

"வெண்மணையுறு பாவைபர்க்கு ஞானம் விளக்கின்மே
லெண்ணின்மயிர் பஞ்சாகு மாசையிலை - கண்ணீ
ரொழுகும் பொழுதறியா துள்ளுருகி விம்மி
யழுதுசிரிப் பார்புளக மாம்".

வினா:—சாதன சதுஷ்டயமுண்டான பின் அதிகாரி செய்யத்தக்கது யாது?

விடை:--பெருவியாதியாற் றுன்புறுபவன் அதைச் சகிக்க மாட்டாது அதிவிரைவாக அவ் வியாதியை நிவிர்த்திக்கவல்ல ஔஷதந் தரத்தக்க பண்டிதரைத் தேடியடைந்து தன் வியாதியை நிவிர்த்தி செய்ய வேண்டுமெனப் பிரியவசனங்கள் கூறிப் பொருள் முதலிய வற்றைக் கொடுத்துத் தன்பா லவருக்குப் பிரியமுண்டாகும்படி உபசாரணை செய்திருப்பது போலத், தாபத்ர யாக்கினியால் வெதும்பி வியாகூலசித்தறாய் அதனைச் சகிக்கமுடியாது மனதி லன்பும் வாக்கிற் றோத்திரமும் கரத்தி லாராதனைக்குரிய பத்திரபுஷ்ப பலாதிகளுங் கொண்டு கானவர்வலையிற் பட்டுத் தப்பிச் செல்லுமான்போ லதிவிரைவாகச் சென்று கல்வியறிவு அடக்கம் வைராக்கியம் ஜீவகாருண்யம் ஈசுவர பத்தி பிரஹ்ம ஞானமென்னு மிவையெல்லாம் ஒரு வடிவு கொண்டாற் போல்பவராயும், நிர்த்தோஷராயும் சம்சார பந்தங்களை நிவிருத்திக்க வல்லவராயுமுள்ள சத்குருவை யடைந்து பத்திர புஷ்பாதிகளா

போலக் கிருகாச்சிரமிகளாக விருக்கின் இவ்வெல்லாவற்றையும் அவருக்கே யுபயோக மாகும்படி தத்தம் செய்து விடுவதாம்.

வினா:—சரீரார்ப்பண மாவது யாது?

விடை:—சரீரத்தைச் சதா குரு பணிவிடையிற்றவறு திருக்கும்படி செய்வதாம்.

வினா:—வாக்கர்ப்பணமாவது யாது?

விடை:—குரு வாக்கியமே ஸகலதாப நிவிர்த்தி காரணமாகிய தேவாமிர்தமென்னுந் திடநம்பிக்கையால் அற்பமேனும் (தோஷ திருஷ்டியால்) குருபரிவாதநிந்தைகளின்றி வாக்கிந்திரியம் குருவையே சதா கீர்த்தித்துக்கொண் டிருக்கும்படி செய்வதாம்.

வினா:—மனார்ப்பணமாவது யாது?

விடை:—சச்சிதானந்த பரிபூரண சிவசொரூபமே நம்மை யாட்கொண் டிரட்சிக்கும் பொருட்டுக் கிருபா மூர்த்தியாக வெழுந்தருளி யிருக்கிற தென்னும் நம்பிக்கையால் ஆசாரியர் அன்பாற்பிரியமாக விருக்கும் போது அவரை இரக்ஷககர்த்தராகிய விஷ்ணு சொரூபமாகவும், கோபமாகவிருக்கும்போது சம்ஹார கர்த்தராகிய உருத்திரசொரூபமாகவும், இராசத வியவகாரத்திருக்கும்போது சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவ சொரூபமாகவும், சாந்தமாக் விருக்கும் போது சீதளமாகிய கங்காதேவி சொரூபமாகவும், உபதேச வசனங்க

லர்ச்சித்து நமஸ்கரித்து வலம்புரிந்து கைகுவித் தெதி ரே நின்று கிருபா சொரூபியாகிய சற்குருவே! ஓசுவாமீ! ஓபகவானே! நான் யார்? ஆத்மாவென்பது யாது? இந்த நாநாவாகிய உலகம் யாது? எனக்கு ஜனன மரண சம் சாரம் வந்தவாறேது? இது எதனால் நீங்கும்? அடியே னுக்கு அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமெனச் சமய நேர்ந்தபோ தெல்லாம் விண்ணப்பித்துத் தன் திரவிய சரீர வாக்கு மனங்களைப் பாதகாணிக்கையாக அர்ப்ப ணஞ்செய்து குருபரிவாத நிந்தைக ளின்றியவனும் நவவித பக்தியுடையவனும் குருவுக்குத் தன்பாற் கிருபை யுண்டாகும்படி சதுர்வித பணிவிடை (சேவை) களையும் செய்துகொண்டு உடற்சாயை போலும் ஊசி நூற்போலும் குளிர் காய்வான்போலும் குருவைவிட்டு நீங்காம லிருப்பதுவே அதிகாரி செய்யத் தக்கதாம்.

வினா:—திரவியார்ப்பண மாவது யாது?

விடை;—ஸ்திரீ, புத்ர, கிருக, க்ராம, தன, தா ன்ய, தாச, பசு பூமியென்னு மிவைகள் திரவியமென்று சொல்லப் படும். குருவானவர் சர்வ சங்க பரித்யாகி யானால் அவர் இவற்றுள் யாதொன்றையும் விரும் பாது த்யாகிகளிடத்திற் பிரிய முள்ளவரா யிருப்பர்; ஆகையா லவர்பொருட்டு அவைக ளனைத்தையும் பரித் தியாகஞ் செய்து விடுதல் அல்லது யாக்ஞவல்கியர் உத்தாலகர், ஜனகர், வசிட்டர் முதலிய ஆசார்யர்களைப்

ளாகிய கிரணங்களாற் சந்தேக விபரீதங்களுக்கு மூலமாகிய அஞ்ஞானாந்தகாரத்தை நிவிர்த்திக்கும்போது சர்வத்தையும் விளக்கிவைக்கும் சூரிய சொரூப்மாகவும் கருதி யற்பமேனும் தோஷதிருஷ்டியின்றிப் பாவித்திருப்பதாம்.

வினா:—குருபரிவாத நிந்தைகளெவை?

விடை:—குருவினிடத் துள்ளதுபோற் காணப்படும் துர்க்குணத்தை யெடுத்துரைப்பது பரிவாதமாம் இல்லாத துர்க்குணங்களை யாரோபித்துக் கூறுவது நிந்தையாம்.

வினா:—பரிவாத நிந்தைகள் செய்தவர்க்குப் பலனியாது?

விடை:—பரிவாதஞ் செய்தவனுக்குக் கழுதை ஜன்மமும் நிந்தை செய்தவனுக்கு நாய் ஜன்மமும் உண்டாம்.

வினா:—நவவித பக்திகளெவை?

விடை:—(1) சத்கதா சிரவணம், (2) கீர்த்தனம், (3) ஸ்மரணம், (4) பாதஸேவனம், (5) அர்ச்சனம், (6) வந்தனம், (7) தாசபாவம், (8) சகாபாவம் (தோழமை), (9) ஆத்மநிவேதனம் (தேகாதிகளனைத்தையும் சமர்ப்பித்தல்) என்னு மொன்பதுமாம்.

வினா:—சதுர்வித குருசேவை (பணிவிடை) களெவை?

விடை:—ஆத்தம், அங்கம், தானம், சத்பாவ மென்னு நான்குமாம்.

வினா:—ஆத்தமாவது யாது?

விடை:—குருவின் மனோரதப்படியே நிற்றலாகிய அனுகூல விர்த்தியாம்.

வினா:—அங்கமாவது யாது?

விடை:—குருபாதப் பிரக்ஷாளனு (கழுவுத லா)தி குற்றேவல் புரிவதாம்.

வினா:—தானமாவது யாது?

விடை:—குருவுக்குத் தன்னுடல் பொரு ளாவி மூன்றையும் தத்தஞ்செய்து அவரிருக்குந் தானத்தை (கிருகக்ஷேத்திராதிகளை)ப் பாதுகாப்பதாம்.

வினா:—சத்பாவமாவது யாது?

விடை:—குருவைச் சாக்ஷாத் பரமசிவ மெனப் பாவிப்பதாம்.

## 3. உபதேசப் பிரகரணம்.

சாதன சதுஷ்டய முடையராய் ஸற்குருவை யடைந்த வதிகாரிகளுக்கு ஆத்மோபதேச மவசியம வேண்டற்பாலதாதலின், அதன்பின்ன ரிதுவைக்கப பட்டது.

வினா:—சாதனசதுஷ்டயமுடையனுயடைந்து தன் குறைகூறி யிரங்கிய சீடனுக்குச் சற்குரு செய்காரியம் யாது?

விடை:—அவனது இயற்கை குணங்களைச் சோதித்தறிந்து பின் அத்தியாரோப அபவாதமென்னு மிரண்டு நியாயங் (யுக்தி) களால் அவனுடைய அனுத்மப் பிராந்தியை யொழித்து (ஆத்ம சொரூபமாகிய) சச்சிதாநந்தப் பிரஹ்மமே நீயென்று சந்தேக விபரீத மறப் போதித்தல் சற்குரு செய்காரியமாம்.

வினா:—அத்தியாரோபமாவது யாது?

விடை:—இரஜ்ஜுவிற் சர்ப்பம்போல வஸ்துவில் அவஸ்துவை (சச்சிதாநந்த பிரஹ்மத்தில் ஜீவேசுவர ஜகத்தை) யுணர்தல் அத்தியாரோபமாம். பிராந்தி, ஆரோபம், அத்தியாசம், கற்பனை யென்பன ஒரு பொருட் கிளவி.

வினா:—நிஷ்ப்ரபஞ்ச ஸ்வரூபமாகிய சுத்தப்பிரஹ்மத்திற் பிரபஞ்ச (ஜீவேசுவரஜக) த்தின் ஆரோப வர்ணனை யெப்படி?

விடை:—அறிவில் அறியாமை யிருப்பது போல நித்த சுத்தப்பிரஹ்மத்தில் அநாதிகற்பிதமாகப் பிரகிருதி யென்பு தொன்றுண்டு; அந்தப் பிரகிருதிக்குப் பிரஹ்மத்தோடு அநாதிகற்பித தாதான்மிய சம்பந்தமுண்டு; திரிகுணாத்மிக (முக்குண சொரூப) மான அந்தப் பிரகிருதியின் சத்துவகுணம் விசுத்த சத்துவரூபமாயை யென்றும், இரஜோகுணம் மலினசத்துவரூபாவித்தை யென்றும், தமோகுணம் தமப்பிரதானரூபப் பிரகிருதி யென்றும் சொல்லப்படும். இந்த *மூன்று குணங்களிலும் ஜலத்திற் சூரியப் பிரதிபிம்பம் போலப் பிரஹ்மத்தின் பிரதிபிம்பஞ் (சிற்சாயை) தோன்றும். மாயையிற் பிரதிபிம்பம் சர்வஞ்ஞத்துவாதி கலியாணகுண விசிஷ்ட (கூடிய)

---

* தமோ குணத்தில் சேதனப் பிரதிபிம்ப மின்றாயினும், அதனது காரியமான பஞ்சதன் மாத்திரையின் சத்துவாம்ச சமஷ்டியிற் றோன்றும் அந்தக் காணத்திலும், அதன் காரியமான ஞானகார விருத்தியிலும் சேதனப் பிரதிபிம்பமிருத்தலின் அதுபற்றித் தமோகுணத்திலும் சேதனப் பிரதிபிம்ப முண்டென்று கூறப்பட்டதென்க. இது பாம்பரா காரியத்தின் தர்மம் காரணத்தி லிருப்பதாகக் கூறிய உபசார வழக்காம்.

ஈஸ்வர னென்றும் பதிபதார்த்தமென்றும் சொல்லப் படும். அவித்தையிற் பிரதிபிம்பம் கிஞ்சிக் ஞத்து வாதி ஹீனகுண விசிஷ்ட ஜீவனென (போக்த்ருவெ)ன் றும் பசுபதார்த்த மென்றும் சொல்லப்படும். தமப் பிரதானப் பிரகிருதி ஆவரண விட்சேப சக்திகளை யுடைய அனாதி பாவரூப (போக்கியவடிவ) பதார்த்த மாம்; அது பாசபதார்த்த மென்றும் சொல்லப்படும். இந்த ஜீவேசுவரப் பிரகிருதிகளு மிவற்றின் பேதமும் அனாதிகற்பிதமாம். ஈஸ்வரோபாதியாகிய மாயை ஏக மாயும் ஆபேக்ஷிக வியாபகமாயு மிருத்தலால், ஈஸ்வர னும் ஏகமாயும் வியாபகமாயு மிருக்கின்றனன் ஜீவோ பாதியாகிய அவித்தை நாநாவாயும் பரிச்சின்ன(கண்ட) மாயு மிருத்தலால் ஜீவனும் நானாவும் பரிச்சின்னமு மாம். சிருஷ்டிக்கு முன்ஜீவர்களின் உபாதியாகிய அவித் தையில் அவர்களது கரும வாசனைகள் வடபீஜம்போ லொடுங்கி யிருக்கும். உண்மையில் அவித்தை மாயையி னும் வேறன்றும். அந்த மாயையும் சுழுத்தியில் உல கம்போலப் பிரஹ்மத்தில் அவ்வியக்தமா யிருக்கும். அதற்கே மகாப்பிரளயா (மகா சுழுத்திய) வஸ்தை, மகாமாயை, சத்தி, பிரதானம், பிரகிருதி யென்னு மனேகநாமஞ் சொல்லப்படும். இப்படி மூலப்பிரகிருதி யின் சத்துவ இரஜோகுணத்தின் காரணசரீர கற்பனை சொல்லப்பட்டது.

வினா:—இனிச் சூட்சும சரீரகற்பனை எப்படி?

விடை:—(கற்பிதமாக) அனந்த சக்திகளை யுடைய அந்தப்பிரஹ்மத்திற்குச் சிருஷ்டியினாரம்பத்தில் ஜீவர்களது கன்மபரிபாகநிமித்தத்தா லவர்களுக்குப் போக மோக்ஷ சாதனங்களான சூக்ஷம ஸ்தூலங்களாகிய காரிய சரீரமுண்டாகு மாறு ஒன்றாகிய யான் அநேக ரூபமாவே னென்னுமிச்சை (சங்கல்பம்) உண்டாயிற்று அந்த விச்சையினாற் பிரஹ்மத்தி னுபாதியாகிய மாயையிற் க்ஷோப (கலக்க) முண்டாயிற்று. அந்தமாயை அல்லது தமப்பிரதானப் பிரகிருதியி (விட்சேபத்தி) னின்று கிரமமாக ஆகாயம் வாயு அக்கினி அப்பு பிருதிவி யென்னும் பஞ்சதன் மாத்திரை (சூட்சுமபூதங்) களுண்டாயின. இந்தத் தன்மாத்திரைகளான பஞ்சபூதங்களுக்குப் பஞ்சீகரணம் (ஒன்றோடொன்று கலத்தல்) உண்டாகாமையால் அவை அபஞ்சீகிருத பூதங்களென்றும் இந்திரியங்களுக்கு விஷயமாகாமையால் சூட்சும பூதங்களென்றும் மூன்று குணங்களோடு கூடியிருத்தலால் முக்குண பூதங்களென்றும் சொல்லப்படும். பின்னரந்த ஆகாசாதி சூக்ஷம பூதங்களின் சத்வாம்ச சமஷ்டி பாகத்தால் அந்தக்கரண பஞ்சகமும், வியஷ்டி பாகத்தால் ஞானேந்திரிய பஞ்சகமும், இராஜோம்ச சமஷ்டி பாகத்தாற் பிராணாதி பஞ்சகமும், வியஷ்டி பாகத்தால் கர்மேந்திரிய பஞ்சகமு முண்டாயின. இவ்விருபது தத்துவமும் சமஷ்டி வியஷ்டி வடிவ சூக்ஷம சரீரமாம் இப்படித் தமப்பிரதானப பிரகிருதியினுண்

டான திரிகுணாத்மகமான சூக்ஷ்ம பஞ்சபூதங்களின் சத்துவாம்ச ரஜோம்சத்தி லுண்டான சூக்ஷ்ம சரீர கற்பனை சொல்லப்பட்டது.

வினா:—இனி ஸ்தூலசரீர கற்பனை யெப்படி?

விடை:—தமப்பிரதானப் பிரகிருதியின் றமோ குணாம்ச சூக்ஷ்ம பஞ்ச பூதத்திற்கு ஈப்வரனது சங்கற்பத்தினால் பஞ்சீகரண முண்டாயிற்று. அதனால், பஞ்சீகிருத பஞ்ச மகா ஸ்தூல பூதங்களுண்டாயின. இந்தப் பஞ்சீகிருத பஞ்சமகா ஸ்தூலபூதங்களி னின்று பிரமாண்டமும் (பிரமாண்டத்தினுள்ளே) சதுர்த்தச புவனங்களும், ஜீவர்களின் போகத்திற்கு யோக்கியமான அன்னாதிகளும், போகத்திற்கு ஸ்தானமான நால்வகையோனி (பிறவி) எழுவகைத்தோற்றம் மூவகைச் சாதிகளாயுள்ள ஆறுதத்துவ வடிவ சமஷ்டி வியஷ்டி ஸ்தூலசரீரங்களு முண்டாயின. இப்படி தமப்பிரதானப் பிரகிருதியின் தமோம்சத்தி லுண்டான ஸ்தூலபஞ்ச பூதங்களின் காரியமான ஸ்தூல சரீர கற்பனை சொல்லப்பட்டது.

அம்மூன்று சரீரங்களுள்:—சமஷ்டி ஸ்தூல சூக்ஷ்ம காரணதேகத்திற் கபிமானி ஜீவனதுபார்வையால் ஈப்வரனும்; வியஷ்டி ஸ்தூல சூக்ஷ்ம காரண தேகத்திற் கபிமானி ஜீவனும். ஈப்வரன் ஸர்வஞ்ஞனாயிருத்தலால் நித்யமுக்தனும். இத்தஈப்வரனுக்குப்பஞ்ச

கிருத்தியம் தசாவதார முதலியன லீலைகளாம். ஜீவர்க ளெல்லாம் அற்பஞ்ஞர்கள்; கன்மவாசனு பலத்தாற் றேவமனுட பசுவாதிசரீர பேதங்களை யடைகின்றனர்; ஈசுவர வாக்கியமான வேதத்தின் (கன்மம்பக்தி ஞான மென்னும்) காண்டத் திரயா னுஷ்டானம் பண்ணி அந்தர் முக மாகாமற் பகிர்முகமாகி ராகத் வேஷ பரராய்ப் பண்ணின கன்ம வசத்தால் ஜனன மரண சம்சார பந்தங்களிலே ஆற்றின் சுழிவழியே சுழன்று செல்லும் புழுப்போற் சுழலுகின்றார்கள். சத் கர்ம பரிபாகத்தினாற் குருமூர்த்தமாகவந்த ஈசுவர னுடைய ஞானோபதேசத்தினால் அபூர்வமாக ஒருவன் பஞ்சகோச விசார(விவேக)ஞ்செய்து முத்தியடைவன்.

வினா:—சுத்தப் பிரஹ்மமாவது யாது?

விடை:—ஜகஜீவபரமாகிய 35 தத்துவ (சரீர த்ரய)ங்களிலும் ஆகாசம்போ லனுசூதமாகவிருந் தவற் றிற்குரிய அசுத்தமில்லாது பரிசுத்தமாய்ச் சாக்ஷிமாத் திரமா யிருப்பதாம்.

வினா:—அனாதியாவது யாது?

விடை:—உற்பத்தியில்லாதது(சொரூபமாக)வனாதி யாம். சுத்தப் பிரஹ்மம், பிரகிருதி, அவ்விரண்டினது கற்பித தாதாத்மிய சம்பந்தம், ஈசுவரன், ஜீவன், அவ் வைந்தன் பேதமாகிய ஆறும் அனாதி பாவபதார்த்த மாம். பிரபஞ்சமும் பிரவாகரூபமாக அனாதியாம்.

வினு:—கற்பிதமாவது யாது?

விடை:—எது பரமார்த்தமாக இல்லாததாய் (சொப்பன பதார்த்தங்களைப் போல)ப் பிராந்தியினுல் விளங்குகின்றதோ அதுவே கற்பிதமாம்.

வினு:—மூலப்பிரகிருதி யாவது யாது?

விடை:—மூலமென்பதன் பொருள் காரணம். எதனிடத்தினின்று ஸகல ஜகத்தும் சிருஷ்டிக்கப் (செய்யப்) படுகின்றனவோ அத்தன்மைய சிருஷ்டியின் உபாதான (முதற்) காரணம் மூலப்பிரகிருதியாம். பிரகாசம் (சத்வ) பிரவிருத்தி (ரஜஸ்) மோக(தமஸ்)வடிவ அனுதி கற்பித அநிர்வாச்சிய மாயை மூலப்பிரகிருதியாம்.

வினு:—கற்பிததாதான்மிய சம்பந்தமாவதுயாது?

விடை:—அது கற்பித பேதத்தோடு வாஸ்தவ அபேதமாகிய சம்பந்தமாம். ஈண்டுப் பிரகிருதிக்குப பிரஹ்மத்தோடுள்ள பேதம் இரஜ்ஜுவிற் சர்ப்பம் போலும் கற்பிதமாம்; அபேதம் இரஜ்ஜுவில் இரஜ்ஜுவைப் போலும் வாஸ்தவமாம்.

வினு:—மாயை யாவது யாது?

விடை:—தேசகாலாதி சாமக்கிரிகளின்றி இந்திரஜாலத்தாற் றுர்க்கட (நிகழுதற்கரிய) பதார்த்தங்களுண்டாகுமிடத்து அவ்விந்திர ஜாலத்தை மாயையென்பர் அதுபோன்று அசங்க அத்துவிதீயப் பிரஹ்மத்தில்

இச்சாதிகள் தூர்க்கடமாம்; அவற்றை நிகழச்செய்வதாயும் சர்வஞ்ஞத்துவாதி கல்யாணகுண விசிட்டனான ஈச்வரனது நிர்மலோபாதியாயும் இருப்பது மாயையாம்.

வினா:—அவித்தையாவது யாது?

விடை:—பிரஹ்மவித்தையால் நாசமடைவதாயும் கிஞ்சிக்ஞத்துவாதி ஹீனகுண விசிட்டனான ஜீவனது மலின உபாதியாயு மிருப்பது அவித்தையாம்.

வினா:—தமப்பிரதானப் பிரகிருதியாவது யாது?

விடை:—சிருஷ்டியின் உபாதான யோக்கியமான தமோகுணப் பிரதான (முக்கிய) சொரூபம் தமப்பிரதானப் பிரகிருதியாம். பிரகிருதியின் ப்ர என்பது சத்துவகுணமும், க்ரு என்பது ரஜோகுணமும் அவற்றோடு கூடிய தி என்பது தமோகுணமாம். அதுவே தமோகுணப் பிரதானப் பிரகிருதியாம்.

வினா:—சர்வஞ்ஞத்துவாதி கல்யாண குணங்களவை?

விடை:—சர்வஞ்ஞத்துவம், சர்வேச்வரத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வகாரணத்துவம், சர்வநியந்தரத்துவம், சர்வகர்த்திருத்துவம், சர்வசக்திமத்துவமென்பனவாம்.

வினா:—சர்வஞ்ஞத்துவமாவது யாது?

விடை:—சர்வ ப்ரபஞ்சங்களையும் அவற்றிலுள்ள ஜீவர்களின் புண்ணியபாவ கர்மங்க ளெல்லா வற்றை யும் சுவயமா யறிவதாம்.

வினா:—சர்வேஸ்வரத்துவமாவது யாது?

விடை:—சர்வப்ர பஞ்சங் களுக்குங் கர்த்தாவா யிருந்து ஜீவர்களின் புண்ணிய பாவ கர்மானுசாரத்தை யனுசரித்து அவர்கட்குப் போக மோக்ஷங்களைக் கொடுப்பதாம்.

வினா:—சர்வாந்தரியாமித்துவமாவது யாது?

விடை:—சகலநாமரூப விசாலமாகிய தேகேந்திரி யாதிப்பிரபஞ்சங்களுக்குள்ளீடா(நிறைவா)யிருப்பதாம்.

வினா:—சர்வ காரணத்துவமாவது யாது?

விடை:—சர்வஜகத்தும் அழிந்த விடத்தும் தான் அழிவின்றி (நித்யமாய்) அவற்றிற்கு (அவற்றின் சிரு ஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களுக்கு) ஹேதுவா யிருப் பதாம்.

வினா:—சர்வநியந்தரத்துவமாவது யாது?

விடை:—எவற்றையும் நியமந் தவறாவாறுசெய்வ [தாம்.

வினா:—சர்வகர்த்திருத்துவமாவது யாது?

விடை:—சர்வ காரியங்களுக்குங் கர்த்தாவாயிருத் தலாம். உபாதான காரணத்தைப் புலப்படக்காணு மறி விச்சை செயல்களையுடைய பொருள் கர்த்தாவாம்.

வினா:—ஜீவனது அற்பக்ஞத்துவாதிஹீனகுணங்களெவை?

விடை:—அற்பஞ்ஞத்துவம், அற்பசத்தித்துவம், பரிச்சின்னத்துவம், பராதீனத்துவம், கர்மாதீனத்துவமென்றற் றொடக்கத்தனவாம்.

வினா:—உபாதியாவது யாது?

விடை:—ஒன்றன் சாக்ஷாத் தரிசனத்திற்குத் தடையாயிருந்து அதனைப் பலவாகத் தோற்றுவிப்பதாம்.

வினா:—ஆபேக்ஷிக வியாபகமாவதுயாது?

விடை:—ஒன்றன் அபேக்ஷையால் வியாபகமாயும் மற்றொன்றன் அபேக்ஷையாற் பரிச்சின்ன மாயுமிருப்பதாம். வீடானது கடாதிகளின் அபேக்ஷையால் வியாபகமாயும் கிராமத்தி னபேக்ஷையாற் பரிச்சின்ன மாயு மிருக்கின்றமையின் ஆபேக்ஷிக வியாபகமாம். அதுபோல மாயையும் பிருதிவி முதலியவற்றி னபேக்ஷையால் வியாபகமாயும் பிரஹ்மத்தி னபேக்ஷையாற் பரிச் சின்னமாயு மிருக்கின் றமையின் ஆபேக்ஷிக வியாபகமாம்.

வினா:—அந்தக்கரண பஞ்சக மெவை?

விடை:—உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னு மைந்துமாம்.

வினா:—அந்தக்கரண வியாபாரங்க ளெவை?

விடை:—அவைமுறையே அவகாசம், சங்கல்பம், நிச்சயம், அவதானம், அபிமான மென்னு மைந்துமாம்.

வினா:—அந்தக்கரண அதிதேவதைக ளெவை?

விடை:—அவை முறையே சதாசிவன், சந்திரன், பிரம்மா, விஷ்ணு, உருத்திரனென்னு மிவர்களாம்.

வினா:—அந்தக்கரண ஸ்தானங்களெவை?

விடை:—அவை முறையே உச்சி, கண்டம், இதயம், நாபி, சர்வாங்க மென்னுமைந்துமாம்.

வினா:—ஞானேந்திரிய பஞ்சக மெவை?

விடை:—சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராண மென்னு மைந்துமாம்.

வினா:—ஞானேந்திரிய வியாபாரங்க ளெவை?

விடை:—அவை முறையே ஸப்தாதி விஷயங்களைக் கேட்டல், பரிசித்தல், பார்த்தல், உருசித்தல் முகருத லென்னு மைந்துமாம்.

வினா:—ஞானேந்திரியங்களுக்கு ஆந்தர வியாபாரங்க ளெவை?

விடை:—சுரோத்திராதி ஞானேந்திரி யங்களிற் செவியை யங்குலியால் மூடுங்கால் பிராணவாயு ஜடராக்கினிகளிலுள்ள சத்தக்கிரகணமும், அன்னபானாதிகளை யுட்கொள்ளுங்கா லுண்டாகுஞ் சீதோஷ்ண ஸ்பரிசக் கிரகணமும், நேத்திரத்தை மூடுங்கா லுள்ளிருளைக் கிர

கித்தலும்,ஏப்பமிடுங்கா லுள்ளிரசக் கிரகணமும், வாந்திபண்ணுங்கா லுண்ணூற்றக் கிரகணமுமாகிய வைந்துமாம்.

விஞ:—ஞானேந்திரியங்களி னதிதேவதைகளெவை?

விடை:—அவை முறையே திக்கு, வாயு, சூரியன், வருணன், அஸ்வனி குமாரரென்னு மிவர்களாம்.

விஞ:—ஞானேந்திரியங்களின்ஸ்தானங்களெவை?

விடை:—அவைமுறையே காது,தோல்,கண், நா, மூக்கென்னு மைந்துமாம்.

விஞ:—பஞ்சவாயுக்களெவை?

விடை:—அவை வியானன், பிராணன், அபானன் சமானன், உதானனென்னு மைந்துமாம்.

விஞ:—பஞ்ச வாயுக்களின் வியாபாரங்களெவை?

விடை:—அவை முறையே தாங்கல், சலித்தல், நகித்தல், இழுத்தல், கடைத லென்னு மைந்துமாம்.

விஞ:—பஞ்சவாயுக்களி னதிதேவதைகளெவை?

விடை:—அவை முறையே விசுவயோனி, விசிஷ்டன்,விசுவசிருஷ்டா, ஜயன், அஜனென்னு மிவர்களாம்.

விஞ:—பஞ்ச வாயுக்களின் ஸ்தானங்களெவை?

விடை:—அவை முறையே ஸர்வாங்கம், இதயம், குதஸ்தானம், நாபி, கண்டமென்னு மைந்துமாம்.

வினா:—கன்மேந்திரிய பஞ்சகங்க ளெவை?

விடை:—அவை வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தமென்னு மைந்துமாம்.

வினா:—கன்மேந்திரியங்களின் வி யா பா ர ங் க ளெவை?

விடை:—அவை முறையே வசனித்தல், இடுத லேற்றல், நடத்தல், மலஜலங்கழித்தல், ஆனந்தித்த லென்னு மைந்துமாம்.

வினா:—கன்மேந்திரியங்களி னதி தே வ தை க ளெவை?

விடை:—அவை முறையே அக்கினி, இந்திரன், சூரியன், யமன், பிரஜாபதி யென்னு மிவர்களாம்.

வினா:—கன்மேந்திரியங்களின் ஸ்தானங்க ளெவை?

விடை:—அவை முறையே வாய், கை, கால், குதம், குறியென்னு மைந்துமாம்.

வினா:—பிராணவாயுக்களிற் றோன்றிய உபவாயுக்க ளெவை?

விடை:—அவை நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சய னென்னு மைந்துமாம்.

வினா:—உபவாயுக்களின் வியாபாரங்க ளெவை?

விடை:—அவை முறையே மெய்யை முறுக்கிக் கொட்டாவி விடுவித்தல், விக்கல் ஏப்ப மிடுவித்தல்,

தும்ம லிரும லுண்டாக்கல், சிரித்தல் வசனித்தல், சோகமோகங்களைச் செய்தலாம். ஈற்றிற் கூறிய வாயு துர்க்கந்தங்களை எழுப்பிப் பிராணனீங்கிய பின்னு மைந்துநா ளிருந்து தேகத்தை வீங்கச் செய்து தலை வெடிக்கப் பண்ணிப்போம்.

வினா:—ஆந்தரவாயுக்க ளெவை?

விடை:—அவை வைரம்பன், முக்கியன், பிரபஞ்சனன், அந்தரியாமி, மகாப்பிராணனென்னு மைந்துமாம்.

வினா:—இவற்றை ஆந்தர வாயுக்க ளென்பதென்னை?

விடை:—இவை உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னு மகக்கரணங் (விருத்தி) களை முறையே இயக்குவிக்கின்றமையால் அவ்வாறு கூறப்படுகின்றன.

வினா:—அந்தர (மத்திய) வாயுக்க ளெவை?

விடை:—பிராணாதி பஞ்சவாயுக்களாம்.

வினா:—இவற்றை அந்தரவாயுக்க ளென்பதென்னை?

விடை:—இவை மத்தி (இடை) யிலுள்ள சுரோத்திராதி ஞானேந்திரியங்களைச் சேட்டிப்பிக்கின்றமையால் அவ்வாறு கூறப்படுகின்றன.

வினா:—பாஹ்ய வாயுக்க ளெவை?

விடை:—நாகாதி பஞ்சவாயுக்களாம்.

வினா:—இவற்றைப் பாஹ்ய வாயுக்க ளென்ப தென்னை?

விடை:—இவை புறம்பிலுள்ள வாக்காதி கர்மேந் திரியங்களைச் சேட்டிப்பிக் கின்றமையால் அவ்வாறு கூறப்படுகின்றன.

வினா:—சமஷ்டி வியஷ்டிக ளென்று மென்ன?

விடை:—அநேகமாங்களை யொன்றாகக் கூட்டி ஒருவனமாகப் பார்ப்பது சமஷ்டிபேதமாம். அதில் வெவ்வேறாகப் பிரித்துப் பார்ப்பது வியஷ்டிபேதமாம், அவை முறையே தன்னினத்தோடுகூட்டி யொன்றாகப் பாாப்பதும் பிரித்து வெவ்வேறாகப் பார்ப்பதுமாம். இதற்குப் பிரமாணம்:—கைவல்யநவநீதம்.

மரங்கள்போல் வியட்டிபேதம் வனமெனல் சமட்டி பேதம், சரங்கடா வரங்கள்பேதத் தனியுடல் வியட்டி யென்பார், பரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப் பதே சமட்டி யென்பார், இரங்கிய பலசீ வர்க்கு மீசர்க் கும் பேதமீதே".

வினா:—பஞ்சீகரணமாவது யாது?

விடை:—ஐந்து பூதங்களுள் ஒவ்வொன்றையும் சமமாக விரண்டிரண்டு பங்குசெய்து அவற்றுள் ஒவ் வோர் பாகத்தை வைத்து மற்ற வொவ்வோர் பாதியை நந்நான்கு பங்குசெய்து அவற்றைத் தத்தம் பங்குட

னே சேர்க்காமல் மற்றை நான்கு பங்கிலும் முறை யாகச் சேர்ப்பது பஞ்சீகரணமாம்.

இதற்கு ப்ரமாணம் பிரமகீதை:—"தன்மாத் திரைக ளைந்தினையு மோரொன் றிரண்டாய்ப் பகுத் தொன்றை, நன்னு லாக்கித் தன்பாதி யொழிந்த நாலி னுடன்கூட்டி, யின்னே யல்லா தவைநான்கி னியல்பிற் கூட்ட வானுதி, பின்னே தூல பூதமெனப் பிறக்கு மெனவே பெயர்த் துரைத்தான்".

வினு:—ஸ்தூல பஞ்சபூதங்க ளெவை?

விடை:—அவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னு மைந்துமாம். அவை முறையே மண், தீ, நீர், காற்று, வெளி யென்று சொல்லப்படும்.

வினு:—பஞ்ச பூதங்களின் வியாபாரங்க ளெவை?

விடை:—அவை முறையே தாரணை (தாங்கல்), பிண்டீகரணம்(திரட்டுதல்),பாகஞ்செய்தல்,உலாவுதல், அவகாசிப்பி (இடங்கொடு) த்த லென்னு மைந்துமாம்.

வினு:—பஞ்ச பூதங்களி னதிதேவதைக ளெவை?

விடை:—முறையே பிரமா, விஷ்ணு, ருத்திரன், மஹேசுவரன், சதாசிவனென்னு மிவராம்.

வினு:—பஞ்சபூதங்களின் குணங்க ளெவை?

விடை:—ஆகாயத்திற்கு ஸப்தகுண மொன்றும், வாயுவுக்கு ஸப்த ஸ்பரிச குண மிரண்டும், தேயுவுக்கு

ஸப்த ஸ்பரிச ரூபகுண மூன்றும், அப்புவிற்கு ஸப்த ஸ்பரிச ரூப ரச குண நான்கும், பிருதிவிக்கு ஸப்த ஸ்பரிச ரூப ரச கந்த குணமாகிய வைந்துமாம். இவற்று ளொவ்வொன்று சொந்த குணமாம்; மற்றவை தத்தங் காரணத்தின் குணங்களாம்.

வினா:—ஸ்தூல பிரமாண்ட மாவது யாது ?

விடை:—அது ஸப்த ஸாகரம், ஸப்தபுரி, ஸப்த குலாசலம், ஸப்தமேகம், சதுர்த்தச புவனம், பிரகாசத்வய மென்னும் இவைகளடங்கிய ஓர் கோளகமாம்.

வினா:—ஸப்த ஸாகரங்க ளெவை?

விடை:—லவண (உப்பு) ஸமுத்திரம், இக்ஷு (கருப்பிரச) ஸமுத்திரம், சுரா (மத்திய) ஸமுத்திரம், சர்ப்பி (நெய்) ஸமுத்திரம், ததி (தயிர்) ஸமுத்திரம், க்ஷீர (பால்) ஸமுத்திரம், சுத்தோதக (சுத்தஜல) ஸமுத்திரமென்னு மேழுமாம்.

வினா:—ஸப்தபுரிக ளெவை?

விடை:—அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகையென்னு மேழுமாம்.

வினா:—ஸப்தகுலாசலங்க ளெவை?

விடை:—ஹிமயம், ஹேமகூடம், கைலை, நிடதம், நீலகிரி, மந்தாம், விந்தியமென்னு மேழுமாம். இவற்றோடு கந்தமாதனமுஞ் சேர்த்தால் அஷ்ட குலா சலம் (கிரி) எனப்படும்.

வினா:—ஸப்தமேகங்க ளெவை?

விடை:—ஆவர்த்தம், ஸம்வர்த்தம், புஷ்கலாவர்த்தம், ஸங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ண மென்னு மேழுமாம்.

வினா:—சதுர்த்தச புவனங்க ளெவை?

விடை:—அதலம், விதலம், சுதலம், தராதலம், இரஸாதலம், மகாதலம், பாதலமென்னுங் கீழேழு புவனங்களும், பூலோகம், புவலோகம், சுவலோகம், ஜனலோகம், தபோலோகம், மகலோகம், சத்தியலோக மென்னு மேலேழு புவனங்களுமாம்.

வினா:—பிரகாசத் துவயங்க ளெவை?

விடை:—சூரியன் சந்திரனென்னு மிரண்டுமாம்.

இவற்றிற்குதாரணம்:— அஞ்ஞவதைப் பரணி,

"இரையுமெழு கடலும்வளை யாநின்ற வேழ்புவியு
மெழுமலையு முலகுபதி னாலுந்த னாடுருவு
வரையுமிரு சுடரடைய வோரண்ட மாகுமிது
வடவிதையி னளவுமில தாலென்கொ லோதுவதே".

வினா:—நால்வகையோனி யெவை?

விடை:—ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜமென்னும் நான்குமாம்.

வினா:—ஜராயுஜமாவது யாது?

விடை:—பையுள் கட்டுப்பட்டுத் தோன்றுவதாம்.

வினா:—அண்டஜமாவது யாது?

விடை:—முட்டையிலிருந்து தோன்றுவதாம்.

வினா:—ஸ்வேதஜமாவது யாது?

விடை:—வியர்வையிலிருந்து தோன்றுவதாம்.

வினா:—உத்பிஜமாவது யாது?

விடை:—வித்து வேர் கிழங்கு முதலியவற்றி னின்றுந் தோன்றுவதாம்?

வினா:—எழுவகைத் தோற்ற மெவை?

விடை:—தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரங்களென்னு மேழுமாம்.

வினா:—மூவகை ஜாதி எவை?

விடை:—உத்தம, மத்திம, அதமமாகிய மூன்றுமாம்.

வினா:—உத்தமஜாதியுடையவை யெவை?

விடை:—பிருதிவி தத்துவமாயிருக்கின்ற பூலோகத்தில் இகலோக புத்தி பரலோக (போக மோக்ஷ) புத்தி யிரண்டையுந் தருகின்ற மானுட சரீரங்களாம்.

வினா:—மத்திமஜாதி யுடையவை யெவை?

விடை:—பரலோகபுத்தியை மறைத்து இகலோக (ஆகாரநித்திரை மைதுன) புத்திமாத்திரந் தருகின்ற பசுபக்ஷியாதி சரீரங்களாம்.

வினா:—அதமஜாதியுடையவை யெவை?

விடை:—இருவகைப் புத்தியையு மறைத்திருக்கின்ற மரங் கொடி செடிமுதலிய சரீரங்களாம்.

இப்படிப் பிருதிவி தத்துவமா யிருக்கின்ற பூலோகத்திற் கண்டாற்போல முறையே அப்பு, தேயு, வாயு, ஆகாய தத்துவங்களாகிய பிதிர்லோக, தேவலோக, யக்ஷ கந்தர்வலோக, சித்தர் லோகங்களிலுள்ள சந்திர நக்ஷத்திர, சூரிய, யக்ஷகந்தர்வ, சித்தாதி சரீரங்கள் உத்தம ஜாதிகளாம். காமதேனு, ஐராவதம், அன்னம், கருடனாதிய சரீரங்கள் மத்திமஜாதிகளாம். கற்பக விருக்ஷம், பாரிஜாதம், சங்கநிதி பதுமநிதி முதலிய சரீரங்கள் அதம ஜாதிகளாம்.

வினா:—ஆறுதத்துவங்க ளெவை?

விடை:—சர்மம் (தோல்), உதிரம் (இரத்தம்), மேதஸ் (மாம்சம்), சநாயு (நரம்பு), அஸ்தி (என்பு), மச்சை (மூளை) என்னும் ஆறுமாம். இவைகளோடு சுக்கிலத்தையுஞ் சேர்த்தால் ஸப்ததாது வெனப்படும்.

வினா:—ஸமஷ்டிவியஷ்டி யபிமானங்க ளெவை?

விடை:—எல்லாத் தேகங்களையு மொன்றாகக் கூட்டி நானென் றபிமானிப்பது சமஷ்டி யபிமானம்; அஃது ஈஸ்வரனுடையதாம். ஒருதேகத்தை நானென் றபிமானிப்பது வியஷ்டி யபிமானம்; அது ஜீவனுடையதாம்.

வினா:—சமஷ்டி சரீரத்திரயங்க ளெவை?

விடை:—விராட், இரண்யகர்ப்பம், அவ்வியாகிருத மென்னு மூன்றுமாம்.

வினா:—சமஷ்டி அவஸ்தாத் திரயங்க ளெவை?

விடை:—சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார மென்னு மூன்றுமாம்.

வினா:—சமஷ்டி யபிமானத் திரயங்க ளெவை?

விடை:—வைஸ்வானர, சூத்ராத்மா, அந்தரியாமி யென்னு மூன்றுமாம். இவ்வொன்பதையுமுடைய ஈசன் தத்பதத்தின் வாச்சியார்த்தமாம்.

வினா:—வியஷ்டி சரீரத்திரயங்க ளெவை?

விடை:—ஸ்தூலம், சூட்சுமம், காரண மென்னு மூன்றுமாம்

வினா:—வியஷ்டி யவஸ்தாத் திரயங்களெவை?

விடை:—ஜாக்கிரம், சுவப்பனம், சுழுத்தியென்னு மூன்றுமாம்.

வினா:—வியஷ்டி யபிமானத்திரயங்க ளெவை?

விடை:—விசுவன், தைஜஸன், பிராக்ஞனென்னு மூன்றுமாம். இவை ஒன்பதையுமுடைய ஜீவன் துவம் பதத்தின் வாச்சியார்த்தமாம்.

வினா:—தத்துவம் பதங்களின் லக்ஷியார்த்த மெவை?

விடை:—கூடஸ்த பிரஹ்மமாம்.

வினா:—ஈஶ்வரன் நித்தியமுக்தனென்பதெதனால்?

விடை:—இயல்பாகவே ஜன்மாதி சம்சார பந்தங்களினின்றும் விடுபட்டிருப்பதனாலாம்.

வினா:—பஞ்சகிருத்தியங்களவை?

விடை:—சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம்,* திரோபவம் அனுக்கிரகமென்னு மைந்துமாம்.

வினா:—சிருஷ்டியென்பது யாது?

விடை:—ஈஶ்வரன் றனது மாயையாற் பிரஹ்மதேவ மூர்த்தமாக விருந்து ஜீவர்களின் கன்மானுசாரமாகப் போகமோக்ஷ சாதனங்களான தனு கரண புவனங்களைக் கொடுப்பதாம்.

வினா:—ஸ்திதியென்பது யாது?

விடை:—அத் தனுவாதிகளைக் கொண்ட ஜீவர்களின் கன்மானுசாரமாகப் போக மோக்ஷங்களை விஷ்ணு மூர்த்தமாக நின்றூட்டி யிரட்சி (கா) த்தலாம்.

வினா:—ஸம்ஹாரமென்பது யாது?

விடை:—அத்தனுவாதிகளை ருத்திர மூர்த்தமாக விருந் தழித்தலாம்.

வினா:—திரோபவமென்பது யாது?

விடை:—அச்சீவர்களை மஹேசுவர மூர்த்தமாக நின்று (ஆத்மஞான நிமித்தம்) மறைத்தலாம்.

வினா:—அநுக்கிரகமென்பது யாது?

விடை:—அச்சீவர்களைச் சதாசிவமூர்த்த (சுருதி குருரூப)மாகநின்று தத்சொரூபத்தை வெளிப்படுத்தித் தன்னுடன் ஐக்கியஞ் செய்து கொள்ளுதலாம்.

வினா:—நிர்விகாராத்விதியப் பிரஹ்மசொரூபனான ஈசுவரனிடத்திற் சிருஷ்டியாதி பஞ்சகிருத்திய வியாபாரங்கள் எவ்வாறுண்டாம்?

விடை:—இச்சா யத்தின மின்றிய சூரியன் றன் வருஷ கிரணத்தால் ஜலத்தைப் பெய்யச்செய்து பின்னரந்த ஜலத்திற்றனே பிரதி பிம்பித்து அதனை மேக கிரணத்தால் மறைத்து ஹிம கிரணத்தாற் பாதுகாத்து உஷ்ண கிரணத்தா லந்த ஜலத்தைத் திரும்பக் கிரகித்து (வாங்கி)க் கொண்டு அப்பிரதி பிம்பத்தைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளுவதுபோல, நிர்விகாரப் பிரஹ்ம சொரூபமான ஈசுவரனும் தன்மாயாசத்தியுடன் கூடிச் சித் பிரதானத்தால் நிமித்த காரணனையும் ஜடப்பிரதானத்தால் உபாதான காரணனையும் நின்று புத்தியாதி காரியங்களைப் பிரமதேவ ரூபத்தாற் சிருஷ்டித்து அதிற்றனே ஜீவரூபமாகப் பிரவேசித்துக் கருமத்தாற் போக்திருவாய் நின்று நியமசத்தியாற் போக்கிய போத்திருக்களை விஷ்ணு ரூபத்தால் நியமித்து ருத்திர ரூபத்தா லக்காரிய ரூபங்களைச் சங்கரித்து, மஹேசரூபத்தால் அச்சீவர்களை மறைத்துப் பின் சதாசிவ (சுருதிகுரு)

ரூபத்தால் ச்சீவர்களைத் தன்னுடனைக்கியஞ் செய்து கொள்வன்.

வினு:—சுருதி ஓரிடத்திற் கிரமமாகவும் மற்றோரிடத்திற் கிரமமில்லாமலுஞ் சிருஷ்டியைச் சொல்வது யாதுபற்றி?

விடை:—பிரபஞ்சம் சத்தியமா யிருக்குமாயின் சகல வேதவாக்கியங்களும் அதனை யொரேவிதமாக நிரூபிக்கும். அப்படி நிரூபிக்கவில்லை யாதலாற் பிரபஞ்சம் மித்தையாம். மித்தியாப் பிரபஞ்சத்தின் சிருஷ்டியைச் சொல்லுமெல்லா வாக்கியங்களுக்கு மெந்தவிதத்தினுலும் முமுட்சுக் களுக்குச் சிருஷ்டியின் ஆரோபவாயிலாக அதனபவாதத்தைச் செய்து ஜகத்தின் மித்தியாத்துவ நிச்சயபூர்வகமாக அத்துவைத வஸ்துவை யுபதேசித்தலிற் ருற்பரியமே யன்றிச் சிருஷ்டியைச் சொல்வதிற் ருற்பரியமன்ரும்.

இதற்குதாரணம்:—வாசிட்டம் " வான் முதலா மண்முதலா நீர்முதலாந் தீமுதலா மற்றை வாயுத், தான்முதலா மிப்படியே சிருட்டிதொறு மோரொன்று தலைமை யாகு, மியான்முதலோ ரயன் சிருஷ்டி சிலேடையா யுனக்குரைத்தே னிந்த வாற்ருன்,மேன்முதலா நியமமிதற் கொன்ருக விலதுபல விதமாய்த் தோன்றும்.

வினு:—தசாவதாரங்க ளெவை?

விடை:—மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி), நாரசிங்கம் (மனிதவுருவும் சிங்கவுருவுங் கலந்த வடிவம்), வாமனம் (குறுகிய மனிதவடிவம்), பரசுராமன், இரகுராமன், பலராமன், கண்ணன், கற்கி (குதிரைமுகமுடைய மனிதவடிவம்) என்னும் பத்துமாம். துஷ்டரை யொழித்துச் சிஷ்டரைக்காக்குமாறு காலதேச நிமித்தங்களுக்கேற்றவாறு ஈசுவரன் (கர்மத்தினலன்றி யிச்சையினற்) கொள்ளும் வடிவம் அவதாரமெனப்படும்.

வினு:—இராகத் துவேஷாதிக ளெவை?

விடை:—இராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், ஈரிஷை, அசூயை, டம்பம், தற்பம், அகங்காரம், இச்சை, சிரத்தை, பக்தி, யெனப் பதினாறும். இவற்றுள், ராகமுதற்பதின்மூன்று குணங்கள் மோக்ஷ விக்கினங்களாதலின் தள்ளத் தக்கனவாம். இச்சைமுதல் மூன்று மோக்ஷானுகூலமா யிருத்தலாற் கொள்ளத் தக்கனவாம்.

வினு:—இராகமென்பது யாது?

விடை:—பரஸ்திரீ கமனம் பண்ணவேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இராகமென்று பெயர். பூர்வத்தில் இராவணன் பரதாரமான சீதாதேவியை இச்சித்த இராகத்தினு லவன் பிராண

ஹானி பந்துநாசம் இராஜ்ய ஹானி இகபரங்களி லப கீர்த்தி யிவைமுதலான வனேக வனர்த்தங்க ளனுபவித் தனன். இன்னும் சகோதரரான சுந்தோப சுந்தர்க ளிரு வரும் திலோத்தமையைக்கண்டு மோகித்து என்பாரி என்பாரி யென்றடித்துக்கொண் டிறந்தார்கள்.

வினா:—துவேஷமென்பது யாது?

விடை:—தனக்கு ஒருவ னபகாரம் பண்ணினால் அவனுக்குப் பதிலபகாரம் பண்ண வேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்த விருத்தியாம். பூர்வத்தில் இரண்யகசிபன் றன் தமையனைக்கொன்ற நாராயண னைக்கொல்ல வேண்டுமென்ற துவேஷத்தினா லவன் பிராணஹானி முதலான வனேக வனர்த்தங்க ளனுப வித்தனன்.

வினா:—காம மென்பது யாது?

விடை:—புத்திர, மித்திர, களத்திர, கிருகக்கிராம, தனதான்யாதிகள் மென்மேலும் சம்பாதிக்க வேண்டு மென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்தியாம். பூர்வத் தில் நரகாசுரன் லக்ஷம்ஸ்திரீகளைக் கல்யாணஞ்செய்ய விரும்பிப் பதினாயிரந் தேவஸ்திரிகளைச் சிறை பிடித்துள்வத் திருந்ததனால் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியால் பிராணஹானி முதலான வனேக வனர்த்தங்க ளனுப வித்தனன்.

வினா:—குரோதமென்பது யாது?

விடை:—தனக்குவேண்டிய காரியங்களி லொருவன் விக்கினம் பண்ணினால் அவனிடத்தி லாக்கிரகமாய் வியாக்கிரம்போல விகற்பித்து வருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் பகாசுரன் றனது புசிப்பிற்கு விக்கினஞ்செய்த பீமசேனன்பேரில் குரோதம் வைத்ததனால் அவன் பிராணஹானி முதலான வனேகவனர்த்தங்க ளனுபவித்தனன்.

வினா:—உலோப மென்பது யாது?

விடை:—தான் சம்பாதித்த பதார்த்தங்களில் ஒரு காசளவர்யினு மொருவருக்கும் செலவுபண்ண லாகாதென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் துரியோதனன் தான் சூதாடிஜயித்த பாண்டவர்களுடைய இராஜ்யத்தி லவர்கள் வசிக்கக்கூட இடங்கொடுக்கமாட்டே னென்ற லோபத்தினா லவன்பிராணஹானி முதலான வனேக வனர்த்தங்க ளனுபவித்தனன்.

வினா:—மோக மென்பது யாது?

விடை:—தான் சம்பாதித்த பதார்த்தத்தின் பேரில் பிரிய மோகப் பிரமோதமாய் விகற்பித்துவருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் தசரதமகாராஜன் றனது ஜேஷ்டபுத்திரனை ஸ்ரீராமன் பேரில் வைத்த மோகத்தினால் (அவ்விராமன் மாதுருவாக்கிய பரிபாலன நிமித்தம் காட்டுக்குப்போக அதனால்) பிராண

ஹானி முதலான வனேக வனர்த்தங்கள் அனுபவித் தனன்.

வினு:—மதமென்பது யாது?

விடை:—ஐசுவரிய பாகுல்யத்தினு (மிகுதியா)ற் கோபித்துக் கிருத்தியாகிருத்தியந் தெரியாது விகற்பித்து வருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் கார்த்த வீரியார்ச்சுனன் றன்னிடத்தில் வந்த மகாரிஷியான நாரதபகவானை மதியாது கர்வித்திருந்ததைக் கேட்ட பரசுராமனுல் அவன் பிராணஹானி முதலான வனேக வனர்த்தங்க ளனுபவித்தனன்.

வினு:—மார்ச்சரிய மென்பது யாது?

விடை:—ஒருவர் சுகமாயிருந்தால் அவர்களைப் பார்த்துச் சகியாது பொறாமையால் விகற்பித்து வருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் சிசுபாலன் றருமராஜன் தனது ராஜசூயயாகத்தில் அக்கிர தாம்பூலம் வாங்கத்தக்கவ ராரென்று விசாரித்து அதனை ஸ்ரீகிருஷ்ண மூர்த்திக்குக் கொடுக்க முயன்றதைப்பார்த்துச் சகியாமல் மார்ச்சரியங் கொண்டதனுல் அவன் பிராணஹானிமுதலிய வனேக வனர்த்தங்க ளனுபவித்தனன்.

வினு:—ஈர்ஷை யென்பது யாது?

விடை:—தனக்குவந்த துக்கம் பிறருக்கு வாலாகாதா வென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் அருணுக்ஷன் றனக்குவந்த துக்கம் தனது

இஷ்டனை வாணாசுரனுக்கு வாலாகாதா வென்றெதிர்த்த ஈர்ஷையினு லவன் பிராணஹானி முதலிய வனேக வனர்த்தங்க ளனுபவித்தனன்.

வினு:—அசூயை யென்பது யாது?

விடை:—தனக்குவந்த சுகம் அன்னியருக்குவராதென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் பௌண்டரீக வாசுதேவன் றனக்கும் வாசுதேவனென்னும் பெயர் கிருஷ்ணனுக்கும் வாசுதேவனென்னும் பெயராவென்னும் அசூயையினு லக்கிருஷ்ணனே டெதிர்த்துப் பிராணஹானி முதலிய வனேக வனர்த்தங்க ளனுபவித்தனன்.

வினு:—டம்பமென்பது யாது?

விடை:— தான் செய்யும் தர்மத்தைப் பலரும் பார்த்துமிகுநன்ருயிருக்கின்றதென்றுசொல்லவேண்டுமென விகற்பித்து வருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் நபூர்வ(அம்பரீக்ஷ)மஹாராஜன் துர்வாசரிஷியைப் பார்த்து நான்செய்த யாகங்களைப்போல யார் செய்யப்போகிருர்களென்று தன்னைவியந்து கேட்க, யானைத்துதிக்கைபோல ஆயிரம் வருஷம் நெய்சொரிந்து யாகஞ்செய்தவனு மிப்படிக்கேட்கவில்லை,ஈதென்னடம்பயாகமென்று சொன்னவரைக் கோபித்ததால் அந்த யாகத்தோடு அவன் பிராணஹானி முதலிய வனேக வனர்த்தங்க ளனுபவித்தனன்,

வினா:—தர்ப்பமென்பது யாது?

விடை:—புத்ர மித்ர களத்ர தனதான்யாதி சம்பத்துத் தனக்கேயுண்டு, தனக்கொருவரும் சமான மன்றென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் சதகண்ட ராவணன் ஐசுவரியத்தில் தனக்கொருவரும் சமான மன்றென்று தேவர்களுக்கு உபத்திரவஞ் செய்ததை நாரதர் ஸ்ரீராமருக்கறிவிக்க அவரது பத்தினியான சீதாதேவியால் அவன் பிராண ஹானி முதலிய வனேக வனர்த்தங்க ளனுபவித்தனன்.

வினா:—அகங்கார மென்பது யாது?

விடை:—அடா! என்னை அறியாயா? நான்பிடித்த காரியம் விடுவேனா? நீயா வெனக்குப் புத்திசொல்லு கிறவனென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்தியாம். பூர்வத்தில் மதுகயிடவர்கள் மகாவிஷ்ணுவோடு அநேக வருஷம் யுத்தஞ்செய்து பிழையாமல் அவர்தரும் வரங்களுக்காசியாமற் றாங்களே அந்தவிஷ்ணுவுக்கு வரங் கொடுத்த அகங்காரத்தினால் பிராணஹானி முதலிய வனேகவனர்த்தங்க ளனுபவித்தார்கள்.

வினா:—இச்சை யென்பது யாது?

விடை:—பசிதாக நிமித்தம் அன்னபானாதி கிராகிய மும் மல மூத்திர விசர்ஜ்ஜனமும் செய்யவேண்டு மென்றுவருகிற சித்த விருத்தியாம்.

வினா:—இந்த விச்சைக்குப் பலன் யாது?

விடை:—இவை செய்யாமற் போனாற் றுக்கமும் செய்தாற் சுகமுமாம். இவற்றாற் பந்த மோக்ஷ சுவர்க்க நரகங்களில்லை.

வினா:—சிரத்தை யென்பது யாது?

விடை:—சுருதி குரு வாக்கியங்களில் *விசுவாச ரூபமாக வெழாநின்ற சித்தவிருத்தியாம்.

வினா:—சிரத்தைக்குப் பல னியாது?

விடை:—சிரவணாதிகளின் வாயிலாக வுண்டாகும் ஞானமாம்.

வினா:—பக்தி யென்பது யாது?

விடை:—ஈய்வரனிடத்தும் சற்குரு விடத்தும் அதிகப்பிரிய ரூபமாக வெழாநின்ற சித்தவிருத்தியாம்.

வினா:—பக்திக்குப் பல னியாது?

விடை:—சற்கருமப் பிரவிருத்தி வாயிலாக வுண்டாகும் சித்த சுத்தியாம்.

வினா:—இந்தப்பக்தி யெத்தனை விதம்?

விடை:—உத்தம, மத்திம, அதமமென மூவகைத்தாம்.

வினா:—உத்தம பக்தியென்பது யாது?

விடை:—சச்சிதானந்த ஆத்மாவே தெய்வமென்னும் விசுவாச புத்தியாம்.

வினா:—மத்திம பக்தியென்பது யாது?

விடை;— மாயோபாதிகனுன ஈப்வரனை மண் சிலையாதி பிரதிமைகளிற் பாவித்துப் பூசித்தலும், புண்ணியஸ்தல ஜல தரிசன ஸ்பரிசனுதிகளைச் செய்தலுமாம்.

வினு:—அதமபக்தி யென்பது யாது?

விடை:—துஷ்டதேவதைகளை மது மாம்சங்களைக் கொண்டு ஆராதித்தல் முதலியனவாம்.

சிவஞானவள்ளலார்.

"உத்தமங்க ளெல்லா முணர்வையே தாம்பேணு
மத்திமங்க ளேபதுமை வாழ்த்துஞ் - சுத்த
அதமங்க ளெல்லாந்தம் மாகத்தைப் போற்று
நதியோடை கூபமென நாடு".

என்று கூறுமா றறிக.

வினு:—பஞ்ச கோசங்களவை?

விடை:—அன்னமயம், பிராணமயம், மனேமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென்னு மைந்துமாம்.

வினு:—அன்னமய கோசமென்பது யாது?

விடை:—அது சட்கோசமாய் ஷட்பாவ விகாரமாயிருக்கும். காசரணுவயவா காரமாய்ப் பிதாமாதாக்களுண்ட வன்ன ரசமாகிய சுக்கில சோணிதத்தா லுண்டாகி, அன்னத்தால் விருத்தியடைந்து, அன்னமயமான பூமியி லழிவதாயுமுள்ள ஸ்தூலசரீரமே அன்னமய கோசமாம்.

வினா:—பிராணமயகோச மென்பது யாது?

விடை:—கன்மேந்திரியங்களுடன் கூடின பிராண வாயுவாம்.

வினா:—மனோமயகோச மென்பது யாது?

விடை:—ஞானேந்திரியங்களுடன் கூடின மனமாம்.

வினா:—விஞ்ஞானமய கோசமென்பது யாது?

விடை:—ஞானேந்திரியங்களுடன் கூடின புத்தியாம். இம்மூன்றும் சூட்சுமதேகத்து ளந்தர்க்கதமாம்.

வினா:—ஆநந்தமய கோசமென்பது யாது?

விடை:—ஆத்மாவின் சொரூபானந்தத்தின் பிரதி பிம்பத்தோடு கூடிய பிரிய மோதப் பிரமோத வடிவ விருத்திகளின் லயத்திற்கு ஸ்தானமாகிய காரணதேக (அஞ்ஞான) மாம்.

வினா:—இவற்றைக் கோசமென்பா னேன்?

விடை:—கோசமென்பது உறை. கத்தி வீணை முதலியவற்றை யவற்றினுறைகள் மறைப்பதுபோல இவ்வைந்தும் ஆத்ம (தன்) சொரூபத்தை (தெரியக் கூடாவாறு) மறைத்திருத்தலாற் கோசமென்று சொல்லப் படுகின்றன.

வினா:—முத்தியென்பது யாது?

விடை:—இப்பஞ்சகோசங்களுக்கிடமாகியமூன்று தேகத்தையும் யானெனத்தென்னு மகமமதை ரூபமான (கர்த்திருத்துவ போக்திருத்துவப் பிராந்தியாகிய) பந்தத்தினின்றும் விடுபட் டிருப்பதாம்.

வினு:—சகல வனர்த்தங்களுக்குங் காரணமாகிய மாயாலட்சண பஞ்சகமெவை?

விடை:—அஸத்து, ஜடம், துக்கம், அநித்தியம், கண்டமென்னு மைந்துமாம்.

வினு:—அஸத்தென்பது யாது?

விடை:— திரிகாலத்திலு மில்லாதது; அது முயற்கொம்பு முதலியவற்றைப் போல்வதாம்.

வினு:—ஜடமென்பது யாது?

விடை:—திரிகாலத்திலும் அறிவில்லாததாம்; அது பாஷாணுதி (கல்முதலியவை) களைப் போல்வதாம்.

வினு:— துக்கமென்பது யாது?

விடை:—இராஜோ தமோகுண மயமான புத்தியின் சகிக்கமுடியாத கோர மூட விருத்திகளாம்.

வினு:—அநித்திய மென்பது யாது?

விடை:—நாசமடைவதாம்; அஃதாவது இருப்பது போலத்தோன்றி யழிவதாம்.

வினு:—கண்டமென்பது யாது?

விடை:—* தேசகாலவஸ்து பரிச்சேத மென்னும் மூவித பரிச்சேதங்களையு மேற்பதாம்.

---

* அத்தியந்தாபாவத்திற்கு (முற்று மின்மைக்கு)ப் பிரதியோகித்தன்மை எதுவோ அது தேசபரிச்சேதமெனப்படும். பிருதிவிமாத்திரத் திருக்கும் கந்தகுணத்திற்கு ஜலமுதலியவற்றில் அத்தியந்தாபாவ மிருக்கிறது; அதற்குப் பிரதியோகி கந்தகுணமாம். அதில் (பிருதிவியில்) அதற்(அத்தியந்தாபாவத்திற்)குப் பிரதியோகித்தன்மை யிருக்கின்றது; அது தேசபரிச்சேதமாம். ஆதலால் கந்தகுணம் ஏகதேசத் திருப்பதாயிருத்தலான் தேசபரிசசேதமுடையதாம்.

பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங் (முன்பின்னின்மை)களின் பிரதியோகித்தன்மை எதுவோ அது காலபரிச்சேதமெனப்படும். மண்ணின்காரியமாகிய கடத்தின் உற்பத்திக்கு முன் பிராகபாவமும் கடத்தின் நாசத்திற்குப்பின் பிரத்துவம்ஸாபாவமு மிருக்கின்றன. அவற்றிற்குப் பிரதியோகிகடமாம். அதனிட (கடத்தினிட)த்துப் பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்களின் பிரதியோகித்தன்மை யிருக்கின்றது. அதுவே காலபரிச்சேதமாம். ஆகையால் கடமுற்பத்தி நாசமுடையதாயிருத்தலால் காலபரிச்சேதமுடையதாம்.

அந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை வஸ்து பரிச்சேதமெனப்படும். கடபடங்களுக்கொன்றற்கொன்றுள்ள பேதமாகிய அந்நியோந்நியாபாவம் எதுவோ அதற்குப் பிரதியோகி கடமும் படமுமாம். அவற்றில் (கடபடங்களில்) அதன் (அந்நியோந்நியா பாவத்தின்) பிரதியோகித்தன்மை யிருக்கின்றது; அது வஸ்துபரிச்சேதமாம். அப்பேதத்தையுடைய கடபடங்கள் வஸ்துபரிச்சேத முடையனவாம்.

வினு:--மாயை யநிர்வாச்சிய நவவித மெவ்வாறும்?

விடை:—சத்து, அசத்து, சதசத்து, ஸாவயவம், நிரவயவம், ஸாவயவநிரவயவம், பின்னம், அபின்னம், பின்னுபின்னம் என்னும் ஒன்பது விதத்தாலு நிச்சயிக்கக் கூடாததாம்.

வினு:—மாயை இந்த ஒன்பது லக்ஷணங்களாலும் நிச்சயிக்கக் கூடாதென்ப தெப்படி?

விடை:—(1)மாயை சத்தென்றால் திரிகாலத்தினும் (இரஜ்ஜுவைப்போல) அழியாமலிருக்க வேண்டும்; அங்ஙனமன்றித் தத்துவ ஞானத்தினுல் (சர்ப்பம்போல) அழிந்து போதலினுலும் அத்வைதப் பிரதிபாதகசுருதிக்கு விரோதம் வருதலினுலும் சத்தன்றும்.

(2) அசத்தென்றால் பிரபஞ்சத்தின் காரணத் தன்மை கூடாமையாலும் நானஞ்ஞானியென்னு மனுபவமிருத்தலாலும் துச்சவடிவ அசத்துமன்றும்.

(3) சதசத்தென்றால் அந்தகார பாஸ்கர (இருட்டாதித்திய) னென்றாற்போல பரஸ்பரம் விரோதி தர்மங்கள் ஒன்றன்கட் சம்பவியா தாதலின் சதசத்துமன்றும்.

(4) ஸாவயவமென்றால் திரவியமாயின் ஸாவயவத்தன்மைகூடும்; நித்தியாநித்திய திரவியமாதலோ பொருந்தாது; பொருந்தாமையின், அவயவ விலக்கணமின்றும். ஆகவே சாவயவமு மன்றும்.

(5) நிரவயவமென்றால் சாவயவமே உபாதான காரணமாதலின் நிரவயவத்திற்கு உபாதானத்தன்மை கூடாது. நிரவயவமான ஆகாச பரமாணுக்கட்குத் தார்க்கிகர் உபாதானத் தன்மையைக் கூறியது சுருதி சூத்திர விருத்த மாதலின் நிரவயவமு மன்றாம்.

(6) ஸாவயவ நிரவயவ மென்றாற் பரஸ்பரம் விருத்தமான உபயரூபத் தன்மையை யுலகிற் கண்டில மாதலின் ஸாவயவ நிரவயவமு மன்றாம்.

(7) பின்னமென்றால் பிரஹ்மசொரூபத்திற் கன்னியமாக விருக்க வேண்டும்; இருப்பின் "ஈண்டு நாநா வென்பது அற்பமு மில்லை" என்பது முதலிய சுருதிகளின் விரோதம் வருமாதலின் பின்னமுமன்றாம்.

(8) அபின்னமென்றால் ஜடசேதனங்கட்கு அபேதங் கூடாது; கூடுமெனின் பிரஹ்மத்துட னனன்னியமா (வேறல்லாததா) யிருக்கவேண்டும்; அப்படியிருக்கிற தெனின்; ஆத்மசக்தியொன் றில்லாம லிருக்க வேண்டும்; அப்படி யில்லாதிருக்கிற தெனின் ஆத்மா வனந்த சக்திமானென்னும் சுருதிக்கு விரோதம் வரும்; வந்தால் வரட்டுமெனின்; மாயாலக்ஷணமான அசத்து, ஜட, துக்கமாகிய இவைகள் ஆத்மாவுக்கும், ஆத்ம லக்ஷணமான சச்சிதானந்தம் மாயைக்கு மிருக்கவேண்டும்; அங்ஙன மிருப்பின் மாயையென்று சொல்லாமற் பிரஹ்ம மென்றே சொல்ல வேண்டும். அங்ஙனஞ்

சொல்லலா மெனின் ஆத்ம நாமத்திற்கு வெதிரிக்த (அன்னிய) மான அஞ்ஞானம், மாயை, தமசு, மித்தியாரூபியென்னு மனேக நாமத்தாற் பிரஹமத்துக்கு அன்னியமாக வியவகரிக்க (சொல்லப்) படுகின்றமை யின் அபின்னமு மன்றும்;

(9) பின்னு பின்னமென்றுல் பின்னத்துவ அபின்னத்துவங்கட்கு பரஸ் பரம் விரோதமுள தாதலின் பின்னுபின்னமு மன்றும்,

இப்படி ஒன்பது லக்ஷணங்களினுலும் நிச்சயித்துச் சொல்லக்கூடாத சொரூபமுடைய மாயையை அறிஞர் அனுதிபாவரூப நவவித அனிர்வசநீயாத்மிகையென்று கூறுவர்.

வினு:—மாயாநாம பஞ்சக மெவை ?

விடை:—தமசு, மாயை, மோகம், அவித்தை, அந்ர்தம் (பொய்) என்னு மைந்துமாம்.

வினு:—தமசென்பது யாது ?

விடை:—ஜீவனது யதார்த்த வடிவத்தை மறைப்பதாம்

வினு:—மாயை யென்பது யாது ?

விடை:—ஆத்மாவினும் வேருகிய (இந்திர ஜால சக்தியைப் போலப்) பிரபஞ்சரூபத் தோற்றத்திற்குக் காரணமா யிருப்பதாம்

வினு:—மோக மென்பது யாது ?

விடை:—அவ்வாறு தோற்றின ஜகத்திற் சுத்தி காரசிதாதி (இப்பி வெள்ளிமுதலிய) விபரீத முண்டாக்குவதாம்.

வினா:—அவித்தை யென்பது யாது?

விடை:—பிரஹ்ம (ஆத்ம) வித்தையினால் நசித்துப் போவதாம்.

வினா:—அநிர்தமென்பது யாது?

விடை:—சத்ரூப ஆத்மாவிற்கு அன்னியமாக (தனக்கெனச் சொரூப மின்றி) யிருத்தலாம்.

வினா:—மாயா தர்மத்துவயங்க ளவை?

விடை:—(1) சங்கோசம் (2) விகாசங்களாம்.

வினா:—சங்கோச மெ(குவிவெ)ன்பது யாது?

விடை:—சித்திரபடமானது தன் சங்கோச தருமத்தால் நாநாவித சித்திரங்களை மறைத்திருப்பது போல மாயை தன் சங்கோச தர்மத்தால் அகிலப்பிரபஞ்சத்தையு மொடுக்கிக் காட்டுதலாம்.

வினா:—விகாசமெ(விரிவெ)ன்பது யாது?

விடை:—சித்திரப் படமானது தன் விகாசதருமத்தால் நாநாவிதச் சித்திரங்களைக் காட்டுவது போல மாயை தன் விகாச தர்மத்தால் அகிலப் பிரபஞ்ச (பரஜீவஜக)த்தையுந் தோற்றுவித்தலாம்.

வினா:—மாயா குணத்துவயங்க ளவை?

விடை:—(1) அஸ்வதந்திர (சுதந்தர மின்மை)த்துவம் (2) ஸ்வதந்திரத்வ மென்பனவாம்.

வினா:—அஸ்வதந்திரத்வ மென்பது யாது?

விடை:—மாயை (இரஜ்ஜு சர்ப்பம் போல) மித்தையாதலால் தனக்கெனச் சொரூப மொன்றின்றிப் பிரஹ்மத்தினும் வேறாகத் தோற்றுமையாம்.

வினா:—ஸ்வதந்திரத்வ மென்பது யாது?

விடை:—நிஷ்பிரபஞ்ச சொரூபமாகிய பிரஹ்மத்தை ஜீவேஸ்வரஜகத்தாகச் செய்விப்பதாம்.

வினா:—பிரகிருதி காரியோதய த்வயங்க ளவை?

விடை:—(1) கிரமசிருஷ்டி, (2) யுகபத் சிருஷ்டி என்பனவாம்.

வினா:—கிரம சிருஷ்டி யென்பது யாது?

விடை:—மூலப் பிரகிருதி (மாயை) யினின்று † மகதத்வமும், அதினின்று அகங்காரமும், அதினின்று தன்மாத்திரா பஞ்சகமும், அவற்றினின்று ஸ்தூல பஞ்சபூதமும், அவற்றினின்று பிரமாண்ட புவன சரீர கடாதிப் பிரபஞ்சமு முறையே யுற்பத்தியாதலாம்.

வினா:—யுகபத்சிருஷ்டி யென்பது யாது?

விடை:—நிஸ்தரங்க (அலையற்ற) சமுத்திரத்தினின்றும் ஏககாலத்தில் வாயுவசத்தால் விசித்திரமான

---

† மகதத்வம், அகங்காரம், தன்மாத்திரா பஞ்சகம் என்னும் ஏழும் சப்தப்பிரகிருதி யெனப்படும்.

பேன தரங்க புற்புதா (நுரை, திரை, குமிழியா)திக ளுதய மாவதுபோலச் சச்சிதானந்த ப்ரஹ்மத்தில் ஏக காலத்தில் மாயாவசத்தால் நாமரூப ப்ரபஞ்ச மூண் டாதலாம்.

வி௴:—மாயாசம்பந்த ஞானங்க ளெவை?

விடை:—அவை (1) ‡ சுருதி சம்பந்த ஞானம், (2) யுக்தி சம்பந்த ஞானம், (3) லோக சம்பந்த ஞான மென்பனவாம்.

வி௴:—சுருதி சம்பந்த ஞானமாவது யாது?

விடை:—மாயையைச் சுருதி சம்பந்தமாக விசா ரிக்கின் அது ககனாரவிந்தம் (ஆகாசதாமரை) போல்வ தாதலின் துச்ச (நிசார)மெனக் காண்பதாம்.

வி௴:—யுக்திசம்பந்த ஞானமென்பது யாது?

விடை:—யுக்திசம்பந்தமாக விசாரிக்கின் சுத்திகா ரசிதம் (இப்பி வெள்ளி) போல் சதசத் விலட்சணமா யிருத்தலின் அனிர்வாச்சியமெனக் காண்பதாம்.

வி௴:—உலகசம்பந்த ஞானமென்பது யாது?

---

‡ சுருதியினுந் ரேன்தியதான சிரௌத ஞானத்தால் துச்சை அஃதாவது மூன்றுகாலத்திலு மசத்தென்றும், யுக்தி ஜந்நியமான யௌத்திகஞானத்தால் அநிர்வசநீயை அஃதாவது சத்தசத்து விலக்ஷணமாகிய மித்தையென்றும், இலௌகிக மாகிய உலகப்பிரசித்த ஞானத்தால் வாஸ்தவி அஃதாவதுசத்தி யையென்றும் மாயை மூன்றுவிதமாக அறியத்தக்கதாம்.

விடை:—உலக சம்பந்தமாகப் பார்க்கின் ஆத்மா வைப்போ லுள்ளதாகத் தோற்றலால் நித்ய மெனக் காண்பதாம்.

வினு:—மாயா காரியோதய சதுஷ்டய மெவை?

விடை:—அவை விருத்தி, பரிணாமம், ஆரம்பம், விவர்த்தமென்னு நான்குமாம். இவற்றிற்கு முறையே படங் குடிலா(வஸ்திரம்வீடா) தல், க்ஷீரம் ததியா(பால் தயிரா)தல், தந்து பட (நூல்வஸ்திர) மாதல், இரஜ்ஜு வில் சர்ப்பந் (பழுதையிற் பாம்பு) தோன்றுதல் ஆகிய இந்நான்கும் திருஷ்டாந்தங்களாம். அவற்றுள், விவர்த்த பக்ஷமே ஈண்டுக் கொள்ளத் தக்கதாம்.

வினு:—சத்ரூபப் பிரஹ்மத்தில் மித்தியாவஸ்து கற்பிதமாதற்குத் திஷ்டாந்த மொரே விதமாகச் சொல் லாமற் பலவிதமாகச் சொல்லுவ தெக்காரணத்தால்?

விடை:—சச்சிதானந்தப் பிரஹ்ம (காரண) த்தி லாரோபமான நாமரூப ஜக (காரிய) த்தை அபவாதித் துக் காரணமான அதிஷ்டானப் பிரஹ்மமே நீயென் னுங் குருவி னுபதேசாரம்பத்தில் பிரஹ்மத்தில் பர ஜீவஜகத்தின் சத்தை சொல்லுந் தோற்றமும் பொருளு மெனக்காட்டத்தந்துபடம் மிருத்திகைகட(மண்குட)ம் கனககுண்டலம் (பொன்னுபரணம்)முதலிய திஷ்டாந்த மும், சொல்லுந் தோற்றமுமெனக் காட்ட இரஜ் ஜுசர்ப்பம் ஸ்தாணுசோர (கட்டை கள்வ) ன் கான

னீர்முதலிய திஷ்டாந்தமும், சொல்மாத்திர மெனக் காட்ட வந்தியாபுத்திர (மலடிமக)ன் ககனகுசும(ஆகாய புஷ்ப)ம் சசசிருங்கா (முயற்கொம்பா) திய திஷ்டாந்த மும், எல்லாரது அனுபவமுமெனக் காட்டச் சொப் பனவுலகம் சுழுத்தி முதலிய திஷ்டாந்தமும் சொல் லப்படுகின்றன.

வினா:—ஜீவ (ஆத்ம) உபாதித்திரயங்க ளெவை?

விடை:—அவச்சின்னோபாதி, பிரதிபிம்போபாதி, அத்தியாசோபாதி யென்னு மூன்றுமாம்.

வினா:—அவச்சின்னோபாதி யென்பது யாது?

விடை:—பிரத்தியகாத்மாவிற்குச் சுழுத்தி ரூபா வித்தையே அவச்சின்னோபாதியாம்.

வினா:—பிரதிபிம்போபாதி யென்பது யாது?

விடை:—அந்த அவித்தையின் காரியமான புத்தி யில் அவ்வாத்மா பிரதிபிம்பித் திருப்பது பிரதிபிம்போ பாதியாம்.

வினா:—அத்தியாசோபாதி யென்பது யாது?

விடை:—அந்தப் புத்தியி லிருப்பதாய சுகதுக் காதிகளை அவ்வாத்மா புசிப்பதுபோன் றிருப்பது அத் தியாசோபாதியாம்.

வினா:—விஷயத் திரயங்க ளெவை?

விடை:—பிரீதி (விருப்பு) விஷயம், த்வேஷ (வெறுப்பு) விஷயம், உபேக்ஷா (உதாசீன) விஷய

மென்னு மூன்றுமாம். இவை முறையே இரத்தினாதிகள் தம்மைப் பெற்றவர்கட்கு பிரீதிவிஷயமாயும், பெருதவர்கட்குத் துவேஷ விஷயமாயும், விரத்தனுக்கு உபேட்சா விஷயமாயு மிருத்தல் காண்க. அவற்றுள், இரத்தினாதிகள் ஈஸ்வர சங்கற்பம் (சிருஷ்டி); விருப்பாதிய மூன்றும் ஜீவ சங்கற்பமாம்.

வினா:—ஜீவேஸ்வர சிருஷ்டிகளுக்கு வேறு திஷ்டாந்தம் யாது?

விடை:—ஈஸ்வரசிருஷ்டியால் வந்த ஒரு ஸ்திரீயின் மாம்ச பிண்டமான தேகம் ஒரேவிதமாக விருப்பினும் அது ஜீவர்களின் பேதபுத்தியால் பிதாவுக்குப் புத்திரியாயும், கணவனுக்கு மனைவியாயும், மகனுக்குத் தாயாயும், மாதுலனுக்கு மருகியாயும் வெகுவி (பே) தமா யிருப்பதறிக. இவ்வாறு ஈஸ்வர நிர்மிதமான ப்ரபஞ்சம் பாதக (துரோக) மில்லாம லேக ரூபமாயும், தன்னால் நீக்கக் கூடாததாயும், குருசாஸ்திர ரூபத்தால் மோக்ஷ சாதனமாயு மிருத்தலால் முமுட்சுக்களால் கொள்ளத்தக்கதும் ஜீவகற்பிதப் பிரபஞ்ச மனேகாகாரமாயும் மோக்ஷவிரோதியாயும் வெகுவித வனர்த்தங்களுக் கேதுவாயு மிருத்தலால் நிவிர்த்திக்க (நீக்க)த் தக்கதுமாம்.

ஜீவசிருஷ்டி வேறு; ஈஸ்வரசிருஷ்டி வேறு; ஜீவ சிருஷ்டி பந்தகாரணம்; ஈஸ்வரசிருஷ்டி மோக்ஷகாரணமென்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

கைவல்லிய நவநீதம்.

திகழ்ந்த வீசனுர் சிருட்டியுஞ் சீவனுர் சிருட்டியும் வெவ்வேறே, சகந்த னிற்பொது வீசனுர் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம், அகந்தை யாமபிமானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல்லாம், இகழ்ந்த சீவனுர் சிருட்டிக ளாகுங்கா ணீசனுர்செயலன்றே".

"மூவ ராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா முத்தி சாதனமாகும், சீவ னுர்செயுஞ் சிருட்டிகடங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும், தாவராதிக ணசித்திடிலொருவர்க்குஞ் சனனங்க ணசியாவாங், கோபமாதிக ணசித்திடிற் பந்தமாங் கொடும்பிற விகள்போமே".

வினு:—இன்னம் ஜீவசிருட்டி யெத்தனை விதம்?

விடை:—சாஸ்திரப்பிரபஞ்சம் அசாஸ்திரப் பிரபஞ்சமென் றிருவகைத்தாம்.

வினு:—சாஸ்திரப் பிரபஞ்சமென்பது யாது?

விடை:—ஜீவேஶ்வர (கூடஸ்த பிரஹ்ம) விசாரணை செய்வது சாஸ்திரப் பிரபஞ்சமாம்.

வினு:—அசாஸ்திரப் பிரபஞ்சம் எத்தனைவிதம்?

விடை:—தீவிரம், மந்தமென விருவகைத்தாம்.

வினு:—தீவிரப்பிரபஞ்ச மென்பது யாது?

விடை:—இராகத் துவேஷாதி துர்க் குணங்களைப் பற்றி நிற்பதாம்.

வினா:—மந்தப்பிரபஞ்ச மென்பது யாது?

விடை:—மனோகற்பித வர்ணாச்சிரம தர்மா (கர்மா)திகளிற் பற்றி நிற்பதாம்.

வினா:—வர்ணமென்பது யாது? அஃதெத்தனை விதம்?

விடை:—வர்ணமென்பது ஜாதி. அஃது ஈண்டுப் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென நால் வகைத்தாம்.

வினா:—பிராமண னென்பவன் யாவன்?

விடை:—பிராமணவர்ணத் துத்தமஸ்திரீயினிடத் துப் பிறந்து பிரஹ்ம தேஜஸை விரும்பி ஐந்தாவது அல்லது எட்டாவது அல்லது பதினொருவது வயதிலாவது உபநயனசம்ஸ்காரஞ்செய்யப்பெற்று, நாள்தோறு மஷ்டவித பூஜாக்கிரம யுக்தனுயும் வேதமோதல் ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், தானங் கொடுத்தல், வாங்குதலாகிய ஷட்வித கர்மயுக்தனுயும் அவற்றுள் ஓதல், யாகஞ் செய்தல், தானங் கொடுத்தலாகிய மூன்றையும் புண்ணியத்தை யுத்தேசித்தும் ஓதுவித்தல், யாகஞ் செய்வித்தல், தானம் வாங்குதலாகிய மூன்றையும் ஜீவனோபாயத்தை யுத்தேசித்தும் செய்துகொண்டு, பிரஹ்ம ஞான நிஷ்டாபரனு யிருப்பவனும். இவன் ஆபத்கால கர்மவிசேஷங்களுக்குத் தக்கவாறு ஸப்த விருத்திகளாற் ஜீவனஞ் செய்யலாம்.

வினா:—பிராமணனுக் குரிய அஷ்டவித பூஜாக் கிரமங்களெவை?

விடை:—ஆத்மா, சூரியன், சந்திரன், ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி யென்னுமெட்டையும் கிரமமாகப் பூஜித்தலாம். அவற்றுள் (1)பிறருக்குச் சத்கிரியைகளாற் றிருப்தி செய்வது ஆத்மபூஜை, (2-3) பிராத மத்தியான்ன சந்தியாகால கர்மங்கள் செய்வது சூரிய சந்திர பூஜை, (4)பீஜவாசனு ரூபமாயிருந்தெழா நின்ற மனதை யேகாக்கிரஞ் செய்வது ஆகாசபூஜை, (5) பிராணுகுதி கர்மஞ்செய்வது வாயுபூஜை, (6)பிராத சாயம் (காலைமாலை) ஸ்ரௌத ஸ்மார்த்தாக்கினி கர்மஞ் செய்வது அக்னிபூஜை, (7) ஸ்நான பானுதிக் கிரியை செய்வது அப்புபூஜை, (8) நிவேதனுன்ன போஜன கர்மஞ் செய்வது பிருதிவிபூஜையாம்.

வினா:— ஸ்ரௌத ஸ்மார்த்தாக்கினி யென்பன எவை?

விடை:— (1) யாகத்திற்குரிய தக்ஷிணுக்கினி, காருக பத்தியாக்கினி, ஆகவனீயாக்கினி யென்னு மூன்றும் ஸ்ரௌததாக்கினியாம். (2) ஸ்மிருதி யுக்தமாகச் செய்யும் ஔபா (உபா) ஸனுக்கினி ஸ்மார்த்தாக்கினியாம்.

வினா:—சப்த விருத்திகளெவை?

விடை:—ருதம், அமிருதம், மிர்தம், பிரமிர்தம், சத்தியாநிர்தம், குசீலம், சுனகவிருத்தி யென்னு மேழு

மாம். அவற்றுள், (1) ருதம்:—உஞ்சம் சிலமென விரு வகைத்தாம். கழனிகளிலும் மற்ற விடங்களிலும் சிந் திக் கிடக்கும் நென்மணிகளை யிரண்டு விரல்களாலும் பொறுக்குதல் உஞ்சமாம். நெற்கதிர்களைப் பொறுக்கு தல் சிலமாம். (2) அமிர்தமாவது யாசியாது வருவன வாம். (3) மிர்தமாவது யாசித்து வருவனவாம். (4) பிர மிர்தமாவது பயிரிடுதல் முதலியனவாம். (5) சத்தியா நிர்தமாவது வியாபாரஞ் செய்வதாம். (6) குசிலமாவது (கடன்கொடுத்து) வட்டிவாங்குவதாம். (7) சுனகவிரு த்தியாவது நாய்ப்பிழைப்பிற் கொத்துத் தீன மன துடன் யஜமானன் கட்டளைக்குட்பட்டுச் செய்யும் ஹீனகர்ம சேவகவிருத்தியாம்.

வினா:—க்ஷத்திரியனென்பவ னியாவன் ?

விடை:--க்ஷத்திரியவருணத் துத்தமஸ்திரீயினிட த்துப் பிறந்து பலத்தை விரும்பி ஆறாவது அல்லது பதினொன்றாவது அல்லது பன்னிரண்டாவது வயதிலா வது உபநயன சம்ஸ்காரஞ் செய்யப்பெற்று ஜீவனோ பாய நிமித்தம் பிரஜைகளிடத்தில் ஆறிலொருபங்கு அல்லது நாலிலொருபங்கு தீர்வைவாங்கி, இந்திராதிக ளின் கமனானுசார அஷ்டவித விரதானுஷ்டானத் தோ டு வேதமோதல், யாகஞ்செய்தல், தானங் கொடுத் தல், பூமியைக்காத்தல், யானைகுதிரை தேரூர்தல், படை க்கலம் பயிலலுமாகிய ஷட்விதகருமயுக்தனாயிருப்பவன் க்ஷத்திரியனாம்.

வினா:—க்ஷத்திரியனுக்குரிய விரதாஷ்டக மெவை?

விடை:—இந்திரன், சூரியன், வாயு, யமன், வருணன், சந்திரன், அக்கினி, பிருதிவியென்னு மிவர்களின் நடையே அஷ்டவித கமனமாம்; அவற்றை யனுசரித்து இராஜ்ய வியவகாரஞ் செய்வது க்ஷத்திரியனுக் குரிய விரதாஷ்டகமாம்.

வினா:—இந்திர விரதமாவது யாது?

விடை:—இந்திரன் ஆவணிமாதமுதல் நான்கு மாதம்வரையில் மழைகளை வருஷிப்பித்து ஜனங்களைச் சந்தோஷிப்பிக்கச் செய்வதுபோல, அரசனுந் தன் இராஜ்யங்களி லிருக்கும் பிரஜைகளுக்கு அபீஷ்டத்தைச்செய்து அவர்களைச் சந்தோஷிப்பிப்பதாம்.

வினா:—சூரியவிரதமாவது யாது?

விடை:—சூரியன் மார்கழிமாதமுதல் எட்டுமாதம் வரையில் தன்னுடைய கிரணங்களால் மிகவுந்தாபப் படுத்தாமல் ஜலத்தைச் சிறிது சிறிதாகக் கிரகிப்பது போல, அரசனும் ஜனங்களை வருத்தாமல் மாதந் தோறும் சிறிது சிறிதாகத் தீர்வையை வாங்கிக் கொள்வதாம்,

வினா:—வாயுவிரதமாவது யாது?

விடை:—வாயுவானது ஸகல ஜந்துக்களிடத்திலும் பிராண ரூபமாக வுள்ளே பிரவேசித்துச் சஞ்ச

ரிப்பதுபோல, அரசனும் வேற்றரசர் பட்டணங்களில் வேவுகாரர் (ஒற்றர்) களைப் பிரவேசிக்கச்செய்து அங்கு நிகழுஞ் சுபாசுப (அனுகூலப் பிரதிகூல) காரியங்களை யறிந்து தனக்குத் தெரிவிக்கும்படிச் சஞ்சரிக்கச் செய்வதும், தன் பட்டணத்தில் வேவுகாரரைப் போலத் தானும் பிரவேசித்து இராஜ்ய தந்திர நியாயா நியாயங் களை யறியும்பொருட்டுச் சஞ்சரிப்பதுமாம்.

வினா:—யமவிரதமாவது யாது?

விடை:—யமன் மக்களைத் தண்டனை செய்யும் போது சத்துருவென்றும் மித்துருவென்றும் பேதமாக நோக்காது யாவரையுஞ் சரியாகத் தண்டிப்பது போல, அரசனுங் குற்றஞ்செய்த பிரஜைகளைப்பாரபக்ஷ மின்றிச் சரியாகத் தண்டிப்பதாம்.

வினா:—வருணவிரதமாவது யாது?

விடை:—வருணன் றன்னாற் றண்டிக்கத் தக்க பாவஞ் செய்தவர்களைப் பாசங்களாற் கட்டுவதுபோல, அரசனுந் துஷ்டர்களைத் தயையில்லாமற் சிறைச்சாலை யிற் பந்திப்பதாம்.

வினா:—சந்திர விரதமாவது யாது?

விடை:—பூரண சந்திரன் மனிதர்கள் தன்னைப் பார்த்துச் சந்தோஷிக்கும்படி சீதளமாயும் பிரகாச மாயுமிருப்பதுபோல, அரசனும் மந்திரிமுதலிய பரி

ஜனங்கள் தன்னைப் பார்த்துச் சந்தோஷிக்கும்படி தயையுள்ளவனாயும் பூஷணாலங்கிருதனாயு மிருப்பதாம்.

வினா:—அக்கினி விரதமாவது யாது?

விடை:—அக்கினி உஷ்ணசொரூபமா யிரமின்றிய திரண காஷ்டாதிகளைத் தஹித்துக்கொண் டிருப்பது போல, அரசனும் சோம்ப லின்றிப் பிரதாப முள்ளவனாய்த் துஷ்டர்களையுந் தனக்கபகாரஞ் செய்யு மந்திரி முதலியவர்களையுஞ் சிக்ஷித்துக்கொண் டிருப்பதாம்.

வினா:—பிருதிவி விரதமாவது யாது?

விடை:—பிருதிவியானது சராசரரூபமான சர்வப் பிராணிகளையு முயர்வு தாழ்வின்றிச் சரியாகத் தாங்கிக் கொண்டிருப்பது போல, அரசனும் பண்டித பாமரரியாவர்களையும் பேதமின்றி யிரட்சித்துக்கொண் டிருப்பதாம்.

வினா:—வைசிய னென்பவன் யாவன்?

விடை:—வைசியகுலத் துத்தம ஸ்திரீயினிடத்துப் பிறந்து பொருளைவிரும்பி யெட்டாவது வயதிலாவது அல்லது பன்னிரண்டாவது வயதிலாவது அல்லது இருபத்தினாலாவது வயதிலாவது உபநயன சம்ஸ்காரஞ் செய்யப்பெற்று வேதமோதல், யாகஞ்செய்தல், தானங் கொடுத்தல், வியாபாரஞ் செய்தல், பயிரிடுதல், பசுக் காத்தல், வட்டிவாங்குதலென்னும் ஸப்தவித கருமமுடையவனாம்.

வினா:—வைசியர்கள் எத்தனை வகைப்படுவர்?

விடை:—அவர் தனவைசியர், பூவைசியர், கோவைசியரென மூவகைப்படுவர்; அவர்களுள், வியாபாரஞ் செய்பவர் தனவைசியர்; உழுதுபயிரிடுபவர் பூவைசியர், பசுக்களை யிரக்ஷிப்போர் கோவைசியர்.

வினா:—சூத்திரனென்பவன் யாவன்?

விடை:—சூத்திரவருணத் துத்தமஸ்திரீயினிடத்துப்பிறந்து மூவகைவைசியர்க்கு முரிய வாணிபஞ் செய்து பொருளீட்டல், உழுது பயிரிடுதல், பசுக்காத்தல், இதிகாச புராணங்களை யோதல், வேதத்தின் பொருளைக்கேட்டல், பிதுர்க்கருமஞ்செய்தல், தானங் கொடுத்தல், முதல் மூன்று வருணத்தார்க்கு மனுகூலமான தொழில்களைச் செய்தலென்னு மஷ்டவித கருமமுடையவனும்.

வினா:—சூத்திர ரெத்தனை வகைப்படுவர்?

விடை:—அவர் சற்சூத்திரர் துர்ச்சூத்திர ரென இருவகைப்படுவர். அவர்களுள், (1) சூத்திரவருணத் துத்தம ஸ்திரீயினிடத்துப் பிறந்து வேதம் விலக்கிய (நிஷித்த)கர்மங்களைச் செய்யாது ஸதா விகித(விதிக்கப்பட்ட உத்தம) கர்ம சம்ஸ்காரத்துடனே கூடினவன் சற்சூத்திரன்.(2)சூத்திர வருணத்து நிகிர்ஷ்ட ஸ்திரீயினிடத்துப்பிறந்து வேதத்தில் விதிக்கப்பட்ட உத்தம கர்ம சம்ஸ்கார மின்றி விலக்கப்பட்ட (நிகிர்ஷ்ட) கர்

மங்களாகிய துஷ்டதேவதாராதனை மதுமாம்ஸ நிவேதன பானபக்ஷணாதி (பஞ்சமாபாதகங்) களைச் செய்பவன் துர்ச்சூத்திரன். (இவனையே பஞ்சமனென்றும் ஐந்தாவது வருணத்தவனென்றுங் கூறுவர்).

வினா:—ஆச்சிரமமென்பது யாது? அஃதெத்தனை வகை?

விடை:—ஆச்சிரமமாவது நிலை; அது பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாச மென நால் வகைத்தாம்.

வினா:—பிரமசரியாச்சிரமமாவது யாது?

விடை:—மேற்கூறியவாறு பிராமணாதி வருணத்திற் பிறந்து கிரமமாக வுபநயனாதி சம்ஸ்காரங்கள் செய்யப்பெற்று, சகலசற்குணங்களோடுங்கூடி, நல்லாசிரியரை யடைந்து, விதிப்படி வழிபட்டுப் பன்னிரண்டு வருஷகாலம் குருகுலவாசஞ்செய்து, வித்தியா(வேதா)ப்பியாசஞ் செய்து, விரதங்காத்து, முறையே சணப்பநார் கறுப்புமான்றோல் முதலியவற்றாற் செய்யப்பட்ட வஸ்திரங்களை (அரை மேல்)உத்திரீயங்களாகவும் பஞ்சு சணப்பநூல் முதலியவற்றாற் றிரிக்கப்பட்ட முப்புரிவடத்தைத்தோளில் யக்ஞோபவீதமாகவும் வில்வம் பலா சாதிகளின் கிளையைத் தன்னடிமுதற் சிரசளவாகநறுக்கித் தண்டமாகவும் தரித்து, சுரைக்குடுக்கை முதலிய கமண்டல தாரியாய், சந்தியா(திரிகால)வந்தன

ஓம கர்மாதியுக்தனாய், பிராமணவருணத்தனாகில் பவதி பிக்ஷாந்தேஹி (அம்மா பிக்ஷைகொடு) என்றும், க்ஷத்திரிய வருணத்தனாகில் "பிக்ஷாம்பவதி தேஹி(பிக்ஷை அம்மா கொடு") என்றும்,வைசிய வருணத்தனாகில்"தேஹிபிக்ஷாம் பவதி (கொடு பிக்ஷை அம்மா) என்றும், சூத்திர வருணத்தனாகி லிவற்றுளேதேனு மொன்றைக் கூறிப் பிக்ஷை கேட்பவனாய், வாங்கிய பிக்ஷையைக் குருவிற்கு நிவேதனஞ்செய்து அவர்னுமதி பெற்றுப் பின் நியமமாயிருந்து மிருது (சத்துவ)போஜனஞ்செய்பவனாய், அஷ்டவித மைதுனமு மின்றிக் குருவை விட்டு நீங்காது நல்லொழுக்க முடையனா யிருப்பதாம்.

வினா:—அஷ்டவித மைதுனங்களவை?

விடை:—தரிசனம், ஸ்பரிசனம்,கேளி,கீர்த்தனம், சங்கற்பம், குஹ்ய பாஷணம், அத்தியவசாயம், கிரியா நிவிர்த்தி யென்னு மெட்டுமாம். அவை முறையே (1) காமவிச்சையால் ஸ்திரீகளைப் பார்ப்பது, (2) சரீரத்தைத் தீண்டுவது, (3) விளையாடுவது, (4) புகழ்வது, (5)நினைப்பது, (6)இரகசியமாய்ப்பேசுவது, (7)ஆலிங்கனம்பண்ணுவது, (8)புணருவதுவென்னு மெட்டுமாம்.

வினா:—இந்தப் பிரமசரிய மெத்தனை வகைப்படும்?

விடை:—அது காலபேதத்தாற் பௌதிகப் பிரஹ்மசரியம் நைட்டிகப் பிரஹ்மசரியமென விருவகைத்தாம்.

வினா:—பௌதிகப் பிரமசரிய மென்பது யாது?

விடை:—பாலிய வயது முதல் விவாககாலம் வரையும் விரத நியமத்துடன் றுறவியா யிருப்பதாம்.

வினா:—நைட்டிகப் பிரமசரியமென்பது யாது?

விடை:—மரணபரியந்தம் விரதநியமத்துடன் றுறவியா யிருப்பதாம்.

வினா:—கிருகஸ்தாச்சிரம மாவது யாது?

விடை:—பிரமசாரியாயிருந்து ஆசிரியனனுக்ஞை பெற்றுத் தன் வருணத்திற் பிறந்து நற்குண நற்செய்கையுள்ள ஓர் கன்னிகையைப் பிராம்யாதி யஷ்டவித விவாகங்களுள் தன் வருணத்திற் கேற்ற சிறந்ததோ அதைச்செய்து, கிருகத்திலிருந்து ஓதுவித்தல் முதலிய சற்கருமங்களாற் பொருளீட்டித் † தனது வழிபடு தெய்வங்கள், பிதிர்க்கள், அதிதிகள், பந்துக்கள், தன்னாத்மாவென்னு மிவர்களுக்கு அன்னத்தாற் றிருப்திசெய்வித்து, பிரஹ்ம யக்ஞமுதலிய பஞ்ச யக்ஞங்களைச்செய்து, பிரமசரியாதி மற்றை மூன்றாச்சிரமிகளையும் பாதுகாத்து, மனைவி மாதவிடா யானதுமுதல் நீக்கத்தக்க மூன்று தினங்களையும் அமாவாசை ஏகாதசி முதலிய தினங்களையும் நீக்கி மற்றைத் தினங்களி னிரவில் புத்திரனை யபேக்ஷித்து மனைவியைப் புணர்வ

† "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை" என்பது திருக்குறள்.

தோடு, இருஷிகடன் தேவகடன் பிதுர்க்கடனென்னு மூன்றையும் முறையே வேதமோதல் ஓமஞ் செய்தல் பிள்ளை பெறுத லென்னு மிவற்றாற் றீர்த்துச் சன்னியாசியைப்போ லொன்றிலும் பற்றின்றி ஆத்மத்தியான பரனாய்ச் சந்துஷ்டனா யிருத்தலாம்.

வினா:—கிருஹஸ்தனுக் குரிய அஷ்டவித விவாகங்க ளெவை?

விடை:—பிராம்மியம், தெய்வம், ஆருஷம், பிராஜாபத்தியம், ஆசுரம், காந்தர்வம், இராக்ஷஸம், பைசாசமென்னு மெட்டுமாம்.

வினா:—பிராம்ம்ய விவாகமென்பது யாது?

விடை:—வேதமோதி நல்லொழுக்க முள்ளவனாயுள்ள பிரமசாரியைத் தானாகவேயழைத்து அவனை நூதன வஸ்திரங்களா லலங்கரித்து அவனுக்குத் தன் கன்னிகையை வஸ்திராபரணா லங்காரத்துடன் தானஞ் செய்வதாம்.

வினா:—தெய்வ விவாக மென்பது யாது?

விடை:—சோதிஷ்டோமாதி யக்ஞத்திற் றனக்குப் புரோகிதனாக விருப்பவனுக்குத் தன்பெண்ணை யலங்கரித்துக் கொடுப்பதாம்.

வினா:—ஆருஷ விவாக மென்பது யாது?

விடை:— தான் செய்யவேண்டிய யாகாதி கர்மத்துக்காக ஓர்ரிஷபம், ஓர் பசு, அல்லது இரண்டு ரிஷபமிரண்டுபசு வாங்கிக் கொண்டு தன் கன்னிகையைக் கொடுப்பதாம்.

வினா:—பிராஜாபத்திய விவாகமென்பது யாது?

விடை:—பிரமசாரியை யழைப்பித்துப் பூஜித்துத் தன் கன்னிகையைத் தானம் பண்ணும்போது நீங்களிருவருஞ் சற்கருமங்களைச் செய்யுங்களென்று சொல்லிக் கொடுப்பதாம்.

வினா:—ஆசுரவிவாக மென்பது யாது?

விடை:—தகப்பன் விரும்பும் பணத்தைக் கொடுத்துப் பெண்ணைப் பூஷணங்களா லலங்கரித்து விவாகஞ் செய்து கொள்வதாம்.

வினா:—காந்தர்வ விவாகமென்பது யாது?

விடை:—கன்னிகையும் புருஷனு மொருவருக்கொருவர் விதிவலியால் தாமே மனமொத்துச் சேருதலாம்.

வினா:—இராக்ஷஸ விவாகமென்பது யாது?

விடை:—கன்னிகையின் சுற்றத்தா ருடன்படாவிடத்து அவரைப் போர்முகத்து வென்று அக் கன்னிகையைக் கைப்பற்றிக் கொள்வதாம்.

வினா:—பைஶாச விவாகமென்பது யாது?

விடை:—கன்னிகை துயிலும்போ தாவது மதுவுண்டு மயங்கிக் கிடக்கும்போ தாவது பித்துக்கொண்டிருக்கும்போ தாவது அவளைப் புணர்வதாம்.

மேற்சொன்னவற்றுள், இராக்ஷஸ பைசாசவிவாகமிரண்டும் அதர்மமாம்.

வினா:—கிரஹஸ்தனுக்குரிய பஞ்ச யக்ஞங்களவை?

விடை:—பிரஹ்ம யக்ஞம், பிதுர்யக்ஞம், தேவ யக்ஞம், பூதயக்ஞம், மனுடயக்ஞ மென்னு மைந்துமாம். அவற்றுள் (1) பிரஹ்ம யக்ஞமாவது வேதாத்தியயனஞ் செய்தல், (2) பிதுர்யக்ஞமாவது பிதுர்க்கள் திருப்தி யடையும்படி அன்னத்தினாலாவது ஜல தர்ப்பணத்தினாலாவது சிரார்த்தஞ்செய்வது, (3) தேவ யக்ஞமாவது தேவதைகளைக் குறித் தக்கினியிலோமஞ்செய்வது, (4) பூதயக்ஞமாவது வாயச (காக) பலிமுதலானவை வைப்பது, (5) மனுடயக்ஞமாவது அதிதிகளுக் கன்னமிடுதலாம். இவற்றின் விரிவை மனு தரும சாஸ்திரம் மூன்றாவது அத்தியாயம் கிருகஸ்தாச்சிரமதர்மஞ் சொல்லு மிடத்திற் காண்க.

வினா:—வானப்பிரஸ்தாச்சிரமமாவது யாது?

விடை:—புத்திரோற்பத்தி யுண்டான பின்னர்த் தன் மனைவியைப் புத்திரனிடத்தி லொப்பு வித்தாவது அல்லது மனைவிக்குத் தன்னுடன் கூடவரவிஷ்ட மிருந்தால் அவளையழைத்துக் கொண்டாவது அக்கினிகோத்திரத்தை (அக்கினியை) யும் சுருக்குச் சுருவ (நெய்த்துடுப்பு) முதலிய பாத்திரங்களையு மெடுத்துக்கொண்டு வனத்திற் சென்று மான்றோல் மரவுரி முதலிய வற்றைத் தரித்துச் சடை மீசை தாடி நகங்களை வளர்த்து

ஊரிலுண்ணத்தக்க உணவுகளை விட்டுக் காட்டிலுள்ள காய்கனி கிழங்கு முதலியவற்றை யுண்டு தழைகளினாற் செய்யப்பட்ட குடிசைகளிலே வாசஞ்செய்து சாலி (நென்மணியாகிய) அன்னம் பல காய் கிழங்கு கனி முதலியவற்றாற் கிருகஸ்தாச் சிரமத்துக்குச் சொல்லிய பஞ்ச யக்ஞங்களைச் செய்து காட்டிலுதிர்ந்த பரிசுத்தமான சம்பாநென்மணிகளைப் பொறுக்கி யவற்றி னரிசிகளாற் புரோடாசம் சருக்க (யாகத்திற்குரிய அடையன்னாதிக) ளுண்டுபண்ணி யவற்றைத் தேவர்களுக் கக்கினியி லோமஞ்செய்து சீதோஷ்ண—பசிதாகாதிகளிற் சமபுத்தியுடையவனாய்ச் சிதேந்திரிய (நிர்விஷய) னாய் வேதசிரசுகளான உபநிஷத்துக்களையே சதா சோம்பலின்றி யத்தியயனஞ் செய்பவனாய்த் தபோநிஷ்டனாய்த் தன்னாயுளில் மூன்று பாகத்தை வனத்திற் கழித்துவிட்டு நான்காவதுபாகத்திற் சன்னியாசம் செய்துகொள்ளச் சித்தனா யிருப்பதாம். இதனை மனுதருமசாஸ்திரம் ஆறாவதத்தியாயம் வானப் பிரஸ்தாச்சிரம தர்மஞ்சொல்லு மிடத்திற் காண்க.

வினா:—சந்யாசாச்சிரமமாவது யாது ?

விடை:—சந்நியாசத்துக் கேதுவான மந்தம், தீவிரம், தீவிரதரமென்னு மூவித வைராக்கியங்களுள், மந்த வைராக்கியத்தால் சன்னியாசஞ் சித்தியாது; மற்றைப தீவிரம் தீவிரதரமென்னும் வைராக்கியங்க

ளால் யசுர் வேதத்திற் சொல்லிய பிரகாரம் சகல பொருள்களையும் தக்ஷிணையா (தானமா)க வுடைய பிரஜாபதி யிஷ்டியைச் (பிரமயாகத்தைச்) செய்து அக்கினியை யாத்ம சமாரோபணஞ் செய்து (ஆத்மாவினிடத்தில் நன்றாகச் சமர்ப்பித்து) கிருகத்தினின்றும் நீங்கிச் " சர்வ ஸ்தமய சர்வஸ்தோகம் (நான் சகல மாயாப் பிரபஞ்சத்தையும் விடுகிறேன் என்றாற் சகலமும் விடப்பட்டன)" என்னும் பிரைஷ மந்திரோச்சாரண பூர்வகமாகச் சன்னியாசம் செய்துகொண்டு பரிசுத்தமான தண்ட கமண்டல தருப்பை காஷாயங்களைத் தரித்துப் பிரஹ்ம நிஷ்டரான சற்குருவை யடைந்து மகாவாக்கியப் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிஷ்டைகூடி ஸகல கர்த்தவ்வியங்களினும் கிருத கிருத்தியனாயும் மைத்திரியாதி சற்குணயுக்தனாயும் சுவர்ணம் வெள்ளி தாம்பிராதிய லோக பாத்திரங்களை விடுத்து தேங்காய் சுரைக்காய் மரம் தொன்னை மண் முதலிய பாத்திரங்களி லேதாகிலு மொன்றி லேககாலத்திற் பிக்ஷை வாங்கிப் புசித்து ஜிதேந்திரியனாயும் ஏகாங்கியாயு மிருப்பதாம்.

வினா:—யதி ஏகாங்கியா யிருக்கவேண்டு மென்பதேதனால்?

விடை:—ஏகனாகவிருக்கில் பிக்ஷுவாம்; இருவர் சேர்ந்தால் மிதுன (சங்க) மாம்; மூவர்சேர்ந்தால் கிராம

பாம், அதற்கு மேற்பட்டால் நகரமாம். ஆதலின், இவற்றுள், பிக்ஷுவாகவிருத்தலன்றி மிதுனங் கிராமம் நகரமாகவிருந்தால் ராஜசம்பந்தமான வார்த்தைகளும்சிநேகம் கோட்சொல்லுதல் மார்ச்சரிய முதலியனவு முண்டாகும். அதனால் யதியானவன் றன்றருமத்தினின்றும் நழுவிவிடுவன். ஆதலால் யதி ஏகாங்கியா யிருக்கவேண்டும். அவ்வாறிருந்தால் தன் தருமத்தினின்றும்நழுவான்.

வினா:—இந்தச் சந்யாச மெத்தனை வகைப்படும்?

விடை:—குடீசகம், வெகூதகம், அம்சம், பரமாம்சமென நான்குவகைப்படும்.

வினா:—குடீசக சந்யாச மென்பது யாது?

விடை:—(குடிசையென்பது சிறுவீடு, அக மென்பது இடம். அதில் வசிப்பது குடீசக சந்யாசமாம்). தேசயாத்திரை செய்தற்குச் சத்தியின்றி யொரோரிடத்திற் புசித்து ஊர்ப் பொதுவிலுள்ள (குடிசையாகிய) பன்னசாலையில் வசிப்பதாம்.

வினா:—வெகூதக சந்யாசமென்பது யாது?

விடை:— (வெகுவென்பது பல, உதக மென்பது பூமி அல்லது ஜலமாம்)தான் இருப்பது இன்னஊர்இன்ன விடமென்னும் நியமமின்றிக் கிராமத்திலொருநாள், புரத்திலிரண்டுநாள், பட்டணத்தில் மூன்றுநாள், நகரத்தில் ஐந்து நாளாக வசிப்பதன்றி யதற்கதிகப்படவசியாதுவருஷாகாலங்களில் சுத்தப்பிரதேசமானமடாலயங்க

ளில் நான்குமாதம் வசித்து மற்றைக் காலங்களில் காடு, மலை, குகை, வனமுதலிய விடங்களில் வசித்துப் பற்பல பூமிகளிலுள்ள பற்பல ஜலாதிகளைப் புசித்துப் பயத்தினு லோரிடத்துந் தங்காமற் சரிக்குமான்போ லெங்கும் பற்று சஞ்சரிப்பதாம்.

வினு:—அம்ச சந்யாசமென்பது யாது?

விடை:—மேற்சொன்ன ஆசாரத்துடன் அதி தீவிரனுக விருந்தும் பிரஹ்மலோக விச்சையால் முமுட்சுத்துவ மின்றி யிருப்பதாம்.

வினு:—பரமாம்ச சந்யாச மென்பது யாது?

விடை:—நிஷ்காம புண்யபுஞ்ச (கூட்டங்களின்) பரிபாக பலமாகிய சித்த சுத்தியால் முமுட்சுத்து வத்தை யடைந்திருப்பதாம்.

வினு:—இந்தச் சந்யாசங்களுக் கேது வெவை?

விடை:—முன் சொன்ன வைராக்கியங்களே.

வினு:—எவ்வெவ் வைராக்யத்தினு லெவ்வச் சந் யாச முண்டாம்?

விடை:—தீவிர வைராக்கியத்தினுல் குடீசகம் வெகூதக மென்னுஞ் சந்யாசங்களும், தீவிரதர வைராக் கியத்தால் அம்சம், பரமாம்ச மென்னுஞ் சந்யாசங்களு முண்டாம்.

வினு:—இந் நான்குவித சந்யாசங்களுக்கும் பல னியாது?

விடை:—குடீசக வெகூதக ரென்னு மிருவரும் மறுமைப் பயனைக்குறித்த கர்மசந்யாசிக ளாகையால் அவர்களுக்கு மறுமையில் சுவர்க்கலோகப் பிராப்தியும், அம்சனுக்குப் பிரஹ்மலோக விச்சை யிருப்பதாற் பிரஹ்மலோகப் பிராப்தியும், பரமாம்சனுக்கு லோகாந்தர விச்சையின்மையா லிந்த லோகத்திற்றுனே சற்குருவை யடைந்து சீக்கிரத்தில் ஞானத்துவாரா மோக்ஷப் பிராப்தியும் பலனும்.

வினு:—இந்தப் பரமாம்ச சந்யாச மெத்தனை விதம்?

விடை:—விவிதிஷா சந்யாசம், வித்வத் சந்யாச மென விருவகைத்தாம்.

வினு:—விவிதிஷா சந்யாசமென்பது யாது?

விடை:—ஞானசப்தபூமிகளுள், சுபேச்சை விசாரணை தனுமானசி யென்னு மூன்றுபூமிகளையு மடைந்து வேத்தும் (அறியத்தக்கதை யறியவேண்டும் என்னும்) இச்சையாற் செய்துகொள்ளுஞ் சந்யாசமாம். இதனைச் ஜிஞ்ஞாசு சந்யாசமென்றுங் கூறுவர்.

வினு:—விவிதிஷா சந்யாச மெத்தனை வகைப்படும்?

விடை:—இது மானச ரூபம், ஆச்சிரம ரூபமென் றிருவகைத்தாம்.

வினு:—மானசரூப சந்யாசமாவது யாது?

விடை:—இனி ஜன்மாதி யனர்த்தத்தைத் தரத்தக்க சகல கன்மங்களையும் மனதினுல் விட்டுவிடுதலாம்.

வினா:—ஆச்சிரமரூப சந்யாசமாவது யாது?

விடை:—மந்திரோச்சாரண பூர்வகமாகத் தண்ட கமண்டலாதி தாரணங்களை யேற்றுக் கொள்வதாம். இவற்றுள், முந்தின மானச சந்யாசத்தில் அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரோடு ஸ்திரீகளுக்கும் அதிகார முண்டு.

வினா:—பாஹ்ய சந்யாசத்திற்குப் பிரதிபந்த முள்ளவர்கள் செய்யத்தக்கது யாது?

விடை:—பிரஹ்மசாரி, கிரஹஸ்தர், வானப்பிரஸ்தர்கட்குப் பிரசித்தமான பாஹ்ய சந்யாசம் செய்து கொள்வதில் யாதானுமோர் நிமித்தத்தாற் பிரதிபந்த மிருந்தா லவர்கள் தமதாச்ரம தர்மங்களை விடாமல் ஞானசாதனமான மானசசந்யாசஞ் செய்துகொள்ள லாம்; விரோதமில்லை.

வினா:—ஸ்திரீகளுக்கு மானச சந்யாசத்திலதி கார முண்டென்பதற்குப் பிரமாணம் யாது?

விடை:—ஆத்மஞானத்தை யடைந்திருந்த மைத்திரேயி, சூடாலை முதலிய பெண்மணிகளின் சரித்திரங்களேயாம்.

வினா:—ஸ்திரீகளுக்கு மானச சந்யாசத்திலன்றிப் பிரைஷ மந்திரோச்சாரண பூர்வகமாயுள்ள தண்ட கமண்டலாதி தாரண வாச்சிரம ரூபமாகிய பாஹ்ய சந்யாசத்தி லதிகார மின்றோ?

விடை:—மைத்திரேயி, சுடாலேமுதலியவர்களைப் போல் விவாகம் பண்ணிக்கொண்டு தமது நாயகரிடத் துள்ள ஸ்திரீகளுக்கு மாநசசந்யாசத்தில்மாத்திர மதிகாரமுண்டு. விவாகமின்றிய கன்னிகைகளுக்கும் (நாயகனிழந்த) விதந்துகளுக்குஞ் சுருதியிற் பிட்சுகிபென்னும் வாக்கிய மிருத்தலால் மந்திரோச்சாரண பூர்வக தண்ட கமண்டலாதி தாரண வாசிரமரூபமாகிய விவிதிஷா சந்யாசத்திலு மதிகாரமுண்டு.

வினா:—ஸ்திரீகளுக்கு ஆச்சிரம ரூபமாகிய பாஹ்யசந்யாச முண்டென் றெங்கே சொல்லபபட்டிருக்கின்றது?

விடை:—திரிதண்டாதி தாரண வாச்சிரமிகளாய் ஈஷணாத்திரயத் தியாகம், பிக்ஷான்ன போஜனம், வேதாந்த சிரவணம், ஏகாந்தத்திருந்து பிரஹ்மத் தியானஞ் செய்தலாகிய சந்யாசம் சுலபமாக ஸ்திரீகளுககு முண்டென்று மோக்ஷதருமம், சாரீரக பாஷ்யம், ஜீவன் முத்தி விவேகம், மனுதர்ம சாஸ்திர முதலியவற்றிற் சொல்லி யிருக்கின்றமை காண்க

வினா:—விவிதிஷா சந்யாசத்திற் கேது யாது?

விடை:—மிகுந்த பசியுள்ளவனுக்கு மற்றொன்றிலும் விருப்பமின்றி யன்னத்தில் மாத்திரம் விருப்பமுண்டாதல்போல ஜன்மந் துக்கமென் றறிந்தவனுக்கு ஜன்மஹேதுக்களாகிய கர்மங்களி லிச்சை யின்றி ஜன்ம

நிவிருத்தியை யபேக்ஷித்துத் தீவிரமாக வுதயமாகின்ற சிரவணாதி சாதனசகித ஞானவிச்சையாகிய விவிதிஷை (வித்தையினிச்சை) யே ஹேதுவாம்.

வினா:—விவிதிஷா சந்நியாசத்திற்குப் பலனியாது?

விடை:—அவதிபரியந்தமான தத்துவ ஞானத்தாற் சஞ்சிதத்தோடு ஆகாமிய கன்மமும் நீங்கிவிடுதலாம்.

வினா:—வித்வத்சந்யாச மென்பது யாது?

விடை:—சிரவண மனன நிதித்தியாசனங்களின் வலியாற் பிரஹ்மத்தைத் தன் சொரூபமாக வறிந்த ஞானனந்தரம் (வாசனாக்ஷய மனோநாச தத்துவ ஞானங்களின் அப்பியாச வாயிலாகச்) ஜீவன்முக்தி சுகத்தை யபேக்ஷித்துச் செய்துகொள்வதாகிய பரமாம்ஸ சந்யாசமாம். இதனை ஞானவான் சந்யாசமென்றுங் கூறுவர்.

வினா:—வித்வத் சந்யாசத்திற்கு ஹேது வென்னை?

விடை:—அவதிபரியந்தமுள்ள ஞானமாகிய வித்வத்துவமாம்.

வினா:—வித்வத் சந்யாசத்திற்குப் பலனியாது?

விடை:—ஜீவன்முக்தி விலக்ஷ ணானந்தத்தின் பிராப்தியாம். இங்ஙனம் குடீசகம் வெகூதகம் அம்சம் பரமாம்சமென்னும் நான்கு வித சந்யாசங்கள் சொல்லப்பட்டன.

வினா:—வேறு மூன்றுவித சந்யாசங்க ளெவை?

விடை:—ஆதுர சந்யாசம், கர்ம சந்யாசம், கிரம சந்யாசமென்னு மூன்றுமாம்.

வினா:—ஆதுரசந்யாச மென்பது யாது?

விடை:—ஆதுரமென்பது நோய் முதலியன. தேக வியாதியதிகரித்த கலத்திலாவது மரணசமீப காலத்திலாவது பிரஷை மந்திரோச்சாரண பூர்வகமாகச் சந்யாசம் வாங்கிக்கொள்வதாம். இது விதியாகக்கூறும் சந்யாசத்தின் கருமக்குறைவுள்ளதாம். இதனை நிமித்த சந்யாசமென்றுங் கூறுவர்.

வினா:—கர்மசந்யாச மென்பது யாது?

விடை:—பிரமசாரி யாச்சிரமத்திலிருந்து அதன் விரதத்தை முடித்துக் கிருகஸ்தாச்சிரமத்தை யடைந்து பின்னர் வானப்பிரஸ்தாச்சிரமத்தை யடைந்து வைராக்கிய மில்லாவிடினும் ஆச்சிரமக் கிரமானு சாரமாய் மந்திரோச்சாரண பூர்வகமாகச் சந்யாசம் வாங்கிக் கொள்வதாம்.

வினா:—கிரம சந்யாசமென்பது யாது?

விடை:—அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரஹ்மமே நித்தியம்; மற்றைநாமரூபங்க ளியாவு மநித்தியமென நிச்சயித்துக் கிரமமாகச் சந்யாசம் வாங்கிக் கொள்வதாம். இதனை அநிமித்த சந்யாச மென்றுங் கூறுவர்.

இங்ஙனம் தீவிர மந்தபேதங்களுடன் கூடிய (ஜீவ சங்கற்பரூப) அசாஸ்திரப் பிரபஞ்சத்தி னிரண்டாவ தமிசமான மந்தப் பிரபஞ்சத்தி லுண்டான வருணாச் சிரம தர்மங்கள் சொல்லப்பட்டன. இந்த உபய ரூப அசாஸ்திரப் பிரபஞ்சமும் ஆத்மதரிசன(ஞான)த்திற்கு விரோதிகளாதலின் ஜிஞ்ஞாசுக்கள் பிரமாப்பியாசத் திற்கு முன்னமே விடத்தக்கனவாம்; சாஸ்திரப்பிரபஞ்ச மும் ஆத்ம ஞானத்திற்குப் பின்னர் ஜீவன் முக்தி யானந்தத்தின் பொருட்டு விடத்தக்கதாம்.

வினா:—ஜீவ (ஆத்ம) ஸப்தாவஸ்தைக ளெவை?

விடை:—அஞ்ஞானம், ஆவரணம், விட்சேபம், பரோக்ஷஞானம், அபரோக்ஷ ஞானம், சோக (துக்க) நிவிருத்தி, நிரங்குச திருப்தி (தடையற்ற வானந்தம்) என்னு மேழுமாம்.

வினா:—அஞ்ஞானமாவது யாது?

விடை:—கற்பிதவிசேஷ சிதாபாச ஜீவன் சுருதி விசாரத்திற்கு முன்னர்த் தன தெதார்த்த (பிரத்ய காத்ம சுயம்பிரகாச) நிலையை யறியா திருப்பதாம்.

வினா:—ஆவரணமாவது யாது?

விடை:—பின்னெவ்வொருவேளைச் சிதாத்மப் பிர சங்கம்வருமிடத்துப்,பிரத்யகாத்மாநாஸ்தி(இல்லை)இருந் தாற் றோன்றுதா, நபாதி(விளங்கவில்லை) யென்னு மிரு வகை மறைப்பே அஞ்ஞான காரியமான ஆவரணமாம்.

வினா:—விக்ஷேபமாவது யாது?

விடை:—கர்மத்தைச் செய்யுங் கர்த்தாவும் பலனை யனுபவிக்கும் போக்தாவுந் தானெனவே நினைத்து ஸ்தூலவுடம்பைப்பற்றி (நானென்றபிமானித்து) நிற்றலாம்.

வினா:—பரோக்ஷஞானமாவது யாது?

விடை:—பின் ஆத்மாவின் ஸத்தை (இருப்பை) ச் சொல்லும் பிரபல சுருதி குரு வாக்கிய (விசுவாச)த்தால் பிரத்யகாத்மா வுண்டெனத் தெளி (அறி) தலாம். இதனால் முதலாவதான அசத்தா (இல்லையென்னுமா) வரண நிவிருத்தி யுண்டாம்.

வினா:—அபரோக்ஷ ஞானமாவது யாது?

விடை:—பின் நீயே பிரஹ்மமென்று சொல்லும வேதாந்தவாக்கிய விசாரப் பிரவாக வசத்தாற் பிரத்யகாத்மா நானென் றறிவதாம். இதனால் இரண்டாவதான அபாநு (விளங்கவில்லை யென்னுமா) வரண நிவிருத்தி யுண்டாம்.

வினா:—சோகநிவிருத்தியாவது யாது?

விடை:—பிரத்யகாத்ம சாக்ஷாத்கார மடைந்ததற்கு மேல் நான் கர்மகர்த்திரு கர்மபலபோக்திரு வென்னுஞ் சிதாபாசரூபமான துக்க (பிராந்தி) பரித்தியாகமாம்.

வினா:—நிரங்குச திருப்தியாவது யாது?

விடை:—செய்யத்தக்க கிருத்திய மெல்லாஞ் செய்யப்பட்டன, அடையத்தக்க பலனனைத்து மடையப்பட்டன வென்னுஞ் சகசசந்தோஷமுண்டா யமைதி பெற் றிருத்தலாம். இந்தச் சோக நிவிருத்தி நிரங்குச திருப்தியாகிய விரண்டும் அபரோக்ஷஞான பலனாம்.

வினா:—இப்படி ஜீவனுக் (ஆத்மாவிற்) கேழவஸ்தைகளுண்டென்பதற்குத் திருஷ்டாந்த மியாது?

விடை:—தச(பத்து) புருஷர்க ளொன்றாகக் கூடி யோராற்றைக்கடந்து கரையேறித் தம்மையெண்ணுஞ் சமயத்தில்அவரு ளொன்பதுபுருஷரை யெண்ணுவா னொருவன்றன்னைத் தசமனென் றறியாததே அஞ்ஞானம்; பின்பு தசமனில்லையென்று நாஸ்தித்துவமும் அவனிருந்தாற் காணப்படானு வென்னுமபாதித்துவமு மாகிய விருவகைப் பிராந்தியே அஞ்ஞான காரியமாகிய ஆவரணம்; பின் றசமன் நதியி லிறந்தானென்னுந் துக்கமே விட்சேபம்;பின் வேறொ ராப்தன் வசனத்தாற் றசமனைச் சுவர்க்கம்போ லுண்டென்றறிவதே யந்தத் தசமனில்லை யென்னு முதலாவரணத்தின் விரோதியான பரோக்ஷஞானம்; பின் னொன்பது புருஷருடன் கூட்டிக் கிரமமாகவெண்ணி நீயே தசமனென்று தெளிவிக்கத் தானே தன்னைத் தசமனாக விருந்தபடி யிருந்தறிதல்

தசமனிருந்தாற் காணப்படானு வென்னு மிரண்டாம் ஆவரணத்தின் விரோதியான அபரோக்ஷ ஞானம்; தசமனிறந்தானென்னுந் துக்கத்தை விடுவது சோகநிவிருத்தி; பின்றனது யதார்த்த நிலையி லானந்தித் திருத்தல் நிரங்குச திருப்தியாம்.

வினு:—இதற்குத் தாஷ்டாந்த மியாது?

விடை:—நவ புருஷரென்றது ஜீவனும் புரியஷ்டகமுமாம்; தசமனென்றது ஆத்மாவாம்; நதியென்றது சம்சாரமாம்; கரையென்றது மானுடசரீரமாம்; ஆப்தனென்றது சற்குருவாம்.

(1) ஆகாசாதி பூதபஞ்சகம் (2) சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகம் (3) வாக்காதி கர்மேந்திரிய பஞ்சகம் (4) பிராணுதிவாயுபஞ்சகம் (5) மனுதி அந்தக்கரண சதுஷ்டயம் (6) அவித்தை (7) காமம் (8) கர்மம்என்பன புரியஷ்டகமாம்.

"சிரவண மாதியைந்துஞ் செறிந்தவாக் காதியைந்தும்
வருபிரா ணுதியைந்து மருவும்வா னுதியைந்து
மிருதய மாதினென்கு மெய்திய வவித்தைகாமம்
பரவுகன் மம்மிவ்வெட்டும் பகர்புரி யட்டகங்காண்."

என்று விவேகசூடாமணி கூறுவதறிக.

வினு:—ஜீவாவஸ்தா (கால) பஞ்சக மெவை?

விடை:—ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமென்னு மைந்துமாம்.

வினா:—ஜாக்கிரமென்பது யாது?

விடை:—ஜாக்கிரம்:ஸ்தூலபூதபஞ்சகம், ஞானேந்திரிய பஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சகம், பிராணாதிபஞ்சகம், அந்தக்கரண பஞ்சகமென்னும் (25) தத்துவ வடிவ ஸ்தூல சரீரத்திற் பொருந்திநிற்கும். இதற்குச் சத்துவம்-குணம், அகாரம்-அக்ஷரம், விஷ்ணு - அதிதேவதை, நேத்திரம் - ஸ்தானம். இதயகமல அஷ்டதளத்திலுள்ள விசுவஜீவனும் விராட்சகிதனான ஈசுவரனுமேகமாய் வநிதாதி விஷயபோகங்க ளனைத்தையுங் கரணங்களாகிய வெல்லாச் சாமக்கிரி (ஸாதனங்)களாலு மனுபவிக்குங் காலம் ஜாக்கிராவஸ்தையாம்.

வினா:—சொப்பன மென்பது யாது?

விடை:—சொப்பனம்:ஷை இருபத்தைந்து தத்துவங்களுள் ஸ்தூல பூதமைந்தும் சித்தமும் புத்தியுமொழிந்த 18-தத்துவ வடிவ சூட்சும சரீரத்திற் பொருந்திநிற்கும். இதற்கு இரஜஸ்-குணம், உகாரம்-அக்ஷரம், பிரஹ்மா-அதிதேவதை, கண்டம்-ஸ்தானம். இதயகமல கர்ணிகையி லிருக்கும் தைஜஸ ஜீவனும் சூத்திராத்மஸகிதனான ஈசுவரனும் ஏகமாய் வாசனா போகத்தை மனமெனுங் கரணத்தா லனுபவிக்குங்காலம் சொப்பனாவஸ்தையாம்.

வினா:—சுழுத்தி யென்பது யாது?

விடை:—சுழுத்தி : பறந்து மேயுங் குஞ்சக

மெல்லாவற்றையுந் தன் பக்ஷத்துள் ளடக்கிக்கொண்டு நித்திரை செய்யுங் கோழியைப்போலக் காரியங்களெல்லாவற்றையு முட்கொண்டு அவற்றின் சம்ஸ்காரத்துடன் கூடி ஆத்மாசிரயத்தில் நிரவஸ்தையா யிருக்கும் பிரகிருதி ரூபமான காரணசரீரத்திற் பொருந்தி நிற்கும். இதற்குத் தமஸ்-குணம், மகாரம்-அக்ஷரம், ருத்திரன்-அதிதேவதை, இதயம்-ஸ்தானம். அந்தக் கமலகர்ணிகையின் மத்தியிலிருக்கும் பிராக்ஞ ஜீவனும், அந்தரியாமி சகிதனான ஈசுவரனு மேகமாய்ப் பிரஹ்மானந்த விஷயபோகத்தை மாயாவிருத்தி யென்னுஞ் சூட்சும கரணத்தா லனுபவிக்குங் காலம் சுழுத்தி யவஸ்தையாம்.

வினா:—இந்த அவஸ்தாத் திரயங்களின் பரியாய நாமங்க ளெவை?

விடை:—தர்மத்திரயம், தெய்வத்திரயம், ஸ்தானத்திரயம், புரத்திரயம், லோகத்திரயம், காலத்திரய மென்பனவாம்.

வினா:—துரியமென்பது யாது?

விடை:—துரியம்: அந்த ஜாக்கிரத்தில் அக்கமல மழிந்து மனாதிகரணங்களின் ஸ்தூல வியாபார மொழிந்து ஜீவன் பரமாத்மசிந்தனை செய்யுங்காலமாம்.

வினா:—துரியாதீத மென்பது யாது?

விடை:—துரியாதீதம்: அந்தத் துரியாவஸ்தையி லுள்ள ஆத்மாவினிடத்தில் மனம் லயப்பட்டிருக்குங் காலமாம்.

வினா:—இந்த அவஸ்தைகளைந்து மெல்லாப பிராணிகட்கு முண்டா?

விடை:—ஸ்தாவரங்கட்குச் சுழுத்தியொன்றும், பசுபக்ஷிகட்குச் சொப்பனம் சுழுத்தியென்னுமிரண்டும், தேவர்கட்குச் சாக்கிரமொன்றும், மக்களுக்கு அவஸ் தாத்திரயமும், உன்மத்தர்(சாதகர்)கட்குத் துரியமும். யோகி (முத்தர்) கட்குத் துரியாதீதமுமாம். அவற்றுள், முதன் மூன்றவஸ்தைகளும் மனிதர்கட்குத் தம்மிற்று மே தோன்றியழியும் பந்தகாரணமாயிருத்தலின் அசா ஸ்திரப் பிரபஞ்சமாம். மற்றைய விரண்டவஸ்தைகளும் யோகாப்பியாச (ஸமாதி) பலத்தால் மோக்ஷகாரணமா யிருத்தலின் சாஸ்திரப் பிரபஞ்சமாம். இவ்வாறு கற்பித விசேஷ சிதாபாச ஜீவனுக்கு மித்தையாகவுள்ள வைந்தவஸ்தைகள் சொல்லப்பட்டன.

வினா:—இந்தச் சாக்கிராதி யவஸ்தைகள் நித்திய மன்றோ? அவற்றை மித்தையென்ப தெங்ஙனம்?

விடை:—இந்த ஜாக்கிராதி யுவஸ்தைகளைந்தும், அவற்றினு லுண்டாகும் ஸகலப் பிரபஞ்ச வியாபாரங்க ளும், மித்தியாவடிவஜீவனுடைய வியவகார காலமாகையி

ளுலும், இவை யொன்றிலொன் றில்லாமையினுலும் கால தேசாதி நியமத்திற் றோன்றுமையாலும் மித்தையாம். அவற்று ளனுசூதமா யவற்றிற்குச் சாக்ஷிமாத்திரமா யிருந்தறியும் நிஜதுரியமான வாத்மாவொன்றே நித்தியமாம். அதுவே வேதவாக்கியத் திரயத்துள் சித்தார்த்த போதக வாக்கியார்த்த நிச்சயப் பொருளாம். இதற்குப் பிரமாணம் வருமாறு:—

ரிபுகீதை.

"கனவினிடை நனவில்லை யிவ்விரண்டுங் காரணமாஞ் சுழுத்திதனி லில்லை யிந்த, நனவுகனுச் சுழுத்திகளுந் துரியத்தில்லை நான்குவிதவவத்தைகளுஞ் சுத்தத்தில்லைச், சொனவிதமா யவத்தையெலா மிலாமையாலுஞ் சுத்தமதாஞ் சின்மாத்திர சொரூப மொன்றே, யனவரத மழியாம லிருப்பதாலு மத்துவித சின்மாத்ரசொரூப மேநான்".

சொரூபசாரம்.

"நனவிற் றசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போம்
கனவின் மனக்கூத்துங் காண்போ—நினைவிற்
சுழுத்தியிலே யில்லாத சூனியக்கூத் தாடி
விழுப்பொருளாய் நாமிருப்போ மே".

வினு:—வேதவாக்கியத் திரய மெவை?

விடை:—அவை (1) விதிவாக்கியம், (2) நிஷேத (விலக்கு) வாக்கியம், (3) சித்தார்த்த போதக வாக்கிய மென்பனவாம்.

வினா:—விதி வாக்கியமென்பது யாது?

விடை:—யாகாதி சுபகர்மங்களைச் செய்யவேண்டுமென்று விதிக்கும் வாக்கியமாம்.

வினா:—நிஷேத வாக்கியமென்பது யாது?

விடை:—மதுமாம்சபான பக்ஷணாதி அசுபகர்மங்களைச் செய்யக்கூடாதென்று விலக்கும் வாக்கியமாம்.

வினா:—சித்தார்த்த போதகவாக்கிய மென்பது யாது?

விடை:— விதி நிஷேத சூந்யமா (இன்றியதா)ய்ப் பிரஹ்மாத்ம வைக்கியப் பொருள் மாத்திரத்தைப் போதிக்கும் வாக்கியமாம்.

வினா:—சித்தார்த்த போதக வாக்கிய மெத்தனை வகைப்படும்?

விடை:—"பிரக்ஞானம் பிரஹ்மம்", "அஹம் பிரஹ்மாஸ்மி", "தத்துவமஸி," "அயமான்மாப்பிரஹ்மம்" என நான்குவகைப்படும்.

வினா:—இந்த நான்கு வாக்கியங்களு மெங்கே சொல்லப்படுகின்றன?

விடை:—இவை முறையே இருக்கு, யஜுர், ஸாமம், அதர்வண மென்னு நான்கு வேதங்களினும் பிரதிபாதிக்கப்பட் டிருக்கின்றன. அவற்றுள், 'தத்வமஸி' என்பது சிரவண (குருவி னுபதேச) வாக்கியமும், 'பிரக்ஞானம் பிரஹ்மம்' என்பது மனன (சீடனப்

யாச) வாக்கியமும், 'அயமான்மாப் பிரஹ்மம்' என்பது நிதித்யாசன (அவனது சம்மத) வாக்கியமும், 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்பது ஸமாதியனுபவ வாக்கியமுமாம். இவற்றுள், தத்வமஸி வாக்கியமே முக்கியம். இதற்குப் பிரமாணம் வருமாறு:—

### மகாவாக்கியம்.

"முந்தியவே தோற்பத்தி பிரக்ஞானம் பிரம்மமென மொழியும் வாக்கியஞ், சிந்தை செய்யு மிரண்டிலகம் பிரஹ்மாஸ்மி யெனும்வாக்கியஞ் செப்பு மூன்றில், தங்தோமசி யெனும்வாக்கிய நாலாவ தயமான்மாப் பிரஹ்மமென்ன, வந்தவிந்த வாக்கியந்தா னதர்வணத்தி லுற்பத்தி வகுத்த வாறே".

### ரிபுகீதை.

"சுயமதுவாங் தத்வமசி யென்னும் வாக்யம் சொல் லுபதேசமகா வாக்ய மாகு, மியலுமகம் பிரமாஸ்மி யென்னும் வாக்யம் மிலகுமநு பூதிமகா வாக்ய மாகு, மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரம வாக்யம் மனனத்தினப்பியாச வாக்ய மாகு,மயமான்மாப்பிரமமென வறையும் வாக்கிய மதற்கெல்லாஞ் சம்மதமாம்வாக்யமாமே".

வினா:—இந்த நான்கு மகா வாக்கியார்த்தங்கள் விசேஷமாக வெங்கே பிரதிபாதிக்கப்பட் டிருக்கின்றன.

விடை:—முறையே இருக் வேதத்தின் ஐதரேய உபநிஷத்திலும், யஜுர் வேதத்தின் பிரகதாரண்யம் அல்லது தைத்திரீய உபநிஷத்திலும், சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிஷத்திலும், அதர்வண வேதத்தின் மாண்டூக்கியம் அல்லது முண்டகோப நிஷத்திலும் கூறப்பட்டிருக்கின்றன. ஸ்ரீபஞ்சதசியின் 5-வது மகா வாக்கிய விவேகத்திலும், ரிபுகீதையின் 28-வது அத்தியாயத்திலும் கூறப்பட்டிருக்கின்றன. இந் நான்கு மகா வாக்கியங்களிலும் கிரமத்திலுள்ள பிரக்ஞானம், அஹம், துவம், ஆத்மாவென்னும் பதங்களுக்கு வாச்சியார்த்தம் ஜீவனும், லக்ஷியார்த்தம் கூடஸ்தவடிவ சாக்ஷியுமாம். பிரஹ்மம், பிரஹ்மம், தத், பிரஹ்மமென்னு நான்குபதங்களுக்கும் வாச்சியார்த்தம் மாயாவிசிட்ட பிரஹ்மமு(ஈஸ்வரனு)ம் இலக்ஷியார்த்தம் சுத்தப்பிரஹ்மமுமாம். இந்த நான்குவாக்கியங்களும் ஜீவப் பிரஹ்மவைக்கியத்தையே போதிப்பனவாம். அவற்றுள், வாச்சியார்த் தத்திற்கு ஐக்கியஞ் சம்பவியாமையின் இலட்சியார்த்தங் கொள்ளத்தக்கதாம்.

வினா:—நான்கு வாக்கியங்களுள் தத்துவமஸி மகாவாக்கியம் முக்கியமென்பதேதனால்?

விடை:—தத்துவமஸி மகாவாக்கியத்திற் குள்ள ஜீவப்பிரஹ்ம வைக்கியமாகிய வபேதார்த்தமே மற்றை மூன்று மகாவாக்கியங்கட்கு முள்ள அர்த்தமாதலாலும் குருவினுபதேச வாக்கிய மாதலாலும் அது முக்கிய

மாம். அது தத், துவம், அஸியெனப் பதத்திரய மும், அது நீயாகிறாய் அஃதாவது பிரஹ்மம் ஆத்மா ஐக்கியமெனக் கிரமத்தின் பதத்திரயார்த்தமும், வாச்சியார்த்தம் லக்ஷியார்த்தமென வர்த்தத்துவயமும், * பாத சமானாதிகரண்ய சம்பந்தம், முக்கிய சமானாதிகரண்ய ஸம்பந்தமென ஸம்பந்தத்துவயமு முடையதாம்.

* சாமானாதி கரண்யம், விசேஷண விசேஷ்யபாவம், லட்சிய லட்சணபாவ மென்னு மிம்மூன்று சம்பந்தங்களும் மகா வாக்கியத்திற்குச் சககாரிகளாம்.

தத்துவமஸி மகாவாக்கியத்தில் தத்துவமென்னும் இரண்டுபதங்களுக்குப் பரஸ்பரம் ஸாமானாதி கரண்ய(ஒரு அர்த்த வடிவ ஆசிரயத்தன்மை) ஸம்பந்தம், இரண்டு பதார்த்தங்களுக்கு விசேஷணவிசேஷ்யபாவஸம்பந்தம், இரண்டுபதங்களோடு கூடிய வாக்கியத்துடனாவது. இரண்டு பதார்த்தங்களோடு கூடிய வாக்கியார்த்தத்துடனாவது அகண்ட சேதனத்திற்கு லக்ஷியலக்ஷண பாவ சம்பந்தமென இப்படி மூன்றுசம்பந்த முண்டு.

(1) அந்த இந்தத் தேவதத்தன் என்புழிச் சம்பந்தத்திரய மிருக்கின்றன. 'அந்த' என்னும் பதத்திற்கும் இந்த என்னும் பதத்திற்கு மொரு தேவதத்தபிண்ட (தேக) மே ஸமானாதி கரணம் (அஃதாவது அந்தத் தேவதத்தன்தான் இவன் என்று சொன்னதாக வாயிற்று. அந்த அல்லது அவன் என்றால் முன்னர்ப் பார்க்கப்பட்ட புருஷன் ஒருவனாகலின் அவன் இவன் என்னும் இரண்டுபதங்களும் தேவதத்தனென்னும் ஒரு தேகத்தைக் குறிக்கின்றனவேயன்றி வேறொன்றைக் குறிப்பதில்லை. இது சாமானாதி கரண்ய சம்பந்தமென்று சொல்லப்படு

வினா:—தத்பதத்தின் வாச்சியார்த்தமாவது யாது?

விடை:—முற்கூறிய (காரணஸஹித) ஸ்தூலாதி தனுத்திரயசமஷ்டி ரூபமான விராட்புருஷன் ஹிரண்ய

---

கிறது). ஆகையால் இரண்டு பதத்திற்கும் சாமானாதிகரண்ய சம்பந்தமிருக்கிறது. அதுபோலத் தத்பதத்திற்கும் துவம்பதத்திற்கு மொரு வசதங்யமே சமானாதிகரணமாகையால் இரண்டு பதங்களுக்கும் சாமானாதி கரண்ய சம்பந்தமிருக்கிறது.

(2) அந்தக்கால அந்தத்தேசமென்னு மிவற்றுடன் சேர்ந்த தேவதத்தவாசகமான அவன் என்னும் பதத்தினுடைய அர்த்தத்திற்கும் இந்தக்காலம் இந்தத் தேசமென்னு மிவற்றுடன் சேர்ந்த தேவதத்த வாசகமான இவன் என்னும் பதத்தினுடைய அர்த்தத்திற்கும். ஒன்றற்கொன்றுள்ள பேதத்தை விலக்கிக் காட்டுவதனாலே பரஸ்பரம் விசேஷண விசேஷிய மாகிறது. ஆகையால், இதில் விசேஷண விசேஷியபாவ சம்பந்தமிருக்கிறது. அதுபோல ஸர்வக்ஞத்துவம் பரோக்ஷத்துவ முதலானவற்றுடன் கூடிய சைதந்ய வாசகமாகிய தத்பதார்த்தத்திற்கும் கிஞ்சிக்ஞத்துவம் அபரோக்ஷத்துவ முதலானவற்றுடன் கூடிய சைதந்ய வாசகமாகிய துவம்பதார்த்தத்திற்கும் ஒன்றற்கொன்றுள்ள பேதத்தை விலக்கிக்காட்டுவதனாலே பரஸ்பரம் விசேஷண விசேஷியபாவ சம்பந்த மிருக்கிறது.

(3) அவன் இவன் என்னும் பதங்களோடு கூடிய வாக்கியத்திற்காவது அந்தப் பதார்த்தங்களோடுகூடிய வாக்கியார்த்தத்திற்காவது அகண்டார்த்தமாகிய தேவதத்த பிண்டமாத்திரத்தை எடுத்துக் கொள்ளுவதனால் விரோதாம்சத்தைத் தள்ளி விரோதமில்லாத தேவதத்தன் என்பது மாத்திரத்தின் லக்ஷியத்தினாலே லக்ஷிய லக்ஷணபாவ சம்பந்தமிருக்

கர்ப்பன் அவ்வியாகிருதன் (வைசுவானர சூத்ராத்மா அந்தரியாமி). என்னு மீசுவரனும் பிரஹ்மமுங் கூடித் தப்தாயபிண்டம் (காய்ந்த விருப்புக்கட்டி) போ லேகாகாரமாகக் காண்பது தத்பதத்திற்கு வாச்சியார்த்தமாம். இது முக்கியார்த்தமென்றும், அபிதா(நாமா)ர்த்தமென்றும், சக்கியார்த்த மென்றும், அசுத்தமென்றுஞ் சொல்லப்படும்.

வினு:—துவம் பதத்தின் வாச்சியார்த்தமாவது யாது?

விடை:—ஸ்தூலாதி தனுத்திரய வியஷ்டி ரூபமான விசுவ தைஜஸ பிராக்ஞஜீவனும் பிரத்யகாத்மாவுங் கூடித் தப்தாயபிண்டம்போ லேகாகார மாகக் காண்பது துவம்பதத்திற்கு வாச்சியார்த்தமாம். இது முக்கியார்த்த மென்றும், அபிதார்த்த மென்றும், சக்கியார்த்தமென்றும், அசுத்தமென்றுஞ் சொல்லப்படும்.

வினு:—இவ்விரு பதங்களுக்கும் லக்ஷியார்த்தமெவை?

---

கிறது. அதுபோலத் தத்துவம் பதங்களோடுகூடிய வாக்கியத்திற்காவது அந்தப் பதார்த்தங்களோடு கூடியவாக்கியார்த்தத்திற்காவது அகண்ட சச்சிதானந்தத்தை மாத்திர மெடுத்துக் கொள்வதினுல் விரோதாம்சத்தைத் தள்ளி விரோதமில்லாத அம்சமாகிய சைதந்நியமாத்திரம் குறிக்கப்படுகின்றமையின் லக்ஷியலக்ஷணபாவ சம்பந்தமிருக்கிறது. இந்த லக்ஷிய லக்ஷணபாவ சம்பந்தமே பாகத்தியாக லக்ஷணையாம்.

விடை:—(1) விராட்டாதிகளின் வேறுபட்ட நிருபாதிகமாய பிரஹ்மமே தத்பத லக்ஷியார்த்தமாம். இது சோதித (சுத்த) தத்பதார்த்த மென்றும் கூறப்படும். (2) விசுவாதிகளின் வேறுபட்ட நிருபாதிகமாய பிரத்யகாத்மாவே துவம்பத லக்ஷியார்த்தமாம். இது சோதித துவம்பதார்த்தமென்றும் சொல்லப்படும்.

வினா:—சம்பந்தத் துவய மெவை?

விடை:—பாதசமானாதி காரணசம்பந்தம், முக்கிய சமானாதிகரண சம்பந்த மென்னு மிரண்டுமாம்.

வினா:—பாதசமானாதி கரண சம்பந்தம் யாது?

விடை:—எந்த வஸ்துவிற்குப் பாதமுண்டாய் எதனோடு அபேத முண்டாகின்றதோ அந்த வஸ்துவிற்கு அதனோடு பாதசாமானாதி கரணிய சம்பந்த முண்டு. ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடுள்ள சம்பந்தம் ஜலாகாசத்திற்கு மகாகாசத்தோடுள்ள வபேதம்போலப் பாதசாமானாதி கரண்ய சம்பந்தமாம்.

வினா:—முக்கியசமானாதி கரணசம்பந்தம் யாது?

விடை:—எந்த வஸ்துவிற்கு எந்தவஸ்துவோடு எப்போது மபேதமிருக்கின்றதோ அந்த வஸ்துவிற்கு அதனோடு முக்கியசாமானாதி கரணிய சம்பந்த முண்டு. கூடஸ்தனுக்குப் பிரஹ்மத்தோடுள்ள சம்பந்தம் கடாகாசத்திற்கு மகா காசத்தோடுள்ள வபேதம்போல முக்கிய சாமானாதி கரண்ய சம்பந்தமாம்.

வினா:—வாச்சியார்த்த மென்பது யாது?

விடை:—வாச்சியார்த்தத்தைப் போதிக்கிறபதம் வாசகமெனப்படும்; அவ்வாசகத்தின் (பதத்தின் சத்தி விருத்தியா லறியப்படும்) பொருள் வாச்சியார்த்தமாம்.

வினா:—இலக்ஷியார்த்த மென்பது யாது?

விடை:—பதத்தின் இலக்ஷணையா லறியப்படும் பொருளாம். அஃதாவது எந்த அருத்தம் பதத்தின் சத்தி விருத்தியா லறியப்படாமல் இலட்சணை விருத்தியா லறியப்படுகிறதோ வது லக்ஷியார்த்தமாம்.

வினா:—இலக்ஷணை என்பது யாது?

விடை:—சக்கி (வாச்சி) யத்தின் சம்பந்தம் இலக்ஷணையாம். கங்கையிற் கிராமமென்னு மிடத்தில் கங்காபதத்தின் வாச்சியமான பிரவாகத்திற்குக் கரையோடு சையோக சம்பந்தமும், சிவப்பு ஓடுகிறதென்னு மிடத்தில் சிவப்பு யென்னும் பதத்தின் வாச்சியமான சிவப்புக் குணத்திற்குக் குணியாகிய குதிரையோடு தாதாத்மிய சம்பந்தமும் இலக்ஷணையாம்.

வினா:—விருத்தியென்பது யாது?

விடை:—ஸப்தத்திற்கு அர்த்தத்தோடுள்ள சம்பந்தம் விருத்தியெனப்படும்.

வினா:—அந்த விருத்தி யெத்தனை விதம்?

விடை:—சக்தி விருத்தி லக்ஷணை விருத்தி யென விரண்டு விதமாம்.

வினா:—சக்தி விருத்தி யென்பது யாது?

விடை:—சப்தத்தில் அர்த்தத்தின் ஞானத்தை யுண்டுபண்ணும் சாமர்த்தியம் (ஆற்றல் வடிவசம்பந்தம்) சக்தி விருத்தியெனப்படும். அந்தச் சக்தி விருத்தியினாற் றோன்றுவதாகிய அர்த்தம் சக்கியார்த்தமென்றும் வாச்சியார்த்த மென்றுங் கூறப்படும். எந்தப் பதத்தில் எந்த அர்த்தத்தின் சக்தியிருக்கிறதோ அந்தப் பதத்திற்கு அந்த அருத்தம் சக்கியமாம். அந்தச் சக்கியார்த்தமே வாச்சியார்த்தமும் முக்கியார்த்தமும் அபிதேயார்த்தமுமாம்.

வினா:—இலக்ஷணை விருத்தி யென்பது யாது?

விடை:—சப்தத்தில் அர்த்தத்தின் சம்பந்தியாகிய வேறு (உசிதமான) அர்த்தத்தின் ஞானத்தை யுண்டுபண்ணுஞ் சாமர்த்தியம் லக்ஷணை விருத்தியாம். அந்த லக்ஷணை விருத்தியினாற் றோன்றுவதாகிய அர்த்தம் சக்கிய சம்பந்தியென்றும் லக்ஷியார்த்தமென்றுங் கூறப்படும்.

வினா:—இந்த லக்ஷணை யெத்தனை வகைப்படும்?

விடை:—ஜகத் (விட்ட) லக்ஷணை, அஜகத் (விடாத) லக்ஷணை, ஜகதஜகத் (விட்டு விடாத) லக்ஷணை யென மூன்றுவகைப்படும்.

வினா:—ஜகத் லக்ஷணையாவது யாது?

விடை:—"யாண்டுவாச்சியார்த்தம் முற்றும் விடு பட்டு வாச்சியார்த்தத்தின் சம்பந்தி கிரகிக்கப்படுகிற தோ அது விட்டலட்சணையாம். "கங்காயாம்கோஷப் பிரதிவசதி-கங்கையிலிடைச்சேரி யிருக்கிறது" என்னு மிடத்துக் கங்காசப்தத்தின் பிரவாகரூபமான முக்கி யார்த்தம் கோஷமாகிய இடைச்சேரிக் காசிரய மாகா மையால் அதை விட்டு அதன் தீரம் (கரை) கொள்ளப் படுகின்றமைகாண்க.

அறிவானந்த சித்தியார்.

நாடிலிம் மஞ்சது கூப்பிடு மென்ற நலமுங்கங்கை
யூடிய கோஷ மதுபோ லுடம்புற் றுரைக்குமென்றாய்
கூடிய லக்கணை விட்டது மஞ்சாக் குரோசந்தியுற்
றோடிய கங்காயாங் கோஷப் பிரதி வசதியன்றே.

என்று கூறுவதறிக.

வினா:—அஜகத் லக்ஷணையாவது யாது?

விடை:—யாண்டு வாச்சியார்த்தம் விடுபடாது அதன் சம்பந்தி கிரகிக்கப்படுகின்றதோ அதுவிடாத லட்சணையாம். "சோணஸ் திட்டதி ஸ்வேதகச்சதி-சிவப்பு நிற்கின்றன வெள்ளையோடு கின்றன", அல் லது "குந்தாப் பிரவசந்தி - ஈட்டிகள் செல்லுகின்றன" என்னுமிடத்துச் சோண ஸ்வேதசப்தம் தமது முக்கி யார்த்த நிறங்களை விடாமல் அந்நிறங்களை யுடைய

குதிரை பசுக்களைக் கொள்ளுவதும், குந்த சப்தந் தன் முக்கியார்த்தத்தை விடாமற் றன்னைச் சுமப்பவனாகிய குந்ததாரியைக் கொள்வதுங் காண்க.

அறிவானந்த சித்தியார்.

உன்னி நிறத்தை விடாத சிவப்புமுற் றோடியது
தன்னை விடாதுறு வெள்ளையும் போலத் தகுசிவப்பாற்
சென்னி விடாத விலக்கணையே சோணந் திட்டதிசேர்
மன்னுமச் சுவேதா தாவதி தானதின் வாக்கியமே.

என்று கூறுவதறிக.

வினா:—ஜகதஜகத் லக்ஷணையாவது யாவது?

விடை:—யாண்டுவிரோத முடைய வாச்சியபாகம் விடுபட்டு அதன் சம்பந்தியாகிய விரோதமில்லாத வாச்சிய பாகம் கிரகிக்கப் படுகின்றதோ அது விட்டுவிடாத லட்சணையாம். "ஸோயந்தேவதத்த:—அவனே யித் தேவதத்த" னென்பதில் ஸ (அவன்) என்னுஞ் சொல் இறந்த (சென்ற) காலத்துடனும் வேறு (தூர) தேசத் துடனுங் குறைந்த வயதுடனுங் கூடிய புருஷனைப் பரோக்ஷமாக்காட்டும். அயம் (இவன்) என்னுஞ் சொல் நிகழ்(வர்த்தமான) காலத்துடனுஞ் சமீபதேசத்துடனு மதிகவயதுடனுங்கூடிய புருஷனை யபரோக்ஷமாக்காட்டும். இந்தத் தேசகாலாதிபேத(விரோத)ங்களை விட்டுப் புருஷனைமாத்திரம்விடாது கொள்ளின் அவனேயிவன் இவனேயவன் என்னு மபேதஞ் சித்திக்கின்றது. அது

போலத் தத்துவமசி யென்னு மகாவாக்கியத்தில் தத்து வம்பதார்த்தங் (ஈப்ஸ்வரஜீவர்) களின் சர்வஞ்ஞத்துவ கிஞ்சிக்ஞத்துவாதி விரோததர்மங்களைவிட்டு அவிரோத பாகமாகிய கூடஸ்தபிரஹ்ம (ஐக்ய) த்தைக் கொள்வ தாம். இஃதே பாகத்தியாகலக்ஷணை. இந்தப்பாகத்தி யாகலக்ஷணையே மகாவாக்கியத்தி (பதார்த்த சோதனை யி)ல் முக்கிய உபயோகமாம்.

அறிவானந்த சித்தியார்.

"அத்தேசங் தன்னிலக் காலத்திற் கண்ட வவனிவன்று னித்தார மென்றுற்ற நேர்போலச் சீவன் பானிலையை யெத்தாலும் வேறற விட்டு விடாத விலக்கணைதேர்ந் தொத்தேசோ யங்தேவ தத்தனென் றேமறை போதி டுமே" என்று கூறுவ தறிக.

வினு:—மகாவாக்கியத்திற் பாகத்தியாக லக்ஷணை முக்கிய உபயோக மென்பதெதனுல் ?

விடை:—ஜகதிலக்ஷணையைக் கொள்ளின் வாச்சிய முற்றும்விடுபட்டு வாச்சியத்தின் சம்பந்தியாகிய வேறு ஞேயமாம்; அஜகதிலக்ஷணையைக் கொள்ளின் வாச்சி யார்த்த முற்றுமிருக்க வாச்சியத்திற் கதிகமுங் கிரகிக் கத்தக்கதாம். இவ்வாற்றுல் அவை விரோதமாம். பாகத் தியாக (ஜகதஜகதி)லக்ஷணையைக்கொண்டாலோவிரோ தமான வாச்சியபாகம் விடப்பட்டு விரோதமின்றிய வாச்சியபாகம் (அஸங்கசுத்த சேதன)ம் கொள்ளப்படு

கின்றது. ஆதலால் மகாவாக்கியத்தில் பாகத்தியாக லக்ஷணையே முக்கிய (உத்தம) மாம்.

" விட்டவிலக் கணையாலும் ஐக்கியந் தோன்றா விடாதவிலக் கணையாலு மைக்கியந் தோன்றா, திட்டமதா முபயவிலக் கணையொன்றாலே யிலங்குபரசிவைக்ய மிலங்கு மென்றே, திட்டமுறத் தோற்றியவித் தோற்ற மெல்லாந் திகழுருவாம் பரப்பிரம சொரூப மென்றே, சிட்டமுறு மகண்டபர நிச்சயத்தாற் சின்மயமாம் பரப்பிரம மாத்ர மாவாய்".

என்று ரிபுகீதை கூறுவதறிக.

இதன்விரிவை விசாரசாகரம் ஆறாவது தரங்கம் மகா வாக்கிய நிரூபணத்திற் காண்க.

வினா:—ஆத்மதரிசன உபாய (லக்ஷண)த்திரயங்களைவை ?

விடை:—அதத்வியாவிருத்தி லக்ஷணம், தடஸ்த லக்ஷணம், சொரூபலக்ஷணமென்னு மூன்றுமாம்.

வினா:—அதத்வியாவிருத்தி லக்ஷண மென்பது யாது ?

விடை:—அசங்க அஸ்தூலாதி லக்ஷணங்களாலாத்மாவைப் போதிப்பதாம்; அஃதாவது தேகாதியனாத்ம வர்க்க (ஸ்தூலதேகமுதற் பிரகிருதி வரையுமுள்ள தத்துவ) ங்களை யுக்தியா னேதித்து நின்றவாத்மாவை யறிவிப்பதாம்.

வினா:—தடஸ்த லக்ஷண மென்பது யாது ?

விடை:—ஜகத்ஜன்மாதி லக்ஷணங்களா லாத்மா வைப் போதிப்பதாம்; அஃதாவது விருக்ஷத்தினுனியிற் சந்திர னிருப்பதாகக் காட்டுவதுபோலப் பூதமுதல் ஸ்தூலஜ (தே)கம் வரையுமுள்ள நிலைகளைக்காட்டி ஆத்மாவை யறிவிப்பதாம்.

வினா:—சொரூபலக்ஷண மென்பது யாது ?

விடை:—சச்சிதானந்த சொரூப லக்ஷணங்களா லாத்மாவைப் போதிப்பதாம்; அஃதாவது மிகுந்த லோகி தோஷ்ணப் பிரகாசரூபமே அக்கினி அல்லது சூரிய னென்பது போல ஆத்மாவின் நிஜரூபம் இது வென் றறிவிப்பதாம்.

வினா:—உபதேசக்கிரமத்திரய மெவை ?

விடை:—உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை (சோதனை) யென்னு மூன்றுமாம்.

வினா:—உத்தேசமென்பது யாது ?

விடை:—தானறிவிக்கும் வஸ்து (ஆத்மா) வின் நாமமாத்திரங் கீர்த்தித்தலாம்.

வினா:—இலக்ஷண மென்பது யாது ?

விடை:—ஒன்றன் சிறந்த குறியாம்; அஃது ஆடு தோலுள்ளது ஆ (பசு)வென்பது போல்வதாம். அஃது அதிவியாப்தி, அவ்வியாப்தி, அசம்பவ தோஷங்களின்றியதாம். அதுவே அசாதாரண தர்மமாம்.

வினு:—பரீக்ஷை யென்பது யாது ?

விடை:—குறிக்கப்பட்ட அவ்விலக்கியத் திற்குக் கூறிய அவ்விலக்கண முண்டோ இல்லையோவென வாராய்தலாம்.

வினு:—அதிவியாப்தி தோஷமென்பது யாது ?

விடை:—கோடுள்ளது ஆ (கொம்புள்ளது பசு) வென்பது போல் அறிவிக்கப்படு மிலக்கி(லக்ஷி)யத்திற் குக் கூறிய விலக்க(லக்ஷ)ண மற்ருரிலக்கியத்தினு மிருத்தலாம்.

வினு:—அவ்வியாப்தி தோஷமென்பது யாது ?

விடை:—கபில(கருமைகலந்த பொன்மை) நிற முள்ளது ஆ வென்பது போல அறிவிக்கப்படுமிலக்கி யத்திற்குக் கூறிய விலக்கண மவ்விலக்கியத்தினேக தேசத் தில்லாதிருப்பதாம்.

வினு:—அசம்பவ தோஷமென்பது யாது ?

விடை:—ஒற்றைக் குளம்புடையது ஆ வென்பது போல அறிவிக்கப்படு மிலக்கியத்திற்குக் கூறிய விலக்க ணம் அவ்விலக்கிய முற்று மில்லாதிருப்பதாம்.

வினு:—இம்முத்தோஷங்களு மின்றிய சிறந்த வில க்கணம் யாது ?

விடை:— கழுத்துத்தாடை முதுகுகொண்டை எப்போது முடையது ஆ வென்பது போலவாம்; அஃ தாவது கழுத்துத்தாடை முதுகுகொண்டை யெப்

போது முடையது ஆவென்னு மிடத்திற் கழுத்துத் தாடை முதுகு கொண்டை யென்னுமிலக்கணம் ஆவினங்கட்கன்றி மற்றைய வினங்கட் கில்லாமையா லதிவியாப்தி தோஷமும, ஆவினங்களனைத்திலு மெய போது மிருத்தலால் அவ்வியாப்தி அசம்பவ தோஷங்களுமின்றி யிருக்கின்றது. அதுபோல பலவற்றிற்குப் பொதுவாகவின்றி யொன்றற்கே யுள்ளதுங் குறைவும் அபாவமு மின்றியதுமாகிய விலக்கண மியாதோ அதுவே முத்தோஷங்களு மில்லாத சிறந்த விலக்கணமாம்.

வினா:—பிரஹ்மத்திற்குச் சிறந்த விலக்கணங்களெவை ?

விடை:— சத்து, சித்து, ஆநந்தம், நித்தியம், பூரண மென்னுமைந்துமாம.

வினா:—சத்தாவது யாது ?

விடை:—எதனிவிர்த்தி (நாசம்) (இரஜ்ஜுவைப் போல)எக்காலத்தும் (எந்த அவஸ்தைகளிலும்)எதனலுமுண்டாகிற தில்லையோ அது சத்தாம்.

வினா:—சித்தாவது யாது ?

விடை:—எது (சூரியன்போல) ஸ்வயம் பிரகாசமாக விருந்து எல்லாவற்றை (அவஸ்தாத்திரயங்களை)யும் பிரகாசிப்பிக் (அறி)கிறதோ அது சித்தாம்.

வினா:—ஆநந்தமாவது யாது ?

விடை:—எது (அமிர்தம் போலப்) பரமப்பிரீதி (மிகுந்த பிரியத்து)க்கு விஷயமாயிருக்கிறதோ அஃது ஆநந்தமாம்.

வினா:—நித்தியமாவது யாது ?

விடை:—எது †பிராகபாவம், பிரத்வம்சாபாவம், அந்யோந்யாபாவம், அத்தியந்தாபாவமென்னு நான்கு

† பிராகபாவம் உற்பத்தியின்றி நாசமுடையதாம்; துவம்ஸாபாவம் உற்பத்தியுடையதாய் நாசமின்றி யிருப்பதாம் அத்தியந்தா பாவமும் அந்யோந்யா பாவமும் உற்பத்தியும் நாசமுமின்றி யிருப்பனவாமென்று தார்க்கிகர் கூறுவர்.

1. பிராகபாவம் (முன்னின்மை) தனது பிரதியோகி (எதிர்மறை) யுண்டாகுங் காலத்து நாசமடைதலின் நித்திய மன்றாம்.

2. அழிவுபாட் டபாவம் (பின்னின்மை) தனது பிரதியோகியின் சமவாயி (முதற்) காரணத்திலிருந்து, அது நாசமடைந்த காலத்துத் தான் நாசமாய்ப் போதலின் அதனை நித்தியமெனல் கூடாது; ஏனெனின், மண்ணாகிய காரணங் கெட்டவழி யதிலுள்ள அதன் காரியகடத்தின் துவம்ஸாபாவம் (அழிவு பாட்டபாவம்) அழிவின்றி நிற்குமெனல் யுத்திக்கொவ்வாது.

3. கடம் படமன்று என்புழிப் படத்தின் பேதம் கடத்திலிருக்கிறது. கடம் அழிந்தவழிப் படத்தின் பேதமும் அழிந்து விடுதலின் அப்பேதம் நித்தியமன்றாம். பேதத்தை அந்நியோந்யாபாவ மென்பர்.

அபாவமு மில்லாமற் சதோதயமாயிருக்கிறதோ அது நித்தியமாம்.

வினா:—பூரணமாவது யாது?

விடை:—எது தேசபரிச்சேதம், காலபரிச்சேதம், வஸ்துபரிச்சேத மென்னு மூவிதபரிச்சேத (அந்த)மு மில்லாமற் சதோதயமாயிருக்கிறதோ அதுபூரணமாம்.

வினா:—சத்தின் உபாதித்திரயமெவை?

விடை:—வியாவகாரிக சத்து, பிராதிபாஸிக ஸத்து, பாரமார்த்திக ஸத்துவென்னு மூன்றுமாம்.

வினா:—வியாவகாரிகசத்தென்பது யாது?

விடை:—விதேக கைவல்யபரியந்தஞ் சாக்கிரத் திற்றோன்றும் கடபடாதிகளின் சத்தாம்.

வினா:—பிராதிபாசிக சத்தென்பது யாது?

விடை:—சுத்திகாரஜித சொப்பன விஷயாதி சத்தாம்.

வினா:—பாரமார்த்திக ஸத்தென்பது யாது?

விடை:—சகல கற்பனைகட்கு மதிஷ்டானமாய்த் தோற்றமொடுக்க மின்றியுள்ள பிரஹ்மசத்தாம்.

---

4. தீயின்கட் சீதளம் யாண்டுமின்று என்புழித் தீயின் கண் சீதளத்தின் அத்தியந்தாபாவ மிருக்கிறது, தீயழிந்த போது தீயிலிருந்த சீதளத்தின் அத்தியந்தாபாவ (முழுது மின்மையு) மழிந்து விடுதலின் அதுவும் நித்தியமன்றாம்.

வினா:—சித்தின் உபாதி சதுஷ்டய மெவை?

விடை:—ஜீவன், ஈஸ்வரன், கூடஸ்தன், பிரஹ்ம மென்னும் நான்குமாம்.

வினா:—ஜீவன் யார்?

விடை:—மலின கடஜலப் பிரதிபிம்பாகாசம்போலுள்ள அவித்தியாப் பிரதிபிம்ப (அவஸ்தாத்திரயாபிமானியான) சேதனமாம்.

வினா:—ஈஸ்வரன் யார்?

விடை:—நிர்மல மேக ஜலப்பிரதிபிம்பாகாசம் போலுள்ள மாயாப் பிரதிபிம்ப சேதனமாம்.

வினா:—கூடஸ்தன் யார்?

விடை:— கடாகாசம் போல அவஸ்தாத்திரய சாக்ஷியாயுள்ள சேதனமாம்.

வினா:—பிரஹ்மமென்பது யாது?

விடை:—மகாகாசம் போலச் சர்வ சாக்ஷியாயுள்ள சேதனமாம்.

வினா:—ஆநந்தத்தின் உபாதி யஷ்டக மெவை?

விடை:—அவை விஷயாநந்தம், பிரஹ்மாநந்தம், வாசநாநந்தம், முக்கியாநந்தம், நிஜாநந்தம், ஆத்மாநந்தம், அத்வைதாநந்தம், வித்தியாநந்தமென்னு மெட்டுமாம்.

வினா:—விஷயானந்தமாவது யாது?

விடை:—வனிதாதி விஷயலாபத்திற் றோன்றுஞ் சுகமாம்.

வினா:—பிரஹ்மானந்தமாவது யாது?

விடை:—நித்திராகாலத்திற் றோன்றுஞ் சுகமாம்.

வினா:—வாசனானந்தமாவது யாது?

விடை:—நித்திரை தெளிந்துந் தெளியாவிடத்திற் றோன்றுஞ் சுகமாம்.

வினா:—முக்கியானந்தமாவது யாது?

விடை:—ஸ்தானாஸ்தானமில்லாத உபேக்ஷாபுத்தி (விருப்பு வெறுப்பின்றிய வுணர்ச்சி) யிற் றோன்றுஞ் சுகமாம்.

வினா:—நிஜானந்தமாவது யாது?

விடை:—யோகாப்பியாச பலத்தால் மனோலயமான விடத்திற்றோன்றுஞ் சுகமாம்.

வினா:—ஆத்மானந்தமாவது யாது?

விடை:—பிரியமான வனிதாதி விஷயமத்தியிற் றானே பிரிய சொரூப மென்றறிந்த விடத்திற் றோன்றுஞ் சுகமாம்.

வினா:—அத்வைதானந்தமாவது யாது?

விடை:—தன (ஆத்மாவு)க் கன்னியமான நாமரூபப் பிரபஞ்ச மெல்லா மித்தை; தானே சத்தியவஸ்துவென்னும் விவேகத்திற் றோன்றுஞ் சுகமாம்.

வினா:—நித்தியானந்தமாவது யாது ?

விடை:—தத்வமஸியாதி மகாவாக்கிய ஜன்னிய வபரோக்ஷஞானத்திற் றோன்றுஞ் சுகமாம்.

வினா:—இவ் வஷ்டவிதா னந்தத்தையு முபாதியா னந்தமென்ற தென்னை?

விடை:—இவை சமுத்திரத்தி லலை முதலியவற் றைப்போற் பரமானந்த சமுத்திரத்தி லேகதேசமா கத் தோற்றி யழிவதாலாம்.

வினா:—பிரஹ்மத்திற்குச் சொன்ன விலக்கணத் தில் முத்தோஷங்களு மில்லையென்ப தெப்படி?

விடை:—குறிப்பிட்ட விலக்கியமாகிய பிரஹ்மத் திற்குக் கூறிய சச்சிதானந்தாதி யிலக்கணம் குறிப்பி டப்படாத மற்றை யிலக்கியங்களாகிய பிரகிருதி முத லிய தத்துவங்களுள் ஒன்றற்கேனு மில்லாமையா லதி வியாப்தி தோஷமும், பிரஹ்ம வியாபகத்தில் குறைவு படாம லெப்போதும் பூரணமாக விருத்தலால் அவ் வியாப்தி யசம்பவ தோஷங்களு மின்றாம்.

வினா:—அதிகாரி (முமுட்சுக்) கள் குருமுகமாகச செய்யத்தக்க சிரவணாதி பஞ்சக மெவை?

விடை:—சிரவணம், மனனம், நிதித்தியாசனம், ஸமாதி, சாக்ஷாத்காரமென்னு மைந்துமாம்.

வினா:—சிரவணமென்பது யாது?

விடை:—குரு சந்நிதானத்தில் பிரஹ்மாத்ம வைக்கியத்தைக் கூறு முபநிஷத் வாக்கியார்த்தத்தை ஷட்வித லிங்கதாற்பரியத்தால் நிச்சயஞ்செய்வதாம்.

வினா:—மனனமென்பது யாது?

விடை:—அச்சுருதியர்த்தத்தை ஜீவப்பிரஹ்மங்களின் அபேதத்திற்குச் சாதகமாயும் பேதத்திற்குப் பாதகமாயுமுள்ள தர்க்க அநுமான யுக்திகளால் சிந்தனை செய்வதாம்.

வினா:—நிதித்தியாசனமென்பது யாது?

விடை:—அந்நிச்சயமான வர்த்தத்தில் சித்தம் நிச்சலமாயிருப்பது; அஃதாவது பஞ்சயோகாநு சந்தான பலத்தால் அனாத்மாகார விருத்தியின் மறைப்பின்றிய பிரஹ்மாகார விருத்தியின் ஸ்திதியாம்; அல்லது திரிபுடியின் விளக்கத்தோடு கூடிய சவிகல்ப ஸமாதியாம்.

வினா;—ஸமாதியென்பது யாது?

விடை:—அஷ்டாங்க யோகாநுசந்தான பலத்தாலுண்டாகுமந்த நிதித்தியாசன பரிபாகாவஸ்தையாகிய திரிபுடி ரஹிதமான நிருவிகல்ப ஸமாதியாம்.

வினா:—சாக்ஷாத்காரமென்பது யாது?

விடை:—அந்த நிருவிகல்ப ஸமாதியின் பரிபாகாவஸ்தையாகிய அத்வைதாவஸ்தானரூப நிருவிகல்ப ஸமாதியாம். இதனை நிரியாண நிஷ்டை யென்றுங் கூறுவர்.

வினா:—சிரவணத்திற்குச் சககாரி (சகாயி) களான ஷட்வித லிங்கங்க ளெவை?

விடை:—உபக்கிரமம் உபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உபபத்தியென்னு பாறுமாம்.

வினா:—உபக்கிரமமாவது யாது?

விடை:—பிரகரணத்தி னாரம்பத்தில் அதிஷ்டா னாரோப (காரண காரிய)ங்களை விளக்கிக் காட்டுவது; அஃதாவது அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பிரஹ்மத்தின்கண் இரஜ்ஜுவின்கண் சர்ப்பந் தோன்றினாற் போலச் சகல பிரமாண்ட பிண்டங்களாகிய நாமரூப ஜகத்துண்டாயிற்று. இந்தச் சிருஷ்டிக்கு முன் பிரஹ்மம் பேதரகிதமாய்ச் சத்தாமாத்திரமா யிருந்ததென்று பிரிதிபாதிப்பதாம்.

வினா:—உபசங்கார மாவது யாது?

விடை:—பிரகரணத்தின் முடிவில் ஆரோபத்தை யதிஷ்டானத்தி லொடுக்கிக் காட்டல்; அஃதாவது உற்பத்தியான ஸகல ஜகத்தையும் அபவாத(தெளிவு)க்கிரமமாக ஒடுக்கிப் பிரமாண்ட பிண்டங்களென்னு முபாதியினாற் பிரஹ்மத்திற்குங் கூடஸ்தனுக்கு முள்ள வுபாதிகளை யொழித்து ஏகத்துவமென்னு மைக்கியத்தைக் கூறுவதாம். ஆரம்பத்திற் சொல்லிய வர்த்தமே முடிவிலுஞ் சொல்லப்படு கின்றமையின் உபக்கிரம உபசங்காரமாகிய விரண்டு மொரேலிங்கமாம்.

வினா:—அப்யாசலிங்கமாவது யாது?

விடை:—அவற்றி னிடையில் பிரத்யகாத்மாவே (கூடஸ்தனே) பிரஹ்மமென்று அத்வைதார்த்தத்தை யடிக்கடி யுணர்த்து (போதித்)தல்; அஃதாவது யாசகன் றன்பிரயோசனமான வொரே கருத்தை வெவ்வேறு வசனங்களால் வெளியிடுவதுபோல வெவ்வேறு யுக்திகளால் அத்வைத பிரஹ்மத்தைப் பிரதிபாதிப்பு தாம். சாம வேதத்தின் சாந்தோக்கியோப நிஷத்தின் ஆறுவதத்தியாயத்தில் உத்தாலகமுனிவர் தமது புத்திரனாகிய சுவேதகேதுவுக்குப் பிரத்தியகாத்மாவாகிய நீயே பிரஹ்மமென்று ஒன்பது பிரகாரமாக உபதேசித்திருக்குமா றிங் கறியத்தக்கதாம்.

வினா:—அபூர்வதை லிங்கமாவது யாது?

விடை:—பிரத்தியகாத்மாவாகிய பிரஹ்மம் ஸ்வயம் பிரகாசமா யிருத்தலால் பிரமாணகோடிகளுள் உபநிஷத் பிரமாணத்தினு லறியப்படுவதன்றி மற்றை (பிரத்தியக்ஷாதி) ப் பிரமாணங்களினு லறியப்படா தென்று பிரதிபாதிப்பதாம்.

வினா:—பல லிங்கமாவது யாது?

விடை:—பிரத்யகாத்மாவாகிய பிரஹ்மம் எல்லாமாய் நிறைந்திருக் கின்றமையின், அதனையறிந்தாற் சகலமு மறிந்ததாமென்றும் 'அத்வைத பிரஹ்மஞானத்திற்கு ஜன்மாதியனர்த்த நிவிருத்தியும் ஆனந்தப்

பிராப்தியுமாகிய மோக்ஷம் பயனுமென்றும் பிரதி பாதிப்பதாம்.

வினு:—அர்த்தவாத லிங்கமாவது யாது?

விடை:—ஸ்துதியை அல்லது நிந்தையை யறிவிக்கும் வாக்கியம் அருத்த வாதமாம். பிரத்தியகாத்ம சொரூபமாகிய நிருவிகாரப் பிரஹ்மத்திற்குச் சிருஷ்டியாதி ஜகத்துச் சிந்தனே (லீலே)யென்னும் நியாய மிருத்தலின், ஜகத்சிருஷ்டியாதி அனுக்கிரகாந்தமான பஞ்சகிருத்திய கர்த்திருத்துவத்தைப் பேதஞானத்தினிந்தை அபேதஞானத்தின் ஸ்துதி வாயிலாகப் பிரதி பாதிப்பதாம்.

வினு:—உபபத்திலிங்கமாவது யாது?

விடை:-சாஸ்திரங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட அத்வைதார்த்தத்திற்கு அநுகூலமாயுள்ள திருஷ்டாந்தங்கள் யுபபத்தியெனப்படும்; அஃதாவது கடபடங்களுக்கு மண்ணும் நூலும், தந்துவிற் கூர்ண நாபி (நூலுக்குச்சிலந்திப் பூச்சி) யும் காரணமாதற்போல ஜகத்திற்குப் பிரஹ்மம் (அபின்ன நிமித்தோபாதான) காரணமென்னு மபேதத்தைப் பிரதிபாதிப்பதாம். இவ்வாறு சிரவணசககாரி (அநுகூலி) களான ஆறுலிங்கங்கள் சொல்லப்பட்டன.

வினு:—பிரமாணமென்று லென்ன? அஃதெத்தனே வகை? யார்யார் எவ்வெவ் பிரமாணங்களே யங்கீகரித்திருக்கின்றனர்?

விடை:—பிரமையின் காரணம் பிரமாணம். பிரமை யதார்த்தாநுபவம். அந்தப்பிரமாணம்ஆறுவகைப்படும். இவற்றுள்,சார்வாகர் பிரத்தியட்சப் பிரமாணத்தையும், கணாதரும் பௌத்தரும் பிரத்தியட்சப் பிரமாணத்தையும் அநுமானப் பிரமாணத்தையும், சாங்கியர் பிரத்தியட்சம் அநுமானம் சாப்தமென்னும் மூன்று பிரமாணத்தையும், ஜைனரும் நையாயிகரும் பிரத்தியட்சம் அநுமானம் உவமானம் சப்தமென்னும் நான்கு பிரமாணத்தையும், பிரபாகரர் பிரத்தியட்சம் அநுமானம் உவமானம் சப்தம் அர்த்தாபத்தி யென்னும் ஐந்து பிரமாணத்தையும், பட்டரும் வேதாந்திகளும் பிரத்தியட்சம் அநுமானம் உவமானம் சப்தம் அருத்தாபத்தி அநுபலப்தியென்னும் ஆறு பிரமாணத்தையும் அங்கீகரித்திருக்கின்றனர்.

வினா:—பிரத்தியக்ஷப் பிரமாணம் யாது?

விடை:—பிரத்தியட்சப் பிரமையின் காரணம் பிரத்தியட்சப் பிரமாணமாம். கடமுதலியவற்றைக் காணுமிடத்து நேத்திரமுதலிய இந்திரியங்களே பிரத்தியட்சப் பிரமாணமாம். இது கடமென் றறியுமிடத்து நேத்திரேந்திரியம் பிரமாணமும், கடம் பிரமேயமும், அதன்ஞானம் பிரமையுமாம்.

வினா:—அனுமானப்பிரமாணம் யாது ?

விடை:—அனுமிதிப் பிரமையின் காரணம் அநுமானப்பிரமாணமாம். இலிங்கஞானத்தாற் றோன்றும்

ஞானம் அநுமிதியாம். மலையில் புகையின் பிரத்தியட்ச ஞான முண்டானவிடத்துத் தீயின்ஞான முண்டாகின் றது.புகையின் ஞானம் இலிங்கஞானமாம். அஃது அநு மானப் பிரமாணமாம். அதனாலுண்டாகும் வன்னியின் ஞானம் அநுமிதியாம். அவ்வனுமானம் பிரதிஞ்ஞை, ஹேது, திருஷ்டாந்தமென்னும் மூன்று அவயவங்களை யுடையதாம். வருமாறு:—இம்மலை தீயுடைத்து; புகை யுடைமையால்; அடுக்களைபோல வென்பது.

வினா:—உவமானப் பிரமாணம் யாது?

விடை:— உவமிதிப்பிரமையின் கரணம் உவ மானப் பிரமாணமாம். நகரத்தில் கோவியக்தியை (ஆவின்பிண்டத்தை)க் காண்பவன் வனத்திற்சென்று கவயத்தை (காட்டுப்பசுவை)க் காணுமிடத்து அவ னுக்கு இப்பசு ஆவை யொத்த தென்னும் பிரத்தி யட்ச ஞானமுண்டாகின்றது; அதன்பின் என் ஆ இப் பசுவை யொத்ததாமென்னும் ஞானமுண்டாகின்றது. ஈண்டுக் கவயத்தில் ஆ வொப்புமையின் ஞானம் உவ மானப் பிரமாணமும், ஆவில் கவயத்தின் சாதிருசிய ஞானம் உவமிதியுமாம். பேதசகித சமான தருமம் சாதிருசியமெனப்படும்.

வினா:—சப்தப்பிரமாணம் யாது?

விடை:—சாப்திப் பிரமையின் கரணம் சப்தப் பிரமாணமாம். யதார்த்தத்தினைக் கூறுவோன் வாக்யம் சப்தப்பிரமாணமாம். அதனாலுண்டாகும் ஞானம் சாப்

திப்பிரமையாம். ஈண்டு ஈய்வாறாற் சொல்லப்பட்ட வேதங்களும் அவற்றை மூலமாகவுடைய சாஸ்திரங்களும் பிறவும் சப்தப் பிரமாணங்களாம். "வஜ்ஜிரஹஸ்தன் புரந்தரன் என்பது" வைதிகவாக்கியமும், "ஆற்றங்கரையி லிரண்டுபழங்க ளுள" என்பது லௌகிக வாக்கியமுமாம்.

வினா:—அருத்தாபத்திப் பிரமாணம் யாது?

விடை:—அர்த்தாபத்திப் பிரமையின் கரணம் அர்த்தாபத்திப் பிரமாணமாம்.உபபாதக கற்பனைக்கேது வாகிய உபபாத்திய ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமாம். உபபாதக ஞானம் அர்த்தாபத்திப் பிரமையாம் எஃதின்றி எது சம்பவியாதோ அதற்கு அஃதுபபாத்திய மெனப்படும். இராத்திரி போஜன மின்றிப பகலுண்ணாப் புருடனிடத்துப் பருமை சம்பவியாதாதலின் இராத்திரி போஜனத்தின் உபபாத்தியம் (சம்பாத்தியம்) ஸ்தூலத் தன்மையாம். எத னபாவத்தால் எதன் அபாவ முண்டாகின்றதோ அஃது அதன் உபபாதகமாம். இராத்திரி போஜனத்தின் அபாவத்தால் பகலுண்ணாதானுக்கு ஸ்தூலத் தன்மையின் அபாவமிருத்தலின் இராத்திரிபோஜனம் ஸ்தூலத்தன்மையின் உபபாதக (சம்பாதக) மாம். இங்ஙனம் உபபாத்தியத்தின் அனுபபத்தியின் ஞானத்தினல் உப பாதகத்தைக் கற்பித்தல் அருத்தாபத்திப் பிரமையாம். உபபாதக கற்பனைக் கேதுவான உபபாத்தியத்தின் அனுப பத்தி

(பொருந்தாமை) யின் ஞானம் அருத்தாபத்திப் பிரமாணமாம். அர்த்தாபத்தி என்பது அர்த்தஸ்ய†ஆபத்தி எனப் பிரிபடும்; அதன் பொருள் அர்த்தத்தின் கற்பனையென்பது.

வினா:—அனுபலப்தி (அபாவ)ப் பிரமாணம் யாது?

விடை:—அபாவப்பிரமையின் காரணம் அநுபலப்திப் பிரமாணமாம். அபாவத்தின் யதார்த்தஞானம் எதனு லுண்டாகின்றதோ அஃது அநுபலப்திப் பிரமாணமாம். ஈண்டுக் கடமில்லை யென்னுமிடத்து அதற்குக் கடம் விளங்காமையே அநுபலப்திப் பிரமாணமாம். உபலப்தி - விளக்கம்; அநுபலப்தி-விளங்காமை. சம்பவம் ஐதிகமென்றற் றொடக்கத்துப் பிரமாணங்களும் இவ்வாறனுள் அந்தர்க்கதமாம்.

இவ்வாறு பிரமாணங்களின் நிரூபணம் மிகு சுருக்கமாகச் சொல்லப்பட்டது; இவற்றின் விரிவை வேதாந்த பரிபாஷை முதலியவற்றிற் காண்க.

வினா:—ஆத்மா உபநிஷத்துப் பிரமாணங்களாலன்றி யேனைய பிரமாணங்கட்கு விஷயமாகா தென்பதெப்படி?

விடை:—(1) சப்த பரிசமுதலிய குணங்கள் பிரஹ்மத்தினிடத் தின்மையின் அது கட படம்போன்று பிரத்தியட்சப் பிரமாணத்திற்கு விஷயமன்றாம்; (2) குணங்குறி முதலியனவற்ற ஆத்மாவிற்குக் காரிய லிங்கமின்

மையின் அஃது அநுமானப் பிரமாணத்திற்கும் விஷயமன்றும்; (3) சாதிருசிய மின்மையின் உவமானப்பிரமாணத்திற்கும் விஷயமன்றும்; (4) ஜாதி குணக் கிரியைகளின்மையின் சப்தப் பிரமாணத்திற்கும் விஷய மன்றும்; (5) உபபாதக தர்மமின்மையின் அர்த்தா பத்திப் பிரமாணத்திற்கும் விஷயமன்றும்; (6) யதார்த்த பாவவடிவமாயிருத்தலின் அநுபலப்திப் பிரமாணத்திற்கும் விஷய மன்றும்.

வினா:—இங்ஙனமாயின் உபநிஷத்துக்களின் வாயிலாகப் பிரஹ்மம் அறியப்படு மென்பது எங்ஙனம் பொருந்தும்?

விடை:—உபநிஷத்து வாயிலாக லட்சியார்த்தமாயறியப்படுதலின் தவறின்றும்.

பிரமாணங்கள் ஆத்மாவால் விளங்கு வனவாம்; ஆத்மாவோ சொப்பிரகாசமாம். ஆதலால் அஃது எப்பிரமாணங்களாலு மறியப்படா தென்று கூறப்படுகின்றது.

இப் பிரமாணங்கள் வேதாந்தார்த்தத்தை யநுசரித்து அங்கீ கரிக்கப் படுகின்றன வன்றிச் சுதந்திரமாக அங்கீகரிக்கப் படுவனவல்ல.

வினா:—அஃதெப்படி?

விடை:—(1) "நினைவரிய வொருபிரமம் நீ யே யென்று" குரு வுபதேசித்த காலத்தில் சிஷ்யனுக்கு நான் பிரஹ்மமென்னும் பிரத்தியட்ச ஞான முண்டாத

வின் ஈண்டு குருவின் உபதேசவாக்கியம் பிரத்தியட்சப் பிரமாணமாம்.

(2) ஜீவன் பிரஹ்மா பின்னன்; சச்திதானந்த வடிவமா யிருத்தலின்; ஈசுவர சேதனம்போல என்பது அநுமானப் பிரமாணமாம்.

(3) அசங்கத் தன்மை முதலிய தர்மங்களால் ஆத்மா ஆகாயத்திற் கொத்தது என்புழி ஆகாயத்தில் ஆத்மாவின் ஒப்புமை ஞானம் உவமானமும், ஆத்மாவில் ஆகாயத்தின் ஒப்புமை ஞானம் உவமிதியுமாம்.

(4) தத்துவமஸி முதலிய மகா வாக்கியங்களின் லக்ஷணாவிருத்தியால் பிரத்திய காத்மா பின்னப் பிரஹ்மத்தின் பிரமை யுண்டாதலின் பிரஹ்மம் சப்தப் பிரமாணத்திற்கு விஷயமாம். இதற்கு "அந்த உபநிஷத்திலறியப்படும் பிரஹ்மத்தை யான் கேட்கின்றேன்" என்னும் சுருதி பிரமாணமாம்.

(5) "தரதிசோகம் ஆத்மவித்-ஆத்மஞானி சோகத்தைக் கடக்கின்றான்" என்னுமிடத்து ஞானத்தினல் சோகநிவிர்த்தி சுருதமாம். அது சோகத்தின் மித்தியாத் தன்மையின்றிச் சம்பவியாது. ஆதலால் ஞானத்தால் சோகநிவிர்த்தியின் அநுபபத்தியால் பந்தமித்தியாத் தன்மையின் கற்பனை சம்பவிக்கின்றது. பந்தமித்தியாத் தன்மை உபபாதகமும் ஞானத்தாற் சோக நீங்குதல் உபபாத்தியமுமாம். சுருதம்—கேள்வி.

(6) "நேகநாநாஸ்தி கிஞ்சநா—ஈண்டு நாநாவென்பது சிறிதுமில்லை" என்னும் சுருதி பிரபஞ்சத்தின் முக்காலத் தின்மையைப் பிரதிபாதிக்கின்றது. அநுபவ சித்தமாயுள்ள பிரபஞ்சத்திற்கு முக்காலத் தின்மை பொருந்தாமையின் பிரபஞ்சத்தை அது சொரூபமாக நிஷேதஞ் செய்வதில்லை. ஆனால், அது பிரபஞ்சம் பாரமார்த்திகமன் றாதலின் பாரமார்த்திகத் தன்மையோடு கூடிய பிரபஞ்சத்தின் முக்காலத் தின்மையைக் கூறுகின்றது. இதனால் பாரமார்த்திகத் தன்மை விசிஷ்டப் பிரபஞ்சாபாவம் சுருதிசித்தமாம். அஃது அநுபலப திப் பிரமாணத்தினாலும் சித்தமாம். பாரமார்த்திகத் தன்மை விசிஷ்டப் பிரபஞ்சமிருப்பின் எங்ஙனம் வியாவகாரிகப் பிரபஞ்சத்தின் உபலப்தி சொரூபமாக விருக்கின்றதோ அங்ஙனமே பாரமார்த்திகப் பிரபஞ்சத்தின் உபலப்தியு மிருத்தல் வேண்டும். சொரூபமாகப் பிரபஞ்சத்தின் உபலப்தி யிருக்கின்றது; பாரமார்த்திக வடிவத்தால் பிரபஞ்சத்தின் உபலப்தியுண்டாவதில்லை; ஆதலால் பாரமார்த்திகத் தன்மை விசிஷ்டப் பிரபஞ்சத்தின் அபாவ மிருக்கின்றது. இவ்வாற்றால் பிரபஞ்சாபாவத்தின் ஞானம் அநுபலப்திப் பிரமாணத்தினா லுண்டாகின்றது.

சந்தேகவிபரீதப் பிரத்தியட்ச முதலியன அயதார்த்தமாம்.

இவற்றின் விரிவை விருத்திப் பிரபாகரத்திற் காண்க.

வினா:—மனனசகாயத்திரய மெவை ?

விடை:—தர்க்கம், அநுமானம், யுக்தி யென்னு மூன்றுமாம்.

வினா:—தர்க்க மென்பது யாது?

விடை:—ஆத்மாநாத்ம விசார வினவிடை ரூபமாகிய அபேதசாதக பேதபாதகமான நியாய சல்லாபமாம்.

வினா:—அபேசதாதக தர்க்கமாவது யாது ?

விடை:—ஜடசேதன (சராசர) வடிவ ஜகத்து யாதாகுமெனவாசங்கை நிகழ்ந்தபோது அறிவையன்றிக் காணப்படாமையின் அஃதறிவாகிய பிரஹ்ம சொரூபமேயாகும். அங்ஙன மறிவையன்றிக் காணப்படாவிடினும் அறிவோடு சேர்ந்து காணப்படுகிறதே யெனின், அதுவுமிருக்கிறது விளங்குகிறது நன்றாயிருக்கிறதெனப் பிரஹ்மத்தின் சச்சிதானந்த சொரூபமாகவே காணப்படுகிறது. சச்சிதானந்தத்தோடு நாமமும் ரூபமும் காணப்படுகின்றனவே யெனின்; தங்கத்திற்கடகமென்னு நாமமும் வளையமாயுள்ள ரூபமுந்தோன்றினு மவை தங்கத்துக் கன்னியப் பொருளாகாமல் எப்படித் தங்கமே யாமோ, மண்ணிற் கடமென்னு நாமமும் வட்டவடிவாகிய ரூபமுந்தோன்றினு மவை மண்ணிற் கன்னியப் பொருளாகாமல் எப்படி மண்ணே

யாமோ அப்படி நாமரூபங்கள் தோற்றினு மவை சச்சிதானந்த சொரூபமாகிய பிரஹமத்திற் கன்னியப் பொருளாகாமற் பிரஹம சொரூபமே யாமென்றற் றொடக்கத்த சல்லாபமாம்.

வினா:—பேதபாதக தர்க்கமாவது யாது?

விடை:—ஜடசேதன வடிவ ஜகத் திருக்குங்காற் பிரஹ்மமெங்ஙன மத்துவிதமாமென் றுசங்கை நிகழ்ந்துழி ஜகத்தென்பது பொருளாகாமையின் பிரஹ்மம் அத்துவிதமேயாம். ஜகத்துப்பொரு ளல்லவென்பதேதனாலெனின்? தனக்கெனவடிவமொன்றின்றி யிருத்தலினாலாம். எங்ஙனமெனின், எது முன்னும் பின்னுமில்லாததோ அது மத்தியிலுமில்லாததே யாமென்னுநியாயவாயிலாக ஆராயுமிடத்து ஜகத்து சிருஷ்டிக்கு முன்னும் பிரளயத்திற்குப் பின்னுமில்லாததேயாம். உலகு மத்தியிற்றோன்றலின். இல்லாதது தோன்றுமாவெனின்? நினைப்பிற்கு முன்னும் பின்னுந் தோற்றவில்லை; மத்தியில் மாத்திரந் தோற்றுகின்றது. அங்ஙனந் தோற்றுகிறது கயிற்றரவு சொப்பன பதார்த்தம்போல மித்தியாப் பொருளேயாகும்; ஆதலால் பிரஹ்மம் அத்துவிதமே யாகுமென்றற் றொடக்கத்த சல்லாபமாம். அநிஷ்டத்தைச் சம்பாதிப்பது தருக்கமெனப்படும்.

வினா:— அபேதசாதக அநுமானாதி யுக்திகளெவை?

விடை:—எது சச்சிதானந்த சொரூபமோ அது பிரஹ்மத்திற் கன்னியமன்று; எது சச்சிதானந்த சொரூப மல்லவோ அது பிரஹ்மத்திற்கு வேறும். ஆதலின் ஈசுவரன் சச்சிதானந்த சொரூபமாயிருப்பதாற் பிரஹ்மத்திற் கன்னியமாகான்; உலகம் வியவகாரதசையிற் சச்சிதானந்த சொரூப மல்லாமையாற் பிரஹ்மத்திற் கன்னியமாம்; ஜீவன் சச்சிதானந்த சொரூபமா யிருப்பதாற் பிரஹ்மத்திற்கு அன்னியமல்லவென்னுமனுமானப் பிரமாணயுக்தியும்-கடாகாசத்திற்கும்மடாகாசத்திற்கும் கடமட வுபாதிகளை நீக்கிப் பார்க்கிற் பேதமில்லாமை போலப்புத்தி மாயையென்னு முபாதிகளை நீக்கிப்பார்க்கில் ஜீவப் பிரஹ்மங்களுக்குப் பேதந்தோன்றுகிற தில்லையென்னு முவமானப் பிரமாணயுக்தியும்- "ஈண்டு நாநா வென்பது சிறிது மில்லை" யென்னுஞ் சுருதியிற் பேதம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது; உண்மையி லபேதமில்லாத பக்ஷத்தில் இச்சுருதிவாக்கிய மிருத்தற்கு நியாயமின்று; ஒருவனை யுபவாசி யென்பது அவனுடைய ஸ்தூல பீனத்துவத்தால் நீங்குவதுபோலப் பேதமானது இச் சுருதியினா னீங்குகின்ற தென்னும் அர்த்தாபத்திப் பிரமாண யுக்தியுமாகிய மூன்றுமாம.

வினா:—பேதபாதக அனுமானாதி யுக்திகளெவை?

விடை:—ஜீவப் பிரஹ்மங்களின் பேதம் உபாதி சம்பந்தமா யிருத்தலால் மித்தையாம்; எது மித்தை

யன்றோ அது ஔபாதிக (உபாதி சம்பந்த)மு மன்று. வியவகாரதசையில் கடபடங்களின் பேதம் ஔபாதிகமாக வில்லாமையிற் சத்தியமா யிருக்கிறது. ஆகையாலெவ்விடத்தில் உபாதிசம்பந்த மிருக்கிறதோ அவ்விடத்திற் பேதமு மித்தையாக விருக்கிறதென்னு மனுமானப் பிரமாண † யுக்தியும்-பிம்பப் பிரதி பிம்பங்களின் பேதம் மித்தையா யிருப்பதுபோல ஜீவப் பிரஹ்மங்களின் பேதமுமித்தையென்னு முவமானப் பிரமாண யுக்தியும்-மகா வாக்கியங்களில் ஜீவப் பிரஹ்மங்களின் அபேதஞ்சொல்லப்படுகிறது, உண்மையிற் பேதம் மித்தையாக வில்லாத பக்ஷத்தில் மகாவாக்கியங்களில் அபேதம் பிரதிபாதிக்கப்பட்டிராது; பிரதிபாதிக்கப்பட்டிருத்தலால் அபேதஞ் சித்திக்கிற தென்னு மர்த்தாபத்திப் பிரமாண யுக்தியும், சாக்கிர சொப்பனங்களில் உபாதியால் ஜீவப் பிரஹ்மங்களின் பேதந் தோன்றுகிறது; சுழுத்தியி லுபாதி யில்லாததினாற் பேதந் தோன்றுகிற

---

† இதுகூடும் இது கூடாதெனத் தன் கண்ணே தோன்றுவது யுக்தியாம். இது பொருந்துமா றென்றுஞ் சொல்லப்படும். இது கூடும் என்பது அந்வயம் (உடம்பாடு), இது கூடாது என்பது வியதிரேகம் (எதிர்மறை). அது (மண்ணாகிய காரணம்) இருந்தால் அது (கடமாகிய காரியம்) இருத்தல் அந்வயமாம். அஃதில்லாதிருக்க அஃதில்லாதிருத்தல் வியதிரேகமாம். அந்வயம் வியதிரேகம் என்னு மிரண்டங்களோடு கூடியது யுக்தியாம்.

தில்லை. ஆகையால் ஜீவப் பிரஹ்மங்களுக்குப் பார மார்த்திகத்திற் பேதமில்லையென்னு மனுபலப்திப் பிர மாண யுக்தியுமாகிய நான்குமாம்.

வினா:—நிதித்தியாசன சகாய யோக பஞ்சக மெவை?

விடை:—மந்திரயோகம், பரிசயோகம், பாவயோ கம், அபாவயோகம், மகாயோகமென்னு மைந்துமாம்.

வினா:—மந்திரயோக மென்பது யாது?

விடை:—பிரணவாதி மந்திரங்களின் அனுசந்தா னத்தாற் பிரஹ்மத்தில் மனம் லயிப்ப (அடங்குவ)தாம்.

வினா:—பரிசயோகமென்பது யாது?

விடை:—பிரணவ சிந்தனையோடு மனமும் பிரா ணனு மொன்றாகி மூலாதாரத்திலிருந்து இடைகலை பிங் கலை மார்க்கங்களை யடைந்து சுழுமுனை யென்னு நாடி மார்க்கமாக ஆறுதாரங்களையுங் கிரமமாகக் கடந்து சென்று பிரஹ்ம ரந்திரத்துட் புகுந்து சிரோமத்திய தேசத்திற் பூரணமாகி நிறைந்துள்ள ஆத்மப் பிரகாசத் தில் மனமடங்குதலாம்.

வினா:—பாவயோக மென்பது யாது?

விடை:—சுவர்க்கம், திசைகள், சந்திரசூரியர்கள், அக்கினி, ஆகாயம், பூமியெ (பாதலமெ)ன்னு மிவற்றை முறையே சிரசு, இருசெவிகள், இருகண்கள், முகம், உந்தி, இருபாதங்களாகவுடைய ஈசுவரனது அளவு

படாத விராட் புருஷவடிவத்தை யாயினும், அல்லது சதுர்ப்புஜ திரிநேத்திர சங்குசக்கர மான் மழுமுதலிய அளவுபட்டுள்ள விசேஷ சின்னங்களோடு கூடிய ஈசுவரனது திவ்யமங்கள வடிவத்தையாயினும் தியானித்து அவ்வடிவங்களிலுள்ள வவயவங்களை யொவ்வொன்றாக நீக்கிப் பின்னர் நீக்கப்படாமற் சேஷித்து நின்ற அவயவியாகிய பிரஹ்மத்தில் மனமடங்குதலாம்.

வினா:—அபாவயோக மென்பது யாது?

விடை:—அபேதஞானயுக்தி யுக்த (யுக்தி சகித) சிந்தனையாற் கரணங்களுக் ககோசரமாயுள்ள அதீதப் பிரஹ்மத்தில் மனமடங்குதலாம்.

வினா:—மகாயோகமென்பது யாது?

விடை:—சிருஷ்டிப்பிரளயங் (சாக்கிர சுழுத்தி) களிலும் அறிவறியாமைகளிலும் தனக்கொரு கெடுதியுமின்றி யொருதன்மையாகவே யிருக்கின்ற பிரஹ்மானந்தத்தில் மனமடங்குதலாம்.

வினா:—ஸமாதி ஸகாய யோகாஷ்டகங்க ளெவை?

விடை:—இயமம், நியமம்; ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், ஸமாதி யென்னு மெட்டுமாம். இவற்றைச் சமாதிப் பிரகாணத்திற் காண்க.

வினா:—அபவாதமாவது யாது?

விடை:—இரஜ்ஜுவில் இரஜ்ஜுவைப்போல வஸ்துவை வஸ்துவா (பிரத்திய காத்மாவுக் கபின்னமான பிரஹ்மத்தைப் பிரஹ்மமா) கக் கூறுவது: அஃதாவது சர்ப்பத்தையு மதன் ஞானத்தையும் பாதி (மித்தை யென நிச்சயி)த்தலால் ரஜ்ஜுவாகிய அதிஷ்டான மவ சேஷமா (மிஞ்சு) வது போலப் பிரபஞ்சத்தையு மதன் ஞானத்தையு நியாயஞ் சோதனை பொருத்தவாயிலாகப் பாதித்தலால் அதிஷ்டானமாகிய சுத்தப் பிரஹ்ம மிஞ்சுவதாம்.

வினா:—பிரபஞ்ச சோதனையாவது யாது?

விடை:—எது உற்பத்திக்கு முன்னும் நாசத்திற்குப் பின்னுமில்லையோ அஃது இப்போது மில்லாததே யாம். எது முக்காலத்திலுமில்லையோ அஃது அனாத்மா வாமென்னு நியாயமுகத்தாற் பதார்த்த சோதனை செய்யப் புகுமிடத்துச் சர்வ பதார்த்தங்களிலும் அஸ்தி, பாதி, பிரியம், நாமம், ரூபமென்னும் பஞ்சாமிச (ஐந்திலக்கண)ங்க ளிருக்கின்றன. அவற்றுள், அஸ்திபாதிப் பிரியமூன்றுந் திரிகாலத்தினு முண்மையின் அவை ஆத்மலக்ஷணமாம். நாமரூப மிரண்டும் அங்ஙன மின்மையின் அவை அனாத்ம லக்ஷணமா மென் றிந்த நியாய வாயிலாக ஆராய்தல் சோதனையாம். அதன் முடிந்த முடிவே பொருத்தமாம்.

வினா:—பிரபஞ்ச சோதனைக்குத் திருஷ்டாந்தம் யாது?

விடை:—கடமிருக்கிற தென்பது அஸ்தியு (ஸத்து)ம், கடம் விளங்குகிற தென்பது பாதியு (சித்து) ம், கடம் (நீர்முகத்தற் குபயோகமாக விருத்தலாற்) பிரியமாயிருக்கிறதென்பது பிரிய (ஆநந்த)முமாம். இம்மூன்றும் ஆத்ம லக்ஷணமாம். குடமென்னு மூன்றெழுத்து நாமமும், வாய்குவிந்து வட்டவடிவு (பண்டியு)டைமை ரூபமுமாம்;இவ்விரண்டு மனாத்மலக்ஷணமாம். படமிருக்கிறதென்பது அஸ்தியும், படம் விளங்குகிறதென்பது பாதியும், படம்(உடம்பை மறைத்தற் குபயோகமாயிருத்தலாற்) பிரியமாயிருக்கிறதென்பது பிரியமுமாம்; இம்மூன்றும் ஆத்மலக்ஷணமாம்.படமென்னு மூன்றெழுத்து நாமம் அதற்குரிய ரூபம் (வடிவம்) என்னு மிவ்விரண்டும் அனாத்ம லக்ஷணமாம். கடமென்னு நாமமு மதற்குரிய ரூபமும் படத்திலில்லை; படமென்னு நாமமு மதற்குரிய ரூபமும் கடத்திலில்லை;ஆனால் அஸ்திபாதிப் பிரியமென்னு மூன்று மிரண்டிடத்தும் அனுகூதமா (உள்ளீடா)யிருக்கின்றன. ஆதலால் நாமரூபமிரண்டு மித்தையாம்; அஸ்திபாதிப் பிரியமூன்றுஞ் சத்தியமாம்; ஆகவே, அஸ்திபாதிப்பிரிய ஆத்மசத்தை (இருப்பை) யன்றி நாம ரூபங்களுக்குச் சத்தையில்லை யென்பதாம்.

வினா:—இதற்குத் தாஷ்டாந்தம் யாது ?

விடை:—அனாத்மரூப தேகாபிமானியாகிய ஜீவன் (1) ஸ்தூலதேக மிருக்கிறதென்பது அஸ்தி, விளங்குகிறதென்பது பாதி, பிரியமாயிருக்கிற தென்பது பிரி

யம் (ஆனந்தம்). (2) சூட்சுமதேக மிருக்கிற தென்பது அஸ்தி, விளங்குகிற தென்பது பாதி, பிரியமா யிருக்கிற தென்பது பிரியம். (3) காரணதேக மிருக்கிற தென்பது அஸ்தி, விளங்குகிற தென்பது பாதி, சுகமாயிருக்கிற தென்பது பிரியம். இம்மூன்றும் ஆத்ம லக்ஷணமாம்; மூன்று தேகமென்னு நாமம் அவற்றிற்குரிய வடிவமென்னு மிரண்டும் அனாத்ம லக்ஷணமாம். இந்த நாமரூபவடிவ ஸ்தூலதேகம் சூட்சும தேகத்திலும், சூட்சுமதேகங் காரணதேகத்திலும், காரணதேகம் அஞ்ஞானத்திலும், அஞ்ஞானம் ஆத்ம (பிரஹ்ம) ஞானத்திலுமில்லை; பிரஹ்மத்தின் அஸ்திபாதிப்பிரியம் இந்த வைந்திடத்து மனுசூதமா (உள்ளீடா)யிருக்கின்றன. ஆதலால் நாமரூபமிரண்டும் மித்தையாம்; அஸ்தி பாதிப்பிரிய மூன்றுஞ் சத்தியமாம். அஸ்திபாதிப் பிரிய வாத்மசத்தையன்றி நாமரூபங்களுக்குச் சத்தையில்லை; தேக (அவஸ்தா)த்திரய நாமரூபப் பிரபஞ்சத்தை விடுவதனாலொன்றுந் தெரியவில்லை யென்னுஞ் சகல பதார்த்தங்களின் அபாவமிருக்கிறது; ஆண்டு அபாவந் தோன்று (விளங்கு)கிறது, அபாவம் (சூனிய வாதிகளுக்குப்) பிரியமா யிருக்கிற தென்னும் அஸ்திபாதிப் பிரியமென்னு மூன்றும் ஆத்மலக்ஷணமாம்; அபாவமென்னு நாமம் சகல வஸ்துக்களின் அபாவ (நிஷேதமுகப் பிரதீதிக்குவிஷய) மான ரூப மென்னு மிரண்டும் அனாத்ம லக்ஷணமாம். அபாவத்தின் நாம ரூபங்களை விடுவதனால்

அபாவத்தன்மையின் சொரூபமான அதிஷ்டானவடிவை சச்சிதானந்த வஸ்துவே யிஞ்ச(இருக்)கிறபடியாற் சத்தாம்; அஃது அபாவத்தின் அபாவத்தன்மையை விளக்குவதாற் சித்தாம்; துக்கத்திற்கு வேறாயிருத்தலால் ஆனந்தமாம். இவ்வாறு சகல நாம ரூபங்களிலும் அனுசூத அவ்வியபிசாரியா (உள்ளீடாய் வேறுபா டற்றதா)ப் நாம ரூபங்களுக் கதிஷ்டானமா யுள்ள பிரஹ்ம மெங்கு மிருக்கின் றமையின் சத்தியமாம். நாமரூபங்கள் பரிச்சின்னமாயும் வியபிசாரியாயு மிருத்தலால் மித்தையாம். இவ்வாறு மண்ணையும் நூலையுமன்றிக் கடபடங்களுக்குச் சத்தை யில்லாமைபோல அஸ்திபாதிப் பிரியரூப பிரஹ்ம சத்தையன்றி நாமரூபப் பிரபஞ்சங்களுக்குச் சத்தை (ஸ்திதி) யில்லை யென்று அபவாதித்துச் சச்சிதானந்தப் பிரஹ்மமே நீ யென்று விளக்கிக் காட்டுவ (போதிப்ப) தே யபவாத யுக்தியாம். இவற்றிற்குப் பிரமாணம் வருமாறு:—

விஞ்ஞானசாரம்.

"மூன்றங்கிசமு மதிட்டான மொழியும்பினிரண் டங்கிசமும்
ஆன்றவதிலா ரோபிதமா மதனுற்சொரூபங் காரணமாய்த்
தோன்றுமுலகு மசத்தாகுஞ் சொரூபமொன்றே சத்தாகும்
ஊன்றிநோக்கி லெக்காலு முளதேதோன்று மிலதிலதே".

ரிபுகீதை.

"இருமையெனத் தோற்றியவிச் சகத்தனைத்து மிருக்கின்ற திலங்குகின்ற தின்பமென்ன, மருவியவிவ் வனுபூதி

யாயுங்காலை மன்னுமதிட் டானத்தின் சுபாவமேயாம், சருவ வதிட் டானபரப் பிரமத்திற்கே சத்திய ஞானானந்தத் தன் மையன்றி, யொருபொழுது மில்லாத வெறும்பொய்யான வுலகத்திற் கோதியவித் தன்மையுண்டோ".

### பிரமகீதை.

"அத்தருசத்தா வாகியபிரம மம்மமண் கடாதியா னாற் போற், சுத்தமாமுனிவீர் பற்பலவான சொரூபங்க ளாய்ப்பரி ணமிக்கும், உத்தமப்பிரமம் பவஞ்சமாய்த்தோன்ற லொளிதரு சுத்திவெண் பொன்னாய், வித்தகமுறத்தோன் றிடுதலே போலும் வேதமு மிங்ஙன முரைக்கும்".

## 4. சமாதிப் பிரகரணம்.

குருவுபதேசம் பெற்றவர்கள் மனோ லயத்திற் கேதுவான சமாதியை அத்தியாவசியகம் அப்பியசிக்கற் பாலதாகலின், அதன்பின்னரிது வைக்கப்பட்டது.

வினா:—சமாதி யென்பது யாது?

விடை:— அது முன்னர்ச் சிரவணாதிகளைப்பற்றிப் பிரதிபாதிக்குமிடத்திற் கூறிய நிதித்தியாசனத்தின் பரிபாகாவஸ்தையாகிய வந்தக்கரண விருத்தியின் நிலைமையாம். அஃதாவது அத்விதீயப் பிரஹ்மத்தின் கண்ணுள்ள வந்தக்கரணத்தின் ஸஜாதீய விருத்திப் பிரவாகத்தின் திடத்தன்மையாம்.

வினா;—ஸமாதியின் அஷ்டாங்க மெவை?

விடை:—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை. தியானம், ஸமாதி யென்னு மெட்டுமாம்.

வினா:—இயமமாவது யாது?

விடை:—அஹிம்சை (கொல்லாமை), சத்தியம், அஸ்தேயம் (திருடாமை), பிரஹ்ம சரியம், க்ஷமை (பொறை), திருதி (தைரியம்), தயை, ஆர்ஜவம் (நேர்மை), மிதாகாரம், பாஹியாந்தர சௌசமென்னும் பத்துமாம்.

வினா:—நியமமாவது யாது?

விடை:—தவம், சந்தோஷம், ஆஸ்திக்கிய (விசுவாச)ம், தானம், ஈசுவரப் பிரணி தானம் (வணக்கம்), சித்தாந்த சிரவணம், இலச்சை, மதி, ஜபம், விரதம் என்னும் பத்துமாம்.

வினா:—ஆசனமாவது யாது?

விடை:—ஸ்வஸ்திகம், கோமுகம், வீரம், கூர்மம், பத்மம், குக்குடம், உத்தானம், கூர்மகம், தனுசம், மத்ஸ்யம், பச்சிமதானம், மயூரம், ஸவம், ஸிம்ஹம், பத்திரம், சித்தம் என்றற் றொடக்கத்து எண்பத்து நான்கு ஆசனங்களாம். அவற்றுள் ஸிம்ஹம், பத்திரம், பத்மம், ஸித்தமென்னு நான்கு முக்கியமாம். அவற்றுள்ளும் ஸித்தாசனம் மிகவுஞ் சிரேஷ்டமாம்.

வினா:—ஸித்தாசனத்தின் இலக்ஷணம் யாது?

விடை:-இடது குதிக்காலைக் குதலிங்கங்களின் மத்தியான யோனியிலழுத்தி, வலது குதிகாலை லிங்கத்தின்மேரி லழுத்திப் புருவ மத்தியிற் றிருஷ்டியை வைத்துக் கட்டைபோ னிமிர்ந்து கம்ப (சலன) மின்றிச் சரீர மிருப்பதாம். சிலரிதை இடது குதிகாலை யோனிஸ்தானத்தில் வைக்காது இலிங்கத்தின் மேரில் வைத்து அதன்மேரில் வலது குதிகாலை வைக்க வேண்டுமென்று வேறுவிதமாகவுங் கூறுவர்.

வினா:—ஸித்தாசனஞ் சிரேஷ்ட மென்பதெதனால்?

விடை:—அநேக ஆசனங்களுள், சித்தாசனம் இலகுவாயும் கிலேச ரஹிதமாயும் ஸமாதிகாலத்த தாயு மிருப்பதால் மிகவுஞ் சிரேஷ்டமாம். இதனை வஜ்ரிராசன மென்றும், முக்தாசனமென்றும், குப்தா சனமென்றும் கூறுவர். ஆசன சித்தியின்பிறகு பிராணு யாமம் அவசியஞ் செய்யத்தக்கதாம்.

வினு:—பிராணுயாமமாவது யாது?

விடை:—பிராணவாயுவின் கதியைத் தடுத்தலாம். இதுவே யோகமெனப்படும். இதனை "உயிர்த்தடைக் கே பெருக வுடைத்தா மியோகப்பேர்" என்று வாசிட்டங் கூறுவதாலு மறிக.

வினு:—அஃதெத்தனை வகைப்படும்?

விடை:—பூரக ரேசக கும்பகமென்று மூன்று வகைப்படும்.

வினு:—பூரக மென்பது யாது?

விடை:—மூக்கி னிடது துவாரத்தின் வழியா யிடை யென்னு நாடியால் வாயுவைக்கிரமமாக வேற் றுவதாம்.

வினு:—ரேசக மென்பது யாது?

விடை:—மூக்கின் வலது துவாரத்தின் வழி யாய்ப் பிங்கலையென்னும் நாடியால் வாயுவை விடுத லாம்.

வினு:—கும்பகமென்பது யாது?

விடை:—சுழுமுனை யென்னு மத்திய நாடியால் வாயுவை யடக்குவதாம்.

இந்தப் பூரகாதி மூன்றுங் கிரமமாக இருதயத்திற் செய்யப்பட்டால் ஆந்தர மென்றும் பாஹியத்திற் செய்யப்பட்டாற் பூாஹியமென்றுஞ் சொல்லப்படும். இப்படி யிந்தப் பூரகாதி மூன்றையுஞ் சமமாக வொரு ஆவர்த்தி பண்ணினு லஃதொரு பிராணுயாமமாம்.

வினு:—இந்தப் பிராணுயாமம் எத்தனை வகைப் படும்?

விடை:—அகற்பம், ஸகற்பமென விரு வகைப் படும்.

வினு:—அகற்பமென்பது யாது?

விடை:—பிரணவோச்சாரண மின்றிச் செய்யும் பிராணுயாமமாம்.

வினு:—ஸகற்ப மென்பது யாது?

விடை:— பிரணவோச்சாரணத்துடன் செய்யும் பிராணுயாமமாம்.

வினு:—பிரத்தியாகார மாவது யாது?

விடை:—ஸப்தாதி விஷயங்களி னின்றுஞ் சுரோத்திராதி யிந்திரியங்களுடனே மனதை அந்தர்முகமாகத் திருப்பிக் கொள்ளுதலாம். இந்த இயம நியம ஆசன பிராணுயாம பிரத்தியாகார மென்னு மைந்தும் ஸவிகற்ப ஸமாதிக்குப் பஹிரங்க ஸாதனங்களாம்.

வினு:—தாரணையாவது யாது?

விடை:—அந்தர்முகமாகத் திருப்பிய மனதைப் பிரத்தியகாத்ம சொரூபத்தில் நிறுத்துவதாம்.

வினு:—தியானமாவது யாது?

விடை:—அந்தப் பிரத்யகாத்மாத்விதீய சொரூபத்தில் மனதிற்கு ஸஜாதீய விருத்திப் பிரவாகமுண்டாவதாம்.

வினு:—இந்தத் தியான மெத்தனை வகை?

விடை:—விச்சின்னத் தியானம், சந்ததத் தியான மென விருவகைத்தாம்.

வினு:—விச்சின்னத் தியானமென்பது யாது?

விடை:—அகண்டைக ரசமான பிரஹ்மமே நான், நானே அந்தப்பிரஹ்மமென்று செய்யுந் தியானஞ் சிலபோது தொடர்ந்துவந்து இடையே விட்டுபோய்க் கடபடாதி விஷயமான விஜாதீய விருத்தி யுண்டானால் அப்போது தனது முயற்சியினாலே மீண்டு மீண்டும் விஜாதீய விருத்தியை நீக்கி ஸஜாதீய பிரஹ்மாகார விருத்தியைச் சம்பாதிப்பதாம்.

வினு:—சந்ததத் தியான மென்பது யாது?

விடை:—விச்சின்னத் தியானத்தி னப்பியாசபலத்தினாலே தைலதாரைபோல அவிச்சின்னமாகப் பிரஹ்மாகார விருத்தியின் பிரவாகமாம்.

விச்சின்னத் தியானத்தி னப்யாச முதிர்ச்சியால் சந்ததத் தியானஞ் சித்தியாம்; சந்ததத்தியானத்தி னப்

பியாச முதிர்ச்சியால் ஸவிகற்ப ஸமாதி சித்தியாம்; ஸவி கற்ப ஸமாதியி னப்பியாச முதிர்ச்சியால் நிருவிகற்ப ஸமாதி சித்தியாம்.

வினா:—ஸமாதியென்பது யாது?

விடை:—அந்த அத்விதீய பிரஹ்மத்தில் மனதின் ஸஜாதீய விருத்திப் பிரவாகமே அப்பியாச பலத்தினாற் றிடப்படுதலாம். தாரணை, தியானம் மென்னு மிரண் டும் ஸவிகற்ப ஸமாதிக்கு அந்தரங்க ஸாதனங்களாம்; நிருவிகற்ப ஸமாதிக்குப் பகிரங்க ஸாதனங்களாம்.

வினா:—தாரணை, தியானம், ஸமாதி யென்னு மூன்றற்கும் பேத முண்டோ?

விடை:—பெரும் பான்மையாகப் பேதமின்மை யின் ஏகவடிவமாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—வேதாத்தியயனம் பண்ணுகிற பிரஹ்ம சாரி தனது வேதத்தை யடிக்கடி மறந்தாலும் மீண்டு நினைத்துக்கொண் டதனையே யோதுகிறான். அத்தியய னம்பண்ணி முடிந்தவன் சாவதானமாய்ச் சொன்னா லும் மறவாமற் சொல்லுகிறான். அத்தியயனம் பண்ணி வைக்கிறகுரு சாவதானமன்றி மயங்கி விழுந்து கொ ண்டு சொன்னபோதிலும் மறவாமற்சொல்லுகின்றான். இம் மூவரு மொரு வேதத்தையே சொன்னபோதி லும் அப்பியாச தார தம்மியத்தினாலே சொல்லுவ

திற் சிறிது தாரதம்மியமே யொழிய பெரும்பாலும் பேதமெப்படி யில்லையோ அப்படி தாரணை, தியானம், ஸமாதியென்னு மூன்றற்கும் அப்யாச தாரதம்மியத்தி னாலே சிறிது பேதமேயொழியப் பெரும்பாலும் பேத மில்லை. இப்படி ஸமாதியின் ஹடயோகாநு சாரமா யுள்ள அஷ்டாங்கம் சொல்லப்பட்டன.

வினா:—ஸமாதிக்கு இராஜ யோகாநு சாரமா யுள்ள பஞ்சதசாங்க மெவை?

விடை:—இயமம், நியமம், தியாகம், மௌனம், தேசம், காலம், ஆஸனம், மூலபந்தம், தேக சமத் தன்மை, லக்ஷ்ய திருஷ்டி, பிராணாயாமம், பிரத்யா காரம், தாரணை, தியானம், ஸமாதி யென்னும் பதி னைந்துமாம்.

வினா:—இயமமாவது யாது?

விடை:—சர்வம் பிரஹ்ம மென்னும் தத்துவ ஞானத்தினாலே சர்வேந்திரியங்களின் நிரோதத்தை யடிக்கடி யப்பியசிப்பதாம்.

வினா:—நியமமாவது யாது?

விடை:—அத் தத்துவத்தை விஜாதீய விருத்தி யின்றி ஸஜாதீய விருத்திப் பிரவாகரூபமாகச் சித்தஞ் சிந்திக்குமாறு நியமமாய்ப் பழகுவதாம்.

வினா:—தியாகமாவது யாது?

விடை:—ஆத்மாநு சந்தானத்தால் சர்வாதிஷ்டானா சச்சிதானந்தப் பிரஹ்ம சொரூபத்திற் கற்பிதமாயுள்ள நாமரூபப் பிரபஞ்ச மியாவும் அதிஷ்டானத்தைத்தவிர வேறன்றென்ற வற்றைத் தள்ளுவதாம்.

வினா:—மௌன மாவது யாது?

விடை:—ஸகல வாக்கும் மனதோடே கூடயாதொரு சொரூபத்தை விஷயீகரிக்க மாட்டாமற் றிரும்பி விடுகின்றனவோ யாதொன்று ஸகல யோகிகளுமடையும் படியான நித்தியமௌன சொரூபமோ வப்படிப்பட்ட சொரூபத்தை யெப்போதும் சிந்தித்திருப்பதாம்.

வினா:—தேசமாவது யாது?

விடை:—யாதொரு சொரூபத்தின் கீழ் மேல் நடுவென்னு மோரிடத்து மொருஜனமும் பரமார்த்தமாக வில்லையோ யாதொரு சொரூபத்தினுற் சகலமும் வியாபிக்கப்பட் டிருக்கின்றனவோ அந்தச் சொரூபமே விவேகிகள் வசிக்கும்படியான சுத்தப்பிரதேசமாம்.

வினா:—காலமாவது யாது?

விடை:—யாதொரு சொரூபமானது பிரமாதி ஸர்வ சராசரப் பிரபஞ்சத்தையு நிமிஷகாலத்திற் கற்பனை செய்கிறதோ அந்த அத்வைதா கண்டானந்த சொரூபமே காலமாம்.

வினா:—ஆஸனமாவது யாது?

விடை:— எவ்வாறு தேகாவயவங்களை வைத்துக் கொண் டிருப்பதனாலே மனதிற்குத் தேகமூலமாய் வருத்தம் தோன்றாமலெப்போதும் பிரஹ்மானு சந்தானங் கிடைக்குமோ அவ்வாறு வைத்திருப்பதுவே (சுகமாயிருக்கும்) ஆஸனமாம்.

வினா:—மூலபந்த மாவது யாது?

விடை:—யாதொரு சொரூபம் சர்வ ஜகத்திற்கும் அவற்றைத் தோற்றுவிக்கிற சித்தத்திற்கும் மூலமோ அதுவே இராஜயோகிக ளிருப்ப தற்கு யோக்கியமான மூலபந்தமாம்.

வினா:—தேக சமத்தன்மை யாவது யாது?

விடை:—சிரவண மனன நிதித்தியாசன பலத்தினாலே மனது சமமான பிரஹ்ம சொரூபத்தில் லயிப்பதே தேக சமத்தன்மையாம்.

வினா:—இலக்ஷிய திருஷ்டியாவது யாது?

விடை:—தத்துவ ஞானத்தினாலே ஸர்வ ஜகத்தையும் பிரஹ்மமயமாகப் பார்ப்பதே இலக்ஷியதிருஷ்டியாம். அல்லது, ஞாதா ஞான ஞேய மெனும் திரிபுடி எந்தச் சொரூபத்திலுண்டாகி யடங்குகிறதோ அந்தச் சொரூபத்திற் றிருஷ்டியை (சித்தத்தை) வைப்பதே இலக்ஷிய திருஷ்டியாம்.

வினா:—பிராணாயாமமாவது யாது?

விடை:—சித்த முதலிய சர்வகற்பித வஸ்துக் களையு மதிஷ்டானப் பிரஹ்ம சொரூபமாகப் பார்த்து ஸகல சித்த விருத்திகளையு நிரோதிப்பது பிராணாயாம மாம்.

பிராணாயாமத்தின் மூன்றங்கங்களுள், அஞ்ஞான தற்காரியமான ஸகலப் பிரபஞ்சத்தையும் நேதிபண் ணித் தள்ளுவது ரேசகமும், பின்பு நிருபாதிகமான பிரஹ்மசொரூபமே நானென்னுஞ் சித்த விருத்தியைச் சம்பாதிப்பது பூரகமும், அந்தச் சித்தவிருத்தியைச் சலியாமனிறுத்துவது கும்பகமுமாம்.

வினா:—பிரத்தியாகாரமாவது யாது?

விடை:—திருசியமான ஸகல விஷயங்களையும் ஆத்ம சொரூபமாகப் பார்த்து மனதை யந்தத் திருக்கு ரூபமான ஆத்மாவினிடத்திற் றிருப்பிக் கொள்வதாம்.

வினா:—தாரணையாவது யாது?

விடை:—மனமெதங்கெந்த விஷயத்திற் போகின்ற தோ உடனே அந்தந்த விஷயத்தைப் பிரஹ்ம சொரூப மாகப் பார்த்து அந்த மனதைச் சொரூபத்தில் நிறுத் துவதாம்.

வினா:—தியானமாவது யாது?

விடை:—ஒருபற்று மின்றிச் சச்சிதானந்த பரி பூரண (பரமாத்மவத)ப் பிரத்தியகாத்மப் பிரஹ்ம சொரூபமே நான், நானேயந்தப் பிரஹ்ம மென்றப்பிய சித்தவினா லுண்டாய விருத்தியின் பிரவாகமாம்.

வினு:—ஸமாதி யாவது யாது?

விடை:—அந்த விருத்தியின்பிரவாகந் தானே திடப் பட்டுச் சப்தாதி விஷயந்தோன்றாம லிருப்பது ஸமாதி யாம். இப்படி விவேகிகளான இராஜயோகிகளுக் குரிய (பரமானந்தத்தைக் கொடுக்கும் படியான இராஜ யோகானு சாரமாகப்) பதினைந் தங்கங்கள் சொல்லப் பட்டன.

வினு:—இப்படிப் பதினைந் தங்கங்கள் எங்கே கூறப்பட்டிருக்கின்றன?

விடை:—இந்தப் பதினைந் தங்கத்தையும் நிரு விகற்ப ஸமாதி கிடைத்து நித்திய நிரதிசய நிருபாதிகா (பரமானந்தா) னுபவம் வருமளவும் நடுவிலே விட்டு விடாமல் வெகு சிரத்தையோடே பழகவேண்டும்; அதனால் ஈசுவரா (சற்குருவ) னுக்கிரகத்தினாலே யாதொரு பிரதி பந்தமுமின்றி நிருவிகற்பஸமாதி சாக்ஷாத்காரங் கிடைத்து ஜீவன்முக்திச் சுகஞ் சித் திக்கு மென்று சங்கராசார்ய சுவாமிகளால் அபரோ க்ஷாநுபூதிப் பிரகரணத்திற் சொல்லப்பட் டிருக் கிறது.

வினு:—இந்தச் சமாதி யெத்தனை வகைப்படும்?

விடை:—ஸவிகற்ப ஸமாதி, நிருவிகற்ப ஸமாதி யென விருவகைப்படும்.

வினு:—ஸவிகற்ப ஸமாதியென்பது யாது?

விடை:—ஞாதுரு, ஞானம், ஞேயம், (அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள்) என்னுந் திரிபுடி விளக்கத்தோடு கூடி அத்விதியப் பிரஹ்மத்தின்கண் ணுள்ள வந்தக்கரணத்தின் ஸ்திதி (நிலை) யாம்.

வினா:—திரிபுடியாவது யாது?

விடை:—திரியென்பது மூன்று; புடியென்பது ஆகாரம் (வடிவு). அஃதாவது ஞாதா ஞான ஞேயம் (காண்பான் காட்சி காட்சிப் பொருள்) என்னு மூன்று மாம்; இவற்றோடு கூடியது திரிபுடியாம்.

வினா:—இந்தத்திரிபுடி யெத்தனைவகை?

விடை:—அசுத்தம், சுத்தமென விருவகையாம்.

வினா:—அசுத்தத் திரிபுடியாவது யாது?

விடை:—(1) தேகாதிகளைத் தானென்பது அசுத்த ஞாதுரு; (2) இந்த ஞாதுருவே ‡ ஞானமென்னுங் கரணத்தோடு கூடி ஞானேந்திரிய வழியால் அநுகூலப் பிரதிகூலவிஷயரூபமாய் விருப்பு வெறுப்புற் றறிவது அசுத்தஞானம்; (3)பூதங்கள் தடித்துப் பௌதிகமா யெதிரே சப்தாதி விஷயங்களாய்த் தோன்றுவது அசுத்த ஞேயம்.

‡ சரீரமுதல் கடாதிவிஷயம் வரையிலுள்ள அந்தக்கரணத்தின் பரிணாமம் விருத்தியெனப்படும். அஃது உபசாரத்தால் ஞானமெனப்படுகின்றது. இவ்விருத்தியே மீண்டும் பிரமா(கர)ணமாம்.

வினா:—சுத்தத் திரிபுடியாவது யாது?

விடை:—(1) அறிவேதானென்பது சுத்த ஞாதுரு; (2)இந்திரிய வழியின் அறிவாகிய அசுத்தஞானத்தை மித்தையறிவென் றறிந்ததே மெய்ஞ்ஞானதுரியமாகிய சுத்த ஞானம்; (3) ஸப்தாதி விஷயங்க ளனைத்தையுஞ் சொரூபமாத்திரமாய்க் காண்பது சுத்தஞேயம்.

இவ்விரண்டனுள், அசுத்தத் திரிபுடியை லயம் பண்ணிச் சுத்தத் திரிபுடிக்கு லயம் வாராதபடி ஞேய மாத்திரமா யிருக்கிற கேவல (அத்துவித)ப் பிரஹ்ம வஸ்துவின்கண் மனம் நிலைத்துத் ததா (பிரஹ்மா) காரமாயிருப்பதே ஸவிகற்ப ஸமாதியாம்.

வினா:—ஸவிகற்ப ஸமாதி யெத்தனைவகைப்படும்?

விடை:—ஸப்தானு வித்தம் ஸப்தானனுவித்த மென் றிருவகைப்படும்.

வினா:—ஸப்தானு வித்தமாவது யாது?

விடை:—அஹம் பிரஹ்மாஸ்மி யென்னும் ஸப் தத்தோடு அனுவித்தமா (கூடி) யிருப்பதாம்.

வினா:—ஸப்தானனுவித்தமாவது யாது?

விடை:—அந்த ஸப்தத்தோடு கூடாததே யாம்.

வினா:—நிருவிகற்ப ஸமாதியென்பது யாது?

விடை:—சுத்தத்திரிபுடி யென்னும் மனோபாவ னையும் நீங்கி (சுத்த ஸம்ஸ்காரத்துடன்) ஞேயமாத்திர மான பிரத்தியகாத்மாபின்ன பரப்பிரஹ்ம சொரூபஞ்

தானாக விளங்குதலாம். அஃதாவது திரிபுடித் தோற்ற மில்லாமல் அகண்டவடிவப் பிரஹ்மாகாரமாயுள்ள அந்தக்கரணவிருத்தியி னிலைமையாம்.

வினா:—நிருவிகற்பசமாதி யெத்தனைவகைப்படும்?

விடை:—அத்வைத பாவனாரூப நிருவிகற்ப ஸமாதி, அத்வைதாவஸ்தானரூப நிருவிகற்ப ஸமாதி யென விருவகைப்படும்.

வினா:—அத்வைத பாவனாரூப நிருவிகற்ப ஸமாதி யாவது யாது?

விடை:—அத்வைதப் பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தி னஞ்ஞாத (சூட்சும) விருத்தியோடு கூடிய நிருவிகற்ப ஸமாதியாம்.

வினா:—அத்வைதா வஸ்தானரூப நிருவிகற்ப ஸமாதியாவது யாது?

விடை:—இந்த ஸமாதியினப்பியாச பலத்தினாற் பிரஹ்மாகாரமான அந்தக் கரணத்தின் சூட்சும விருத்தியும் பிரஹ்மத்திற் சாந்த (லய)மாய் விட, அதனால் விருத்தி ரகிதமாய் நிலைத்த நிருவிகற்ப ஸமாதியாம்.

வினா:—ஸவிகற்ப ஸமாதிக்கும் நிருவிகற்ப ஸமாதிக்கு முள்ளபேதம் யாது?

விடை:—ஸவிகற்ப ஸமாதியிற் றிரிபுடி ரூபத் துவைதம் பிரதீதியா (தோன்று)ம்; அங்ஙனம் திரி

தியாயினும் பிரஹ்ம ரூபமாகவே தோன்றும். எங்ஙனம் மண்விகாரமான கடாதிகள் மண்ரூபமாகவறிதலால் விவேகிக்கு மண் ரூபமாகவே விளங்குகின்றனவோ அங்ஙனமே சுத்தத்திரிபுடிரூப மனமும் சின்மாத்திரமான பிரஹ்மத்தினிடத்திற் சின்மாத்திர மாகவே விளங்குகின்றது. நிருவிகற்ப ஸமாதியில் ஸவிகற்ப ஸமாதிபோலத் திரிபுடித்துவைத மிருந்தாலும், அது ஜலத்திற்கரைத்த வுப்பான திருந்தும் நேத்திரத்திற்கு முற்றும் பிரதீதியாகாததுபோலப் பிரதீதியாகிறதில்லை. ஆகவே, ஸவிகற்ப ஸமாதியிற் பிரஹ்மரூபமாகத் துவைதம் பிரதீதியாகிறது; நிருவிகற்ப ஸமாதியி லது பிரதீதியாகிறதில்லை. இங்ஙனம் ஸவிகற்ப ஸமாதிக்கும் நிருவிகற்ப ஸமாதிக்கும் பேதமுண்டு.

வினு:—சுழுத்திக்கும் நிருவிகற்ப ஸமாதிக்குமுள்ள பேதமியாது?

விடை:—சுழுத்தியி லந்தக்கரணத்தின் விருத்தி பிரஹ்மாகார மாகிறதில்லை; ஆனல் விருத்தியோடு கூடிய வந்தக்கரணத்தின் அபாவ முண்டாகிறது. நிருவிகற்ப ஸமாதியிலோ அந்தக்கரணத்தின் விருத்தி பிரஹ்மாகார மாகிறது; விருத்தியோடு கூடிய வந்தக்கரணம் சூட்சும ரூபமாயிருக்கிறது; † அதனபாவமில்லை.

† சமாதியில் அந்தக்கரணம் இல்லையாயின் யோகியின் தேகம் தூங்குவோனைப்போல விழவேண்டும்; விழுகிறதில்லை. ஆதலால் சமாதியில் அந்தக்கரணத்தி னபாவமின்றாம்.

நிருவிகற்பஸமாதியி லந்தக்கரணத்தின் எந்தப் பிரஹ்மாகார விருத்தியுண்டாகிறதோ அதற்கு ஹேது ஸவிகற்ப ஸமாதியி னப்பியாசமாம். ஆதலால் சாஸ்திரங்களிற் சாதனரூப எட்டங்கங்களில் ஸவிகற்ப ஸமாதியுமொன்றாக வெண்ணப்படுகிறது; நிருவிகற்ப ஸமாதி பலனும். இங்ஙனம் சுழுத்திக்கும் நிருவிகற்ப ஸமாதிக்கும் பேதமுண்டு

வினா:—சுழுத்திக்கும் அத்வைதாவஸ்தான ரூப நிருவிகற்ப ஸமாதிக்கு முள்ள பேதமியாது ?

விடை:—சுழுத்தியி லந்தக்கரணவிருத்தி அஞ்ஞானத்திலயமாகிறது; பிரஹ்மானந்தம் அஞ்ஞானவிருதமா (அஞ்ஞானத்தால் மறைபட்டதா)யிருக்கிறது. அத்வைதாவஸ்தானரூப நிருவிகற்ப ஸமாதியில் விருத்தி தப்தாய பிண்டத்தில் நீர்த்துளி போலப் பிரஹ்மப் பிரகாசத்தில் * லயமாகிறது; ஆவரண மில்லாத பிரஹ்மானந்தம் விளங்குகிறது. இதுவே சுழுத்திக்கும் அத்வைதாவஸ்தானரூப நிருவிகற்ப ஸமாதிக்கு முள்ள பேதமாம்.

---

* ஈண்டிஃதிரகசியமாம்:—முற்கூறிய சமாதியில் இராஜத தாமதகுணங்கள் முற்றும் நீங்குதலால் ஆவிர்ப்பவித்த சுத்த சத்துவ குணவடிவ உபாதானத்திலேயே விருத்தியின் லயம் சம்பவிக்கிறது, நிர்விகாரப் பிரஹ்மப் பிரகாசத்திலன்றாம்.

இப்படி ஸவிகற்பம் நிருவிகற்ப மென்னு மிரு வகை ஸமாதிகளில் மனோபேத மிருப்பதினாலும், ஸமாதி சுழுத்தி யென்னு மிரண்டனுள் மனோநாசஞ் சமமாய்க் காணுமையாலும், சுழுத்தியி லஞ்ஞானங் காணப்படுகையினாலும், ஸமாதியி லஞ்ஞானங் காணப் படாமையினாலும், அஞ்ஞானமு மதன்காரியமான சந் தேக விபரீதங்களு மற்று பிரஹ்ம ஞானத்திற் கொரு விக்கினமுமின்றிச் சதாசொரூபானந்த முண்டாகும் பொருட்டு மோக்ஷதாகியா (தீவிர முமுட்சுவா) னவன் அகம்புற மென்னும் பேதத்தா லறுவகைப்பட் டிருக் கும் ஷட்வித ஸமாதிகளையு மவசியம் பழகவேண்டும்.

வினா:—ஷட்வித ஸமாதிகளெவை?

விடை:—(1) அந்தர் திருசியானுவித்த ஸவிகற்பம், (2) அந்தர் சத்தானுவித்த ஸவிகற்பம் (3) அந்தர் நிரு விகற்பம், (4) பாஹ்ய திருசியானுவித்த ஸவிகற்பம், (5) பாஹ்ய சத்தானுவித்த ஸவிகற்பம், (6) பாஹ்ய நிருவிகற்ப மென்னு மாறுமாம்.

வினா:—அந்தர் திருசியானுவித்த ஸவிகற்ப ஸமாதி யென்பது யாது?

விடை:—பிரக்ஞானம் (அறிவு)தானே திருசியங்க ளாகிய ஸகலவனுகூலப் பிரதிகூல விஷயங்களும், அவற் றைப் பற்றிய காமக்குரோதாதி விருத்திகளும், அவ் விருத்திகளி லனுரூதமாயிருந் தவற்றைப் பகுத்தறியுந்

திருக்கா(அறிவா)கிய சாக்ஷியுமெனவறிந்து அந்தவறிவாகிய சாக்ஷிக்கு இந்தக் காமக்குரோதாதி ஸகல விருத்திகளும் திருசியங்கள்; இந்தத் திருசியங்களி லனுசூதமா யிருந்தறியுந் திருக்காகிய சாக்ஷிக்கு வேறாக திருசியங்களில்லை; எல்லா மந்தத் திருக்கு ரூபமே யென்று சொரூபானு சந்தானஞ் செய்வதாம்.

வினா:—அந்தர் சத்தானுவித்த ஸவிகற்ப ஸமாதி யென்பது யாது ?

விடை:—யானசங்கன், யான் ஸ்வயம்பிரகாசன், யான் அத்வைதன் என ச் சுத்தசின்மாத்திரமாய்ச் சேஷ்டிக்கும் ஸப்தத்துடன் கூடி யந்த ஸப்தார்த்தங்களைத் தானாகப் பாவி (சிந்தி)ப்பதாம்; அஃதாவது ஸத்தோக முதலான சத்தங்களுடன் ஸகலதிருசியங்களையுஞ் சொரூபத்திலேயே லயம்பண்ணுவதாம். இதற்குப் பிரமாணம் வருமாறு:—

சொரூபசாரம்.

"புத்தோக முத்தோகம் பூரணனந்தோகஞ்
சத்தோகஞ் சித்தோகஞ் சாந்தோகஞ்—சுத்தோகம்
ஆரணங்க டேடரிய வற்புதோ கஞ்சகல
காரணமாஞ் சைதன்யோ கம்."

வினா:—அந்தர் நிருவிகற்ப ஸமாதி யென்பது யாது?

விடை:—திருசியானுவித்தம் ஸத்தானுவித்த மென்னு மிரண்டையுஞ் சகல மனோ வியாபாரங் களுடன் விட்டொழிந்து(நிர்ச்சிந்தையாய்ச்)சுத்த சின் மாத்திர வடிவா யிருப்பதாம்.

மோக்ஷ தாகியானவ னிந்த மூவித ஸமாதிகளையு மகமுகத்திற் பழகினது போலப் பகிர்முகத்திலும் துவைத நிவிர்த்தியாகும் பொருட்டுப் பாஹ்ய திருசி யானுவித்த ஸத்தானுவித்த நிருவிகற்ப மென்னு மூவித ஸமாதிகளையும் பழகவேண்டும்.

வினா:—பாஹ்ய திருசியானுவித்த ஸவிகற்ப ஸமாதியென்பது யாது?

விடை:—அதிஷ்டானமாயுள்ள சச்சிதானந்த வடிவப் பரப்பிரஹ்மத்தின்கண் கற்பிதமாக நாமரூபஜகத்து விளங்குகிறது; குளிர்ச்சி, வெண்மை, நெகிழ்ச்சி, நுரை, திவலை யென்னும் பேர் (வடிவங்)களொன்றாய்க் கூடின ஜலம் அலையென்று சொல்லப்படுவதுபோலச் சச்சிதானந்த நாமரூபங்க ளைந்து மொன்றாய்க்கூடின சொரூபம் பிரபஞ்சமெனச் சொல்லப்படுகிறது என் றுணர்ந்து ஆரோபிதமான நாமரூப மிரண்டையுந் தள்ளி அதிஷ்டானமான சச்சிதானந்த சொரூபமாத் திரமா யுலகைக் காண்பதாம். அஃதாவது சச்சிதானந் தப் பிரஹ்மத்தைத்தவிர நாமரூபங்களில்லை யென்று அவற்றைப் பிரஹ்மத்தில் லயம் பண்ணி அத்வைத வஸ்துவே நானென்று ஸதா சிந்திப்பதாம்.

வினா:—பாஹ்ய சத்தானுவித்த ஸவிகற்ப ஸமாதி யென்பது யாது?

விடை:—அதிஷ்டானமாகிய சச்சிதானந்தத்திற் கற்பிதமான நாமரூபங்களை லயம்பண்ணி நிர்மலமாகியும் அத்வைதமாகியும் பரமானந்தமாகியு மிருக்கிற பிரஹ்மமே நானென்னும் பாவனையைப்பொருந்தியிருப்பதாம். அஃதாவது அகண்ட சச்சிதானந்தாத் த்விதீய ஆத்ம சொரூபம் பிரஹ்மமோக மென்று தியானிப்பதாம்.

வினா:—பாஹ்ய நிருவிகற்ப ஸமாதி யென்பது யாது?

விடை:—பிரஹ்மானந்த பரவசத்தினாற் சொரூபத்தோ டேகரசமாய்ப் பாகியப் பிரவிர்த்தியற்று நிஸ்தரங்க ஸமுத்திரம்போல நிச்சலமாயிருப்பதாம்.

இந்த ஷட்வித ஸமாதிகளில் நின்றுபழகிய யோகீசுவரன் மனமெங் கெங்கே சஞ்சரிக்கின்றதோ அங்கங்கே யெல்லாம் ஸமாதியாம். இங்கே கூறிய நிருவிகற்ப ஸமாதியி லிருப்பவனே குணாதீத னென்றும், பகவத் பக்தனென்றும், அதிவர்ணாச்சிரமியென்றும், பிராமண னென்றும் கூறப்படுவன்.

வினா:—நிருவிகற்பு சமாதிக்குப் பிரதிபந்த (விக்கின) ங்களவை?

விடை:—லயம், விட்சேபம், கஷாயம், ரஸாஸ்வாத மென்று நான்குமாம்.

வினா:—லயவிக்கின மாவது யாது? அதனிவர்த்தி யெப்படி?

விடை:—தியானத்தி (ஸமாதியி) ன் பொருட்டு விஷயங்களி னின்றுந் திருப்பப்பட்ட மனம் அவ்வாறு நில்லாது சுழுத்திசம்ஸ்காரத்தினாலே சுழுத்தியிற் போவதாம். யோகியானவன் எப்போது லயத்தில்மனம் போகிறதோ அப்போதந்த மனத்தை லயத்தினின்றும் ஜாக்கிரதையாய்த் திருப்பி ஆத்மாபி முகப்படுத்த வேண்டும். முயற்சியினாலே நீங்காமல் லயம் பிரபலமாயிருந்தா லப்போது லயகாரணத்தையறிந்து நிவிருத்தி செய்து மீண்டும் தியானத்திற் பிரவிர்த்திக்க வேண்டும்.

வினா:—லயகாரணம் யாது?

விடை:—நித்திரா சேஷம், அஜீரணம், அதிக போஜனம், அலைச்சல் முதலியவற்றாலாய சரீரசிரம மென்று நான்குமாம்.

வினா:—லயகாரணங்களி னிவிர்த்தி யெப்படி?

விடை:—நித்திரையின் சேஷமாகிய லயத்தைப் பாக்கி நித்திரையைச் செய்வதாலும் அஜீரணம் அதிக போஜனமென்னு மிரண்டையும் முன்புசித்த அன்னாதிகளின் ஜீரண காலம்வரைக்கும் போஜனத்தைத் தள்ளுவதினாலேயும் சொற்ப போஜனத்தினாலே

யும் சரீரசிரமத்தை அலைச்சல் முதலியவற்றை விடு வதினாலேயும் நிவிர்த்திக்கவேண்டும். இப்படி லயகாரணத்தை நீக்கும்போது லயம் நீங்கிப்போம். அல்லது பிராணாயாமத்தினாலே யாவது லயத்தை நீக்கலாம். எவர்களுக் கெந்தமார்க்கத்தி லப்பியாசமோ அவர்கள் அந்த மார்க்கத்தினாலே லயத்தை நீக்கி மீண்டுந் தியானம் பண்ணவேண்டும்.

வினா:—விட்சேப விக்கினமாவது யாது? அதனிவிர்த்தி யெப்படி?

விடை:—லயத்தி னின்றுந் திருப்பப்பட்ட மனம் அவ்வாறு நில்லாது ஜாக்கிர சம்ஸ்காரத்தினாலே ஸப்தாதி விஷயங்களையும் அவற்றின் போகங்களையும் நினைத்து நினைத்து அவற்றிற் பிரவிர்த்திப்பதாம். யோகியானவன் மன தெப்போது விட்சேபத்தை யடைகிறதோ அப்போ தவ்விட்சேப காரணத்தை யறிந்து அதற்குப் பிரதிகூலமான பழக்கத்தினாலே மனதைத் திருப்பி ஆத்மாபிமுகப்படுத்தித் தியானிக்க வேண்டும்.

வினா:—விட்சேபகாரணம் யாது?

விடை:—ஸப்தாதி விஷயங்களின் ஸத்தியபுத்தியாம்

வினா:—இரா விட்சேபத்தி னீக்கமெப்படி?

விடை:—ஸப்தாதி விஷயங்களின் அனித்ய துக்காதி தோஷங்களையும் நித்திய நிர்விகார பரிபூரண

பரமானந்த பரமாத்வைதப் பிரஹ்ம சொரூபத்தையும் செப்பமாய் நினை (சிந்தி)த்துப் பார்த்து அசத்து ரூபமான இந்த விஷயங்கள் காலத்திரயத்திலுஞ் சத்தாயிருக்கிற பிரஹ்ம சொரூபத்திற் சுழுத்தியிலுலகம் போ லில்லவே யில்லை யென்னும் வாததிருஷ்டியினாலே னும், விஷயங்கள் தோன்றின போதிலும் அவை சொப் பன விந்திரசாலம் போல மித்தையாமென்னும் மித் தியாதிருஷ்டியினாலேனும்,* சகலதிருசியங்களும் அலை முதலியவற்றிற்குச் சமுத்திரம் போலத் திருக்காயிருக் கிற நாமேயாம்; அப்படிப்பட்ட நாமே அகண்டைக ரஸமான பிரஹ்ம சொரூபமென்னும் பிரவிலாப திரு ஷ்டியி னாலேனும் அடிக்கடி யுண்டாகிற சகல விட்சே பத்தையும் வெகுஜாக்கிரதையாய் நாசம்பண்ணி மீண்டு மீண்டுந் தியானம் பண்ணுவதே விட்சேப நிவிர்த்திக் குபாயமாம்.

இத் திருஷ்டித்திரயத்திற்குப் பிரமாணம் வரு மாறு:—

விவேக சூடாமணி.

மருவிய சுழுத்தி போலு மகத்தான தானு போலும், பிரமமா மென்னிடத்திற் பிறிதுபோற் காண்ப

* சொப்பனத்திற் காணப்படும் விஷயங்களனைத்து மெங்ஙன மந்தச்சொப்பன திருஷ்டாவி (சாக்ஷியி) னும் வேறன்றே, அங்ஙனம் ஜாக்கிரத்திற் காணப்படும் விஷயங்க ளனைத்தும் அந்த ஜாக்கிர திருஷ்டாவாகிய என்னிலும் வேறன்றென் றறிவதாம்.

தெல்லா, மொருவனு மேனு மில்லை யுள்ளவ னேனே யென்னு, நிருமலப் பார்வை தானே நிகழ்த்திய வாத திட்டி".

"இருமைசேர் கனவு போலு மிந்திர சாலம் போலும் பிரமமா மென்னி டத்திற் பிறிதுபோற் காணப் பட்ட சருவமு மித்தை யாகுஞ் சத்திய னேனே யென்று விரிவுறும் பார்வை தானே மித்தியா திட்டி யாகும்".

"பரவிய வாழி போலும் பார்த்திடுங் கனவு போலு மொருசிதா காச மான முருவமா மென்னி டத்திற் [று பிரிவுபோற் காண்ப தெல்லாம் பிரமமா னானே யென் பிரிவிலாப் பார்வை தானே பிரவி லாயத் திட்டி [யாகும்"

வினா:—விக்ஷேப நிவிருத்தி யுபாயத்திற்குத் திருஷ்டாந்தம் யாது?

விடை:—பூனை முதலிய வற்றின் பயத்தாற் சிட்டுக் குருவிகள் வீட்டுக்குள் பிரவேசிக்கின்றன; அப்போது பயக் கிலேசங்களின் நிவிர்த்திக்குக் கிருகத்திற்குள் அக் கால மிடம்(பரவசத்தாற்) காணப்படுகிறதில்லை; ஆதலான் மீண்டும் வெளியேவந்து பயத்தை அல்லது மரணரூப துக்கத்தை யடைகின்றன. அதுபோல அனாத்ம பதார்த்தங்களைத் துக்க ஹேதுவென வறிந்து அத்வைதானந்தத்தை விஷயமாக்குவ தற்காக அந்தர்

முகமாகிய விருத்தி தனக்கு விஷயமாகிய சேதனம் அதி சூட்சுமமா யிருத்தலாற் சிறிது போது அதன் கண் நிலைத்தலின்றிச் சேதன சொரூபானந்தத்தின் லாப மடையாது பகிர்முகமாய் விடுகிறது. இவ்வாறு பகிர்முகமாகும் விருத் திக்கு விட்சேப மென்றுபெயர். அந்த விருத்தியின் ஸ்திரத்தன்மை யின்றிச் சொரூபா னந்தம் அடையப் படுகிறதில்லை. ஆதலால் (அந்தர் முகமுண்டா காமையால்) எவ்வளவுகாலம் விருத்தி பிரஹ்மாகாரமாக வில்லையோ அவ்வளவு காலமும் பாகிய பதார்த்தங்களிற் றோஷபாவனையால் விருத்தி யைப் பகிர்முகமாக விடாமல் அஃது அந்தர்முகமாகு மாறு பழகவேண்டு மென்பதாம்.

வினா:—கஷாய விக்கின மாவது யாது?

விடை:—மனத்தை லயத்திலும் விட்சேபத்திலும் விடாமல் நிரோதித்துத் திடமாய்த் தியானஞ்செய்யும்போது அந்த மனது தீவிரமா னராகத்து வேஷாதி வாசனையினாலே ஸமாதியிற் போல லயவிட்சேப மின்றித் தூக்கத்தில்மூழ்கி ஏகாக்கிரமா யிருப்பதாம். அதையும் விவேகத்தினாலே சூட்சுமமாய்ப் பார்த்துச் சமாதியென்று மலையாமல் நீக்கி மீண்டு தியானம் பண்ண வேண்டும்.

வினா:—இந்தக் கஷாய விக்கினத்திற்கு நிவிர்த்தியெப்படி?

விடை:—விட்சேப நாசத்திற்குக் கூறிய உபாயமே கஷாய நிவிர்த்திக்கு முபாயமாம்.

வினா:—விட்சேபத்திற்கும் கஷாயத்திற்கு முள்ள பேத மியாது?

விடை:—பாஹ்ரிய விஷயாகார விருத்தி விட்சேப மெனப்படும். எங்கே ராகாதிகளின் உற்பூத சம்ஸ்காரத்தா(புலப்பட்ட வாசனையா)ல் அந்தர் முகமான விருத்தி தகையப்பட்டுப் பிரஹ்மத்தை விஷயஞ் செய்கிற தில்லையோ அவ்விருத்தி கஷாயமெனப்படும். விஷயத்திற் ரோஷத்தைப் பார்த்தலோடு கூடிய பிரயத்தினத்தினால் விட்சேப கஷாய விக்கினங்கள் நிவிர்த்தியாகின்றன.

வினா:—இராகாதி தோஷங்க ளெத்தனை வகைப்படும்?

விடை:— பாஹ்ரியம் ஆந்தரமென விருவகைப்படும்.

வினா:—பாஹ்ரியராகாதி தோஷங்க ளெவை?

விடை:—நிகழ்காலத்தில் பிரத்தியக்ஷமா யுள்ள ஸ்திரீ, புத்திர, தனாதிவிஷயங்களின் சிந்தனை வடிவ மனோராஜ்ய (வியாபார) மாம்.

வினா:—ஆந்தர ராகாதி தோஷங்க ளெவை?

விடை:—சென்ற காலத்தின் அல்லது வருங் காலத்தின் சிந்தனை வடிவ மனோராஜ்யமாம்.

வினு:—ரஸாஸ்வாத விக்கினமாவது யாது?

விடை:—யோகிக்கு ஸமாதியினுரம்ப காலத்தில் விட்சேப நிவிர்த்தியால் ஸவிகற்பமாக வுண்டாகும் பிரஹ்மானந்தத்தின் அனுபவமே ரஸாஸ்வாதம்; அல்லது ஸவிகற்ப ஸமாதிக்குப்பின் நிருவிகற்ப ஸமாதியுண்டாகிறது. ஸவிகற்ப ஸமாதியிற் றிரிபுடித்வைதம் பிரதீதியாகிறது. ஆதலால் ஸவிகற்ப ஸமாதியினுனந்தம் திரிபுடிரூப வுபாதி ஸஹிதமாயிருத்தலால் ஸோபாதிக மெனப்படுகிறது. நிருவிகற்ப ஸமாதியிற் றிரிபுடி பிரதீதியாகிற தில்லை. ஆகையால், நிருவிகற்ப ஸமாதியில் நிருபாதிக (உபாதியில்லாத) ஆனந்த முண்டாகிறது. இவ்வாற்றால் ஸவிகற்ப ஸமாதிக்குப்பின்னும் நிருவிகற்ப ஸமாதியினுரம்பத்திலும் ஸவிகற்ப ஸமாதியின் ஸோபாதிகானந்தம் விடமுடியா தனுபவிக்கப் படுகிறது. ஆதலால் விட்சேப நிவிர்த்தியாலுண்டாகு மானந்தத்தி னனுபவம், அல்லது ஸவிகற்ப ஸமாதியினுனந்தத்தி னனுபவம் ரஸாஸ்வாத மெனப்படுகின்றது; அவ்விருவித ரஸாஸ்வாதங்களும் நிருவிகற்ப ஸமாதியின் பரமானந்தானுபவத்திற்கு விரோதிகளானமையின் விக்கினங்களாம்.

வினு:—யோகிக்கு விட்சேப ரூப துக்கநிவிர்த்தியினனுபவ முண்டாகிறது; அல்லது இச்சித்த பதார்த்தத்தினடைவின்றியும் விரோதியினி (ஆனந்தப்பிராப்தி

யின்றித் துக்கநி) விர்த்தியா லானந்தமுண்டாகின்ற தென்ப தற்குத் திருஷ்டாந்தம் யாது?

விடை:—(1) சுமையைத் தூக்கிவருத்தத்துடன் செல்லும் புருஷனுக்கு அச்சுமையை யிறக்குவதினு லானந்த முண்டாகிறது; அங்குண்டான வானந்தத்தில் வேறு விஷயங் காரணமன்று; சுமையா லுண்டான துக்கத்தி னிவிர்த்தியாம். அதனாலப் புருஷன் எனக் கானந்த முண்டாயிருக்கிற தென்று சொல்லுகிறான். ஆதலாற் றுக்க நிவிர்த்தியு மானந்தத்திற் கேதுவாம். அதுபோல யோகிக்குச் சமாதியில் விக்ஷேபத்தா லுண் டான துக்க நிவிர்த்தியினால் எவ்வானந்த முண்டா கிறதோ அவ்வாநந்தானுபவதிற்கு ரஸாஸ்வாதமென்று பெயர். இவ்வனுபவத்தினால் யோகி திருப்தியடைந்து விட்டால் சர்வோபாதியு மற்ற பரமானந்தாகார விருத்தி அவனுக் குண்டாகாமையால் அதனனுபவம் அவனுக் குண்டாகாது. ஆதலால் துக்க நிவிர்த்தியா லுண்டாகு மானந்தானுபவரூப ரஸாஸ்வாதமும் ஸமாதி விக் கினமாம். (2) அல்லது பூமியில் புதைய லிருக்கிறது; அது பொல்லாத விஷசர்ப்பத்தாற் காக்கப்பட்டிருக் கிறது; அப்புதையலை யெடுப்பதற்குத் தடையாயிருந்த சர்ப்பத்தை யொழிப்பதனு லானந்த முண்டாகிறது. அங்குச்சர்ப்ப நிவிர்த்தியா லுண்டான வானந்தத்தில் ஒருவன்றிருப்தி யடைந்து புதையலை யெடுக்கு முயற்

சியை விட்டு விட்டால் புதையல் கிடைப்பதா லுண்டாகும் பரமானந்த முண்டாகாது. அதுபோலத் தேகத்தின்கண் அத்வைதப் பிரஹ்மரூபம் புதையலாம்; தேகாதியனாத்ம பதார்த்தங்களின் சத்தியப்பிரதீதிரூப விட்சேபம் சர்ப்பமாம், அச்சத்திய விட்சேபரூப சர்ப்பத்தினிவிர்த்தியா லுண்டாகும் அவாந்தரா (மத்தியா) னந்தரூபரஸத்தின் ஆஸ்வாதனம் (அனுபவம்) புதையல்வடிவ அத்வைதப் பிரஹ்மத்தை யடைவதா லுண்டாகும் பரமானந்தத்தி னடைவிற்குத் தடையாயிருத்தலால் விக்கினமாம்.

வினா:—இந் நான்கு பிரதிபந்தங்களு மெங்கே சொல்லப்பட்டிருக்கின்றன.

விடை:—அந்த விகற்பத்தோடே கூடின ஆனந்தானுபவத்திற்றானே மனதிருந்து விடாமல் அதையும் புத்தியினால் னிவிர்த்திசெய்து நிர்மலப் பிரக்ஞையுடன் தியானம் பண்ணவேண்டும். இப்படி வெகுகாலந் தியானப்பியாசம் பண்ணும்போது அந்தத்தியான பரிபாகத்தினாலும் ஈசுவரானுக்கிரகத்தினாலும் லய, விட்சேப, காஷாய, ரஸாஸ்வாத வடிவ நான்கு பிரதிபந்தங்களும் நீங்கி மனது ஸமமான பிரஹ்மசொரூபத்தில் நிஷ்டையை யடையும். அப்படி யந்த அபேதானந்த நிஷ்டையை யடையும்போது இந்தநிஷ்டையும் லயமோ கஷாயமோ வென்று மயங்கி மனதைப் பகிர்முகப் படுத்தாமல் உத்தாலகரைப்போல வெகு சூட்சுமமான புத்

தியினாலே மேற்கூறிய லயாதி பிரதிபந்தங்க ளிப்படிப் பட்டவை யென்றும் அவற்றிற்கு விலட்சணமான ஸம சொரூப நிஷ்டை யிப்படிப்பட்ட தென்றும் நன்றாய்ப் பிரித்துப்பார்த்து (பகுத்தறிந்து) அந்த நிஷ்டையிற் றானே விடா முயற்சியினாலே மனதை நிறுத்தவேண் டும். அப்படி நிறுத்தப்பட்ட அந்தமனதில் பிரஹ்ம சொரூபான (பரமாநந்)ந்தம் நன்றா யாவிர்ப்பவிக் (உதயமா) குமென் றிப்படி கௌட பாதாசாரிய சுவாமிகள் நான்கு பிரதிபந்தங்களையும் அவற்றி னிவிர்த்தியையும் யோக சூத்திரத்திற் கூறியிருக்கின்றார்.

வினா:—வேறொன்பது விதமாகச் சொல்லும் ஸமாதிப் பிரதிபந்தங்க ளெவை?

விடை:—(1) தியானத்திற்கு உட்கார்ந்த வுடனே சொரூபானுசந்தான மறந்து போவது; (2) பிறகு தியானஞ் செய்வோமென்று சோம்ப லுண்டாவது; (3) போகத்தி லிச்சையுண்டாவது; (4) தூக்கம் வருவது; (5) அந்தகாரந் தோன்றுவது; (6) நாநாவித விஷயங்களை நினைத்து மன தலைவதாகிய விட்சேபமுண்டாவது; (7) வெளிச்சந் தோன்றுவது; (8) வியர்வை யுண்டாவது; (9) சகல திருசியத்தையுந் தள்ளின லவற்றிற்கு விலட்சணமா யொரு சொரூபத்தையுங் காணோமே யென்னும் சூந்யபுத்தி யுண்டாவது என்னு மொன்பதுமாம்.

வினா:--இந்த வொன்பதுப்பிரதிபந்தங்களு மெங்கே சொல்லப்பட்டிருக்கின்றன?

விடை:—இந்தப் பிரதிபந்தங்களைச் சிரவணமனனங்களினாலே பரமானந்தாத்வைதப்பிரஹ்ம சொரூபமிப்படிப்பட்டதென்ற சம்சயாதிகள்லேசங்கூடவில்லாம லுண்டாயிருக்கிற நிச்சயத்தினாலும், எவ்விதத்தாலாவது நிருவிகற்ப ஸமாதியினாலே அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத் காரத்தைச் சம்பாதிப்போமென்னு முற்சாகத்தினாலும், அந்தந்தப்பிரதிபந்தங்களை நிவிர்த்தித்தற்கு யுக்தமான உபாயத்தாலும், மெள்ளமெள்ள நீக்கி மீண்டும் தியானம் பண்ணவேண்டும் என்று ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளால் அனுபூதிப் பிரகரணத்தில் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சகல பிரதிபந்தங்களு மேற்சொன்ன லயாதி நான்கனுள் அந்தர்க்கதமாம். ஆகையினால், லயாதிகளை நீக்கி ரக்ஷிக்கப்பட்ட மனது நிர்விக்கினமாக நிர்விட்சேப நிராவரண பரிபூரணப் பரமானந்த பரப்பிரஹ்ம சொரூபத்தில் நிஷ்டை (ஸ்திரநிலை) யை யடையும். அந்த நிஷ்டையே யோகம்; அதுவே ஞானம்; அதுவே ஜீவன் முக்தி; அதுவே கர்மோபாஸனை சிரவணாதி யப்பியாசம் அடயோகாப்பியாசமாகிய சகல சாதனத்திற்கு முக்கிய பலன்; அதுவே சகலசுருதிஸ்மிருதி யிதிகாச புராணங்களின் தாற்பரியம்; அதுவே முடிந்த முடிவானவிடம் அதுவே

பரமசிவன்முதலானோரது அனுபவம். அந்தநிஷ்டையை அடைந்த பின்னர் மற்றொன்று மடையவேண்டிய தின்றாம். ஆனதாலந்த நிஷ்டையை எவ்விதத்தாலா வது முமுட்சு வடைய வேண்டும். அதனை யடைந்த வனே கிருதார்த்தன். அவனுடையஜன்மமே ஸபலம்; அவனே ஞானபுருஷன். இவ்வாறு சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்கள் கோஷிக்கின்றன.

ஜன்ம நிவிர்த்திக்குப் பிரஹ்ம நிஷ்டையே ஹேது வென்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

ரிபுகீதை.

" பேதமெலா மணுவுமிலா தறவுந் தள்ளிப் பின்ன மிலாப் பரமான வான்மா வின்க, ணைதையுமே நினை யாம லின்ப மேலா மியங்காம லிருப்பதுவே சகச நிட்டை, சாதகமா மிந்நிட்டை நிருவிகற்ப சமாதி யென வங்கங்கே சாற்றலாகு, மோதியதே யகண்டபர சாட்சாத்கார வுணர்வெனவு மங்கங்கே யுரைக்கலா மால்."

" திடமான நிட்டையிதே சீவன் முத்தித் திறமை யென வங்கங்கே செப்ப லாகும், தடமான நிட்டை யிதே யுபசாந்திக்குத் தகுந்தபடி பூமிகையோர் நான்கு மாகு, மிடமான விந்நிட்டை யிசைந்தோ ருக்கே யித் துயர்செய் பவபீதி யிறக்கு மன்றி, மடமான மற்றெ தனை யிசைந்த போதும் மகத்தான பவபீதி மாயா தென்றும்."

தாயுமானவர்.

"கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு வுற்பவரோய் மாறுமோ - நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினருக் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்"

## 5. ஜீவன்முத்திப் பிரகரணம்.

சமாதியி (மனோலயத்தி)ன் பலன் ஜீவன்முக்தி யாதலா லதன்பின்ன ரிது வைக்கப்பட்டது.

வினா:—முக்தியென்பது யாது?

விடை:--மோசனம் (பந்தத்தினின்று விடுபடுதல்); அஃதாவது பஞ்சகோசவடிவ மூன்று தேகத்திலும் நானென்ன தென்னுங் கர்த்திருத்துவ போக்திருத்துவ சுகதுக்காதி ரூபமான சித்ததருமங் துக்க ரூபமானபடியினால் அது பந்த மென்று சொல்லப்படும். அந்தக் கர்த்திருத்துவாதி பந்தப் பிராந்தியினின்றும் விடுபட்டிருப்பது முக்தியாம்.

"ஈனமான வகங்காரப் பிராந்தி யன்றோ விடர் பந்த, மான விடா வதுமடமை யந்தகாரம் கெடலன்றோ" என்றும்,

"இந்தச் சகமீ நான்முதலா மிவைமெய் யென்றல் பந்தமதா, மந்தக் கருத்து நிற்பளவு மரிதா முத்தி" என்றும்,

"துன்றுவா தனேயே பந்தந் தொல்லேவீ டதனைத் தீர்த்தல்" என்றும் வாசிட்டங் கூறுவதறிக.

வினு:—இந்தமுக்தி எத்தனைவகைப்படும்?

விடை:—ஜீவன் (ஸதேக) முக்தி, விதேகமுக்தி யென விருவகைப்படும்.

வினு:—ஜீவன்முக்தியாவது யாது?

விடை:—(தேகத்துடன்) ஜீவித் திருக்கும்போதே ஸ்தூல சூட்சும காரணதேக (பஞ்சகோச) ங்களுக்குப் பின்னமாயுள்ள தன்சொரூபத்தைப் பிரஹ்ம சொருப மாக வபரோக்ஷமா யறிந் திருப்பதாம்.

வினு:—விதேக முத்தியாவது யாது?

விடை:—அந்த ஞானத்தின் றிடானுபவ வலி யாற் றேகசம்பந்த மின்றி முக்தமாயி (விடுபட்டி) ருப்பதாம். அஃதாவது மேலெக்காலத்திலுமெத்தேசத் திலும் யாதொரு சரீரமுமடையாமற் சச்சிதானந்தப் பிரஹ்ம சொருப மாத்திரமாய் நிலேத்திருப்பதாம்.

வினு:—இந்த விதேகமுக்தி யெப்போது சித்திக் கும்?

விடை:—அப்பிரதிபந்த (திட) அபரோக்ஷ சாக்ஷாத் கார அபேதஞான மெப்போது உண்டாகிறதோ அப்போது சித்திக்கும்.

வினு:—வர்த்தமான தேகம் நீங்கிய பின்பு விதேக முத்தி யுண்டாமென்று பலர்கூற இங்கே ஞானமுண்டாகிற காலத்திற்றானே விதேக முக்தி யுண்டாகிற தென்று சொல்வ தெப்படிக் கூடும்?

விடை:—அந்தவிதேக முக்தி யொருதேகமுமில்லாதகாலத்திற் சித்திக்கத்தக்க தென்னும் அபிப்பிராயத்தால் பலர் வர்த்தமான தேகம் நீங்கிய பின்பு விதேகமுக்தி யுண்டாமென்று சொன்னார்கள். வர்த்தமான தேகவியோக (ஸ்தூல தேக நீக்க) மே விதேகமுத்திக் கேதுவாயின், பின்னுந் தேகோற்பத்திக் கேதுவான காரண தேகமாகிய அஞ்ஞான மிருப்பதாலும், சர்வபிராணி (அஞ்ஞானி) களுக்கு மடிக்கடி ஸ்தூலதேக வியோக மிருப்பதாலும், வர்த்தமான தேக வியோகானந்தரம் விதேகமுக்தி யுண்டாகின்ற தென்று கூறுவது அதிவியாப்தி தோஷ முடையதாம். அதை யொழிப்பதற்காக வரப்போகிற தேகமின்றித் திடமாயிருக்கப்பட்ட முக்தியே விதேகமுக்தி யென்னு மபிப்பிராயத்தால் ஞான சமகாலத்தில் விதேகமுக்தி யுண்டாகின்றதென்று கூறப்பட்டது. அதனால் விரோத மின்றாம்; ஆகையா லிரண்டு மதமுங் கொள்ளத்தக்கனவாம்.

வினா:—வர்த்தமான தேகவியோகம் (பிரிவு) விதேகமுத்தி யென்று சொல்லக் கூடாதோ?

விடை:—வர்த்தமான தேகம் பிராரப்த கர்ம காரியமாய் ஞானத்திற்கு முன்னமே யாரம்பிக்கப் பட்டு ஞானத்தா னிவிர்த்திக்கப்படாது பிராரப்த கர்ம நாசத்தால் அஞ்ஞானிகட்குங் கூட நிவிர்த்தியாகின் றமையினாலும், சூட்சுமகாரண தேகங்கள் அப்படி (ஞானமன்றி) நிவிர்த்தியாகாது மேல்வரும் ஜனனத்திற் கேதுவாகின்றமையினாலும், இனிவருந் தேகத்தை நிவி ருத்தி செய்வதன் பொருட்டே ஞானத்தின் சம்பா தனமானபடியினாலும், வர்த்தமான தேகவியோகம் விதேகமுக்தி யென்று சொல்லுதல் பொருந்தாது.

வினா:—ஜீவன் முத்தியின் சாதனங்க ளவை?

விடை:—தத்துவஞானம், வாசனைக்ஷயம், மனோ நாசமென்னு மூன்றன் சமாப்பியாசமாம்.

வினா:—தத்வஞானமாவது யாது?

விடை:—சத்தியமான பிரஹ்மத்தை யதார்த்த மா(ஆத்மாவா)க வறிவது; அஃதாவது "பிரபஞ்ச சொரூ பம் பிரஹ்மமோகம்" "ஏகமேவாத்வைம் பிரஹ்மமோகம்" "நேஹநாநாஸ்திகிஞ்சந" என்னும் சுருதி யுக்தியனுபவ ரூபங்களால் சச்சிதானந்த பரிபூரண பரமாத்வைத பரப் பிரஹ்மசொரூபமே யெல்லாமாம்; அதுவே நான்; இந்த நாமரூப ஜகத்து வேறாகத்தோன்றின போதிலும்

அது கானல் ஜலம்போல மித்தையாமென்னு நிச்சய (வாஸ்தவ) ஞானமே தத்வஞான மாம்?

விஞ:—தத்துவ ஞான மெதனுல் உண்டாம்?

விடை:—விசாரத்தினுலே யுண்டாம்.

விஞ:—விசாரமாவது யாது?

விடை:—ஜீவன், ஜகத்து, பரமாத்மா வென்னு மூன்றையுங் குருசன்னிதானத்தில் நன்ருக வாராய்வதாம்.

விஞ:—விசாரத்தினுற் பிறந்த ஞானமெத்தனை வகைப்படும்?

விடை:—பரோபக்ஷ ஞானம், அபரோக்ஷ ஞானமென விருவகைப்படும்.

விஞ:—பரோக்ஷ ஞானமென்பது யாது?

விடை:—புராண சிரவணத்தாற் சுவர்க்காதிகளுண்டென் றறிதல்போலச் சச்சிதானந்தப்பிரஹ்ம மொன்றிருக்கிறதென் றறிவதாம்.

விஞ:—இந்தப் பரோக்ஷஞான மெதனு லுண்டாம்?

விடை:—சற்குரு, சத்சாஸ்திர வசனங்களிலுள்ள விசுவாசத்தினு லுண்டாம்.

விஞ:—பரோக்ஷ ஞானத்திற்கு முக்கிய சாதனம் யாது?

விடை:—சுரோத்திர சம்பந்தியான அவாந்தர வாக்கியமாம்.

வினா:—அவாந்தர வாக்கியமாவது யாது?

விடை:—ஜீவப்பிரஹ்மங் (ஜீவாத்மா, பரமாத்மாக்)களின் சொரூபங்களைப் போதிக்கும் வாக்கியமாம்.

வினா:—பரோக்ஷ ஞானத்தா லுண்டாவது யாது?

விடை:-அசத்துவாபாதக [பிரஹ்ம மில்லையென்று பிரஹ்மத்தின் அசத்துத் தன்மையை (ஆபாதகஞ்செய்யும் - சம்பாதிக்கும்)] ஆவரணத்தி னிவிர்த்தியாம்.

வினா:—அபரோக்ஷஞானமென்பது யாது?

விடை:—சச்சிதானந்தாகண்டைகரச பரப்பிரஹ்மம் நானென் (எனது நிஜவடிவமென்) றறிவதாம்.

வினா:—அபரோக்ஷஞான மெதனாலுணடாகும்?

விடை:—குருமுகமாகச் செய்யுந் தத்துவமஸி முதலிய மகாவாக்கியத்தின் சிரவணத்தாலுண்டாம்.

வினா:—அபரோக்ஷஞான மெத்தனைவகைப்படும்?

விடை:—அதிடம், திடம் (உறுதி), என விருவகைப்படும்.

வினா:—அதிடாபரோக்ஷ ஞானமென்பது யாது?

விடை:—அசம்பாவனை, விபரீதபாவனைகளோண்டாகும் பிரஹ்மாத்மைக்கிய நிச்சயமாம்.

வினா:—அசம்பாவனையென்பது யாது? அஃதெத்தனை வகைப்படும்?

விடை:—கயிறோவரவோ வெனவிரண்டு கோடிகளையுடைய ஞானம் அசம்பாவனையா (சம்சயமா)ம். அது பிரமாணகத (உள்ள) சம்சயம் பிரமேயகத சம்சயமென் றிருவகைப்படும்.

வினா:—பிரமாணகத சம்சயமாவது யாது?

விடை:—வேதாந்தத்தில் ஜீவப் பிரஹ்மங்களின் பேதம் பிரதிபாதிக்கப் பட்டிருக்கின்றதா? அல்லது அபேதம் பிரதிபாதிக்கப்பட் டிருக்கின்றதா? என்னும் சம்சயமாம்.

வினா:—பிரமேயகத சம்சயமாவது யாது?

விடை:—ஜீவப் பிரஹ்மங்களின் பேதம் சத்தியமா? அல்லது அபேதஞ் சத்தியமா? என்னும் சம்சயமாம். இச்சம்சய மிரண்டன் விரிவை விருத்திரத்நாவலி முதலிய வற்றிற்காண்க.

வினா:—விபரீத பாவனையென்பது யாது?

விடை:—ஜீவப் பிரஹ்மங்களின் பேதமுஞ் சத்தியம், தேகாதிப் பிரபஞ்சமுஞ் சத்திய மென்னும் விபரீத நிச்சயமாம்.

வினா:—அதிடாபரோக்ஷ ஞான மெதனு லுண்டாம்?

விடை:—சித்த மலவிட்சேப தோஷமும், சுருதி நாநாத்துவத்தின் ஞானமும், பிரஹ்மத்தின் அத்வைதத்

தன்மையின் அசம்பவ ஞானமும், பேதவாதி பாமர புருஷர்களது சங்கத்தின் சம்ஸ்காரமுமாகியவிவற்றோடு கூடிய புருஷனுக்குக் குருமுகமாகச் செய்யும் மகா வாக்கிய சிரவணத்தா லுண்டாம்.

வினு:—அதிடாபரோக்ஷ ஞானத்தினு லுண்டாவது யாது?

விடை:—சுகர் வாமதேவர் முதலியோர்போன்று உத்தம லோகப் பிராப்தியும் புனிதமாகியஸ்ரீமான்(சக்கிரவர்த்தி)கள் குலத்திலேனும் அல்லது நிஷ்காமத் தன்மையால் ஞானவான்களது குலத்திலேனும் பிறத்த லுண்டாம்.

வினு:—திடாபரோக்ஷ ஞானமென்பது யாது?

விடை—அசம்பாவனை, விபரீதபாவனைக ளில்லா துண்டாகும் பிரஹ்மாத்ம ஐக்கிய நிச்சயமாம்.

வினு:—திடாபரோக்ஷஞான மெதனு லுண்டாம்?

விடை:—மேற் கூறியவாறு குருமுகமாகச்செய்யும் (ஜீவப் பிரஹ்மங்களி னைக்கியத்தை யறிவிக்கும்) மகா வாக்கியார்த்தத்தின் சிரவண மனன நிதித்தியாசனங் களா லுண்டாம்.

வினு:—திடாபரோக்ஷ ஞானத்திற்கு முக்கிய சாதனம் யாது?

விடை:—சுரோத்திர சம்பந்தியான மகாவாக்கிய மாம்

வினு:—மகாவாக்கியமென்பது யாது?

விடை:—சாமவேதத்தின் சாந்தோக்கிய வுபநிஷத்தின்கணுள்ள தத்வமஸி யென்னு முபதேச வாக்கியமும் பிறவுமாம்.

வினு:—திடாபரோக்ஷ ஞானத்திற்கு மகாவாக்கியமே முக்கியசாதனமானுற் சிரவணுதிகள் முக்கியசாதனமாகா வல்லவோ?

விடை:—அஞ்சனுதிகள் நேத்திர ரோகங்களை நிவிர்த்திக்கும் வாயிலாகச் சூரியதரிசனத்திற்குச் சாதனங்களாகுமே யன்றி நேத்திரம்போல முக்கிய சாதனமாவதில்லை. அதுபோலச் சிரவணுதிகளும் ஞானமடைதற்கு விக்கினமாயுள்ள சம்சயாதிகளை நிவிர்த்திக்கும் வாயிலாக ஞானத்திற்குச் சாதனங்களாகுமே யன்றி மகாவாக்கியம்போல முக்கிய சாதனமன்றும்.

வினு:—திடாபரோக்ஷ ஞானேற்பத்திக்கு மகாவாக்கியமே போதும்; சிரவணுதிக ளெற்றிற்கு?

விடை:—திமிராதி தோஷங்களை நிவிர்த்தித்தற்கு அஞ்சனுதிகள் அவசியம்வேண்டுமாறு போன்று சம்சயாதி தோஷங்களை நிவிர்த்தித்தற்குச் சிரவணுதிகளும் அவசியம் வேண்டும்.

வினு:—திடாபரோக்ஷ ஞானத்தா லுண்டாவது யாது?

விடை:—அபானுபாதக (பிரஹ்மம் தோற்றவில்லை யென்று பிரஹ்மத்தின் அபானத் தன்மையை ஸம் பாதிக்கும்) ஆவாணமும் (அவஸ்தாத் திரயங்களோடு கூடிய சிதாபாசனும் அவன் தர்மமாகிய கர்த்திருத் துவ போக்த்திருத்துவ ஜனன மரணுதி) விட்சேபமு மாகிய காரியத்தோடு காரணமான அவித்தையி (அஞ் ஞானத்தி) னிவிர்த்தியும் பிரஹ்மப்பிராப்தியு மாகிய மோக்ஷமுண்டாம்.

வினு:—திடாபரோக்ஷ ஞான மெப்போது பூரண மாம்?

விடை:—பொன் முதலியவற்றிற்றேற்றும் பூஷ ணுதிகள் போன்று தன்னிடத்திற்றேற்று மிந்தத் தேகாதி நாமரூபப்பிரபஞ்சங்களனைத்து மித்தை யென் றும்,பிரஹ்மமே சத்தியமென்றும்,அது தானென்றும், யாதொரு பிரதிபந்தமு மின்றித் திடமாயறிந்து சகல விருத்திகளுஞ் சாந்தமாகும்போது பூரணமாம்.

வினு:—பிரதி பந்தமென்பது யாது? அஃ தெத் தனை வகைப்படும்?

விடை:—ஞானமடைத (ஆத்ம தரிசனத்தி)ற்கு விக்கினமா (தடையா)க விருப்பது பிரதிபந்தமாம். அது பூதப் பிரதிபந்தம், வர்த்தமானப் பிரதிபந்தம், பௌஷியப் பிரதிபந்த மென மூவகைத்தாம்.

வினு:—பூதப்பிரதிபந்தமாவது யாது?

விடை:—கைவிட்டிறந்த எருமையி னபிமானம் சந்நியாசியினிடத்திற் கண்டகதைபோலப் பூர்வ மனுபவிக்கப்பட்டு நீங்கிய விஷயங்களின் வாசனையாம்.

வினு:—சன்னியாசியினிடத்திற் கண்ட கதை யாது?

விடை:—ஓர் சன்னியாசி பூர்வாச்சிரமத்திருக்கும்போது கிருக சம்ரக்ஷணைக்குத் தக்கவாறு பால் கொடுத்து வந்த எருமை மரணமடைந்தவுடனே (பூர்வகர்ம சம்ஸ்காரத்தால்) இனிக் கிருக சம்ரக்ஷணை செய்ய வென்னுல் முடியாதெனத்துறந்து சந்யாசம் பெற்றுக் குருவையடைந்து ஞானவிருப்பத்தாற் சிரவணபூர்வகமாகத் தியானஞ் செய்து வருங்காலத்து, தியானந்திடப்படுவதற்குத்தடையாக அவர் சித்தத்தில் எருமையைப்பற்றிப் பூர்வமடைந்துள்ள வாசனையால் அடிக்கடி நங்கிருகத்திலிருந்த எருமை நான்குகாலும், கபில நிறமும், வெடிவால், நெற்றிச்சுட்டி, விரிந்த கொம்பு முதலியனவு முடையதா யானைபோலுயர்ந்து பருத்து நீண்ட தேகமுடையது; பதக்குப்பால் கறக்கும். அப்படிப்பட்ட எருமையு மினி யுற்பவிக்குமா? உற்பவிக்கினும் நமக்குக்கிடைக்குமா வென்றற்றொடக்கத்துப் பற்பல சங்கற்பங்களுண்டாக, அதனுல் அவரது சித்தம் ஏகாக்கிரமாகாது சுழன்று கொண்டேயிருந்த தென்பதாம்.

வினா:—பூதப்பிரதிபந்த மெத (எந்த உபாயத்தி) னால் நீங்கும்?

விடை:-முன்ன ரபவாதயுக்தியைக்கூறுமிடத்துக் கூறியவாறு எருமை யென்பதிலுள்ள நாமம், உருவம், இருப்பு, விளக்கம், இன்பமென்னு மைந் தம்சங்களில் எருமை யென்னு நாமமும், தலை கால் வால் உடல் முதலிய உருவமுமாகிய விரண் டம்சங்களும் உற்பத்திக்கு முன்னு நாசத்திற்குப் பின்னு மில்லாமல் மத்தியிலும் நியாயம் சோதனை பொருத்த முகத்தால் விசாரிக்கின் பொருளாகவின்றித் தோற்ற மாத்திரமாகவுள்ள மித்தையா மென்றும்,இருப்பு விளக்கம் இன்பமென்னும் சச்சிதானந்தமாகிய மூன் றம்சங்களும் நாம ரூபத்தோற்றங்களுக்கு முன் பின் மத்தியமென்னு மூன்று காலத்தினுமுண்மையின் மெய்ப்பொருளா மென்றும், சுருதி யுக்தி அனுபவங்களுக்கேற்கப் போதிக்க அவ்வெருமையின் வாசனை நீங்குவதுபோல அவனவன் புத்தியை யனுசரித்துப் போதிக்க நீங்கும்.

வினா:—வர்த்தமானப் பிரதி பந்தமாவது யாது?

விடை:—வர்த்தமான (நிகழ்) காலத்திலுள்ள சகல போக போக்கிய (விஷய) வாசனையாற் புத்திவிருத்தி ஸ்தூலீகரித்துத் தெளிவின்றி யிருத்தலாம்.

வி௵:—வர்த்தமானப் பிரதிபந்த மெத்தனை வகைப்படும்?

விடை:—விஷயாசக்தி, பிரக்ஞாமந்தம், குதர்க்கம், விபரியயம் (விபரீதபாவனை), துராக்கிரகாகர்ந்தை யென் றைந்து வகைப்படும்.

வி௵:—விஷயாசக்தியென்பது யாது?

விடை:—ஸ்திரீ, புத்திர, தனாதி விஷயங்களில் என்மனைவி, என்புத்திரன், என்றன மென்னு மபிமான பூர்வகமாகத் திடமாகவைத்துள்ள பிரியமாம்.

வி௵:—விஷயாசக்தி யெதனா னீங்கும்?

விடை:-சுபேச்சையுடன் சாதனசதுஷ்டய முள்ள வா றுண்டாகுதலா னீங்கும்.

வி௵:—பிரக்ஞாமந்தமென்பது யாது?

விடை:—ஆசிரியர் சுருதிப்பிரமாண திருஷ்டாந்தங்களாற் போதிக்கும் மகாவாக்கியார்த்தக் கிரகணசாமர்த்தியக் குறைவாம்.

வி௵:—பிரக்ஞாமந்த மெதனா னீங்கும்?

விடை:—ஷட்வித லிங்க தாற்பரியத்துட னிரந்தரம் நேயத்தோடு செய்யுஞ் சிரவணத்தினா னீங்கும்.

வி௵:—குதர்க்கமென்பது யாது?

விடை:—வேதாந்த சாஸ்திரங்களின் அத்வைதார்த்தங்களைப் பிரதி பாதிக்கும் வாக்கியங்கட்கு

விபரீதமாக அர்த்தக் கிரகணஞ் செய்து காரண மின்றி விரோததர்க்க யுக்திகளாற் றருக்கித்தலாம்.

வினு:—குதர்க்க மெதனு னீங்கும்?

விடை:—குருசாஸ்திராநுசாரமான மனனத்தினு னீங்கும்.

வினு:—விபரீதபாவனை யென்பது யாது?

விடை:—நான் கர்மநிஷ்டன், நான் பிராமணன், நான் கிருகஸ்தன், நான் பலவான், நான் பண்டிதன், நான் கர்த்தா, நான் போக்தாவென்று அநாத்மாவாகிய தேகாதிகளில் விபரீதமாகவைத்துள்ள ஆத்மபுத்தியாம்.

வினு:—விபரீதபாவனை யெதனு னீங்கும்?

விடை:—நிதித்தியாசனத்தா னீங்கும்.

வினு:—துராக்கிரகாகந்தை யென்பது யாது?

விடை:—நான் கர்மகருத்தா, நான் பலபோக்தா, நான் சுகி, நான் துக்கி, நான் பண்டிதன், நான் பாமரன், நான் பலவான், நான் பலஹீனன் என்று அநாத்மாவாகிய தேகாதிகளிலுள்ள ஆத்மபுத்தியை விடாத யுக்திரஹிதமாகிய ஹடமாம்.

வினு:—துராக்கிரகாகந்தை யெதனு னீங்கும்?

விடை:—தீர்க்க ஸமாதி (தியான) அப்பியாசத்தா னீங்கும்.

வினா:—பௌஷியப் பிரதிபந்தமாவது யாது?

விடை:—ஜன்மாந்தரஹேதுவான பிராரப்த சேஷமும், பிரஹ்மலோகாதி போக விச்சையுமாம்.

வினா:—பௌஷியப் பிரதிபந்த மெதனு னீங்கும்?

விடை:—ஜன்மமெடுத்துப் பிராரப்த சேஷபோகங்களை யனுபவித்தால் நீங்கும்.

வினா:—பௌஷியப் பிரதிபந்தம் ஜன்ம மெடுத்தனுபவித்தால் நீங்கு மென்பதற்குப் பிரமாணம் யாது?

விடை:—சங்கற்பசகிதராயிருந்து சிரவணம் பண்ணின வாமதேவருக் கொரு ஜன்மம் வந்த தென்று ஆத்மபுராணமும், ஜடபரதருக்கு மூன்று ஜன்மம் வந்ததென்று பாகவதமும் கூறுவது பிரமாணமாம்.

வினா:—இங்ஙனம் பிராரப்தசேஷ மனுபவித்தே தீரவேண்டுமாயின் முயற்சிவேண்டிய தின்றோ?

விடை:—பிராரப்தபோகம்வறுத்தவிதைபோன்று மேல்ஜன்மத்திற் கேதுவாகாமையின் அதனையனுபவித்தேயொழிக்கவேண்டும். ஜன்மவேதுக்களான சஞ்சித ஆகாமிய மிரண்டனுள் சஞ்சிதஞ் சற்குரு சந்நிதியிலுண்டான ஞானக்கினியாற் கெட்டொழியும். ஆகாமியமோ ஆத்மாவின்கண் கர்த்திருத்துவப் போக்திருத்துவப் பிராந்தியின்மையின் சம்பவியாது. "யோகப் பிரஷ்ட னிரண்டொருஜன்மத்திலே கி ரு தா ர் த் த

னுவா" னென்று கீதையில்ஸ்ரீகிருஷ்ண பகவா னருளிச்செய் திருக்கின்றார். கட்டுவாங்கத மகாராஜன் சிரத்தாபக்திசகித யோகமுயற்சியினு லிரண்டு நாழிகையில் மோக்ஷமடைந்தான். ஆகையாற் சந்தேகவிபரீதமற நிரந்தர மாதரவா யப்பியா (முயற்)சிக்கவேண்டும்.

வினு:—அப்பியாசமாவது யாது?

விடை:—பிரஹ்ம நிஷ்ட சற்குருவி னிடத்திற் றன் சொரூபத்தை (ஆத்மாவை) க்கேட்டு அபரோக்ஷமா யறிந்தனுபவித்த அனுபவத்திற்கு விக்கினங்களான அஞ்ஞான சந்தேக விபரீதங்களுக்கு விரோதிகளான சிரவண, மனன, நிதித்தியாசன மென்னு மூன்றையுங் கிரமமாக நிரந்தரமா யப்பியாசிப்பதாம். வேதாந்த சாஸ்திரத்தி னர்த்தத்தைக் கேட்பதும், தனித்திருந்து மனனம்பண்ணுவதும், சாதுக்களோடு கூடிப் பரஸ்பரஞ் சொரூபவிசாரஞ் செய்வதும், நிதித்தியாசனம்பண்ணுவதும், இதம்விருத்திக்கு விஷயமான ஆகாசாதி பாஹியப் பிரபஞ்சமும் அகம்விருத்திக்கு விஷயமான அகங்காராதி யாந்தரப் பிரபஞ்சமு முண்டாக வேயில்லை; ஆனதா லிப்போ தெங்கே யிருக்கும்? இனிமேற்று னெப்படியிருக்கும்? காலத்திரயத்திலுங் திருசியப் பிரபஞ்ச மில்லவே யில்லை யென்று நிரந்தரம் பழகுவதும் வேண்டும்.

கைவல்லிய நவநீதம்.

"தானாகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன் றும், ஆனாலுந் தடைக ளுண்டே லனுபவ முறைத்தி டாதே" என்றும்,

"தடையெவை யெனிலஞ் ஞான சந்தேக விபரீ தங்கள், படர்செயு மிந்த மூன்றும் பலசன்மப் பழக் கத் தாலே, உடனுடன் வரும்வந் தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத், திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளித லாலே" என்றும் கூறுவதறிக.

வினா:—வாசனையாவது யாது?

விடை:—பூர்வாபர மொ(முன்பின்னொ)ன்றையு மா லோசிபாமல் விரைவிற்றோன்றுங் குரோதாதி விருத்தி களுக் கேதுவான சித்தத்தின் சூட்சுமாவஸ்தையாகிய திடஸம்ஸ்காரமாம்.

வினா:—இதனை வாசனையென்ப தெதனால்?

விடை:—அநாதிகாலந் தொட்டிருதயத்தில் வசிக்கிறபடியினாலாம்.

வினா:—இந்தவாசனை யெத்தனை வகைப்படும்?

விடை:—அசுத்தவாசனை சுத்தவாசனையென விரு வகைப்படும்.

வினா:—அசுத்தவாசனை யென்பது யாது?

விடை:—தேகாதிபஞ்ச கோசங்கட்கு மவற்றின் சாக்ஷியான ஆத்மாவிற்கு மிருக்கும் பேதத்தை மறைக்

கும் அஞ்ஞானத்தினுலேயுண்டாகிற பிராந்தியின் பரம்பரையாகிய கனமான வகங்காரத்தோடேகூடினதாயும் மீண்டும் மீண்டும் ஜன்மத்தைக் கொடுக்கிறதாயு மிருக்கின்ற மலின வாசனையாம்.

வினு:—அசுத்தவாசனை யெத்தனைவகைப்படும்?

விடை:—உலகவாசனை தேகவாசனை சாஸ்திர வாசனையென மூவகைப்படும்.

வினு:—உலகவாசனையென்பது யாது?

விடை:—என்னையுலகம் நிந்தித்த லாகாது; எல்லோரு மென்னைத் துதிக்கவேண்டும்; ஸகல ஜனங்களு மென்னை யெவ்வாறிருந்தால் நிந்தியாது தோத்திரமாத்திரம் பண்ணுவார்களோ அவ்வாறு நடக்கவேண்டு மென்னுந் துராக்கிரகத்தின் திடஸம்ஸ்காரமாம்.

வினு:—மலினவாசனையென்ப தெதனல்?

விடை:—இவற்றைச் சம்பாதிப்பது பிரமாதிகட்கு மசாத்தியமான படியினுலும், வெகுவித வனர்த்த (ஜன்ம) ங்களுக் கேதுவான படியினுலும் அவற்றின் வாசனை மலினவாசனையாம்.

வினு:—உலகவாசனை நசித்தற்குபாயம் யாது?

விடை:—சர்வகுண சம்பன்னரான ஸ்ரீ ராம சந்திரருக்கும் பதிவிரதா சிரோமணியாகிய சீதா தேவிக்குங் காதினுற் கேட்கக் கூடாத அபவாதம்

(நிந்தை) ஜனங்களா லுண்டாயிருப்பதும் தேசபேதத்தா லொருவரையொருவர் நிந்திப்பதுமாகிய விவற்றையுய்த்துணர்வதும், ஸகல ஜனங்களுக்கும் ஸந்தோஷம் வருமாறு நடக்கத்தக்க வுபாய மியாதொன்றுமில்லை; தத்தம் மனதிற் றோற்றியவாறு சொல்லும் ஜனங்களுடைய சொல்லினாலே நமக்காவதென்ன? எவ்விதத்தாலும் ஹிதத்தையே யனுஷ்டிக்கவேண்டு மென்கிற விவேகமும் உபாயமாம். இந்த வபிப்பிராயத்தைக் கொண்டே சுருதிகளி லங்கங்கே தியான புருஷனுக்கு ஸ்துதி நிந்தைகளில் சமபுத்திவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வினா:—தேகவாசனையென்பது யாது?

விடை—தேகமே தானென (ஆத்மாவெ) ன்னுந்துரபிமானத்தின் றிடஸம்ஸ்காரமாம்.

வினா:—தேகவாசனை யெத்தனை வகைப்படும்?

வினா:—தேகாத்மப் பிராந்தி, தேகத்தின் குணஸம்பாதனப் பிராந்தி, தேகத்தின்றோஷ நிவிருத்திப் பிராந்தியென மூவகைப்படும்.

வினா:—தேகாத்மப் பிராந்தியென்பது யாது?

விடை:—பாமர (மூட) லோகாயத சார்வாகாதியர் சைதன்ய லட்சண மஹித தேகத்தை ஆத்மாவெனப் பாவித் திருப்பதாம்.

வினா:—தேகாத்மப் பிராந்தி யெத்தனை வகைப்படும்

விடை:—அகந்தை மமதையென விருவகைப்படும்.

வினா:—அகந்தையாவது யாது?

விடை:—ஸர்வேந்திரியத்துடன் றேகத்தை நானென் றபிமானிப்பதாம்.

வினா:—மமதையாவது யாது?

விடை:—சர்வேந் திரியத்தோடு தேகத்தையும் பிறவற்றையு மெனதென்று பாவிப்பதாம்.

வினா:—தேகத்தின் குண ஸம்பாதனப் பிராந்தி யென்பது யாது?

விடை:—அங்ஙனம் அகம் விருத்திக்கு விஷயமான தேகத்திற்கனுகூலமா (சுகத்தின் ஸாதனமா) கிய ஸகல சாமக்கிரி (ஸாதனங்) களையுஞ் சம்பாதிக்க வேண்டுமென்னும் துரபிமானமாம்.

வினா:—குண ஸம்பாதனப் பிராந்தி யெத்தனை வகைப்படும்.

விடை:—லௌகிகம் சாஸ்திரீயமென விருவகைப்படும்.

வினா:—லௌகிகுண ஸம்பாதனமாவது யாது?

விடை:—தேகத்தின் புஷ்டி அழகு முதலிய குணங்களைச் சம்பாதிக்க வேண்டுமென்னும் துரபிமான

மாம். அஃதாவது நல்ல இராகத்தோடு கூடக்கானம்பண்ணுவதற்காக விளக்கெண்ணெய் மிளகு நெய் முதலியவற்றைப் புசிப்பதும், தேகத்தைத் தொடும்போது மெத்தென விருத்தற்காகப் புஷ்டியைத் தாத்தக்க ஒளஷதங்களைப் புசிப்பதும், சரீரமழகா யிருத்தற்பொருட்டு அப்யங்க ஸ்நானாதிகளைச் செய்து நல்லவஸ்திராபரணங்களைத் தரிப்பதும், சரீரம் சுகந்தமா யிருத்தற்பொருட்டுப் புஷ்பமாலை யணிந்து சந்தனாதிகளைப் பூசிக்கொள்வதுமாம்.

வினா:—சாஸ்திரீய குண ஸம்பாதனமாவது யாது?

விடை:—தேகத்தின் புண்ணிய வடிவகுணத்தை (புண்ணியஸ்தல ஜல தரிசன ஸ்பரிசனாதிகளால்) ஸம்பாதிப்பே னென்னு மாக்கிரகமாம். அஃதாவது காசி முதலிய புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிப்பதும், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வதும், சாளக்கிராமாதி தீர்த்தத்தைப் புரோக்ஷித்துக்கொள்வதுமாம்.

வினா:—தேகத்தின் தோஷ நிவிர்த்திப் பிராந்தியென்பது யாது?

டை:—தேகத்திற்குப் பிரதிகூல (துக்கத்தின் ஸாதன)மாயுள்ள ஸகல விஷயங்களையும் நீக்க வேண்டுமென்னுந் தூாபிமானமாம்.

வினா:—தேகத்தின் தோஷ நிவிருத்திப் பிராந்தி யெத்தனை வகைப்படும்?

விடை:—இலௌகிக சாஸ்திரீய மென விரு வகைப்படும்.

வினா:—இலௌகிக தோஷநிவிருத்திப் பிராந்தி யாவது யாது?

விடை:—வைத்திய சாஸ்திரத்திற் கூறிய வாறு ஔஷதங்களைப் புசிப்பதும் முகப்பிரக்ஷாளணாதிகளைச் செய்வதுமாம்.

வினா:—சாஸ்திரீயதோஷ நிவிருத்திப் பிராந்தி யாவது யாது?

விடை:—சௌச ஆசமனாதிகளைச் செய்வதாம்.

வினா:—இவற்றிற் கேதுவான வாசனையை மலின வாசனை யென்ப தெதனால்?

விடை:—தேகமே வாத்மாவென்பது அப்பிர சித்த (அப்பிரமாண) மும் ஸகல துக்க ஹேதுவுமாம். அது மலமூத்திரங்களால் நிரம்பப்பட்டு நவத்துவாரங் களின் வழியாய்ச் சீயொழுகுந் தன்மையது, தன்னு டன் சேர்ந்த சுத்தமான ஸகல வஸ்துக்களையும் நிமி ஷத்தி லசுத்தம் பண்ணுவது. ஔஷ தாதிகளாற் சாதகபாதக (அனுகூலப் பிரதி கூல)மான ரோகாதி விஷயங்கள் மீண்டும் பாதக சாதகமாம். இவற்றின்

குணதோஷ (சுகதுக்க)ங்களின் லம்பாதக நிவிருத்தி யெப்படிப் பட்டவருக்கு மஸாத்திய மானபடியினால் மூன்றுவித தேகவாசனைகளும் மலினமாம்.

வினா:—தேகவாசனை நசித்தற் குபாயம் யாது?

விடை:—எவன் வாத பித்த ஸிலேஷ்ம மென்னு மூன்றுதோஷங்களோடு கூடி அமங்கள (பிரேத) ரூப மான தேகத்தில் யானென்னு மகம் புத்தியும், புத்திர மித்திர களத்திராதிகளில் எனதென்னு மமதையும், பாஷாண மிருத்து தாரு தாம்பிர (கல், மண், மரம், செம்பு) முதலியவற்றின் விகாரமான மூர்த்திகளில் மாத்திரந் தெய்வபக்தியும், கங்கையாதிய ஜலமாத் திரத்திற் றீர்த்தபுத்தியு முடையவனோ அவன் தத்துவ வித்துக்களாகிய பெரியோர்கள் சபையிற் கருத்தபம் (கழுதை) யென்று சொல்லப்படுகிறான் என்றும், தேக மத்தியந்த மலினம், ஆத்மாவத்தியந்த நிர்மலம், ஆத லால் தேகத்திற் கெவ்வளவு சௌசம்பண்ணினாலுமது சுத்தியுறாது. ஆத்மா நித்திய சுத்தமானதாற் சௌசப் பிரசித்தியே அதற்கில்லை யென்றும், ஔஷதம் புசித் தல் முதலியவற்றாற் றற்காலம் ரோகஞ் சாந்தியாகிற து. அங்ஙனஞ் சாந்தியானரோக மறுபடியுமடிக்கடி யுளதாகவே (வந்துகொண்டே)யிருக்கின்றது. ஆகையா லிந்த மூவிதவாசனைகளும் அசுத்தவாசனை யென்றும் ஆத்மவித்துக்க ளிவற்றைச் சர்வாத்மனுக் கைவிட

வேண்டுமென்றும் கூறும் சாஸ்திர வாக்கியங்களைச் சதா சிந்திப்பது மங்ஙன மனுஷ்டிப்பதும் தேகவாசனை நசித்தற் குபாயமாம்.

வினா:—சாஸ்திரவாசனை யென்பது யாது?

விடை:-ஸகல சாஸ்திரங்களையுமியான்றறி(கிரகி)ப் பேனென்னுந் துராக்கிரகத்தின் றிட ஸம்ஸ்காரமாம்.

வினா:—இந்தச் சாஸ்திர வாசனை யெத்தனை வகைப் படும்?

விடை:—அது கர்மசாஸ்திர பாடாபிமானம், அந் தச் சாஸ்திர அர்த்தாபிமானம், அதன் அர்த்தானுஷ் டான அபிமானமென மூவகைப்படும்.

வினா:—கர்மசாஸ்திர பாடாபிமானமாவது யாது?

விடை:—(வேதாந்த பின்னமான) ஸகல சாஸ்திரங் களையு மொழுங்காகக் கற்கவேண்டு மென்னுந் துரபி மானமாம்.

வினா:—அச்சாஸ்திரார்த்தாபிமானமாவது யாது?

விடை:—அங்ஙனங் கற்றுணர்ந்த சாஸ்திரங்களின் பொருள்களையெல்லாம் நன்றாகக் கிரகிக்க வேண்டு மென்றும், அங்ஙனங்கிரகித்த பொருள்களில் அது பொருள் இது பொருள், அதுநலம் இதுநலம், அதுபாத கம், இது சாதகமென் றூக்கிரகமா யபிமானித்தலாம்.

வினா:—அச் சாஸ்திரார்த் தானுஷ்டா னுபிமான மாவது யாது?

விடை:—அங்ஙனந் தான்கிரகித்த அர்த்தத்திற் றனக் கனுகூலமான அர்த்தத்தின்படியே நின்று பூரணமா யனுஷ்டிக்க வேண்டுமென்னு மபிமானமாம்.

வினா:—இவை மலினவாசனை யென்பதேதனால்?

விடை:—இவை பிரஹ்மாப் பியாசத்திற்கு விரோதிகளாயும் வெகுஜன்ம பரம்பரைக்கேதுவாயு மிருத்தலின் முற்று மடைதற் கியலாத அவற்றின் வாசனை மலினவாசனையென்று சொல்லப்படும்.

வினா:—இம்மூன்றுவித சாஸ்திரவாசனையும்வெகு ஜன்ம பரம்பரைக் கேதுவென் றெங்கே சொல்லப்பட்டிருக்கிறது?

விடை:—முறையே (1) பாரத்துவாசரென்பவர்மூன்று புருஷாயுசுவரையில் வெகு வேதங்களை அத்தியயனஞ்செய்து நாலாம் புருஷாயுசுவிலே இந்திரனாலேமீண்டும் வேதபாடத்தில் பிரவிர்த்திக்கப்பட்டு மவருடைய அசாமர்த்தியத்தை யிந்திரன் பார்த்து வேதபாடத்தினின்றுந் திருப்பி யதற்கதிகமான சகுணப் பிரஹ்மோபாசனையை யவருக்குபதேசித்தானென்று தைத்திரீய சுருதியிலும், (2) அப்படியே வெகுசாஸ்திரார்த்தத்தை யறியவேண்டுமென்னும் அபிமானத்துடனொரு இரிஷியானவர் அளவிறந்த சாஸ்திர புஸ்தகபாரங்களோடே கூடினவராய் மகாதேவ (பரமசிவ) னைத் தரிசனஞ் செய்வதற்காக வந்தபோது அவரைப்பார்த்து அங்

கிருந்த மற்றொரு இரிஷியானவர் பாரஞ் சுமக்கிற கழுதையெனக் கிருபையினாலே பரிகாசஞ் செய்ய அதைக் கேட்ட அந்த இரிஷி புஸ்தக பாரங்களையெல்லாம் லவண ஸமுத்திரத்தி லெறிந்துவிட, அதைக் கண்ட கிருபாநிதியாகிய மகாதேவரானுக்கிரகத்தினாலே அவராத்மவித்தையிலே பிரவிருத்தித்தாரென்று காலஷேயகீதையிலும், நாரதபகவானானவரறுபத்துநான்கு வித்தைகளிலுஞ் சமர்த்தரான போதிலும் ஆத்மவித்தையில்லாமையினாலே சோகத்தோடு கூடினவராய்ச் சனத்குமாரரைச் சரணமா யடைந் தாத்மவித்தையைப்பெற்றுச் சோகசாகரத்தினின்றுங் கரையேறினாரென்று சாந்தோக்கிய சுருதியிலும், (3) அப்படியே, வெகு சாஸ்திரார்த்தானுஷ்டானஞ் செய்யவேண்டுமென்னும் விருப்பத்துடன் சிரவணஞ்செய்து வந்த நிதாகரானவர் ரிபுவினாலே யடிக்கடி ஆத்மதத்துவ முபதேசிக்கப்பட்டபோதிலு மவர் கருமானுஷ்டானத்தின் சிரத்தையை விடவேயில்லையென்று விஷ்ணு புராணத்திலும், தாசூரன் கர்மானுஷ்டானத்தின் பொருட்டுப் பூமியி லோரிடத்துஞ் சுத்த ஸ்தலத்தை யடையவில்லையென்று வாசிட்டத்திலும் கூறப்பட் டிருக்கின்றன. இவ்வாறு பலசரித்திரங்கள் விஸ்தாரமாயுண்டு.

வினா:—இந்த வாசனையின் க்ஷய (நாச) மாவது யாது?

விடை:—புருஷமுயற்சியினு லுண்டாகும், விஷய தோஷ திருஷ்டி(விவேகம்)சாந்தி(மைத்ரி)யாதி வாசனை சின்மாத்திர வாசனையென்னும் சுபவாசனைகள் திடமாகும்போது பாஹ்ய நிமித்தத்தினுலே குரோதாதி விருத்திக ளுண்டாகாம லிருப்பதே வாசனுக்ஷயமாம்.

வினு:—விஷயதோஷ விவேகமாவது யாது?

விடை:—ஸப்தாதி விஷயங்களிலுள்ள அநித்தியத்துவாதி தோஷங்களையும் அவ் விஷயேச்சையாலுண்டாகும் ஜனனமரணுதி துக்கங்களையுஞ் சாஸ்திரங்களாலுந் தன்னனுபவத்தாலும் ஆராய்தலாம். இதற்குப் பிரமாணம் வருமாறு:—ஞான வாசிட்டம்.

"படர்மூர்க்க மாமனமே வினைய்த் தோன்றிப பருக்கின்ற செவித்தொழில்கள் பயின்று சத்தந், தொடர்கின்ற புந்தியினு லசுண மாபோற்றுஞ்சுறவேண்டாதோலின் றொழிலே மேவி, யடர்பரிச மூகமா மதனுற் றுன்ப மடியாகப் பிடிக்கன்பா மியானை போல, மடமைமிகு மூர்க்கமா மனமே யென்று மாறுத வாபத்தை மருவ வேண்டாம்".

"ஒளியுருவத் திரனேக்கு விழியின் செய்கையுற்றுநீ வெவ்விளக்கை யுணராதாகி,விளிதலுறும் விட்டிலபோல் வேக வேண்டா வெய்யமன மோனவின் விருத்தி மேவி, யெளிதருந்தி யுணவுகளின் மணத்தினுலே யிரைத்தூண்டிற் கவர்மீன்போ லிறக்கவேண்டா,

களினவித யத்தாளுயிர் செறிபோய்க் கந்த நாட்டத்
தாற் கட்டுண்மேனா ளனைவண் டேபோல்"

"உரைத்தவசு ணங்களிறு விட்டின் மீன்றே
னோசையூ றொளியிரத நாற்ற மென்ன, நிரைத்தவிவற்
றொன்றொன்றால் மாய்ந்து போகு நிலையழிக்கு மவை
யைந்து நேரே கூடிக், கரைத்தலுறு பவர்க்கின்ப
மெங்கே யுன்றன் கட்டுக்கு வாதனையே கயிற்றுச்
சாலம், புரைத்தெழுநெஞ் சேயதுவே போகு மாகிற்
பொருவிற்சய மஃதுனக்குப் புகலுங் காலே".

அமுதசாரம்.

"சிந்தா குலமனிதர் சிசி செவிமுதலா
மைந்தாலு மீடழிவ ரல்லரோ—வைந்திலொரு
வேட்கை யசுண மிபம்விட்டின் மீன்வண்டு
கேட்கைமுத லோரொன்றிற் கேடு".

வினா:—சாந்தியாதி வாசனைக ளெவை?

விடை:—மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை
யென்னு நான்குமாம்.

வினா:—மைத்திரி யென்பது யாது?

விடை:—சுகிகளிடத் துண்டாகு மன்பு; அஃதா
வது சுகப்பிராணிக ளியாவரும் நம்முடையவர்க ளென்
னும் பாவனையாம்.

வினா:—இந்த மைத்திரியா லுண்டாவது யாது?

விடை:—சுகிகளாயுள்ள சகலப் பிராணிகளிடத்தி லும் மைத்திரியைப் பாவிக்கிறவனுக்கு முன் றன்னா லனுபவிக்கப் பட்ட சுக விசேஷத்தை யனுசரித்து (ஸஜாதீயமாயு) ள்ள ஸகல சுகமுந் தனக்கு வேண்டு மென் றுண்டாகுஞ் சித்த விருத்தியாகிய ராகத்தின் நிவிருத்தி யுண்டாம்.

வினா:—சுகப்பிராணிகளிடத்தில் மைத்திரியைப் பாவிக்கிறவனுக்கு இராகநிவிருத்தி யெப்படியுண்டாம்?

விடை:—அந்த இராகமானது திருஷ்டமானசிர்க்குச் சந்தன வநிதாதி விஷயரூபமாயும் அதிர்ஷ்டமான புண் ணியரூபமாயுமுள்ள சுகத்திற்கு ஸாதனமான சாமக் கிரி தனக் கில்லாமையினாலே புருஷனுடைய சித் தத்தை மலினமாகச்செய்யும். எப்போதந்தப் புருஷன் சுகப்பிராணிக ளெல்லாரிடத்திலும் இவர்கள்நம்முடை யவர்க ளென்னும் மைத்திரியைப் பாவிக்கிறானோ அப் போது தனக்கு இராஜ்ய மில்லாவிட்டாலும் தனது புத் திராதிகளுக்குக் கிடைத்திருக்கிற இராஜ்யத்தைத் தனது இராஜ்யமாகப் பாவிக்கிறவனுக்கு அந்த விராஜ்ய சுகந் தனது சுகமானாற்போல அவர்களுடைய சுகந் தனது சுகம்போல வாகின்றது; ஆகின்றமையின், அந் தச் சுகத்தில்வரு மிராகத்தின் நிவிர்த்தி யுண்டாம்; அப்போது வருஷாகாலம்போய்ச் சரற்காலம் வரும் போது நதிகளுடையஜலம் நிர்மலமாவதுபோலப் புரு ஷனுடைய சித்தம் நிர்மலமாம்.

வினா:—கருணையென்பது யாது?

விடை:—துக்கிகளிடத்துண்டாகு மிரக்கம்; அஃதாவது தனக் கெப்படித் துக்கம் பிரதிகூலமானதால் வேண்டாமோ அப்படியே அன்னியர்(துக்கி)களுக்கும் வேண்டாமென்னும் பாவனையாம்.

வினா:—இந்தக் கருணையா லுண்டாவது யாது?

விடை:—துக்கிகளாயுள்ள பிராணிக ளிடத்திற் கருணையைப் பாவிக்கிறவனுக்குத் தன்னா லனுபவிக்கப் பட்ட துக்கவிசேஷத்தை யனுசரித்து இப்படிப்பட்ட துக்கமெல்லா மொருபோது நமக்கு வேண்டாமென் றுண்டாகுஞ் சித்தவிருத்தியாகிய துவேஷத்தின் நிவிருத்தி யுண்டாம்.

வினா:—துக்கப் பிராணிக ளிடத்துக் கருணை கொள்பவனுக்குத் துவேஷ நிவிருத்தி யெப்படி யுண்டாம்?

விடை:—அந்தத் துவேஷமானது துக்கஹேதுக்களாய சத்துரு, சர்ப்ப, சோர, வியாக்கிராதிக ளிருக்கும்போது நிவிருத்தியாகமாட்டாது. அவற்றையெல்லா மொருங்கேயொழித்தல் எவனாலு மாவத்தக்கதன்றாம். ஆகையாற் றுவேஷமானது ஸதா ஒவ்வொருபுருஷனது இருதயத்தையும் தஹித்துக்கொண்டே யிருக்கும். எந்தப்புருஷ னெப்போது பிராணிக ளியாவருக்குந் துக்கம் வேண்டாமென்னுங் கருணையைப் பாவிக்கிறானோ

அப்போதவனுக்குச் சத்துருவாதிகளால் வரும் துவேஷத்தின் நிவிருத்தியுண்டாம். அதனால் அவனது சித்தம் நிர்மலமாம்.

வினா:—முதிதையென்பது யாது?

விடை:—புண்ணியாதிகாரிகளிடத்துண்டாகும் விருப்பு; அஃதாவது நிஷ்காமபுண்ணிய புருஷரிடத்து வைக்குஞ் சந்தோஷமாம்.

வினா:—புண்ணிய புருஷரிடத்து முதிதையைப் பாவித்தலா லுண்டாவது யாது?

விடை:—நாமேன் நல்வினையைச் செய்யாது போனோமென்னும் மரணகால விதனம் நிவிருத்தியாம்.

வினா:—புண்ணிய புருஷர்களிடத்து முதிதையைப் பாவித்தலால் விதனத்தின் நிவிருத்தி யெப்படியுண்டாம்?

விடை:—உலகத்திலே ஒவ்வொருவனும் சுபாவமாய்ப் புண்ணியபலமான சுகத்தை யிச்சிக்கிறான்; ஆனாலதற்கு ஸாதனமான புண்ணிய கருமத்தை யனுஷ்டிப்பதில்லை. அதனாற் புருஷனுக்கு மரணகால விதனமுண்டாகின்றது. எப்போது புருஷன் புண்ணிய புருஷர்களிடத்து ஸந்தோஷமாகிய முதிதையைப் பாவிக்கிறானோ அப்போதந்தப் புண்ணியகரும வாசனையினாலே தானும் பிரமாதமின்றிப் புண்ணிய கருமத்திற் பிர

விருத்திப்பன். அதனால் நாமேன் புண்ணியத்தைச் செய்யாதுபோனே மென்னும் மரணகாலத்தில் வரும் விதன முண்டாவதில்லை; சித்தமும் நிர்மலமாம்.

வினா:—உபேக்ஷையென்பது யாது?

விடை:—பாவிகளிடத் திராகத் துவேஷமில்லாமை; அஃதாவது தீங்குசெய்யும் பாபிகளை விருப்பு வெறுப்பின்றி நீக்குதலாம்.

வினா:—பாவிகளிடத் துபேக்ஷையைப்பாவித்தலா லுண்டாவது யாது?

விடை:—நாமேன் பாவத்தைச் செய்தோ மென்னும் சோகத்தின் நிவிருத்தி யுண்டாம்.

வினா:—பாவிகளிடத் துபேக்ஷையைப் பாவித்தலாற் சோகத்தின் நிவிருத்தி யெப்படி யுண்டாம்?

விடை:—உலகத்திலொவ்வொரு புருஷனும் சுபாவமாய்ப் பாவகர்ம பலமான துக்கத்தைத் துவேஷிக்கிறான்; அதற்கேதுவான பாவத்தையு முயற்சியோடேகூட வனுஷ்டிக்கிறான்; அதனும் புருஷனுக்கு மரணகால சோகமுண்டாகின்றது. எப்போதிந்தப் புருஷன் பாவிகளிடத் துபேக்ஷையைப் பாவிக்கிறானோ அப்போது தானு மந்தப் பாவத்தினின்று நிவிர்த்தியாவன். அதனால் நாமேன் பாவத்தைச் செய்தோ மென்னும் மரணகாலத்தில் வரும் சோகமுண்டாகாது; சித்தமும் நிர்மலமாம்.

வினு:—சின்மாத்திர வாசனை யென்பது யாது?

விடை:—ஸர்வாதிஷ்டான பரிபூரண சின்மாத்திர மாகிய பிரஹ்ம சொரூபத்திற் பாஹ்யாந்தரமான ஸர்வ ஜகத்தும் இரஜ்ஜுவிற் சர்ப்பம்போலக் கற்பிதமாம்; ஆதலால் அவைபிரஹ்மத்திற்கன்னியமன்று; எப்போது மிருப்பது அகண்டைகரசப் பிரஹ்மம்; அது வேநான்; நானே அதுவென வறிந்து பாவிப்பதனு லுண்டாகும் ஸம்ஸ்காரமாம்.

வினு:—இந்தச் சின்மாத்திரவாசனைக் கேதுவை யெவ்வளவுகால மப்யசிக்கவேண்டும்?

விடை:—எவ்வளவு காலந் தியானம் பண்ணினதி ஞலே நாமரூபஜகத்து அணுமாத்திரங்கூடத் தோன்று மல் ஸர்வஞ் சின்மாத்திரம், நாமுஞ் சின்மாத்திர மென் னும் விருத்தி தைலதாரைபோலத் தொடர்ந்து வரு மோ அவ்வளவுகால பரியந்த மப்பியசிக்கவேண்டும்.

வினு:—மலினவாசனை (அசுபவாசனை) களைச் சின் மாத்திர வாசனையொன்றுமே நிவிருத்திக்கத்தக்கதாக விருத்தலின் அதனைமாத்திரஞ்சம்பாதித்தாற் போதும்; ஏனைய மைத்திரியாதி வாசனைகளையு மேன்சம்பாதித் தல் வேண்டும்?

விடை:—சுவர் திடப்படாமல் வீடெங்ஙனந் திடப் படுவ தில்லையோ, மலவிரேசன மாத்திரை புசித்துத் துர்மலங்களை நிவிருத்தி செய்யாமல் புசிக்கும் ஔஷத

மெங்ஙனம் வியாதியை நிவிருத்தி செய்வதில்லையோ, அங்ஙனம் இராகத் துவேஷாதிகளை நிவிர்த்திப்பதாகிய மைத்திரியாதி பாவனை (வாசனை) திடப்படாவிடின் சின் மாத்திர வாசனை திடப்படுவதில்லை. திடப்படாத சின் மாத்திர வாசனையால் மலின வாசனைகளத்தியந்த நிவிருத்தியாகா. ஆதலின், சின்மாத்திர வாசனை திடப்படு நிமித்தம் மைத்திரியாதி வாசனைகளையுஞ் சம்பாதித்தல் வேண்டும்.

வினா:—அசுரவாசனையை நிவிர்த்திப்பதாகிய சுப வாசனையை யுண்டுபண்ணுவதற்குக் கர்த்திருகாரணானு சந்தான வடிவப் புருஷப்பிரயத்தினம் வேண்டுமாறாற் சுபவாசனையை நிவிர்த்தித்தற்கு மற்றொரு பிரயத்தின மும் அதனை நிவிர்த்தித்தற்கு மற்றொரு பிரயத்தினமு மாக மேலுமேலும் வேண்டப்பட்டு முடிவுபெறாவாம். ஆதலின் மனதிற்கொருவாசனையு மின்றிச் சாந்தமடை யுங்காலஞ் சித்திக்க மாட்டாதே?

விடை:—பிணஞ்சுடு தடி தன்னைச் சுடுவதற்கு வேறுதடி வேண்டுவதின்றிப் பிணத்தோடு தானுந் தகனமாவதுபோலும், கலங்கல் ஜலத்திற்போட்ட கதக ரேணு (தேற்றாங்கொட்டைத் தூள்) ஜலத்தின் மலி னங்களை நிவிருத்திசெய்து தானும் அவற்றுடனொரு பிரயத்தினமு மின்றி நிவிருத்தியாவதுபோலும், சுப வாசனையும் அசுபவாசனையை நிவிருத்திசெய்து தானு

மொரு பிரயத்தினமு மின்றி நிவிருத்தி யாகின்றது. வெகுகாலபரியந்தம் நிரந்தர மாதரவோடு செய்யும் வைராக்கியத் தியானுப்பியாச பலத்தினுல் மலின வாசனைகள் போலச் சுத்தவாசனைகளும் நசித்துப் போம். அதனுல் மனதொருவாசனையு மின்றி நிரு வாசனையாய்ச் சாந்தமாம்.

வினு:—துர்வாசனைகள் மிகுபிரபலமா யிருந்து மேற்கூறிய விவேகாதி ஸாதனங்களினுலும் ஒழியாவா யின் செய்யத்தக்க உபாயமியாது?

விடை:—அப்போது பிராண சலன நிரோதம் மனோ நிக்ரகத்தி லுபாயமாம்; ஏனெனின், பிராண சலனம் துர்வாசனை யென்னு மிவ்விரண்டுஞ் சித்தத் தைப் பிறழச் செய்கின்றமையின் அவ்விரண்டையும் நிரோதம் பண்ணும்போது சித்தசாந்தி சுலபமாய்ச் சித்திக்கும். அதனுலே வாசனுக்ஷய முண்டாம். இதற் குப் பிரமாணம் வருமாறு:—

ஞானவாசிட்டம்.

"உயிரினசை வொன்றுவா தனையொன் ருக வுபய மா மனத்தின்விதை யிவற்றி னென்று, பயில்வுறமாய்ந் தாவிரண்டு முடனே மாயும் பகருறுவா தனைவசத்தாற் பிராண னோட்ட, முயிரசைவால் வாதனையு முண்டா மத்தா லுள்ளமெனும் விதைக்குவிதை முனையொ ரூங் காம், பயில்வுறுவா தனையுயிரி னசைவி ரண்டும் பல விதங்காண் பனைவித்தாய்ப் படரு மன்றே".

"பிறவா தனையை விடலொக்கும் பிராண வாயுத் தடையென்று, திறமா யறிஞ ரியம்புவராற் றிடமா யதுவுஞ் செயவேண்டு, முறுவா தனையை விடினுள்ள முள்ள மல்லா மையையடையு, நிறையா ருயிரைத் தடுக்கினுமா நினக்கே திச்சை யதுசெய்வாய்."

வினா:—இந்த வாசனக்ஷய மெதனுலிரக்ஷிக்கப் படும்?

விடை:—இந்திரிய நிக்கிரகத்தால் ரக்ஷிக்கப்படும்.

வினா:—இந்திரிய நிக்கிரகமாவது யாது?

விடை:—சுரோத்திராதி யிந்திரியங்களை ஸப்தாதி விஷயங்களிற் செல்லவிடாமற் றத்தங் கோளகங்களிற் கிரமமாக நிறுத்துவதாம்.

வினா:—மலினவாசனையினுலேவருங் கனவகங்கார மாவது யாது?

விடை:—இந்தத்தன மிப்போ தென்னுலேபடை யப்பட்டது; இனி யிதை யடையப்போகிறேன்; இஃது இருக்கிறது; இனிமே லெனக்கிதுதானுண்டாகும்; இந் தச் சத்துருவென்னுலே ஜயிக்கப்பட்டான்; இன்னுஞ் சில சத்துருக்களை நானே ஜயிக்கப்போகிறேன்; நான் யாவருக்கு மேம்பட்டவன்; நான் போகி, யோகி, சித் தன்; நான் பாக்கியவான், பாக்கிய ஹீனன்; நான் ஜனக்கட்டுள்ளவன், அஃதில்லாதவன்; எனக்குச் சம மாகவாவது அதிகமாகவாவது யாருமில்லை; நான் யாகம் பண்ணப்போகிறேன், தானம் பண்ணப்போகி

ரேனென்றற்றொடக்கத்து அவிவேக மூலமாயுண்டா குந் திடபாவனையாம்.

வினு:—இந்த வகங்காரத்தினு லநேகஜன்ம முண் டாமென்றெங்கே சொல்லப்பட்டிருக்கிறது?

விடை:— ஸ்ரீ கிருஷ்ணபகவான் "அருச்சுனு! அகங்காரத்தினுல் மூடப்பட்டவர்களாயும் அநேக சித் தப்பிராந்தி யுடையவர்களாயும் அஞ்ஞானமாகிய வலை யினுற் சூழப்பட்டவர்களாயுமிருக்கிற ஜனங்கள் மகா கோரமாயிருக்கிற இரௌரவாதி நரகத்தில் விழ்வார் கள். வெகு குரூரர்களாயும், ஈஸ்வரனிடத்திலும் ஈஸ் வரபக்தர்களிடத்திலுந் துவேஷமுடையவர்களாயும், அத்தியந்த மசுசியர்களாயும், மலினவாசனை யோடே கூடினவர்களாயுமிருக்கிற துஷ்டஜனங்களை அசுரயோ னிகளிலே நாம் தள்ளுவோம். அவ்வாறசுரயோனி களிலடைந்து ஜன்மஜன்மங்களிலேயு மூடர்களாய் நம் மையும் நமது பக்தர்களையும் சரணமா யடையாமல் மேலும் மேலும் அதமகதியை யடைவார்க" ளென்று கீதையில் மிகுவிரிவாய்ச் சொல்லியிருக்கிருர். ஆனதால் முமுட்சுக்கள் வெகு ஜன்ம பரம்பரையைக் கொடுப்ப தாயும் நாநாவித நரக (ஸம்ஸார) துக்க ஸாகரத்தில் முழுகச்செய்வதாயு முள்ள மலினவாசனையை விடா முயற்சியினுல் ஒழித்துச் சுத்தவாசனையை ஸம்பாதித் துக் கிருதார்த்தர்களாதல் வேண்டும்.

வினா:—சுத்தவாசனை யென்பது யாது?

விடை:—பிரத்தியகாத்மாபின்ன பரப்பிரஹ்மதத்துவத்தைத் திடாபரோக்ஷமாக வறிந்த புருஷனிடத்திருபபதாயும், வறுத்த விதை குதிர் நிரம்புகிறதற்கு மாத்திரமன்றி யுருசியான வன்னத்தின் பொருட்டும் பயிருண்டாவதன் பொருட்டு முபயோக மாகாமை போலத் தேகம் ஜீவித்திருக்கிறதின்பொருட்டு மாத்திரமுபயோகமாவதாயும், டம்பம் கர்வமுதலான அசுர சம்பத்தை யுண்டு பண்ணுததாயும், ஜன்மாந்தரத்திற் கேதுவாகாதுள்ள மானமில்லாமை, டம்ப மில்லாமை, இம்சையில்லாமை, கோபமில்லாமை, ஸப்தாதி விஷயங்களில் ராகமில்லாமை, குருசிசுரூஷை, பாஹ்யாந்தர சௌசம், ஸமம், தமம், தைரியம், அகங்கார மில்லாமை, ஜனன ஜராமரண வியாதிகளால் வருந் துக்கத்தைச் சிந்தித்தல், பிரத்தியகாத்மாவான பரமேசுவரனிடத்தில் வியபிசாரமின்றியுள்ள பக்தி, நிர்ஜன சுத்தப் பிரதேசவாசம், ஜனப்பிரதேச வெறுப்பு, ஸதாவேதாந்த நிஷ்டை, ஜீவப்பிரஹ்மாயிக்கியாபரோக்ஷஞான மென்னு மிவற்றின் சம்ஸ்காரமாயுமுள்ளது சுத்த(அசுர வாசனையை நாசஞ்செய்யுந் தெய்வ) வாசனையாம்.

வினா:— இந்தச் சுத்தவாசனையினால் அசுத்த வாசனை நீங்கி ஜீவன்முக்திப் பலனுண்டா மென்று எங்கே சொல்லப்பட் டிருக்கிறது?

விடை:—சுத்தவாசனையினாலே மலின வாசனைக ளெல்லாம் நீங்கும். அப்போது ஜீவன் முக்திரூபமான பலன் றானே கிடைக்குமென்று வாசிட்டத்திலுங் கீதையிலும் சொல்லப்பட் டிருக்கிறது.

வினா:—சம்பத்தெத்தனை வகை? அவற்றின் சொரூபமென்ன?

விடை:—அசுரசம்பத்து தெய்வசம்பத்தென்று சம்பத் திருவகையாம். அவற்றுள், அசுரசம்பத்தாவது ஒருவனது திரவியங்களை யபகரிக்கிறதின் பொருட் டுக் கருமிபோலவும் உபாசகன்போலவும் ஞானிபோல வும் அபிநயஞ் செய்வதாகிய டம்பம், அடங்காத வகங்காரம், கர்வம், காமம், குரோதம், லோபம், அவி வேகம், நித்திரை, ஆலஸ்யம் (சோம்பல்), பயம், மைது னம், வித்தியாமதம், தன மதம், குலமதம், ஆசார மதம், ஆசை, கோபம், ஸ்திரீதன புத்திராதிகளி லாசக்தி யென்றற்றொடக்கத் தனவாகிய குணங்களாம். இவ்வசுர சம்பத்துள் அத்தியந்த நரகத்துக்கேது வாயுந் தன்னைக்கெடுப்பதாயுமிருப்பது இராகம், துவே ஷம், லோபமென்னு மூன்று மாமெனக் கீதையில் பக வானால் சொல்லப்பட்டிருக்கிறது. தெய்வசம்பத்தா வது ஞானஸாதனமாகிய வைராக்கிய தியான நிஷ்டை, சித்தசுத்தி, நிஷ்காமயாகம், தன்றன்வேதாத் தியயனம், கிருச்சிராதி தபசுகள், அகத்தும் புறத்து

மொத்துள்ள நட்பு, தானம், இந்திரிய நிக்கிரகம், பய மில்லாமை, ஹிம்சையில்லாமை, பொய்யில்லாமை, கோப மில்லாமை, ஆசை யில்லாமை, புறங் கூறுமை, சந்பாசம், சாந்தி, ஜீவதயை, எவ்வளவுதான் றருமஞ் செய்த போதிலு மகங்காரமின்றி நாம்செய்த தெவ்வள வென்னும் வெட்கம், சுகம் வந்தாலும் துக்கம்வந்தா லும் சாஸ்திர ஜந்ய விவேகத்தாற் சித்த மசைபா திருப்பது, நல்ல சரீரகாந்தி, ஓராளொருசமயம் குரோ தம் வந்தா லதை யடக்குவது, சாஸ்திரீய காரிபத்திற் றயிரியம், மண்ஜலாதிகளாற் பாஹ்ய சௌசம், விவே கத்தினால் ராகத்துவேஷாதிகளின் நிவாரணமாகிய ஆந் தரசௌசம், ஒருவரைக்குறித்துந் துரோகமில்லாமை, நமக்குச் சரி யாரென்னு மகங்காரமில்லாமை, தேவோ பாசனைவழிநிற்றல், அடக்கம், அன்பு, அறிவு, அவா வறுத்தல், இரக்கம், இன்சொல், ஈகை,ஒழுக்கம்,தவம், நடு நிலை, புக்தி, வாய்மை முதலிய நற்குணங்களையாம்.

வினா:—இந்த விருவித ஸம்பத்தினால் முறையே யாதுயா துண்டாகும்?

விடை:—அசுர ஸம்பத்தாற் பந்தமும், தெய்வ ஸம்பத்தால் மோக்ஷமுமுண்டாம்.

வினா:—பந்த மென்பது யாது? அஃதெத்தனை வகைப்படும்?

விடை:—அஞ்ஞானமு மதன்காரியமான தேகாதி வடிவ நாமரூப ஜகத்தும் ஸத்தியமெ (நானெனதெ)ன்

னும் பிராந்தியே பந்தம். அது தீவிரம், மந்தமென விருவகைப்படும்.

வினா:—தீவிரபந்தமாவது யாது?

விடை:—சாக்ஷாத் துக்கஹேதுவான அசுர ஸம்பத்தே திவிரபந்தமாம்.

வினா:—மந்தபந்த மாவது யாது?

விடை:—ஸ்வயம் துக்க ரூபமாகாததாயும் அசுர ஸம்பத்தை யுண்டு பண்ணுவதாயு முள்ள துவைதமாத்திரப் பிரதீதியாம்.

வினா:—இந்த விரண்டு பந்தங்களினிவிர்த்தி யெப்படி யுண்டாம்?

விடை:—வாசனக்ஷயத்தாற் றீவிரபந்தமும், மனோநாசத்தாற் றீவிரபந்த லேசத்துடன் மந்த பந்தமு நிவிருத்தியாம்.

வினா:—மனமென்பது யாது?

விடை:—ஸாவயவமாய், அரக்கு ஸ்வர்ணம் மெழுகாதிகளைப்போல வெகுவித பரிணாமயோக்கியத் திரவியமாய்ப், பிரகாசம் பிரவிருத்தி மோகசொரூபமாகிய ஸத்துவ ராஜஸ தாமஸ குணாத்மகமாய்ச், சித்த மூடாதி பஞ்சபூமியாத்மகமாய்த், தீபச்சுவாலையின் பரம்பரைபோல விருத்திகளின் பரம்பரை ரூபமாகப் பரிணாமத்தையடைகிறதாய், ஸகல வனர்த்தங்கட்கு

மேதுவாய், அநித்திபமா யிருக்கின்ற தெதுவோ அதுவே மனமென்று சொல்லப்படும்.

வினா:—இதை மனமென்று சொல்வ தெதனால்.

விடை:—இந்த மனதானது அஃது இது, அஃதப் படி இஃதிப்படி, அது கூடும் இது கூடாது, அது நல்லது இது கெட்டது, அதைச் செய்யவேண்டும் இதை விடவேண்டு மென்றற்றொடக்கத்தனவற்றை மனனம பண்ணுகிறபடியினால் மனமென்று சொல்லப்படுகிறது.

வினா:—இந்த மனதிறுைசமாவது யாது?

விடை:—மேற் கூறிய புருஷமுயற்சியா (விவேக வைராக்கிய தியானுப்பியாசத்தா)ற் சித்தம் விஷயாகார விருத்திரூப பரிணமத்தை விட்டொழிந்து நிரோதா காரமாகப் பரிணமிக்கிறதேயாம்.

வினா:—மனோ நாசத்திற்கு முக்கிய ஸாதன மியாது?

விடை:—மனோ நாசத்திற்கு அதிகாரபேதத்தால் ஹடநிக்கிரகம் கிரமநிக்கிர (கர்மயோகம் ஞானயோ) க மென விரண்டுபாயங்கள் சாஸ்திரங்களிற் சொல்லப் பட்டிருக்கின்றன. அவையே சாதனங்களாம்.

"சித்த நாசத்தி னெறியிரண் டியோகமுந் தெளிந்தஞா னமுமாகும்" என்று வாசிட்டங் கூறுவ தறிக.

வினா:—ஹடநிக்கிரகமாவது யாது?

விடை:—ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை தத்தங் கோளகங்களிற் றகைந்து (தடுத்து) நிக்கிரகஞ் செய்வது. இதுபோல மனதை நிக்கிரகிக்கக்கூடாது. ஆகையால் கிரமநிக்கிரக முத்தமமாம்.

வினா:—ஹட நிக்கிரகவுபாயத்தால் மனோ நிக்கிரகங் கூடாதென்பதென்னை?

விடை:—இந்திரிய கோளகங்கள் பாஹ்யத்திலுள்ளனவாதலின் அவற்றை யடத்தால் தகைதல்கூடும்; மனதின் கோளகமாகிய இருதயகமலம் ஆந்தரத்திருபபதா லதனை யதனால் தகைதற்கூடாது.

வினா:—கிரம நிக்கிரக வுபாய முத்தமமென்பதென்னை?

விடை:—மனதிற்குச் சத்துவகுணமியற்கையாயிருத்தலின், அது விதேகமுத்தி பரியந்தம் நசிக்கிறதில்லை, இராஜோதமோ குணங்களிரண்டுஞ் செயற்கையாயிருத்தலின் சுபவாசனையின் வலியால் நிவிர்த்தியாம். ஸத்துவரூப மங்ஙன நிவிர்த்தியாகிறதில்லை; ஆனால் அப்பியாசபலத்தி (அபேதசிந்தனையி)ன் றிடத் தன்மையாற்பிரஹ்மத்தில்லயரூபகாசத்தையடைகின்றது. இவ்வாறு மனதின் ஸத்துவகுணமொன்றினாலும் நிவிர்த்தியாகாது. இராஜோதமோகுணங்களிரண்டுஞ் சுபவாசனையாகிய தெய்வ ஸம்பத்தால் நிவிர்த்தியாம். ஆகையால மனது ஹடநிக்கிரகத்தால் நாசமாகாது கிரம

நிக்கிரகமாகிய சதுர்வித உபாயங்களாலும் நாசமாம். ஆதலாற் கிரமநிக்கிரக முத்தமமாம்.

வினா:—கிரம நிக்கிரகமாய சதுர்வித வுபாயங்களெவை?

விடை:—அவை அத்யாத்மவித்தை, ஸாதுஸங்கம், வாசனாக்ஷயம், பிராணசலன நிரோதமென்னு நான்குமாம். ஞானவாசிட்டம்:—"ஊக நன்மையாலல்லது வெலப்படா துள்ளம், வேக மத்தமா வங்குசத் தலால்வெலப் படுமோ, ஏக போதத்தை யறிதனல் லவருட னெய்தல், சோகவாதனை விடலுயிர் தோன்றுறு தொடுக்கல்". "உரைசெய்நால் வகையு நெஞ்சை யொடுக்குமூ கங்களாகும்" என்று கூறுவதறிக.

வினா:—அத்யாத்மவித்தை யென்பது யாது?

விடை:—உள்ளதாகிய வாத்மாவை யறியச் செய்வதாகிய விசாரஞானமாம்.

வினா:—விசாரஞானமாவது யாது?

விடை:—நான் யார்? ஆத்மா வென்பது எது? ஜகத்தென்பது யாது? ஈண்டு ஸத்தியமா யுள்ளது யாது? என்று நிரந்தர மாதரவாய் ஆராய்தலே விசாரம். இந்த விசாரத்தினாலே திருசியமாயுள்ளவனைத்தும் மித்தை, திருக்காகிய பிரத்திய காத்மாவான தானே ஸத்தியசொப்பிரகாச மென்னு மறிவுண்டாம். அதுவே விசார

ஞானமாம். கைவல்யநவநீதம்:—“இந்த ஞானந் தான் வருவதெப் படியெனி லிடைவிடா விசாரத்தால், வந்தடைந்திடும் விசாரந்தா னேதெனின் மனுதியாஞ் சரீரத்தில், இந்த நானெனவன் சித்தெது சடமெது விரண்டுமொன் றாக்கூடும், பந்த மேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமதாகும்” என்று கூறுமாறறிக.

வினா:—இந்த ஞானத்தினால் மனோநாசமுண் டாவ தெப்படி?

விடை:—மித்தையாகியதிருசியத்திற் பிரமே பாசன மில்லை, ஸத்தியமாயும் சொப்பிரகாச மாயுமுள்ள பிரத்தியகாத்மாவை விஷயஞ் செய்யும் யோக்கி யதை மனதிற்கில்லை யென விவேகத்தா லறிந்தால் காஷ்டமி (விறகி) ல்லாத அக்கினிபோல மனம் தன் காரணத்திற் றானே தியானவாயிலாகச் சாந்தியடை யும்.

வினா:—தியானமாவது யாது?

விடை:—ஒருபற்று மின்றிச் சச்சிதானந்த பரி பூரண பரமாத்மவைத பிரத்தியகாத்ம பரப்பிரஹ்ம சொரூபமே நான், நானே அதுவென்று பழகுந் தொடர்ந்த விருத்திப் பிரவாகமாம்; அதுவே பரமா னந்தத்தைக் கொடுக்கும்.

வினா:—இந்தத் தியானத்தினால் மனோநாச முண் டாவ தெப்படி?

விடை:—தீவிர வைராக்கியத்தோடுசெய்யுமந்தத் தியான சித்தியால் மனமானது இராஜத தாமத குணங்கள் நிவிர்த்தியாக ஸத்துவ குணமாத்திரமாகச் சேஷித்து ஏகாக்கிர முற்றுச் சூட்சுமமாய் ஆத்மானுபவத்திற் குரிய யோக்கியதை யுடைத்தாய் ஆத்மப் பிரகாசத்திற் றானே சாந்தமாய் விடும்.

வினா:—இராஜத தாமதகுண நிவிர்த்தியால் மனதிற்கு ஏகாக்கிரமும் சூட்சுமத் தன்மையும் ஆத்மானுபவத்திற்குரிய யோக்கியதையு முண்டாமென்பதெப்படி?

விடை:—சஞ்சல விருத்திக்கேது ரஜோகுணமாவதால் அதனிவிருத்தியால் ஏகாக்கிரமும், அனாத்மரூபமான தூலபதார்த்த வாகாரத்துக்கேது தமோகுணமாகையால் அதனிவிர்த்தியால் சூட்சுமத்தன்மையும், ஞானத்திற் கேது ஸத்வகுணமாகையால் ஸத்துவ குணமாத்திரஞ் சேஷித்தலால் ஆத்ம ஞானத்திற்குரிய யோக்கியதையும் மனதிற்குண்டாம். கைவல் பாவநீதம்:—"மனது சத்துவ சொரூபமற் றிரண்டும் வந்துகலந்தனவவற்றை மாற்றி னூற்போம், தனது சன்மார்க்கத்தைவிடா திருந்த போது தமோகுணமும் ரசோகுணமுஞ் சமிக்கும் பின்னைக், கனபரிணா மூஞ்சலனம் போம்போ னக்காற் களங்க மற்று நின்றவா காசம் போலும், நினதுளமப் படியாமப் பிரமத் தொன்றுப் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந்தானே".

"களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர் களங்கமற்ற கண்ணாடிகாட்டும் போது, விளங்கியதன் மயமாகி யபேதமாகி விகற்பமின்றி நிருவிகற்ப மானாற் போல, அளந்தறியப் படாவிபுவாய்ச் சத்தாய்ச் சித்தா யானந்த மாம்பிரமத் தைக்கமான, உளந்தெளிந்த படியிருந்தா னுலக மெங்கே யுலைவெங்கே யென்றுசங்கை யொழித் திடாயே".

வினா:—ஸாதுஸங்க வுபாயமாவது யாது?

விடை:—குருமுகமாகச் செய்யுஞ் சாஸ்திர சிரவணாதிகளால் பிரஹ்மாத்மாயிக்க ஞானானுபூதியை யடைந்துள்ள சித்தசாந்தர்களோடு கூடிப்பழகுவதாம்.

வினா:—ஸாது ஸங்கத்தால் மனோநாச மெப்படி யுண்டாம்?

விடை:— குருமுகமாகச் சிரவணாதிகள் செய்திருப்பினும் பிரஹ்மத்தை நன்றாயறியாதவனும், அறிந்தபோதிலும் மறந்தவனு மாகிய விவர்கள், ஸாதுக்களிடத் தெப்போதுஞ் சேர்ந்து அவர்களடிக்கடி (பரஸ்பரம்) தத்துவ (ஆத்ம) விசாரஞ் செய்வதைக் கேட்பதினாலும், அல்லது அவர்கள் கருணையினால் நேரே சுருதியுக்தியனுபவங்களுக்கேற்கப் போதிப்பதினாலும், நன்றாயறியப்படாதிருந்த பிரஹ்மத்தை நன்றாயறிதலும் மறந்தசொரூபப் பிரக்ஞை (ஞானம்) ஸ்திரமாயுதயமாதலும் அவர்கட்கு ஸித்தியாம். அப்

போது மனது பிரஹ்ம சொரூபத்தையேநாடி பிரஹ்மப் பிரகாசத்திற்றனே கரைந்து லயமாம். வித்தியாமத முதலிய துர்வாசனையால் ஸாதுஸங்கத்தை யனுசரிக்கச் சம்மதமில்லாதவன் விஷயதோஷவிவேகத்தால் வாசனா க்ஷபஞ்செய்து அதனுல் மனதை நிக்கிரகிக்கவேண்டும். மிகவுந் துர்வாசனைகளால் மனம் நாசமாகாவிடின், பிராண சலன நிரோதமாகிய வுபாயந்தா லதனை நாசஞ் செய்யவேண்டும்.

வினா:—பிராணசலன மென்பது யாது? அதன் நிரோதமாவ தேது?

விடை:—இருதயமுதல் நாசிபரியந்தஞ் சலித்துக் கொண்டிருக்கும் பிராணவாயு பிராணசலனமாம். மேற்சொன்னபடி ரேசக பூரக கும்பக ரூபப்பிராணாயாமப் பழக்கத்தாற் பிராணவாயு பாஹ்யத்திலாவது ஆந்தரத்திலாவது அல்லது பாஹ்யாந்தரங்களி லொரே காலத்திற் சமமாகவாவது தன் கதியை விட்டோய்ந்து நின்றுவிடுதல் பிராணசலன நிரோதமாம்.

வினா:—பிராணசலன நிரோதத்தால் மனோநாசமெப்படி யுண்டாம்?

விடை:—மனது சலித்தற்கு மலின வாசனை காரணமாயிருப்பதுபோலப் பிராண சலனமுங் காரணமாம். மனமும் பிராணனும் ஒரேபூதத்தினமிசமாதலால் மனமடங்க வாசியும், வாசியடங்க மனமுமடங்

கும். வித்தியாமதமுதலிய அசுரசம்பத்தின்றிய யோகிக்குப் பிரஹ்மத்தியான பலத்தால் மனது நிக்கிரகமாகும் போது அவாந்தர பலனாகப் பிராணநிரோதஞ் சித்தியாம். அசுரசம்பத்துடைய யோகிக்குப் பிராணாயாமப் பழக்கத்தாற் பிராணசலன நிரோதமாகும் போது அவாந்தரபலனாக மனோநிக்கிரகஞ் சித்தியாம். யுத்த முதலிய யாதானுமோர்காரணத்தா லடிபட்டு மூர்ச்சித்தவர்க்குப் பிராணசலன மடங்கி யிருக்கும்போது மனது சலனமில்லாதிருத்த லனுபவமாம். ஆதலால் பிராணசலன நிரோதத்தால் மனோநாச சித்தி சுலபமாயுண்டாம்.

வினா:—இந்திரிய நிக்கிரகத்தால் வாசனாக்ஷயம் இரக்ஷிக்கப்பட்டு எப்போது திடப்படுகிறதோ அப்போது மனது தானே நாசமாய்விடுதலால் இந்திரிய நிக்கிரகமும் வாசனாக்ஷயமும் வந்தவன் மனோநாசஞ் செய்வதற்கு வேறுபாயங்களைத் தேடுவது வியர்த்தமன்றோ.

விடை:— வாசனாக்ஷயம் இந்திரிய நிக்கிரகத்தால் இரக்ஷிக்கப்படுவதுபோல இந்திரிய நிக்கிரகமும் மனோநாசத்தால் இரக்ஷிக்கப்படுவதினால் மனோநாசமின்றி இந்திரிய நிக்கிரகமும் இந்திரிய நிக்கிரகமின்றி வாசனாக்ஷயமுந் திடப்படுவதில்லை. ஆகலின் அவை திடப்படு நிமித்தம் மனோநாசத்திற் கேதுவான உபாயங்களை யனுஷ்டிப்பது வியர்த்தமன்றாம்.

வினா:—வெகுஜன்ம பரம்பரைகளிற் செய்த கர்ம ஜன்னிய சம்ஸ்காரமாகிய வாசனையோடுகூடி வாயுவைப்போ லலைந்து மர்க்கடம்போல் விஷயங்களிற்றாவு மிம்மனதின் நிரோத ரூபமான நாசங் கைகூடுவது அசாத்திய மல்லவோ?

விடை:—இம்மனோ நாசமானது சாஸ்திரங்களில் யுக்தி சகிதமாகக் கூறிய சாந்தியாதி சற்குணங்களோடு செய்யும் வைராக்கிய தியானுப்பியாச மில்லாத பூருஷர்களுக் கசாத்தியமாக விருந்தாலும் அவையுடைய புருஷர்களுக் கது எளிதாகவே கைகூடும்.

வினா:—மனதின் பஞ்சபூமிக ளெவை?

விடை:—க்ஷிப்த (சித்த)ம், மூடம், விக்ஷிப்த (விட்சேப)ம், ஏகாக்கிரம், நிருத்த(நிரோத)மென்னு மைந்துமாம்.

வினா:—க்ஷிப்தபூமி யாது?

விடை:—உலக, தேக, சாஸ்திரவாசனைகளோடு கூடிய இராஜோகுண பரிணாமமாம்.

வினா:—மூடபூமி யாது?

விடை:—நித்திரை, மயக்கம், ஆலஸ்யாதிகளோடு கூடிய அசுரசம்பத்தான தமோகுண பரிணாமமாம்.

வினா:—விக்ஷிப்தபூமி யாது?

விடை:—விக்ஷேபத்துடனெப்போதாவது ஒரு காற் றியானத்தோடுகூடியமனது அஃதாவது தியானத்

திற் பிரவிர்த்தித்த சித்த மொரு காலத்தில் வெளியே செல்லுதல்.

வினு:—ஏகாக்கிரபூமி யாது?

விடை:—அந்தக்கரணத்தி னதீத(சென்ற) பரிணுமமும் வர்த்தமான பரிணுமமுஞ் சமானுகாரமாதல்; அஃதாவது மனதானது முந்தின விருத்தியினு லெந்த வஸ்துவைக் கிரகித்திருக்கிறதோ அந்த வஸ்துவைத்தானே மென்மேலுண்டாகிற விருத்திகளினுலுங் கிரகிப்பதாகிய (அந்தக்கரணத்தின்) ஸஜாதீய விருத்திப் பிரவாகமாம்.

வினு:—நிருத்த பூமி யாது?

விடை:—அந்த ஏகாக்கிரத்தன்மையின் பெருக்கமாம்; அஃதாவது அப்படி ஏகாக்கிரமானமனதில் சத்ரூபமான பிரத்தியகபின்ன பரப்பிரஹ்ம சொரூபத்தைத் தோற்றிவைக்கின்றதாயும் சர்வ கிலேச கர்மங்களையும் நழுவச்செய்கிறதாயும் நிருவிகற்ப ஸமாதிக்குச் சாதனமாயுமுள்ள அந்தக்கரணத்தின் நிரோதரூபமான சூட்சும ஏகாக்கிரத் தன்மையாம். இவ்வாறு ஐந்துபூமிகளோடு கூடியுள்ள மனதில் க்ஷிப்தமூடாந்தக் கரணத்திற்கு ஸமாதியி லதிகாரமில்லை. விக்ஷிப்த அந்தக்கரணத்திற்கு விக்ஷேபசகிதமா யொருகாற்றியானங் கிடைத்தபோதிலும் அது விக்ஷேபத்தா லக்கினியிலகப்பட்ட விதைபோ லுடனே நசித்துப் போகின்ற

மையினுலே விக்ஷிப்தாந்தக் கரணத்திற்கு மதிகார மில்லை. ஏகாக்கிர நிருத்தாந்தக் கரணங்கள் ஸமாதி காலத் துண்டாகின்றன வாதலா லிந்தயிரண்டு பூமியுஞ் சமாதியென்று சொல்லப்படும்; அஃதாவது ஏகாக்கிர பூமி ஸவிகற்ப ஸமாதியும், நிருத்த பூமி நிருவிகற்ப ஸமாதியுமாம்.

வினு:—இங்ஙனம் தத்துவஞானம் வாசனுக்ஷயம் மனேநாசங்களின் சமாப்பியாச மில்லாமல் ஜீவன்முக்தி சித்திக்க மாட்டாதோ?

விடை:—தத்துவஞானம், வாசனுக்ஷயம், மனே நாசமென்னு மிம்மூன்றும் வெகுகாலபரியந்தஞ் சம மாக அப்பியசிக்கப்பட்டால் ஜீவன்முக்திச்சுகம் சித்தி யாம். அங்ஙனமின்றி யொவ்வொருகாலத்தி லொவ் வொன்றுக வெவ்வளவு காலபரியந்தம் அப்யசித்தாலு மது அந்தப்பலத்தைத் தராது. எங்ஙனம் பஞ்சாக்ஷராதி மந்திரங்களில் முதனுளோ ரக்ஷரம், மறுநாளோ ரக்ஷ ரம், அதற்கு மறுநாளோரக்ஷரமாக வெத்தனைகாலம் ஜபித்தாலு மவை சாஸ்திரத்திற்சொன்னவாறுபலனைத் தராவோ, கறி பருப்பு அன்னுதிகளில் ஒவ்வொன்று கிடைத்ததுகொண்டு எங்ஙனம் திருப்தியான போஜ னஞ் சித்திக்கமாட்டாதோ அங்ஙனம் வெகுகால பரி யந்தஞ் சமமா யப்யாசிக்கப்படாத தத்வஞானுதிகளுஞ் சித்தியைத் தரா. ஆதலா லிந்த மூன்றையும் வெகுகால

பரியந்தஞ் சமமா யப்யஸிக்கவேண்டும். அங்ஙன மப் யஸிக்கப்பட்டால் அதனூற் றுமரைத்தண்டை யொடித் ததினு லதற்குள்ளிருக்கும் நூல்க ளறுந்துபோவது போல அனுதிகாலந் தொட்டுவந்து திடமாயுள்ள விரு தயக்கிரந்திக ளொ (மனுேபந்தமொ) ழிந்துபோம், சந்தேகமில்லை. இங்ஙன மனேக கற்பகோடிகாலந் தொட்டுவந்த விந்தச் சம்சாரவாசனையானது தத்வ ஞானுதிகளைச் சமமாக வெகு காலபரியந்த மப்பியசிக் காவிட்டா லொருகாலும் நசிக்கமாட்டாது.

வின:—இந்தத் தத்துவஞானுதி மூன்றுஞ்சமமாக அப்பியசிக்காவிட்டால் அனர்த்தநிவிர்த்தி யானந்தப் பிராப்திரூப பலன் சித்திக்கமாட்டாதென்பதென்னை?

விடை:—தத்துவஞானம், வாசனுக்ஷயம், மனே நாசமென்னு மூன்று மொன்றற் கொன்று பெரும்பா லும் காரணமாயிருப்பதால் அது சித்திக்கமாட்டாது.

வின:—தத்துவஞானுதி மூன்று மொன்றற் கொ ன்று காரணமென்பதெங்ஙனம்?

விடை:—பரமானந்த பரமாத்வைத பரப்பிரஹ்ம சொரூபமேயெல்லாம், அதுவே நான் என்னுந்தத்துவ ஞானமில்லாவிட்டாற் குரோதாதிவாசனைக்கு நிமித்த மான பாஹ்ய விஷயம் சத்தியமென்னும் பிராந்தி யக லாது; அகலாதவரையில் வாசனுக்ஷயஞ் சித்திப்பதில்லை; அங்ஙனமே வாசனுக்ஷயமில்லாத போது விருத்திகள்

மேலு மேலுமுண்டாகுமாதலின் மனோநாசமும் சித்திப்பதில்லை. வாசனாக்ஷயமும், மனோநாசமுமில்லாத போது தத்துவஞானமுண்டாவதில்லை. இங்ஙனமிம் மூன்றும் ஒன்றற்கொன்றுகாரணமாம். இவற்றிற்குப் பிரமாணம் வருமாறு:—வாசிட்டம்.

"உண்மை ஞான மெம்மட்டும் வாரா தம்மட் டுளமழியா, திண்மை யுளமெம் மட்டழியா நிகழ்தத் துவமம் மட்டெய்தா, தண்மை யுறுவா தனையெம்மட் டழியா தம்மட் டுணர்வனுகா, வண்மை யுணர்வெம் மட்டனுகா வருவா தனையம் மட்டழியா".

"இனைய மூன்றுஞ் சமமாக வியற்று ரெம்மட்டம்மட்டும், அனைய பதமெய் தாவருட மாயிரங்கள் சென்றாலும், வினையிற் காலஞ் சமமாக மிகுநா ளியற்றின் மிகப்பலிக்கும், நினைவி லொன்றொன் றுவியற்றினிலகூடாநிட் பலமாகும்."

"தொக்க பிறவித் திரள்கடொறுந் தொடர்ந்து வந்த வாதனை தான், மிக்ககால யோகத்தின் பழக்கத் தல்லால் விடாதென்றும்."

வினா:—இந்தத் தத்துவஞானாதிகளுக்கு ஸாதனமியாது?

விடை:—தத்துவஞானத்திற்குச் சிரவணாதிகளும், வாசனா க்ஷயத்திற்குப் பிரதிகூலவாசனையி னப்பியாசமும், மனோநாசத்திற்குத் தியானப்யாசமும் ஸாதனங்க

ளாம். அவற்றுள், தத்துவஞானம் வாசனுக்ஷய மநோ நாசமென்னு மிரண்டையு முண்டுபண்ணுகின்றமை யின் அஃதவற்றிற்குச் சாக்ஷாத் ஸாதனமாம்.

வினு:—தத்துவஞானதிகளின் ஸமாப்யாசத்திற் குப் பலனியாது?

விடை:—சம்சய விபரீத மின்றித் திடமாயிருக் குந்தத்துவஞானத்தினுலே வாசனுக்ஷயம்வரும்போது சித்தமானது எண்ணெயில்லாத தீபம்போலச் சாந் தியை யடையும்; அதனுல் ஜீவன்முக்திச் சுகம் லபித் தியாம். அதுவே சாஸ்திர ஸம்மதமான பலன். ஒருவாசனையுமின்றி நிருவாசனையாயுள்ள மனதின் சாந் தியைத் தவிர வேறே உத்தமகதியின்றென்பது சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்களின் பரம சித்தாந்த மாம்.

வினு:—தத்துவஞானஞ் சித்தித் திருப்பதை யெதனு லறியலாம்?

விடை:—எந்தயோகியின் திருஷ்டிக்குச் சச்சிதா னந்தப் பரப்பிரஹ்மத்தை யன்றி நாமரூபப் பிரபஞ் சம் காலத்திரயத்திலும் (அதற்கு) வேறு (ஸத்தியமா) கத் தோற்றுவதில்லையோ, தோற்றினும் ஸமுத்தி ரத்தி லலைபோலவும், கானலில் ஜலம்போலவும், சாக்ஷி யில் ஸ்வப்பனம் போலவும் அணுமாத்திரமும் வேறு கத் தோற்றுமற் பிரஹ்மரூபமாகத் தோற்றுகின்றதோ,

அந்தப் பிரஹ்மமே தானென்றுள்ள புத்திவிருத்தி ஸ்வத ஸித்தமாகவு மிருக்கின்றதோ அதனால் அந்த யோகியைத் தத்துவஞான முள்ளவனென் றவனோ டிருந்து பலகால் பழகுதலா லறியலாம்.

வினா:—வாசனுக்ஷய முள்ளவனை யெதனா லறியலாம்.

விடை:—எந்த யோகியின் புத்தியில் விவேக ஞானத்தா லுண்டாகிய சாந்தியாதி வாசனைகளின் திடத்தால் குரோதாதி விருத்திக ளுதயமாகா திருக்கின்றனவோ அதனாலே அவனை வாசனுக்ஷயமுள்ளவனென் றறியலாம்.

வினா:—மனோநாசமுள்ளவனை யெதனா லறியலாம்?

விடை:—எந்தயோகியின் புத்தி (மனது) விஷயரூப பரிணாமத்தைதை யடையாது நிரோதாகாரமாகப் பரிணமித்து விஷயவிச்சையற்றிருக்கிறதோ அதனாலே யவனை மனோநாசஞ் சித்தித்தவனென் றறியலாம்.

வினா:—தத்துவ ஞானத்தினாலே சித்தநாச முண்டாதலின் அதன் பிறகு மைத்திரியாதி ஸத்குணங்க ளெவ்வா றிருத்தல் கூடும்?

விடை:—சொரூப நாசமென்றும், அரூபநாசமென்றும் சித்தநாசம் இருவகைத்தாம். அவற்றுள், ஜீவன்முத்தனிடத்திற் சொரூப நாசமும், விதேகமுத்த

னிடத்தி லரூபநாசமும் பிரசித்தமாம். சொரூப (ரஜோ தமோகுண) நாசம் வந்த ஸத்துவ மனதோடு கூடிய ஜீவன்முத்த னிடத்தில் மைத்திரியாதி ஸத்குணங்க ளிருத்தல் கூடும்.

வினு:—ஜீவன் முத்தனிடத்திற் சித்தத்தின் சொரூபநாச மெப்படியாம்?

விடை:—இராகாதி பரிணாமத்தையுடைய மனது (இரஜோ தமோகுணம்) எப்போது நசிக்கிறதோ அப போதந்த மனது தானே மைத்திரியாதி குண சகித மாய்ப் பராமுகமாகாமல் ஜன்மத்துக்கேதுவாகாது ஸத்துவ ரூபமென்னும் பெயரையுடைத்தாய் ஜீவன் முத்தனிடத் திருக்கும்; அந்த ஸத்துவரூப மிருக்கிற படியினாலும் ராகாதிரூப (இரஜோதமோகுண) த்திற்கு நாசம் வந்தபடியினாலும், மனதின்சொரூபநாசம் ஸித்திக்கிறது. அப்படிப்பட்ட சொரூப மனோநாசங் கிருபா மூர்த்தியாகிய ஜீவன்முத்தனிடத் திருத்தல் கூடும.

வினு:—விதேக முத்தனிடத்தில் சித்தத்தி னரூப நாச மெப்படிக் கூடும்?

விடை:—விதேகமுத்தியில் மனதின் ஸத்துவரூப மும் நசித்துப்போகிறபடியினாலே (ரூபமில்லாது நாச மாவதாகிய) அரூப மனோநாசம் ஸித்திக்கிறது. அப் படிப்பட்ட அரூப மனோநாசம் விதேகமுத்த னிடத்தி லிருத்தல் கூடும். இதற்குப் பிரமாணம் வருமாறு:—

கைவல்லிய நவநீதம்.

"மனநாசஞ் சொரூபமென்று மரூபமென்றும் வகுத்துரைப்பா ரிருவகையா வருமிவற்றில், வினவாத சீவன்முத்த ரிடத்திலொன்றும் விதேகமுத்த ரிடத்திலொன்று மேவுங்கண்டாய், தனதான சத்துவமாய் மனஞ்சேடித்துத் தமசுராச சுகணசித்தல் சொரூப நாசம், அனகாசத் துவந்தானு மிலிங்கதேக மடங்கும்போ தடங்குதலே யரூபநாசம்".

ஞானவாசிட்டம்.

"ஜீவன்முத்தி தனிலுருவ நாசஞ்சித்தந் தனக்குளதாந், தாவிலுடமீர் முத்திதனிற் சாற்று மருவநாசமுறு, மேவுசித்த முண்டாகி விடாமிறக்கின் மிகுமின்பம், பாவியுள்ள மெழாதபடி பண்ணியதைநா சம்பயில்வாய்".

வினா:—ஜீவன் முத்தனுக்குரிய ஞானபல சதுஷ்டயங்க ளெவை?

விடை:—துக்காபாவம், ஸர்வகாமாப்தி, கிருதகிருத்தியத்துவம், பிராப்த பிராப்யத்துவ மென்னும் நான்குமாம்.

வினா:—துக்க மென்பது யாது? அஃது தெத்தனை வகை.

விடை:—துக்கமென்றால் நரகம் அல்லது துன்பம்; இது இகபரலோக பேதத்தா லிருவகைத்தாம்.

வினா:—இகலோக துக்கமாவது யாது?

விடை:—ஸ்தூலசரீரத்தில் வாதபித்த சிலேஷ்மாதிகளும், சூக்ஷ்மதேகத்தில் காமக் குரோதாதிகளும், காரணதேகத்தில் அவ்வியாதியாதிகளுக்கு வித்தாகிய ஸம்ஸ்காரங்களுமான மூவகைத் தாபங்களுமாம்.

வினா:—இகலோக துக்காபாவமென்பது யாது?

விடை:—மித்தியா சொரூபமாகிய சரீரத்திரயங்களின் வேறாய அத்வைத சொரூப பிரத்தியகாத்மாவை நானென்றபேதமா யறிந்தபின் பரமார்த்தமாகப் போக்கிய போக்திருக்க ளில்லாமையால் அந்த மூவித துக்கங்களு மில்லாதிருப்பதாம்.

வினா:—பரலோக துக்கமாவது யாது?

விடை:—புண்ணிய மெப்போது வரும்? பாவ மெப்போது போம்? என்னும் சிந்தனையாம்.

வினா:—பரலோக துக்காபாவமென்பது யாது?

விடை:—பிரஹ்ம (ஆத்ம) ஞானத்திற்குப் பின்றாமரையிலையிற் றண்ணீர்போல அவ்விருவகைக் கருமங்களும் பற்றா திருப்பதாம்.

வினா:—பிரஹ்மஞானத்தின் பின்னர் ஜீவன்முக்த விவேகியைப் புண்ணியபாவ கர்மங்கள் பற்றாவென்பதெப்படி?

விடை:—காஷ்டத்தில் நெருப் பிருக்கும், அந்நெருப்பிற் காஷ்டமிராது. அதுபோலக் கருமத்துவய

வியவகாரத்தில் விவேகியிருப்பன், அவனிடத்து அக் கருமத்துவய வியவகாரங்களிரா. அதனாற் காட்டுத்தீ பற்றி யுள்ளதோர் வனத்தில் விலங்கு பறவை முதலி யன சேராவாறுபோல ஞானாக்கினி சொரூபனிடத்தி லப்புண்ணிய பாவங்கள் பொருந்தாவாம்; அதனால் அச் சிந்தனை பற் றிருப்பதாம்.

வினா:—ஸர்வ காமாப்தி யென்னு மிரண்டாவது பலனியாது?

விடை:—ஸர்வ ஐசுவரிய ஸம்பன்னரான ஸார்வ பௌமன் முதல் ஹிரண்யகருப்ப னீறுக முறையே யொன்றற்கொன்று நூறுமடங் கதிகமாயுள்ள ஆநந் தங்க ளியாவும் நிவிருத்தி பரனை விவே (யோ) கிக் குண்டாயினும் அவ்வாநந்தங்க ளெல்லாம் பிரஹ்மா நந்தா (பிரஹ்மாநந்தத்தி னேகதேசா)ம்சமா யகண்டா (பரமா) நந்தம் வித்தித்தலால் அதீதமாயிருப்பதாம்.

வினா:—கிருத கிருத்தியத்துவ மென்னு மூன்றா வது பலனியாது?

விடை:—விவேகிக்குத் தத்துவ ஞானமுண்டாவ தற்கு முன்னே இஷ்டப்பிராப்தி அநிஷ்ட நிவிருத்திக் காக [இகலோ (போ) கப் பிராப்திக்கு] உழவாதிகளும், (பரலோகப் பிராப்திக்கு) யக்ஞாதிகளும், (மோக்ஷப் பிராப்திக்கு) சிரவணாதிகளும் செய்யத்தக்கனவா யிருந் தன. தத்துவஞான முண்டானபின் விவேகிக்கு இவ

லோக விச்சை யில்லாமையால் இகலோக நிமித்தம் ஸ்தூல சரீர யாத்திரைக்குரிய உழவாதிகளும், பர லோக விச்சையில்லாமையாற் பரலோகநிமித்தம் லிங்க தேகயாத்திரைக்குரிய யக்ஞாதிகளும், பிரஹ்மானந்த சாக்ஷாத்காரமிருத்தலால் நிருவாண சுக(மோக்ஷாநந்த) நிமித்தம் ஆத்ம யாத்திரைக் குரிய சிரவணாதிகளு மில்லை. அதனால் எல்லாந் தன்மயமா யிருத்த (விளங்க) லால் இனிச் செய்யத் தக்கது யாதொன்று மில்லை, செய்யவேண்டிய வெல்லாஞ் செய்தாயின வென்னுந் திடத் தன்மையாம்.

வினா:—ஞானிக்குக் கர்மங்களில்லை யென்ப தெப்படி?

விடை:—சாளரத்தின்வழி யுட்புகுந்த சூரிய கிர ணத்திற் றோன்றும் பரமாணுக்கள் வெளியிலுள்ள பிரகாசத்திற் காணப்படாவாறுபோல அஞ்ஞானிக்கு விஷயமாங் கர்மு (உலக வியாபார) மெல்லாம் ஞான வானிடத்துத் தோன்றுவாம். இவற்றிற்குப் பிரமா ணம் வருமாறு:—விஞ்ஞானசாரம்.—

"எறியிற் கதிரோன் சாளரத்தி லிருந்து தோன் றும் பூதவணு, அறிவிட் டெறியும் பேரொளியி லஃது தோன்றா ததுபோல, அறிவிற் றோன்று மூலமெனினு மகண்டா கார வறிவதனில், செறியத் தோன்றாச் சிற் றறிவிற் செகம்போல் விளங்கி யிடுமென்றே".

வினா:— பிராப்தப் பிராப்பத்துவ மென்னு நான்காவது பலனியாது?

விடை:—விசிஷ்ட புண்ணிய பரிபாகம், முமுட்சுத்துவம், குருபாதஸேவை, சாஸ்திர சிரவணம், பிரபல சுருதி விசாரம், ஞானஞ்ஞான (ஆத்மாநாத்ம) விவேகம், அஞ்ஞான நிவிருத்தி, யதார்த்தஞானம், ஆத்ம சாக்ஷாத்காரம், ஸம்ஸார துக்கநிவிருத்தி, நிஜானந்தப் பிராப்தி யென்னு மிவற்றின் ஸித்தியா (அடைவா) ம்.

வினா:— ஜீவன்முத்தனுக்குரிய பஞ்சப் பிரயோஜனங்க ளெவை?

விடை:—ஞானரக்ஷை, தபசு, ஸர்வ ஸம்வாதம், துக்கக்ஷயம், ஸுகாவிர்ப்பாவ மென்னு மைந்துமாம்.

வினா:—ஞானரக்ஷை யென்பது யாது?

விடை:—வாசனாக்ஷய மனோவியாபார நாசங்களாற் புத்தி நிர்மலமா யதனாற் றத்துவ ஞானத்திற் கொன்றினாலுங் கெடுதியுண்டாகா திருப்பதாம்.

வினா:—தபசென்பது யாது?

விடை:—மன விந்திரியங்களின் நிக்கிரகரூபமான வேகாக்கிர மாம்.

வினா:—ஸர்வஸம்வாத மென்பது யாது?

விடை:—யோகீச்வரனென்று பால (பாமர) ர் முதற் பண்டிதரீறாயுள்ள யாவரும் ஸ்துதிநமஸ்காராதி

களைச் செய்வது; அல்லது ஸதா தபோ நிஷ்டனாயிருந்தலால் லௌகிகர்களாலும், சாஸ்திரக்ஞர்களாலும் வரப்பட்ட கலக நிந்தையென்னு முபயவித விஷமவாதமில்லாமையாம்.

வினா:—துக்கக்ஷய மென்பது யாது?

விடை:—பஞ்சக் கிலேசங்களு மில்லா திருப்பதாம்.

வினா:—பஞ்சக்கிலேசங்க ளவை?

விடை:—அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபினிவேச மென்னு மைந்துமாம்.

வினா:—அவித்தையாவது யாது?

விடை:—விசாரித்துப் பார்க்க எது வில்லாமற் போகிறதோ அஃது அவித்தையாம்.

வினா:—இந்த அவித்தை யெத்தனைவகை?

விடை:—மூலாவித்தை, ஸ்தூலாவித்தை யென விருவகையாம்.

வினா:—மூலாவித்தை யென்பது யாது?

விடை:—சுத்த சைதன்னியத்தை (கயிற்றிற் கற்பிதமாயுள்ள வரவு அதனை மறைப்பது போல)மறைப்பதாம்.

வினா:—இந்த மூலாவித்தை யெத்தனை வகை?

விடை:—காரண காரிய பேதத்தா லிரண்டு வகையாம்.

வினா:—காரணவடிவ அவித்தை யென்பது யாது?

விடை:—ஆவரண விட்சேப சக்திகளுடன் கூடி யனாதி பாவரூபமா யிருப்பதாம்.

வினா:—காரிய வடிவாவித்தை யென்பது யாது?

விடை:—ஒன்றில் மற்றொன்றின் புத்திவடிவத் தோற்றமாம்.

வினா:—காரியவடிவாவித்தை யெத்தனை வகை.

விடை:—(1) அனாத்மாவாகிய தேகாதிகளிடத்தில் ஆத்மபுத்தி, (2) அநித்தியமான ஆகாசாதிகளில் நித்தியபுத்தி, (3) துக்கரூபதனாதிகளில் சுகபுத்தி, (4) அசுசியான சரீரம் ஸ்திரீ புத்திரர்களை முத்தமிடுதல் முதலியவற்றில் சுசிபுத்தியென நான்குவகையாம். சுருதியிற் கிலேச கருமமென்று கூறுமிடத்தில் இந்தநான்கும் கொள்ளத்தக்கனவாம்.

வினா:—ஸ்தூலாவித்தை யென்பது யாது?

விடை:—கடமுதலிய வுபாதியுடைய சைதன்னியத்தை மறைப்பதாம்.

வினா:—அஸ்மிதையென்னு மிரண்டாவது கிலேசமியாது?

விடை:—புத்தியாத்மாக்களி னொருமை யுணர்ச்சியாகிய சாமானிய வகங்காரமாம்.

வினா:—இராகமென்னு மூன்றாவது கிலேசமியாது?

விடை:—அநுகூல பதார்த்தத்தின் ஞானத்தா லுண்டாகும் புத்திவிருத்தியாம்.

வினா:—துவேஷ மென்னு நான்காவது கிலேசம் யாது?

விடை:—பிரதிகூல பதார்த்தத்தின் ஞானத்தா லுண்டாகும் புத்தி விருத்தியாம்.

வினா:—அபினிவேசமென்னு மைந்தாவது கிலேச மியாது?

விடை:—மரணபயத்தாற் சரீரத்தை யிரக்ஷித்தலி லுண்டாகும் ஆக்கிரகமாம்.

வினா:—சுகாவிர்ப்பாவ மென்னு மைந்தாவது பிர யோஜனம் யாது?

விடை:—மேற்கூறிய ஞானரக்ஷை, தவம், ஸம் வாதம், துக்கக்ஷயமாகிய விவற்றால் ஸகலப்பிரதிபந்தங் களு மின்றி ஆத்மானந்த முண்டா யிருத்தலாம்.

வினா:—ஜீவன்முத்தர்களுக்குரிய ஞானதசசின்ன (அடையாள)ங்க ளெவை?

விடை:—அக்குரோதம், வைராக்கியம், ஜிதேந் திரியத்துவம், சமை, க்ஷமை, ஜனப்பிரியத்துவம், அலோபம், தாதிருத்துவம், அபயம், நிர்மதமென்னும் பத்துமாம்.

வினா:—அக்குரோதமென்பது யாது?

விடை:—தனக்கு வேருகவுண்மையிலொன்றுமின் மையாற் குரோதமில்லா திருப்பதாம்.

வினு:—வைராக்கியமென்பது யாது?

விடை:—யாவுந் தன்மய மாதலால் நிராசையா யிருப்பதாம்.

வினு:—ஜிதேந்திரியத்துவ மென்பது யாது?

விடை:—விஷயமித்தியா திருஷ்டியால் தசேந்திரி யங்களும் பகிர்முகத்திற் செல்லா திருப்பதாம்.

வினு:—சமையென்பது யாது?

விடை:—அந்தக்கரணம் நாமரூப கற்ப (வாச)னை யற் றகண்டாகாரமா யிருப்பதாம்.

வினு:—க்ஷமை யென்பது யாது?

விடை:—ஈதனைத்தும் ஸ்வரூபமென்னுந் திருஷ் டியாற் பொறுமையா யிருப்பதாம்.

வினு:—ஜனப்பிரியத்துவ மென்பது யாது?

விடை:— சொரூப விசாரத்திற்கு யோக்கிய மான ஸாதுக்களிடத்திற் பிரியமா யிருப்பதாம்.

வினு:—அலோப மென்பது யாது?

~~விடை:~~—தானடைந்த வாநந்தம்போல் யாவரு மடையவேண்டு மென்னுங் கருணையாம்.

வினு:—தாதிருத்துவ மென்பது யாது?

விடை:—தன்னிடத்தி லுள்ளவற்றை யெல்லாம் விரும்பியவருக்குக் கொடுத்தலாம்.

வினா:—அபய மென்பது யாது?

விடை:—"இங்கு நாநாவென்பது சிறிதுமில்லை" யென்னுந் திட புத்தியாற் பயமில்லாமை; அல்லது அபயமென்று சரணாகதி யடைந்தவனைக் காக்குந் தன்மையாம்.

வினா:—நிர்மத மென்பது யாது?

விடை:—அதனாலகங்காரஞ் சிறிதுமில்லா திருப்பதாம்.

வினா:—இப்போதுள்ள ஜீவன் முத்தர்களுக்கு முன்னுள்ள வியாசாதி ரிஷிகளைப்போல் சாபானுக்கிரக சாமர்த்திய மில்லாமையா லிவர்களை ஞானிகளென் றெவ்விதங் கூறலாம்?

விடை:-சாபானுக்கிரக சாமர்த்தியங் காமிய தவத்தின் பலனாம். ஞானத்திற்குக் காரணம் நிஷ்காமிய தவமாம். வியாசாதி ரிஷிகள் அவ்விரண்டு தவங்களையு மனுஷ்டித்ததால் அவர்களுக்கு ஞானமும் அணிமாதி சித்தியுமுண்டாயிருந்தன. இப்போதுள்ள ஜீவன் முத்தர்களுள் பலர் நிஷ்காமியதவ மொன்றே யனுஷ்டித்ததால் ஞானமாத்திர முடைத்தா யிருக்கின்றனர். ஆதலாலிவர்கள் ஞானிகளென்பதிற் றடையி (விரோதமி)ல்லை. இதற்குப் பிரமாணம் வருமாறு:—கைவல்ய நவநீதம் "காமியத்தவங் காமியமொன்றையுங் கருதிடாத் தவமென்றும், பூமியிற்றவ மிருவகைசித்தியும்

போதமுந் தருமைந்தா, ஆமிவற்றிலொன் றியற்றினு லொன்றையே யடைகுவ ரிதுதீர்வை, யாமுரைத்தவவ் விரண்டையுமியற்றினு ரன்றுள பெரியோரே".

வினு:—சாபானுக்கிரக சாமர்த்திய மின்றி விதி நிஷேத சூனியனான தத்துவஞானியைக் கிரியா நிஷ்டரியாவரும் நிந்திக்கிறார்களே அஃதெதனால்?

விடை:— கிரியா நிஷ்டர்களையும் விஷயவாசை யிலழுந்திய பாமரர்கள் நிந்திக்கிறார்கள்; அந்த விஷய லம்பட (விஷயப்பற்றுடையோ) ர்களது நிந்தையா லக் கிரியா நிஷ்டருக்கு வைஷம்ய மில்லாமை போன்று தேகாத்ம புத்தியுள்ள கிரியா நிஷ்டர் செய்யு நிந்தையால் தத்துவஞானிக்கு யாதொரு ஹானி (கெடுதி)யு மின்றாம். இதற்குப் பிரமாணம் வருமாறு:—

ஒழிவிலொடுக்கம்.

நாயேறிவீழ்ந்தென்னடாத்துகிலென்ஞானிக்குப்
பேயாஞ்சகம்பழித்தென்பேணுகிலென்-றேயார்
பெருமைசிறுமையிலைபின்னுமுன்னுமில்லை
வரைவற்றுவேண்டியசெய்வார்.

வினு:—ஜீவன் முத்தர்க ளொரு தன்மையரா யிராது பலதன்மையரா யிருப்பதெதனால்?

விடை:—கருமத்திரயத்து ளொன்றாகிய பிராரப்த கர்ம ஸம்ஸ்கார சதுஷ்டயத்தினாலே யாம்.

வினு:—பிராரப்த கர்ம ஸம்ஸ்கார சதுஷ்டயங்க ளெவை?

விடை:—தீவிரம், மத்தியம், மந்தம், சுத்த மென் னும் நான்குமாம்.

வினு:—தீவிர ஸம்ஸ்கார மென்பது யாது?

விடை:—தெளிந்த ஞானியும் போக தற்பரனுய்ப் பசுவைப்போ லாத்மப் பிரீதிமாத்திரமா யிருப்பதாம். இவன் பிரஹ்ம வித்தென்று சொல்லப்படுவான்.

வினு:—மத்தியஸம்ஸ்காரமென்பது யாது?

விடை:—போகச் சிறப்பைப் பொருந்தியவனுயி னும் ஆத்மதற்பரனுய்ப் பாலனைப்போன்று விநோத மாத்திரமாயிருப்பதாம். இவன் பிரஹ்மவித்வரனென்று சொல்லப்படுவான்.

வினு:—மந்த ஸம்ஸ்கார மென்பது யாது?

விடை:—ஸகலவிஷய போகங்களையு மொழித்துப் போக தாற்பரியத்தி லுன்மத்தனைப் போன்று நிச்சித மில்லா தானந்த பரவசனு யிருப்பதாம். இவன் பிரஹ்ம வித்வரியானென்று சொல்லப்படுவான்.

வினு:—சுத்த ஸம்ஸ்கார மென்பது யாது?

விடை:—ஸர்வ வியாபாரமு மழிந்து நிருபாதிக ஆத்மாவினிடத்திற் றற்பரனுய்ப் பரமசுகத்திற்றனே ஸ்திரமாயிருப்பதாம். இவன் பிரஹ்மவித்வரிஷ்ட னென்று சொல்லப்படுவான்.

"பேதகர்மத்தால்வந்த பிராரத்தநாநாவாகும்
ஆதலால்விவகாரங்க ளவரவர்க்கானவாகும்" என்று
கைவல்யநவநீதம் கூறுவதறிக.

வினு:—இந்தப் பிராரப்த மெத்தனை வகை? அவ
ற்றி னிவிர்த்தி யெப்படி?

விடை:—பிராரத்தம்: இச்சை, அநிச்சை, பரே
ச்சை யென மூன்றும். அவை யனுபவிக்க வொழியும்.

வினு:—இச்சாப்பிராரப்த மென்பது யாது?

விடை:-தனக் கபத்தியஞ் செய்வதாற் றுன்பம் வரு
மென் றறிந்தவிடத்தும் அதை யிச்சைமிகுதியால் விடா
மற் செய்விப்பதாம்.

வினு:—அநிச்சாப் பிராரப்த மென்பது யாது?

விடை:—தான் செய்யே னென்றாலும் இரா
ஜாக்கினை போன்று ஹிம்சாதிகளைச் செய்வித்தலாம்.

வினு:—பரேச்சாப் பிராரப்த மென்பது யாது?

விடை:—தனக் கிச்சை அநிச்சைக ளில்லாதிருப்
பினும் பரதாக்ஷண்யத்தா (பிறரன்பா) ல் சுகதுக்கங்
களை யூட்டிவிப்பதாம். இதற்குப் பிரமாணம் வரு
மாறு:—வேதாந்தசூடாமணி.

"இச்சையுட னனிச்சைபிற ரிச்சையெனு மிவற்று
லியம்பலுறு பிராரத்த மூன்றுவகைப் படுமா
லச்சுரர்களானும் விலக்குதற்கரிய வாகு
மபத்தியஞ்செய் திடறனக்கே கேடெனவிங் கறிந்து

வைச்சுமது புரிவித்த விச்சை செய்யே னெனினு
மன்னவர்தம் மாணைபோற் செய்வித்த லனிச்சை
யிச்சையனிச் சைகளின்றி யிருந்துமய லோரா
லின்பதுன்ப நுகர்வித்தல் பிறரிச்சை வினையாம்".

வினா:—இங்ஙனம் பிராரப்த பேதத்தால் ஜீவன் முத்தர்கள் நாநாவித வொழுக்க முடையராயிருந்தா லவர்களுடையும் பலனியாது?

விடை:—நேராகவுங் கோணலாகவுஞ் செல்லும் நதிகளெல்லாம் ஸமுத்திர ஸம்பந்தத்தி லொன்றே யா வதுபோல ஜீவன் முத்தர்களுக்கு முடிவிற் பிரஹ்ம ஸ்வரூபமாயிருக்கிற மோக்ஷ மொன்றே பலனும்.

வினா:—கருமத்திரயங்க ளெவை?

விடை:—ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்த மென்னு மூன்றுமாம்.

வினா:—ஆகாமிய மென்பது யாது?

விடை:—தனக்கொன்று வேண்டுமென்று காமி த்து (விரும்பி) ச் செய்தகர்மம் ஆகாமியமாம்.

வினா:—சஞ்சித மென்பது யாது?

விடை:—அங்ஙனங் காமித்துச் செய்து மேலனு பவத்திற்காக வந்து கட்டுப் பட்டவை சஞ்சிதமாம்.

வினா:—பிராரப்த மென்பது யாது?

விடை:—அங்ஙனங் கட்டுப்பட்டவற்றுள் வர்த்த மான சரீரத்திற் கேதுவா யிருப்பது பிராரப்தமாம்.

வினு:—இந்தக் கர்மத்திரயங்க ளெத்தனை வகை?

விடை:—பந்த வாகாமிய சஞ்சித பிராரப்தம், விடுதி யாகாமிய சஞ்சித பிராரப்த மென விரண்டுவகை யாம்.

வினு:—பந்த வாகாமிய சஞ்சித பிராரப்த மென் பன யாவை?

விடை:—நானென்னுங் கர்த்திருத்துவ ரூப ஸங் கல்பமாகிய அகந்தை பந்தவாகாமியம்; எனதென்னுங் கர்த்தவ்வியரூப ஸங்கல்பமாகிய மமதை பந்தசஞ்சிதம்; மோக்ஷபரியந்த மவற்றி(அந்தப் பிராந்திகளி) லிலவது பந்த பிராரப்தம் (அஃதாவது பீச ஜாக்கிரமுதலிய வஞ்ஞான ஸப்தபூமிகளி லிலவதாம்).

வினு:—விடுதி யாகாமிய சஞ்சித பிராரப்த மென் பன யாவை?

விடை:—நான் அகர்த்தாவாகிய ஆத்மாவல்லவோ வென்னுஞ் (ஆத்மாபி முகமான) சுத்த ஸங்கல்பமே விடுதியாகாமியம்; நான் அகர்த்தா அபோக்தா வென் னும் ஸங்கற்பத்தால் ஜீவன்முத்தி பரியந்தமுளதாகுங் குருதரிசன சிரவணுதி பிரயத்தனம் விடுதிசஞ்சிதம்; பின் விதேகமுத்தி பரியந்தமுளதாகும் ஸமாதி யப்பி யாசம் பிக்ஷான்ன போஜனுதிகள் விடுதிப்பிராரப்தம். (அஃதாவது சுபேச்சை முதலிய ஞானஸப்த பூமிகளி னிலைப்பதாம்). இவற்றிற்குப் பிரமாணம் வருமாறு:—

## திருக்குத் திருசிய விவேகம்.

"பந்தம் விடுதி பகர்கன்ம மோரிரண்டாம்
பந்தமித்தை யேபலனுப் பண்ணுமே—யந்த
விடுதிசத்தைச் சத்தாக்கி மீண்டுபிற வாமற்
சடசித்தைத் தாளுக்குந் தான்."

வினு:—அஞ்ஞான ஸப்தபூமிக ளெவை?

விடை:—பீச ஜாக்கிரம், ஜாக்கிரம், மகாஜாக்கிரம், ஜாக்கிர ஸ்வப்பனம், ஸ்வப்பனம், ஸ்வப்பனஜாக்கிரம், சுழுப்தியென்னு மேழுமாம்.

வினு:—பீச ஜாக்கிரமென்னு முதலாவது பூமி யாது?

விடை:—சர்க்காதி (ஜாக்கிரத்திறுதி) யில் மாயா விசிஷ்ட பிரஹ்மத்தி (ஆத்மாவி) னின்றெழுகின்ற சிதாபாஸ சேதன மாம். இதற்குப் பிரமாணம் வருமாறு:—

## ஞான வாசிட்டம்.

"இத்திற மேழு மேகமாய் நெருக்குற் றிவைபல பெயர்களை யெய்துஞ், சித்திலே நின்றோ ரறிவுமே யின்றிச் செறிமல மின்றிமேல்வந்து, வத்தியா நிற்குஞ் சித்தசீ வாதி வருபெயர் செயல்களுக் கிடமாய், வித்துரு பமதாய் நின்றிடு மதனுல் விதைநன் 'வாமுதற் பதமே."

## கைவல்ய நவநீதம்.

"முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமதா தான் முதல்வித் தாகும்."

வினா:—ஜாக்கிரமென்னு மிரண்டாவது பூமி யாது?

விடை:—பீசஜாக்கிர மென்னு மவ் வறிவின்கண் மேலை முன்னில்லாத அகமமதைகள் அங்குரம் போல சூக்ஷ்மமாக வெழாநிற்பதாம்.

## ஞானவாசிட்டம்.

"இதத்துறப் பிறந்தபின் னிவனு, னிது வென தெனப்பண் டிலாமையாநெய்தா யெழுந்துள வறுதி யே நனவாம்".

## கைவல்யநவநீதம்.

"இந்தவறி விற்பண்டில் லாவகந்தை முளைபோலா மிதுநனவாம்".

வினா:—மகாஜாக்கிர மென்னு மூன்றாவது பூமி யாது?

விடை:—ஜனனங்கடோறும் அந்த வகமமதைத ளுண்டாகித் திடதரமாய் வர்த்திப்பதாம்.

## ஞான வாசிட்டம்.

"இதுதனை யொழிய விவனவனுனே யிதுவது வென்னதென் றெண்ணு, மிதுமுதற்பிறப்பிற் றொடர்ச்சியாய்ப் பருக்கு மிந்தநிச் சயம்பெருநனவாம்".

கைவல்ய நவநீதம்.

"வந்துவந்து பிறவிதொறுமகமமதை வளருமது மகாநனுவாம்".

வினு:—ஜாக்கிர ஸ்வப்பன மென்னும் நான்காவது பூமி யாது?

விடை:—உற்பத்தி நாசமுடைய வந்தக்கரணத்தைக் கொண்டு சாக்கிரத்தின்கண் யாதாவதொன்று முன்னர்த்தானறிந்த தேனு மறியாததேனு மதன்மயமாய் லவண ராசன் போல மனோராச்சியஞ் செய்வதாம்.

ஞானவாசிட்டம்.

"அறிந்துள தெனினு மறிகிலா தெனினு மழுந்துறத் தானது வாகிச், செறிந்துள நனவிற் சித்தராச்சியமே செய்வது நனுக்கனு வாகும்."

கைவல்ய நவநீதம்.

"நந்து மகங்கொடு நனவின் மனோராச்சி யஞ்செயலே நனுக்கனுவாம்."

வினு:—சொப்பனமென்னும் ஐந்தாவதுபூமி யாது?

விடை:—நித்திரையி லுளதாகுஞ் சொப்பனத்தினற்பகாலத்தில் அநேககால வியாபார ரூபமான மனோராஜ்யஞ் செய்து பின் (நித்திரையி னந்தத்தில்) நித்திராகாலத்தி லனுபவித்ததை நினைப்பதாம்.

ஞானவாசிட்டம்.

"அற்பகா லத்தி லநேகமாஞ் செயல்கண்டறிந் தன மெனுங்கன வழிந்து, முற்படுசெயலை நினைவது கனவாம்." கைவல்ய நவநீதம்.

"உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல்சொப் பன மெனும்பே ருடையதாகும்."

வினா:—ஸ்வப்பன ஜாக்கிரமென்னு மாறாவது பூமி யாது?

விடை:—பூர்வம் ஸ்வப்பனங் கண்டு மறந்ததை மீண்டுந் திடமான அபினிவேச (மரண பயத்தாற் சரீரத்தை பிரக்ஷிப்பதி, லுண்டாகு மாக்கிரக)த்தால் அரிச்சந்திரனுக்கு நிமிஷகாலந் துவாதசாத்மக வருஷம்போல வெகுகால ஸ்தாயி (நிலை) யாகப் பாவிப்பதாம்; அல்லது ஸ்வப்பனம் ஜாக்கிரம்போல ஜாக்கிரத்திலே தோன்றுவதாம்.

ஞானவாசிட்டம்.

"முந்துகண் டதனைகா ளகன்று, பிற்படக் காணும் பொருள்களை மறந்து பெரும்பொழு துணர்வுற நோக்குஞ், சொற்பன நனவு போனன வுக்கே தோன்றுமிச் செயல்களு நனவே."

கைவல்ய நவநீதம்.

"பண்டுகனாக் கண்டுமறந் ததைமீண்டு நினைப்பது சொப் பனகனவாம்."

வினா:—சுழுத்தியென்னு மேழாவதுபூமி யாது?

விடை:—ஜீவனுடைய கர்மபல போகாவஸ்தை யாகிய மேற்கூறியுள்ள ஆறுபூமியையும் விட்டொழிந்து மே லனுபவிக்கத்தக்க கர்மவாசனைகள் நெருங்கி யிருக்கு மஞ்ஞான விருள்மூடச் சடமாயிருப்பதாம்.

## ஞான வாசிட்டம்.

"அறுவகை யவத்தை யகற்றிய சீவ னடைந்துள வவத்தையி னியற்கை, யுறுசடமாகி மேல்வருந்துயர்கூ ருணர்வுள தாமிது சுழுத்தி, துறுபுவ னங்க ளிதனிடை யிருளிற் றெறிலவுறும்."

## கைவல்ய நவநீதம்.

"மண்டு மிருண் மூடுவது சுழுத்தியாம்."

வினா:—ஞானஸப்த பூமிக ளெவை?

விடை:—சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தா பாவனை, துரிய மென்னு மேழுமாம்.

வினா:—சுபேச்சையென்பது யாது?

விடை:—சுபமென்பது பிரஹ்மஞான பலனாகிய மோக்ஷம்; இச்சையென்பது அதனது விருப்பம்; அஃதாவது ஸர்வகன்ம ரஹித விவேக வைராக்ய ஸமாதிஷட்க ஸம்பத்திகளாகிய மூன்று ஸாதனங்களின் பலத்தால் அதிகாரிகளது சித்தத்தில் தூர்ச்சங்கத்தைக் கூடி

அளவில்காலமூடமாயிருந்து விட்டோம்; இனித்தாமதி யாது எவ்விதத்திலாவது துர்ச்சங்கத்தைத் துறந்து ஸற்குருவை யடைந்து அவராலும் ஸற்சாஸ்திரங்க ளாலும் மோக்ஷமடையக் கடவோமெனத் தீவிரமாக வுதயமாகு மிச்சையாம். இதற்குப் பிரமாணம் வரு மாறு:—

### ஞானவாசிட்டம்.

"நவையுறுமோ கத்தொடுநா மடைவதென்னே நல்லோரா னன்னூலா னன்று ஞானச், சுவைபெறுது நிராசையினு லென்றுநாடல் சுபம்விரும்ப லாகு மிந்தச் சுபேச்சை".

### வேதாந்த சூடாமணி.

"தோற்றிடுநான் மூடனுயிருந்த காரணமென் சற்குருவாலறிவ லெனநினைதல் சுபேச்சை."

### கைவல்ய நவநீதம்.

"துர்ச்சங்க நிவிர்த்தி வந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சை யாகும்."

வினு:—விசாரணை யென்னு மிரண்டாவது பூமி யாது?

விடை:—ஸர்வகன்ம சந்யாச பாலனமுடைய ஸாதன சதுஷ்டய ஸஹித புருஷன் குருமுகமாக மகாவாக்கியார்த்த சிரவணஞ் செய்து,- அவ்வாக்கியார்த்தங்

களைச் சத்துக்களாசாரப்படி சுருதி விரோத மின்றிய தருக்க யுக்தி யனுமானாதிகளோடு மனதிற் பதிவுறும் பொருட்டு மனனஞ் செய்வதாம்.

ஞானவாசிட்டம்.

"கலையறுநல் லோரியற்கை யாசாரங்கள் கைவருதல் விசாரமாக் கருதல் வேண்டும்".

வேதாந்த சூடாமணி.

"மாற்றரிய சுருதிகுரு வாற்சிறிது தோன்றும் வயிராகத் துறுதல்சதா சாரம்விசா ரணையே",

கைவல்ய நவநீதம்.

"நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையாம்."

வினா:—தனுமானசி யென்னு மூன்றும் பூமி யாது?

விடை:—தனுவென்பது மிகச்சுருங்கல்; அசியென்பது மிகச் சுருங்குதலாகிய தன்மையை மனதடைதல்; அதுவே தனுமானசியாம். அஃதாவது சுபேச்சை விசாரணையென்னு முபயபூமிகளின் சகாயத்தால் மனம் அநேகார்த்தக்கிரகண ரகிதமா யேகார்த்தமாகிய ஸத்தோக மென்னும் பிரஹ்மாகார விருத்திப் பிரவாகமாக நிரந்தரந் தியானிப்பதாகிய நிதித்தியாசனத்தால் மலினவாசனைக ளொழிந்து ஸவிகல்ப ஸமாதியை யுற்றுச் சூட்சுமத் தன்மையை யடைவதாம்.

## ஞானவாசிட்டம்.

"இனையசுபம் விரும்பலொடு விசாரமென்ற விரண்டுநிறை தலும்விடயத் திச்சைமாற்றி, நினைவுகுவி வதுசித்தஞ் சிறுகலாகும்."

## வேதாந்த சூடாமணி.

"மருவலுறு சுபேச்சைவிசாரணைவலியால் விடயவலியறுத ருன்றனுமானசி."

## கைவல்ய நவநீதம்.

"முற்சங்க வேடணைகள் விடறனுமானசி."

வினா:—இம்மூன்று பூமிகளையு முடையோரியாவர்?

விடை:—பெரும்பாலும் பிக்ஷான்ன போஜனம், குருபணிவிடை, சௌசமாதிய யதிதர்மஸஹிதஸாதன சதுஷ்டய சம்பனராய்க் குருமுகமாகச் சிரவணஞ் செய்யு மப்பியாசிகளாம்.

## கைவல்ய நவநீதம்.

"முன்னிலங்க ளேறியமூ வருமப்பி யாசிகளா ரூத்தரல்லர்".

வினா:—சத்துவாபத்தி யென்னும் நாலாம் பூமி யாது?

விடை:—மனது பரமார்த்த சத் ரூபமாகச் சேடித்திருப்பது சத்துவாபத்தி; அஃதாவது பூமிகாத்திரயங் (மூன்று பூமி)களி னப்பியாசவலியால் சாக்கிரப் பிரபஞ்சமனைத்தையுஞ் சொப்பன துல்லியமாகவும் சர்

வாதிஷ்டான சத்ரூபப் பிரஹ்மமே தானாகவு மறிந்து சாக்ஷாத்கரித்தலால் மனம் க்ஷணேக்ஷணே பிரஹ்மத்தில் க்ஷீரோதகம்போற் கலந்து திரிபுடி ரஹிதமாய் நிருவிகற்பசமாதியைப் பெறுவதாகிய ஸ்திதியாம்.

## ஞான வாசிட்டம்.

"நிகழ்த்தியவிம் மூன்றானு நெஞ்சசந் தன்னில், வனைதருமவ் விரத்தியினா லுண்மைப் போத மன்னு தலே யுண்மைநிலை மருவ லாகும்."

## வேதாந்த சூடாமணி.

"விரவுநன வாயவுல கினைக்கனவென் றெண்ணி மெய்த்தவான் மாவுண்மை கருதல் சத்வா பத்தி."

## கைவல்ய நவநீதம்.

"சற்சங்க மனதினுண்மை யறிவுதித்தல் சத்துவா பத்தி தானே."

வினா:--அசம்சத்தியென்னு மைந்தாம் பூமி யாது?

விடை:—சம்சத்தி யென்பது விஷய சம்பந்தம்; அஃதில்லாமை அசம் சக்தியாம். அது சத்துவாபத்தி யென்னும் நான்காம் பூமியிலுதயமாகியபிரஹ்மசாக்ஷாத்காரவலியாற் சொப்பன துல்லியமாகக்கண்ட பிரபஞ்சமனைத்தையும் அறிவுமாத்திரமாகக் கண்டு சுழுத்தனைப்போலப் பாஹ்யாந்தர வாகாரங்களோடு மவற்றின்

சம்ஸ்காரத்தோடும் சம்பந்தமின்றி நித்தியா பரோக்ஷப் பிரஹ்மத்தில் நிருவிகற்பமா யழுந்தி யிருப்பதாம்.

ஞானவாசிட்டம்.

"அனையனவிந் நான்காலு முண்மைப் போதத் தழுந்தியயற் சங்கமற லசங்க மாகும்"

வேதாந்த சூடாமணி.

"பரவலுறு முலகுதோன் றுதசுழுத் தியன்போற் பகாறிவு மாத்திரையாய் நிற்றலசம் சத்தி."

கைவல்ய நவநீதம்.

"தத்துவத்தின் மனமுறைத்து மித்தையெலா மறத்தலசம் சத்தியாகும்."

வினா:—பதார்த்தாபாவனை யென்னு மாறும்பூமி யாது?

விடை:—பாஹ்யாந்தர பதார்த்தங்களி னபாவப் பிரதீதியே பதார்த்தாபாவனை; அஃதாவது அசம்சத்தி யென்னு மைந்தாவது பூமியின் வலிவால் பிறரே வுதலின்றிக் காரியப் பிரவிர்த்தியின்றிய காட சுழுத்தியன்போற் றிடநிருவிகற்ப சமாதியிற் பாஹ்யாந்தரத் திரிபுடிக ளபாவமாயொழிய வத்துவிதானந்த மயமாய் நிற்றலாம்.

ஞானவாசிட்டம்.

"அறைந்தபத மைந்தாலுந் தானும் போதத் தழுந்தியவின் பத்தமைவாற் புறனு முள்ளு முறைந்த

பதார்த் தங்கண்மறந் தயலோர் வன்பா லுணர்வது வே பதார்த்தநினை வொழிதலாகும்."

### வேதாந்த சூடாமணி.

"ஒருவிவா சனையனைத்து மிகுதுயிலோன் போல வுயிரானங் தத்தொடுங்கல் பதார்த்தாபா வனையாம்."

### கைவல்ய நவநீதம்.

"அத்துவிதா னந்தம்வரும் திரிபுடிபோம் பதார்த்தாபா வனைய தாகும்."

விரு:—துரியமென்னு மேழாம் பூமி யாது?

விடை:—சாக்கிராதி மூன்றவஸ்தைக்கு மப்பாற் பட்ட நான்காமவஸ்தை துரியமாம்; அஃதாவது பதார்த்தா பாவனையென்னு மாரும்பூமியின் வலியாற் திரிபுடித் தோற்றமான நான்காம்பூமி ஐந்தாம்பூமிகளிற்போல பாவரூபப் பிரதிதியும், ஆரும்பூமியிற் போல அபாவரூபப் பிரதீதியும் மின்றித் தன்னலாவது பிறராலாவது பகிர்முகமாகாது அதீதானந்த மயமாகி யாகாசத்தி லுள்ள வெறுங்குடம்போ லகமும் புறமுஞ் சூன்யமாய் லஸ்து நிலையெப்படியோ வப்படியே யிருப்பதாம்.

### ஞானவாசிட்டம்.

"நிறைந்தவிவை யாருலும் பேதம்போக்கி நிலை பெறுதற் சுபாவத்தே நிற்றருனே, மறைந்தபொருள் வெளியாக்குந் துரியமாகு மாசறுசி வனின் முத்தர் வழியீ தாகும்."

## வேதாந்த சூடாமணி.

"உண்டிலையென் ஞமலகங் கிருதிநிரங் கிருதி யுருமலறி வுருவாய வத்துவித பதத்திற், கண்டதொரு வறுங்குடம்போ லுட்புறஞ்சூ னியமாங் கதிதுரிய காமியாம்."

## கைவல்ய நவநீதம்.

"வத்துநிலை யிருந்தபடி யிருந்தமௌ னசுபாவந் துரிய மாகும்."

வினு:—இந்த ஞானபூமிகளிற் சஞ்சரிக்குஞ் சீவன் முக்தர்க்குரிய விரதத்திரயங்க ளெவை?

விடை:—மா (மகா) கர்த்தத்வம், மாபோகித்வம், மாத்தியாகித்வ மென்னு மூன்றுமாம்.

வினு:—மாகர்த்த னென்பவ னியாவன் ?

விடை:—தன்வினையாகிய செய்கையும் பிறவினை யாகிய செய்விக்கையு மின்றி வாளா (நிச்சலமா) யிருக்குங் காந்தச்சிலை (கல்லின்) முன் இரும்புக ளசைவதுபோல நிர்விகாராத்துவித பரமாத்ம சொரூபமாகிய வெனது சந்நிதியிற் சடமான நாமரூப ஜகத்தனைத்தும் சேஷ்டிக்கு மென்னும் விவேகத்தின் வலியால் ஜனன மரண சுகதுக்க ராகத் துவேஷாதிகளிற் சமதிருஷ்டி யுடையனு யுலக வியவகாரத்திற்குச் சூரியன் போலச் சாக்ஷிமாத்திரமா யிருப்பவனும்.

## ஞான வாசிட்டம்.

"வெப்பமுறு மிராகமுனி வின்பமிட ரறம்பாவ மிரு மிவற்றின், றப்பில்பலா பலமிவற்றில் விருப்பமறச் செய்வோனே தனிமா கத்தன்."

"சனனத்தின்மரணத்தி லுதயத்திலத்தமனந் தனினே ராகி, மனமொத்தோன் மாகத்த னெனத்தெளிவாய்."

## கைவல்ய நவநீதம்.

"செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச் சிலைமலைமுன் னிரும்புகள்சேட்டிக்கு மாபோற், செய்கையுஞ்செய்விக்கையுமற் றிருக்குமென்முன்செட மான வுலகமெலாஞ் சேட்டை செய்யும், மெய்கலந்த விந்திரிய விகாரரூப விவகார விருத்திக்கும் விருத்தி தானு, மெய்கலந்த சமாதிக்குஞ்சாட்சியேநான்வெயில் போலென்றுறைத்தவனே விபுமா கர்த்தன்."

வினு:—மாபோகி யென்பவ னியாவன் ?

விடை:—அந்த விவேகத்தின் றிடத்தன்மையால் ராகத் துவேஷ சுகதுக்க லாபநஷ்ட மென்னு மிவற்றைப் பற்றிச் சித்தங் கலங்காமல், அறுசுவை யுணவாதிகளைக் காடாக்கினிபோலச் சமமா யனுபவிப் பவனும்.

## ஞான வாசிட்டம்.

"சினமுற்றொன் றினைநீக்கா தொன்றைவிரும் பான்பகுதி சேரத் தாய்ப்போன், வினவுற்ற மாபோகி யிவன் பெருமை மீளவுநாம் விளம்பக் கேளாய்."

"மிகவெருவ லானந்த மில்லவாய் மயக்கமே விளைப்ப தான, சுகமிடர்கள் புசித்தவற்றூற் கலங்கா தோன் சராமரணந் தொடருமாபத், தகலரசு மிடிகளு நன் றெனப்புசிப்போன் புளிப்புக்கைப்பழற்சி யுப்புப், பகர்நிறைவு குறைவுசம மாய்ப்புசிப்போன் மாபோ கிப் பான்மை யோனே."

## கைவல்ய நவநீதம்.

"அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்தம பத்தி யப்பத் தியமெனவூ ணுப்ந்திடாமற், பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்போற் போகங்கள் புசிப்ப வன்மா போகி யாகும்."

வினு:—மாத்தியாகி யென்பவ னியாவன்?

விடை:—சகலகாம கர்ம சம்சயாதிகளைப் பற்றி வருஞ் சிறிது பெரிது மேல்கீழ் நடுபக்க மென்னு மிவ ற்றைப் படிகம்போற் பற்றாது அவற்றிற்குச் சாக்ஷி மாத்திரமாய் நிற்பவனும்

## ஞான வாசிட்டம்.

"அனைத்தாசை யனைத்தைய மனைத்தான தொழி லனைத்தா மறுதியாவுந், தினைத்தானு மேவாத புந்தி யோன் றன்னைமகத் யாகி யென்பர்."

## கைவல்ய நவநீதம்.

"இறிதுபெரிதுகடனதந் நியங் கணன்மை தீமை கள்சே ரினுமழிக்கச்செயல்போற் சித்தம், வெறி திருக்கும்வினைமாத்யாகி யாவன்."

வினா:—இதுகாறுங் கூறியவற்றை யெல்லாம் நன்குணர்ந்தவன் செய்யத் தக்கது யாது?

விடை:—சர்வம்மித்தை; சர்வம் பிரஹ்மம்; சர்வம் நானென்று நிருசிய நோக்கிழந்து தானறிவாநந்த வடிவே யாக நடுநிலையி லிருக்க வேண்டும்.

வினா:—நடுநிலை யென்று மென்ன?

விடை:—நினைப்பு மறப்பற்ற அசங்க சின்மாத்திர ஆன்மவடிவ பிரஹ்மமாம்.

வினா:—அதிலிருப்ப தெப்படி?

விடை:—சங்கற்ப மெழுமிடத்தையே நோக்கிப பிறி தொன்றையுங் கருதா திருந்தால் சங்கற்ப மெழாதொழியும்; எழாதொழியவே, மறைப்பு மின்றாம். நினைப்புமறப்பற்றுத் தான்மாத்திர மிருத்தலே நடுநிலையி லிருப்பதாம். இந்நிலையி லிருத்த லரி திணு மரிதாம். இதனை நிரந்தராப்பி யாசத்தி னடைந்தவனுக்குச் சர்வ துக்க நிவிர்த்தி பரமாநந்தப் பிராப்திவடிவ மோக்ஷ மெளிதிற் சித்தியாம். யாவருமிதனைச் சற்குரு வாயிலாக விசாரித்துச் சுகமடைவா ராக.

ஆரா தனஞ்செயு மன்பர்க் கருள்புரி
நாரா யணகுரு நற்றாள் வாழ்க.

ஓம்-சுபம்.

முற்றிற்று.

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

ஸ்ரீ. இராமசுவாமிகள் அவர்கள் இயற்றிய

# தேவாந்தப் பிரதீபம்



Pub No : 856
ISBN : 978-93-85165-11-5
தேவாந்தப் பிரதீபம்
250.00